Registered as a News Paper in Sri Lanka
දිනමුරසු වාරමලර්
பக்கம் 20
ரூபா 11/00
மே 24-30,1998

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 258

## அம்பலமாகும் தந்திரங்கள்

## வந்தனர்- கண்டனர்- சென்றனர்!



## சபாஷ் வாஜ்பேயி



## ஜீன்ஸ்

## காத்திருக்கும் நாயகிகள்



www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com

# முரசம்

## சபாஷ் வாஜபேயி!

அன்புள்ள உங்களுக்கு
வணக்கம்.

இந்தியா அணுக்குண்டு
பரிசோதனை நடத்தியுள்ளது.

அமெரிக்கா அலறியடித்து
அச்சுறுத்தல் விடுத்துள்ளது!

தென்னாசியப் பிராந்தியத்தில்
அமெரிக்காவின் மேலாதிக்க
கனவுகள் பற்றி
'முரசு'கூறி வந்திருக்கிறது!

பிரதமர் வாஜ்பேயியுடன்
அமெரிக்கப் பிரதிநிதி சென்று
கை குலுக்கியதுகூட
கடைந்தெடுத்த வஞ்சகம்
என்று 'முரசு' கூறியிருந்தது.

கைகுலுக்குவது,
சம்பிரதாயமாக புன்னகைப்பது,
சில மறுப்புக்கள் விடுவது
போன்ற பல இராஜதந்திரங்கள்
நாடுகளுக்கிடையே நடக்கும்.

அவையெல்லாம்
வெளிக்காட்சிகள்தான்!

அமெரிக்கா
இந்தியாவை வருடுவதும்,
பதிலுக்கு இந்தியா
புன்னகைப்பதும்
வெளிக்காட்சிகள்தான்!

தென்னாசியப் பிராந்தியத்தில்
வல்லரசாக நிலைக்க
இந்தியா விரும்புகிறது!

இந்தியா மட்டுமல்ல,
உலகில் வேறெந்த நாடும்
வீரியம் பெற்றுவிடக்கூடாது
என்று அமெரிக்கா நினைக்கிறது!

சீனாவும் அமெரிக்காவின்
ஆதிக்கப் போக்குடன்
முரண்பட்டிருக்கிறது!

இந்தியாவும் அமெரிக்காவின்
உத்தரவுகளுக்கு
பணிய மறுத்திருக்கிறது!

இலங்கை, பாகிஸ்தான்
போன்ற நாடுகள்தான்
அமெரிக்காவின்
நம்பகமான கூட்டாளிகள்!

அதிலும் இலங்கை
அடக்கமான நண்பன்!

பாகிஸ்தானாவது
இடைக்கிடையே திமிறும்;
இலங்கை அரசு
எப்போதுமே பணிவுதான்!

எனவே, இலங்கையை
தென்னாசியப் பிராந்தியத்தில்
தனது மேலாதிக்கத் திட்டங்களுக்கான
முக்கிய தளமாக
மாற்றுவதே அமெரிக்காவின்
இன்றைய வியூகம்!

இந்த வியூகம்
தென்னாசியப் பிராந்திய
நலனுக்கும் ஆபத்தானது;
இனப்பிரச்சனையில்
தமிழ்பேசும் தரப்புக்கும்
பாதகமானது!

இலங்கை அரசை
கைக்குள் போட்டுக்கொள்வதற்காக-
இனப் பிரச்சனையில்
ஒருதலைப்பட்சமான
கொள்கையைக் கடைப்பிடிக்கிறது
அமெரிக்க ஆதிபத்தியம்!

எனவே, தென்னாசியாவில்
அமெரிக்காவின்
ஆதிக்கத்தை எதிர்ப்பதும்-
தமிழ்பேசும் தரப்பின்
போராட்டத்தின்
ஒரு பகுதியாக இருக்கிறது!

இந்த நிலைப்பாட்டில்
இனரீதியான சுயநலமும்
பிராந்தியரீதியான பொதுநலமும்
இணைந்தே உள்ளன!

அமெரிக்காவின் வால்
இப்பிராந்தியத்தில்
ஒட்ட நறுக்கப்படவேண்டுமானால்,
அமெரிக்க எதிர்ப்பு நாடுகள்
பலம்பெறுவது அவசியம்!

இல்லையெனில்- அமெரிக்கா
தட்டிக்கேட்க ஆளில்லாத
சண்டப் பிரசண்டனாகிவிடும்!

அது இட்டதே சட்டம்-
அது வைத்ததே திட்டம்
என்று ஆகிவிடும்!

ஆகவே, அணுக்குண்டு
பரிசோதனைக்கு ஆணையிட்ட
பாரதிய ஜனதா அரசை
பாராட்டி ஊக்குவிப்போம்!

அமெரிக்காவின் அச்சுறுத்தலை
எதிர்கொள்ளும்
இந்திய மக்களுக்கு
எமது நட்புறவை
உரத்துத் தெரிவிப்போம்!

சபாஷ் பாரதம்!
சபாஷ் வாஜ்பேயி!!

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்

# ஆன்மீகம்



## உள்ளம் எனும் இல்லம்

உலகத்துக்கு ஒளியூட்டி சீவராசிகளனைத்தும் உயிர் வாழ கதிரவன் தன் ஒளிக்கிரணங்களை எங்கும் பரப்புகிறான் அந்த ஒளிக்கீற்றுகள் ஒரே அளவிலான கதிர்களைப் பரப்பினாலும் அவை அதே அளவிலேயே பூமி எங்கும் படர்வதில்லை. மேகங்கள் மூடியிருக்கும்போது ஒளியின் வேகம் குன்றவே செய்யும். மர நிழல்களிலும் கட்டடங்களின் உட்புறமும் இருப்பவர்களை சூரிய ஒளி தாக்கும் வேகமும் குறைவாகவே இருக்கும். ஆனால் சூரியனிலிருந்து வெளிப்படும் கதிர் வீச்சு சரிசமமாகவே வீசப்படுகிறது. இரவு நேரத்திலும் அதே சூரியனின் ஒளி பூமியின் மற்றொரு பகுதியைத் தாக்கவே செய்கிறது.

இதே போலத்தான் இறைவனின் கருணைக் கதிர்கள் இப்பூமியில் வாழும் அத்தனை உயிரினங்களிலும் சமமாகப் படக்கூடியதாகவே வீசப்படுகின்றன. ஆனால் அக் கதிர்களை உயிரினங்களும் தாவர வர்க்கங்களும் தத்தமது சூழ்நிலைக்கேற்ப பெறுகின்றன.

மனிதனைப் பொறுத்தவரையில், அவனுடைய வாழ்க்கை முறை, பழக்க வழக்கங்கள் போன்றவற்றில் காணப்படும் மாற்றங்களுக்கு ஏற்ப இறைவனின் கடாட்சம் அவன்மீது பொழியப்படுகிறது.

ஆண்டவனின் அருளைப் பூரணமாகப் பெறவேண்டுமானால் அதற்கான நாட்டம் முதலில் ஏற்படவேண்டும். எமது சிந்தையில் அவன் குடியிருக்க இடம் கொடுக்க வேண்டும். இறைவனை எம் உள்ளத்தில் குடியேற்ற வேண்டுமானால் அதற்கேற்ற பக்குவநிலை எம் உள்ளத்துக்கு ஏற்படவேண்டும். உள்ளத்தில் படிந்து கிடக்கும் அழுக்குகளை முதலில் அகற்றி உள்ளத்தைப் பரிசுத்தப்படுத்த வேண்டும்.

ஞானேந்திரன்.

## ஷைத்தானின் தோழர்கள்

ஒருநாள் நபி (ஸல்) அவர்கள் ஷைத்தானை நோக்கி, "எமது உம்மத்தோரில் உனக்கு நண்பர்கள் எத்தனை பேர்கள்," என்று கேட்டார்கள். அதற்கு ஷைத்தான் "பத்துப் பேர்கள்" எனக் கூறினான். அவர்கள் வருமாறு:

1. அநீதமாக ஆட்சி புரிந்து மக்களை கஷ்டப்படுத்தும் அரசன்.
2. பொறாமை கொள்பவன்.
3. பொருளை எவ்வாறு சேமிக்கிறோம், அதை எவ்வாறு செலவு செய்கிறோம் என்று கணக்கிடாத சீமான்.
4. அநீதம் செய்யும் அரசனை உண்மைப்படுத்தும் அறிஞன்.
5. அளவை நிறுவைகளில் மோசம் செய்யும் வியாபாரி.
6. மக்கள் பட்டினியாலும், பஞ்சத்தாலும் பரிதவிக்கும் போது விலை ஏறட்டும் என்றெண்ணி உணவுப்பொருள்களை சேமித்து வைத்திருப்பவன்.
7. விபசாரம் செய்யும் ஆண்களும் பெண்களும்.
8. வட்டி வாங்குபவர்கள்.
9. உலோபிகள்- கஞ்சர்கள்.
10. மதுபானம் அருந்துகிறவர்கள்.

எனவே, மேற்படி பத்துப்பேரில் நாமும் அடங்கியிருந்தால் இன்றிலிருந்து விலகி, இறைவனுக்கு உவப்பான வழியில் வாழ முயற்சிப்போமாக.

தொகுப்பு: ட.எம்.நு.:,மான், தாராபுரம்.

## கவிதைப் போட்டி இல.255

பரிசுக்குரிய கவிதை

### புரியவில்லை!

அஞ்சிப் பயந்தழுது
அலைவதுதான்
வாழ்க்கையாச்சு!
தஞ்சம் புகுவதற்கும்
தக்கதோர் இடமில்லை!
எங்கு செல்கின்றோம்?
எங்களுக்கே புரியவில்லை!

அரசரெத்தினம் அச்சுதன்-
சேனையூர்-06, மூதூர்.

### இடம் உள்ளவரை இடம் பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்:



**தளராதீர்!**

சோதனைகளும்
வேதனைகளுமின்றி
சாதனைப்பூக்கள்
எங்கும் மலர்வதில்லை!

எஸ். சுதாசனா-
மட்டக்களப்பு.

**இங்கு**

உயரத்தில் குடியிருப்பு
உள்ளத்தில் துயரிருப்பு-
மலையக மக்கள்...!

இ.அஸ்வர்-கண்டி.

**ஜி.எஸ்.ரி**

இதுதாண்டா!
ஜி.எஸ்.ரி
எட்டாதடா
விலைவாசி!

மா.பொன்நந்து-
நீர்கொழும்பு.

**உயரத்தில்**

பாண்
எங்கே போனது?
பருப்பு
எங்கே போனது?
எல்லாமே உயரத்தில்!
இனித் துரத்த
தெம்பில்லை!

அ. துமிலன், புத்தளம்.

**ஏமாற்றம்**

ஏறாத
மலைபோல
ஏறிய போதும்
பொதியைக் காணவில்லை!
மறுபடியும் ஏமாந்தோம்!

இ. புஸ்பமாலா-கொழும்பு-13.

**விலைவாசி**

எங்களை முந்தி விடுமோ
இன்றைய விலைவாசி?

ச.மகாலிங்கம்- வெலிமடை
குருப், வெலிமடை.

**இதையாவது...**

மண்ணைத்தான் அபகரிக்கிறார்கள்!
கல்லையாவது விட்டுவைப்பார்களா?

ஆர்.பி.லக்ஷான்-கொழும்பு.

## கவிதைப் போட்டி இல.258



(படப்பிடிப்பு:-கொட்டாரமுல்லை .:.பாருக்)

கவனியுங்கள்! எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்பட வேண்டிய கடைசித் திகதி:- 30.05.1998

முகவரி: கவிதைப் போட்டி இல.258, தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.

**நிஜம்**

சிகரங்களை நோக்கி
பயணிக்கும் முன்,
அடையாள அட்டையை
பத்திரப் படுத்திக்கொள்!

சுபா வரன்- கண்டி.

**மலையகம்**

உயரங்களில்
வைத்தார்கள்;
உயர்வதற்கல்ல-
உருண்டு விழ!

எஸ்.பிரபா-பதுளை.

**வேதனை**

சிகரம் ஏறும் சாதனையா?
துயரம்கூறும் வேதனையா?

எம்.எஸ் புகாரி-
சாய்ந்தமருது-11.

**இடம்பெயர்வு**

மணலாறு வரிசையிலே,
உப்பாறும் போனதாலே
மலைமீது போகின்றோம் வாழ!

இதயநிலா-ஆரையம்பதி.

# வாசக(ர்)சாலை

### பேசாமடந்தைகள்

திரு. நாகேந்திரநாத் ஜாவை இனவாத சக்திகள் கண்டித்த போது, இங்குள்ள தமிழ்க் கட்சிகள் மௌனமாக இருந்தது வருந்தத்தக்கதே. நக்கீரன் சுட்டிக்காட்டியது மெத்தச்சரி. பேசாமடந்தைகளாக இருந்து எமது உரிமைகளை தாரைவார்க்கிறார்கள்.

செ. சந்தானம், மட்டக்களப்பு.



### நினைத்தால் வெறுக்கும்

முரசே! இந்தியாவிடமும் ஓடுகிறார்கள். அமெரிக்காவிடமும் போய் விருந்துண்டு களிக்கிறார்கள். உதவும்படி ஜாவிடம் கேட்கிறார்கள். அவருக்கு உதைவிழும் போது ஒளிக்கிறார்கள். 'தமிழ்க் கட்சிகள்' என்று தம்மை அழைப்போரின் செயல்களை நினைத்தால் வெறுப்புத்தான் வருகுதய்யா.

பி. பாலசுந்தரம், கொழும்பு-11.

பூலான்தேவி பெண் புயல். இடி அமீன் வித்தியாச வில்லப் புயல். அமீன் செய்த நல்ல காரியங்களையும் ரசிகன் தரத் தவறமாட்டார் என்று நம்புகிறேன். அமீனின் இரண்டு பக்கத்தையும் காண்பியுங்கள்.

எஸ். குணரத்னம், கொழும்பு-06.

### அப்படி என்ன கூறிவிட்டார்?

முரசுக்கு:

இந்திய முன்னாள் தூதர் ஜா அப்படி என்ன தவறாகப் பேசிவிட்டார்? இந்திய- இலங்கை ஒப்பந்தத்தின் போது "வடக்கு-கிழக்கை பிரிக்கவிடோம்!" என்று ராஜீவ் காந்தியும் தமிழ்க் கட்சிகளுக்கு உத்தரவாதம் கொடுத்திருந்தாரே! என்ன செய்வது? பேரினவாதத்துக்கு பதிலடியாக தக்க கருத்து உரைக்க முடியாத அரசியல் கட்சிகள்தானே இருக்கின்றன?

இ. ஜீவேந்திரன், யாழ்ப்பாணம்.

### காதல் துரோகி

"காதல் துரோகி ஜேம்ஸ் ஹெவீற் ஒழிக." கண்ணீரில் கரைந்த இரவுகளில் சாள்ஸ் பற்றிய பல இரகசியங்கள் அம்பலமாகின்றன. டயானாமீது மட்டும் குறைகண்ட எனக்கு புவனா தரும் தகவல்கள் உண்மைகளை அறியவைக்கின்றன. இருவர் மீதும் தவறு உண்டு.

செல்வி க. உஷாராணி,
மட்டக்களப்பு.

### ஏன் கேட்கவில்லை?

நக்கீரன் கூறியதே நமது கருத்துமாகும். ஜா மீது புதிய பேரினவாதிகள் சேறு பூசிய செய்திகளைப் படித்தபோது, இந்தத் தமிழ்க் கட்சிகள் என்ன செய்கின்றன? என்று வெறுப்பாக இருந்தது. வடக்கு-கிழக்கு பிரிப்பு வேண்டாம் என்பதே எமது கொள்கை. அதனை கூறியதற்காக ஆட்சேபம் ஏன்? என்று தாங்கள் தோள்கொடுத்து நிற்கும் அரசிடம் கேட்கக்கூடவா துணிச்சல் இல்லை?

மு. பத்மநாதன், வவுனியா.

### மனம் வரவில்லை

இராஜதந்திரியின் அரசியல் அலசல் வெகு பிரமாதம். திட்டவட்டமான கருத்துக்களால் பலரது முகமூடிகளை அறுத்துப்போடுகிறார். காணாமல் போனோர் விவகாரத்தில் அன்று அரசியல் அலசலில் கூறியதுதான் நிதர்சனமாகியுள்ளது. கண்துடைப்புக் கமிஷனைக்கூட தனியாக நியமிக்க மனது வைக்கவில்லை அரசு.

கா. இராசநாயகம், பட்டிருப்பு.

### கப்பலோட்டிய தமிழர்கள்

திடீர் தொடர் 'வல்வை முதல் அமெரிக்காவரை' அறியாத பல தகவல்களை தருகிறது. கப்பலோட்டிய தமிழர்களது வரலாற்றை நினைவூட்ட வேண்டிய நேரத்தில் நினைவூட்டியுள்ளீர்கள். இராஜகோபால் பண்பட்ட எழுத்தாளர். அவரது எழுத்து முரசில் வருவது இரட்டிப்பு சந்தோசம்.

சி. ஜெயசிங்கம், மன்னார்.

இடி அமீனின் சதிகள் அபாரம். வரம் கொடுத்தவர் தலையிலேயே கைவைக்கப் போகிறானோ?

என்.எம். ஷாருக்கான், களுத்துறை.

இடி என்றால் இடிதான். பல வருடங்களுக்கு முன்னர் பிரமிக்கவைத்த அமீனை இன்று நம் கண்முன்பாகக் கொண்டுவந்து நிறுத்திவிட்டார் ரசிகன்.

கே. நிவாஸ், மாத்தளை.

'அன்ன பூரணி அம்மா' இலங்கைத் தமிழர் வரலாற்றின் சாதனை நிகழ்வுகளில் ஒன்று. மறுபடி 'அன்ன பூரணி அம்மா'வின் கதையை தரும் முரசுக்கு பாராட்டுக்கள்.

வி. யோகேஸ், இலண்டன்.

### உள்ளே வெளியே

அன்புள்ள முரசுக்கு;

இந்தியாவை புலிகள் பகைத்து விட்டனர் என்று மூக்கால் அழும் தமிழ்க் கட்சிகள், இந்தியப் பிரமுகர் நாகேந்திரநாத் ஜாவை அநாதரவாக கைவிட்டது ஏன்? அவர் கூறிய நியாயமான கருத்தை தலையீடாக அரசு வியாக்கியானம் செய்தபோது, தமிழ்க் கட்சித் தலைவர்கள் தலை மறைவானது ஏன்? இவர்களுக்கு உருப்படியான உள்நாட்டுக் கொள்கையும் கிடையாது; வெளிநாட்டுக் கொள்கையும் கிடையாது. சந்தர்ப்பத்துக்கு ஏற்ப அடுத்தவர்மீது பழியைப்போட்டு, தங்கள் கையாலாகாத்தனங்களை மறைப்பதே பழக்க தோஷமாகிவிட்டது.

எஸ். பரமேஸ்வரன், திருமலை.

### அறிவித்தல்

உங்கள் கரம் சேரும் முரசில் அச்சுப் பிழையோ, அல்லது ஏதாவது பக்கத்தில் அச்சாகத் தவறியோ இருந்தால், உங்கள் முகவரிடம் திருப்பிகொடுத்துவிட்டு, வேறு பிரதி வாங்கிக் கொள்ளுங்கள். 'முரசு' அச்சாகும் வேகத்தில் அரிதாக சில தாள்களில் தவறு நேர்ந்துவிடுகிறது. மாற்றித்தர மறுக்கும் முகவர்கள் பற்றி எம்மிடம் புகார் தரலாம். புகாருடன் குறிப்பிட்ட தாளையும் அனுப்ப வேண்டும். திருப்தியான சேவையே முரசின் மூச்சு.

-நிர்வாகி.

### அன்று மட்டுமா?

'இடி அமீன்', 'அன்னபூரணி அம்மா', 'கண்ணீரில் கரைந்த இரவுகள்' மூன்றும் முரசின் முத்திரை பதிக்கும் தொடர்கள். கப்பலோட்டிய தமிழர்கள் அன்று மட்டும்தான் இருந்தார்களா? என் கேள்வி புரிந்தால் சரி!

எம். தேவநந்தினி, யாழ்ப்பாணம்.

மடல்கள் மற்றும் ஆக்கங்கள்- உட்பட சகல
தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர், த.பெ.இல:- 1772, கொழும்பு.



படிப்பகம்

www.padippakam.com

# குடாநாட்டில் பாதுகாப்பு தளர்வு
# புலிகளின் ஊடுருவல் தீவிரம்!

யாழ் குடாநாட்டில் இருந்து பெருமள வான படையினர் கிளிநொச்சிக்கு நகர்த்தப் பட்டுள்ளனர். இதனால் காவலரண்கள் பல வெறிச்சோடியுள்ளன.

யாழ் தீவுப்பகுதிகளின் பாதுகாப்புப் பொறுப்பை கடற்படையினர் ஏற்றுள்ளனர். இயக்கங்களை சேர்ந்தவர்களும் ஆயுதங் களுடன் நடமாடக்கூடாது என்று கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது.

'முகாம்களுக்குள் ஆயுதங்களை வைத் திருக்கலாம். வெளியே கொண்டுதிரிய அனுமதிக்கமாட்டோம்' என்று திட்டவட்ட மாக இயக்கத் தலைமைகளிடம் தெரிவிக்கப் பட்டுள்ளதாம்.

யாழ் குடாநாட்டில் இருந்து படையினர் நகர்த்தப்பட்டுள்ளதால், புலிகளது நட மாட்டம் அதிகமாகியுள்ளது.

'ஜயசிக்குறுய்' நடவடிக்கையை முடுக்கி விடுவதற்காக கிளிநொச்சி முனையிலும், ஓலுமடுவிலும் படையினர் குவிக்கப்பட்டு வருகின்றனர்.

இதனை அறிந்து தமது தாக்குதல் அணிகளை யாழ்ப்பாணத்திற்கும், கிழக்குக்கும் பிரபாகரன் அனுப்பிவைத்துள்ளார்.

இதற்கிடையே பொட்டம்மான் சில வாரங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணம் மானிப்பாய் பகுதியில் காணப்பட்டதாக தகவல்கள் கூறுகின்றன.

பூநகரியை தளமாக கொண்டு செயற் படும் பொட்டம்மான் அடிக்கடி யாழ் குடா நாட்டுக்கு வந்து செல்கிறார்.

பாரியதாக்குதல்களை முடுக்கிவிட புலிகள் தயாராகி வருவதற்கான அறி குறிகளே தென்படுகின்றன.

வன்னிக்கு படைகளை நகர்த்தும் படைத் தரப்பினர் யாழ் குடாநாட்டில் பாரிய தாக்குதல்களுக்கு முகம் கொடுக்க நேரும் என்று கருதப்படுகிறது.

### சங்கிலியன்படை

இதற்கிடையே 'உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள், தம்மைப் பற்றிய தகவல் கொடுப்போர் ஆகியோரை குறிவைக்கும் பொறுப்பை சங்கிலியன் படையிடம் பிரபா கரன் ஒப்படைத்துள்ளதாக தெரிகிறது.

யாழ்ப்பாணத்தில் உள்ளூராட்சி சபை தேர்தல்கள் நடைபெற்ற பின்னர் உருவாக்கப் பட்டதே 'சங்கிலியன் படை'யாகும்.

இப்படைக்கும் தமக்கும் தொடர்பில்லை என்பதுபோல புலிகள் காண்பிப்பதால், வேட்டைகள் தொடர உள்ளன என்றே அஞ்சப்படுகிறது.

துரோகிகளால்தான் சங்கிலி மன்னன் காட்டிக் கொடுக்கப்பட்டான். அதனால் தம்மால் துரோகிகள் என்று கருதப்படு வோரை ஒழித்துக் கட்டும் பிரிவுக்கு 'சங்கிலியன் படை' என்று புலிகள் பெயர் சூட்டியுள்ளதாக ஊகிக்கப்படுகிறது.

யாழ் மாநகர முதல்வர் கொலைக்கு தாமே பொறுப்பு என்று சங்கிலியன் படை உரிமை கோரியுள்ளது. இந்த அமைப்பு உரிமை கோரிய முதல் நடவடிக்கை இதுவாகும்.

சங்கிலியன் நல்லூரை தலைநகராக கொண்டு ஆட்சி செய்த மன்னராகும். சங்கிலியன் படை உரிமை கோரியுள்ள முதலாவது நடவடிக்கையும் நல்லூரில்தான் நடைபெற்றுள்ளது. திருமதி யோகேஸ்வரனும் நல்லூரைச் சேர்ந்தவரே.

## பாவித்த துப்பாக்கிகள் இறக்குமதி
### 12 துப்பாக்கியில் ஒன்றுதான் புதிது

சிறிலங்கா விமானப்படைக்குப் பயன் படுத்துவதற்காக 23 எம்.எம்.ரக 'புதிய' துப்பாக்கிகள் 12 கடந்த வருடம் இறக்குமதி செய்யப்பட்டன. இவை எம்.ஐ. 24 ஹெலிக் கொப்டர்களில் பொருத்தப்படுவதற்காகவே தருவிக்கப்பட்டன. இவை ஹிங்குறாக் கொடையிலுள்ள விமானப்படைப் பிரிவுக்கு அனுப்பி வைக்கப்பட்டன.

இத்துப்பாக்கிகளைப் பற்றி விமானப் படை பொறியியல் பிரிவின் இயக்குநர் எயார் கொமடோர் ஜி.வை.டி. சில்வா உயர் அதிகாரிகளுக்கு ஓர் அந்தரங்கத் தகவலை அனுப்பி வைத்துள்ளார். புதிய துப்பாக்கிகள் என்ற பெயரில் தருவிக்கப்பட்ட 12 துப்பாக்கி களில் ஒன்றே ஒன்று மட்டும் புதியது எனவும் ஏனைய 11 துப்பாக்கிகளும் ஏற் கனவே பாவிக்கப்பட்ட பழையவை என்றும், அத் தகவலில் குறிப்பிட்டுள்ளார்.

இத்துப்பாக்கிகள் பலமுறை பழுது பார்க்கப்பட்டுள்ளது. அவற்றின் மீது சுத்தியலால் அடித்த அடையாளங்கள் காணப்படுகின்றனவாம். துருப்பிடித்த பகுதிகளும் கரி அடையாளங்களும் சில வற்றில் தென்படுவதாகவும் ஜெனரல் சில்வா தெரிவித்திருக்கிறார்.

இறுதியாகத் தனது அறிக்கையில், "இவை பயன்படுத்தத் தகுதியற்ற நிலையிலுள்ளன," என்றும் ஜெனரல் சில்வா குறிப்பிட்டுள் ளாராம்.

இப்புதிய ஆயுதங்கள் ஏற்கனவே பாவிக் கப்பட்ட பழைய ஆயுதங்கள் என்ற உண்மை இவை தருவிக்கப்பட்டு இருமாதங்களில் உணரப்பட்டதாகவும் இவற்றைப் புதியவை என்று கூறி உரிய பணம் முழுமையாகச் செலுத்தப்பட்டுவிட்டதாகவும் தெரிகிறது.

## ஒத்திவைப்பு

அமெரிக்க இராணுவத்தின் பசிபிக் பிராந்திய உயர் அதிகாரியான ஜெனரல் வில்லியம் ஸ்ரீல் கடந்த வாரம் இங்கு வருவதாக இருந்தார்.

இவர் இங்கு இரு நாட்கள் தங்கியிருப்பார் என்றும் கூறப்பட்டது. ஆனால் கடைசி நேரத்தில் அவருடைய விஜயம் ரத்துச் செய்யப்பட்டு விட்டதாகத் தெரிகிறது.

## குண்டு எறிந்தது யார்?
## மக்கள் மத்தியில் கேள்விக்குறி

அக்கரைப்பற்றில் 14.05.98 அன்று பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் புலி களால் சுட்டுக்கொல்லப்பட்டார். இச் சம்பவம் பற்றி திரிபான செய்திகளே வெளியாகி இருந்தன.

பள்ளிவாசலுக்குள் தொழுகையில் இருந்தவரை, முஸ்லிம்போல வேடமணிந்து சென்ற ஒருவர் சுட்டதாகவே செய்திகள் கூறப்பட்டன.

ஆனால் நடந்தது வேறு. சில நாட் களுக்கு முன்னர் புலிகளால் ஒரு அறிவிப்பு வெளியாகி இருந்தது. படைகளிலும், பொலிஸிலும் பணியாற்றுபவர்கள் மற்றும் படையினருடன் இணைந்து செயற்படுவோர் யாராக இருந்தாலும் தண்டனை வழங்கப் படும் என்று அறிவித்திருந்தனர்.

அதன்பின்னரே அக்கரைப்பற்றில் குறிப்பிட்ட பொலிஸ் உத்தியோகத்தர்மீது குறிவைத்தனர். தன்னைச் சுட வருகிறார்கள் என்று தெரிந்ததும் பள்ளிவாசல் நோக்கி அவர் ஓடியுள்ளார். துரத்திச் சென்று புலிகள் சுட்டுள்ளனர்.

பின்னர் புலிகளை துரத்த முற்பட்ட பொதுமக்களை நோக்கி கைக்குண்டு ஒன்று வீசப்பட்டது. எச்சரிக்கைக்காக வீசப்பட்டமை யால்தான் உயிரிழப்பு எதுவும் ஏற்படவில்லை.

தொழுகையில் ஈடுபட்டிருந்தபோது சுடப்பட்டார் என்றும், முஸ்லிம்கள் போல வேடமணிந்து வந்ததாகவும் கூறப்படுவதை சம்பவத்தை நேரில் கண்ட மக்கள் மறுத் துள்ளனர்.

### கல்முனையில்

ஆனால், மேற்படி சம்பவத்தை பெரிது படுத்த விரும்பிய சில சக்திகளே தகவல்களை திரித்துக் கூறியதாக அறியப்படுகிறது.

அக்கரைப்பற்று சம்பவம் நடைபெற்ற பின்னர், கல்முனைக்குடியில் மின்மாற்றி ஒன்றுக்கு கைக்குண்டு எறியப்பட்டுள்ளது.

முஸ்லிம் மக்கள் காயப்படக்கூடியதாக திட்டமிட்டு வீசப்பட்ட கைக்குண்டுகளே அவையாகும். அக்கரைப்பற்று சம்பவத்தை தொலைபேசி மூலம் அறிந்துவிட்டு, நடத் தப்பட்ட சமூக மோதல் முயற்சி என்றே கல் முனைக்குடி சம்பவம் பற்றி சந்தேகிக்கப் படுகிறது.

மின்மாற்றிகளை புலிகள் தகர்த்து வருவ தால், மின்மாற்றிக்கு கைக்குண்டு எறிந்தால் புலிகள்மீதே பழிவிழும். முஸ்லிம்கள் பலியா னால் பதற்றம் ஏற்படும் என்று கருதி யிருக்கலாம்.

மின்மாற்றிகளை குண்டு வைத்து தகர்ப் பதே புலிகளது வழக்கமாகும். குறிப்பிட்ட பகுதியில் புலிகள் அடிக்கடி நடமாடுவதால் குண்டு வைத்து தகர்ப்பது பெரிய காரியமாக இருக்காது. தூரத்தில் நின்று கைக்குண்டை அவசரமாக எறிந்துவிட்டு ஓடத் தேவை யில்லை என்று பொதுமக்களே கூறுகின்றனர்.

கைக்குண்டு வெடித்த சில நிமிடங் களுக்குள் அங்குதோன்றிய கட்சிப் பிரமுகர் ஒருவர் 'மறுநாள் கர்த்தால் நடத்த வேண்டும்' என்று கூறியதும் சந்தேகத்தை ஏற்படுத்தி இருக்கிறது. ஆனாலும் கல்முனையில் கர்த்தால் பெரும் வெற்றியளிக்கவில்லை. அக்கரைப்பற்றில் வெற்றியளித்தது.

அரசியல்வாதிகள் தூண்டியும் முஸ் லிம் பொதுமக்கள் அமைதியாகவே இருந்த னர். எவ்வித அசம்பாவிதமும் நடைபெற வில்லை.

## இறுதி அஞ்சலியில் சலசலப்பு - நிருபரை மாட்டிவிட்டனர்

யாழ் மாநகர முதல்வர் சரோஜினி யோகேஸ்வரனின் இறுதி அஞ்சலி நிகழ்ச்சி யில் ஐநூறுக்கும் குறைவான பொதுமக்களே யாழ்ப்பாணத்தில் கலந்து கொண்டனர்.

யாழ் மாநகர சபை ஊழியர்கள் அனைவரும் அழைத்துவரப்பட்டதாலேயே அஞ்சலி நிகழ்வு வெறுமையாக காணப்படா மல் இருந்தது.

இதற்கிடையே அஞ்சலி நிகழ்ச்சியை குறிப்பெடுத்துக் கொண்டிருந்த பி.பி.சி. நிருபர் நிமலராஜனை கூட்டணி ஆதரவாளர் ஒருவர் தாக்க முற்பட்டார்.

யாழ்ப்பாணத்தில் சிவகுமார் ஸ்ரோர்ஸ் என்னும் வியாபார நிறுவனம் நடத்துபவரே நிருபரை தாக்க முற்பட்டாராம். பின்னர் அங்கு நின்ற படை அதிகாரியிடம் நிருபர் பற்றி புகாரும் செய்தாராம்.

"இவர் தவறான தகவல்களை கொடுக் கிறார், நீங்கள்தான் கவனிக்க வேண்டும்" என்றும் இராணுவ அதிகாரியிடம் மாட்டி விட்டாராம்.

'நீங்கள் முகாமில் வந்து புகார் செய் யுங்கள்' என்று இராணுவ அதிகாரி கூறினா ராம்.

"நிராயுதபாணியான நிருபரை மாட்டி விடவும், தாக்கவும் முற்படுகிறார்கள். இவர்கள் கையில் ஆயுதம் இருந்தால் என்னாகும்?" என்று சம்பவத்தை நேரில் கண்ட ஒருவர் கேள்வி தொடுத்தார்.

## அறியாததால் தப்பினர்

யாழ்மாநகர முதல்வர் சரோஜினி யோகேஸ்வரன் சுடப்பட்டபோது,அவரது அரு கில் இருந்தவரும் மாநகர சபை உறுப்பினர் என்பது சுட்டவர்களுக்கு தெரியாது. அத னால்தான் அவரை விட்டுச் சென்றுள்ளனர்.

யாழ் விளையாட்டரங்கிலிருந்து துரையப்பா வின் பெயரை நீக்கக்கூடாது என்று உரையாற்றிய பரமசிவம் அவர்தான் என்று தெரிந்திருந்தால் அவரது கதி என்னாகியிருக்கும்? என்று மற்றொரு மாநகர சபை உறுப்பினர் அச்சம் தெரிவித்தார்.

உள்ளூராட்சி தேர்தல் நடப்பதற்கு சில நாட்களுக்கு முன்னரே இலண்டனில் இருந்து வந்திருந்தார் பரமசிவம். பிள்ளைகள் தடுத்தும் கேளாமல் வந்திருந்தார்.

தற்போது மறுபடி இலண்டன் செல்லும் உத்தேசத்தில் இருப்பதாகக் கூறப்படுகிறது.

சூடு விழுந்ததும் மேயரையும் விட்டு ஓடிய பரமசிவம் வீதியில் விழுந்து கிடந்தார். ஊரவர்கள் சிலரால் மருத்துவமனைக்கு கொண்டுசெல்லப்பட்டார்.

## திருமலையில் வெடி விபத்து

பாரிய தாக்குதல் ஒன்றுக்கான தயாரிப்புக் களில் ஈடுபட்டபோது தற்செயலாக ஏற்பட்ட வெடி விபத்தில் ஐந்து புலிகள் பலியானார்கள்.

இந்த விபத்து திருமலை புடவைக்கட்டுப் பகுதியில் இடம்பெற்றுள்ளது. திருமலை, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு ஆகிய பகுதி களைச் சேர்ந்த ஐந்து புலிகள் பலியாகினர். ஒருவர் பெண்புலி. 16.05.98ல் இந்த விபத்து நடந்துள்ளது.

## மின்மாற்றிகள் தகர்ப்பு-புலி ஒருவர் பலி

மட்டக்களப்பு- ஏறாவூர் மீராகேணியி லுள்ள மின் மாற்றியொன்று குண்டுவைத்துத் தகர்க்கப்பட்டது. மின்மாற்றியில் குண்டைப் பொருத்திக் கொண்டிருக்கும்போது மின் சாரம் பாய்ந்ததால் குண்டு பொருத்திய புலி உறுப்பினர் கருகி மாண்டார்.

அவரால் கைவிடப்பட்டு அவ்விடத்தில் காணப்பட்ட சைக்கிளில் இருந்த பைக்குள் மேலும் ஒரு குண்டு இருந்தது. ஏறாவூர் முஸ்லிம் பகுதியில் புலிகளால் தகர்க்கப்பட்ட முதலாவது மின்மாற்றி இதுவாகும்.

இச்சம்பவம் கடந்த 15.05.98 அன்றிரவு 10.15 இற்கு இடம்பெற்றது. கொல்லப்பட்ட புலி உறுப்பினரின் சடலம் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினூடாகப் புலிகளிடம் கையளிக்கப்பட் டது. இதனிடையே மட்டக்களப்பு- மஞ்சந்தொடு வாயிலுள்ள மின்மாற்றியொன்றையும் புலிகள் கடந்தவாரம் தகர்த்தனர்.

## எண்ணெய்க் குதம் குத்தகை?

திருகோணமலை துறைமுக வளாகத் துக்குள் சீனக்குடாவில் உள்ள எண்ணெய்க் குதங்களை சிங்கப்பூர் நிறுவனம் ஒன்றுக்குக் குத்தகைக்குக் கொடுப்பதற்கு இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் ஒழுங்குகளைப் பூர்த்திசெய்துவிட்டதாக தகவல்கள் வெளி யாகியுள்ளன. இதனால் 16 கோடி 90 இலட்சம் ரூபா கிடைக்கும் என்றும் கூறப்படுகிறது.

இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியும் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜயவர்த்தனாவும் 1987 ஜூலையில் கைச்சாத்திட்ட இலங்கை-இந்திய ஒப்பந்தத்தில் திருகோணமலை எண்ணெய்க் குதங்களை இந்தியாவின் அனுமதியில்லாமல் வேற்று நாட்டவர்களுக்கு வழங்கலாகாது என்று ஒரு சரத்தும் இருந்தது. எனவே இப்பொழுது உத்தேசிக்கப்பட்டுள்ள குத்தகை தொடர்பான நடவடிக்கைகள் இலங்கை-இந்திய ஒப்பந்தத்துக்கு விரோதமான ஒரு நடவடிக்கையாகும் என்று ஒரு அரசியல் பிரமுகர் முரசிடம் தெரிவித்தார்.

## சூடான காதல் மோதல்
### 75 ஆடுகள் காலி

இரு குடும்பங்களுக்கிடையில் ஏற்பட்ட காதல் விவகாரமொன்று கைகலப்பில் முடிந்தது. பின்னர் அது விஸ்வரூபமெடுத்து ஒரு குடும்பத்திற்குச் சொந்தமான 75 ஆடுகளை தீக்கிரையாக்கப்பட்டதுடன் ஒருவர் கத்திக்குத்துக்கும் இலக்கானார்.

புலி இயக்கத்தினரின் வசமுள்ள மட்டக் களப்பு உறுகாமப் பகுதியில் இச்சம்பவம் சமீ பத்தில் இடம்பெற்றது. புலிகள் இச்சம்பவத்தை விசாரித்து ஆடுகள் எரிக்கப்பட்ட பாதிக்கப்பட்ட குடும்பத்தினருக்கு உடனடி இழப்பீடாக ரூபா 50 ஆயிரத்தை வழங்குமாறு பணித்துள்ளனராம்.

காதல் விவகாரத்தில் சம்பந்தப்பட்ட இக்குடும்ப உறுப்பினர்கள் கலகத்தில் கைகலந்து ஒரு குடும்பத்திற்குச் சொந்தமான ஆட்டுக் கொட்டிலுக்குத் தீ வைத்தனர். அதனால் அங்கிருந்த 75 ஆடுகளும் தீயினால் கருகி இறந்து கிடக்கக் காணப்பட்டன.

## சரோஜினி பற்றி புலிகள்

யாழ் மாவட்ட உள்ளூராட்சித் தேர் தலை முன்னிட்டு புலிகள் இயக்க உத்தி யோகபூர்வ பத்திரிகையான 'விடுதலைப்புலிகள்' கண்டனக் கவிதை ஒன்று பிரசுரித்திருந்தது. அக்கவிதையில் திருமதி யோகேஸ்வரன் பற்றி பின்வருமாறு குறிப்பிட்டிருந்தனர்.

**கண்ணீரில் உன் கன்னங்கள் கரைந்து**
**உயிர்கருக நீ ஓலமிட்டபோது,**

'வெற்றிவேலரின் மருமகளுக்கு'
விழி திறக்கவில்லை.
வெள்ளவத்தையில் வீதியுலாவும்
கொள்ளுப்பிட்டியில்
கோலாகலமாக இருந்த
சீமாட்டிக்கு சிம்மாசனம் தேவையாம்.
.............
வருவோம் எனச் சொல்லுக
வருவோம்..........! என்று அக்கவிதை முடிவுற்றிருந்தது.

## தரைப்பாதையில் ஊடுருவல்
### செட்டிக்குளத்தில் சிறுத்தை அணி!

(நமது நிருபர்)

மன்னாரில் இருந்து அநுராதபுரம் நோக்கிச் சென்று கொண்டிருந்த இராணுவத் தொடரணிமீது 14.05.97 அன்று தாக்குதல் நடைபெற்றமை தெரிந்ததே.

'ஒப்பரேசன் எடிபல' மூலம் கைப்பற்றப் பட்ட தரைப்பாதையில் செட்டிக்குளத்தில் வைத்தே இத்தாக்குதல் இடம்பெற்றது.

இத் தாக்குதல் தொடர்பாக முரசுக்கு கிடைத்த தகவல்கள்:

மன்னாரில் இருந்து காலை 9.30 மணி யளவில் புறப்பட்ட இராணுவத் தொடர் அணி யில் 11 வாகனங்கள் சென்று கொண்டிருந்தன.

கற்பிட்டி, கொழும்பு ஆகிய பகுதிகளுக் கான பயணிகள் பஸ் வண்டிகளும் இத் தொடரில் பயணம் செய்தன.

கட்டையடம்பன் இராணுவ முகாமில் இருந்து செட்டிகுளம் வரை முதலில் வாகனமும், அடுத்ததாக பயணிகள் பஸ்சும், பின்னர் இரா ணுவ பஸ்களும் செல்வதே வழக்கமாகும்.

ஆனால் அன்று மட்டும் வழக்கத்திற்கு மாறாக, பயணிகள் பஸ் இரண்டையும் கடைசி யில் வருமாறு படையினர் கூறிவிட்டனர்.

வாகனத் தொடர் புறப்பட்ட தகவல் அறிந்ததும், செட்டிகுளத்தில் புலிகள் தாக்கு தலுக்கு தயாராக நின்றனர். நாற்பது புலிகள் வரை அங்கு நின்றனர்.

வாகனத் தொடர் செட்டிகுளத்தை அண் மித்ததும் இராணுவ பஸ் வண்டியை கவ னித்து முதலில் ஆர்.பி.ஜி. ஷெல் ஒன்று ஏவப்பட்டது.

அடுத்து கிளைமோர் தாக்குதலும் இடம் பெற்றது. அடுத்தடுத்த அதிர்ச்சிகளால் படை யினர் உடனடியாக பதில் தாக்குதல் நடத்த முடியவில்லை.

அதனைத் தொடர்ந்து இருபுறமும் புதர் களுக்குள் பதுங்கியிருந்த புலிகள் பஸ் வண்டி களை சுற்றிவளைத்து தாக்கத் தொடங்கினர்.

பயணிகள் பஸ்களில் சென்ற பொது மக்கள் கீழே இறங்கி தரையோடு தரையாக படுத்துக் கொண்டனர்.

படையினரும் திருப்பித் தாக்கத் தொடங் கினர். 12.05.க்கு ஆரம்பமான மோதல் 12.30 வரை தொடர்ந்தது.

சண்டையின் முடிவில் ஸ்தலத்திலேயே 17 படையினர் பலியாகி இருந்தனர். 40ற்கு மேற்பட்டோர் காயமடைந்தனர். அவர்களில் பலரது நிலை கவலைக்கிடமாக இருந்தது. 20ற்கு மேற்பட்டோர் பலியாகி இருக்கலாம் என்று நம்பப்படுகிறது.

ஏழு வாகனங்கள் சேதமடைந்தன. பய ணிகள் பஸ் வண்டி சேதமடையவில்லை. பயணிகள் எவருக்கும் காயமும் ஏற்பட வில்லை என்பதுதான் ஆச்சரியம். ஆனால் சைக்கிளில் சென்று கொண்டிருந்த எம்.உவைஸ் (24) என்பவர் துப்பாக்கிச் சூடு பட்டு பலியானார்.

சிறுத்தை அணியே இத் தாக்குதலை நடத்தியிருக்கரலாம் என்று தெரிகிறது. 'ஜயசிக்குறுய்' படையினர் தரைப்பாதை ஒன்றை திறக்க ஒருவருடமாக முயன்று வருகின்றனர். அதேசமயம் எடிபல மூலம் திறக்கப்பட்ட வவுனியா-மன்னார் தரைப் பாதைக்கு பாரிய அச்சுறுத்தல் ஏற்பட்டுள் ளது.

## கிழக்கிலும் கொண்டாட்டம்

'ஜயசிக்குறுய்' படையினருடனான ஒரு வருட கால சமரை முன்னிட்டு வன்னியில் புலிகள் வெற்றிக் கொண்டாட்டங்கள் நடத்தினர்.

புலிகளின் தலைவர் பிரபாகரனால் செய்தி ஒன்றும் விடுக்கப்பட்டிருந்ததும் தெரிந்ததே.

கிழக்கு மாகாணத்திலும் தமது கட்டுப்பாட் டில் உள்ள பகுதிகளில் ஜயசிக்குறுய் மீதான ஒரு வருட சமர் நிறைவை புலிகள் கொண்டாடினர்.

கொக்கட்டிச் சோலையில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் முக்கியமான இலங்கை அரசுத் தலைவர்களின் கொடும்பாவிகள் எரிக்கப்பட்டன.

ஜயசிக்குறுய் மீதான முக்கிய தாக்குதல் காட்சிகள், கைப்பற்றப்பட்ட ஆயுத தள பாடங்கள் போன்றவற்றை காண்பிக்கும் புகைப்பட கண்காட்சிகளும் நடைபெற்றன.

கிழக்கில் தமது கட்டுப்பாட்டு பகுதிகளில் தெருக்கூத்துக்கள் மற்றும் கலை நிகழ்ச்சிகளை புலிகள் தொடர்ந்து நடத்தி வருகின்றனர்.

திருமலையிலும் புலிகளது கட்டுப்பாட் டில் உள்ள பகுதிகள் சிலவற்றில் கொண்டாட் டங்கள் நடைபெற்றன.

## பாகிஸ்தானின் அத்துமீறல்!
### அத்வானியின் குற்றச்சாட்டு!!

வட இந்திய எல்லைப்புற மாநில மான காஸ்மீரின் தீவிரவாதிகளுக்கு பயிற்சியும் ஆயுத உதவியும் வழங்கிப் பாகிஸ்தான் ஊக்குவிப்பதாகவும் இது வேண்டுமென்றே இந்தியாவைச் சீண்டிவிடும் செயல் எனவும் இந்திய உள்துறை அமைச்சர் அத்வானி பாகிஸ்தானை எச்சரித்துள்ளார்.

அணுகுண்டுப் பரிசோதனையை வெற்றி கரமாகப் பரிசோதித்து முடித்துவிட்ட இந்தியா இனிமேலும் பாகிஷ்தானின் இத் தகைய அடாவடி நடவடிக்கையைப் பொறுத் திருக்கப்போவதில்லை எனவும் அவர் மேலும் எச்சரித்தார்.

இதேவேளை, அமெரிக்கா முன்னர் தடுத்து வைத்திருந்த ஃபாந்தோம் யுத்த விமானங்களை பாகிஸ்தானுக்கு மீண்டும் வழங்கவுள்ளதாக அறிவித்துள்ளது.

இதுபோன்று, அணுசக்தியால் இயங்கும் நீர்மூழ்கியொன்றை ரசியா இந்தியாவுக்கு வழங்கவுள்ளது.

## அடுத்தது யார்?
## எவரும் முன்வரவில்லை!

பி.பி.சி. தமிழ் ஒலிபரப்பு 18.05.98 அன்று யாழ் பத்திரிகையாளர் ஒருவரைப் பேட்டி கண்டது.

அதில், அவர் "யாழ் மேயர் சரோஜினி யோகேஸ்வரன் சுட்டுக் கொல்லப்பட்டதை அடுத்து கூட்டணியில் யாரும் அடுத்த மேய ராக வர முன்வரவில்லை. யாரும் தயாராக இல்லை," எனத் தெரிவித்திருந்தார்.

"எனது மக்களால் மேயராகத் தெரிவு செய்யப்பட்ட நான் மக்களுடன் ஒன்றாகவே வாழ்வேன். எனக்குத் தனியாகப் பாதுகாப்பு தேவையில்லை" என மறைந்த சரோஜினி கூறியிருந்தார். அவரது இறுதிக் கிரியைகள் யாழ் மண்ணிலேயே நடாத்த வேண்டும் என கூட்டணி ஆதரவாளர்கள் மற்றும் பொதுமக்கள் கோரியிருந்தனர். அப்படி யிருந்தும் அவரது இறுதிக் கிரியைகள் கொழும்பு நகரிலேயே நடந்தேறின.

இத்தகைய நடவடிக்கைகள் கூட்டணி யின் சந்தர்ப்பவாத நிலைப்பாடே என யாழ் வாசியொருவர் கூறியதாக எமது நிருபர் தெரிவித்தார்.

கொழும்பில் சுட்டுக் கொல்லப்பட்ட முன்னாள் தலைவர் அ.அமிர்தலிங்கத்தின் பூதவுடல் திருமலைக்கு விமானமூலம் கொண்டு செல்லப்பட்டு; யாழ்ப்பாணத்தில் தகனம் செய்யப்பட்டது என்பதும் குறிப் பிடத்தக்கது.


படிப்பகம்

www.padippakam.com

# திடீர் சுற்றிவளைப்பு

கட்டைபறிச்சான் முகாமைச் சேர்ந்த இராணுவத்தினர் 22.04.98 புதன்காலை 5 மணியளவில் கட்டைபறிச்சானுக்குள் திடீரெனப் புகுந்தனர். கட்டைபறிச்சான், கடற்கரைச்சேனை, சேனையூர் ஆகிய கிராமங்கள் சுற்றிவளைக்கப்பட்டன.

இராணுவம் வருவதை உணர்ந்து கொண்ட சிலர் வழக்கம்போல வீடுகளை விட்டு வெளியேறி காட்டுப் பக்கம் சென்று விட்டனர். பல குடும்பங்கள் இராணுவ முற்றுகைக்குள் அகப்பட்டுக் கொண்டன. வழக்கமாக விடுதலைப் புலிகள் அக்கிராமங்களில் தங்குவதில்லை. எனவே எவரும் இருக்கவில்லை.

மோதல்கள் எதுவும் நிகழவில்லை. ஒரு துப்பாக்கி வேட்டுக்கூடத் தீர்க்கப்படவில்லை. பதற்றமடைந்த மக்களிடம், "நாங்கள் புலிகளைத் தேடித்தான் வந்தோம். நீங்கள் பயப்படவேண்டாம்." என்று இராணுவ அதிகாரி கூறிப் பயத்தைப் போக்கினார். எவரும் வெளியேற அனுமதிக்கப்படாததால் வேலைக்கு அரச ஊழியர்கள்கூட செல்லமுடியாது போயிற்று.

பதற்றத்தினால் சேனையூர் பாடசாலையில் வரவு குறைந்துள்ளது. பாடசாலையைத் தொடர்ந்து நடத்துங்கள் என்று இராணுவம் அதிபருக்கு ஆலோசனை கூறியிருக்கிறது.

அன்று மாலை 6 மணியளவில் எந்த அசம்பாவிதமும் இன்றி இராணுவம் திரும்பி விட்டது. இராணுவம் சென்ற தூரம் முகாமிலிருந்து 3 கிலோமீட்டருக்கு உட்பட்டதே. 150க்கும் 200க்கும் இடைப்பட்ட அளவினரே சென்றனர். பிரதான பாதையூடாகவே சென்றனர். ஏற்கனவே வெளியான தகவல்கள் கூறியதுபோல் கடல்மார்க்கமாக எவரும் இறக்கப்படவில்லை. தாக்குதல்களும் இடம்பெறவில்லை.

23ம் திகதி மக்கள் பயம் காரணமாக மூதூருக்கு வரவில்லை. ஒரு சிலரே வந்தனர். 24ம் திகதி நிலைமை வழமைபோலாகியுள்ளது.

# எங்கே போனது சீருடை

(திருமலை நிருபர்)

வடக்கு-கிழக்கு மாகாணப் பிரதி செயலர் அலுவலகத்தில் பணிபுரியும் சிற்றூழியர்களுக்கும் பொறியியல் பகுதியில் பணிபுரியும் சிற்றூழியர்களுக்கும் சீருடை வழங்கப்படாததன் காரணம் என்ன என்று இவ்வூழியர்கள் கேட்கிறார்கள்.

சகல திணைக்கள ஊழியர்களுக்கும் வழங்கப்பட்ட சீருடை துணிகள் இவர்களுக்கு மாத்திரம் வழங்கப்படாதிருப்பது குறித்து இவர்கள் விசனமடைந்துள்ளனர்.

25.05.97, 10.01.98 ஆகிய திகதிகளிடப்பட்ட சுற்று நிருபங்கள் சீருடை வழங்கல் சம்பந்தமாகத் தெளிவான அறிவுறுத்தல்களை வழங்கியும் கூட கணக்காளர் ஒருவர் இவர்கள் சீருடை பெறுக் கொள்வதற்கு முட்டுக்கட்டை போடுவதாக ஐக்கிய இலங்கை அரச ஊழியர் சங்க வடக்கு-கிழக்கு இணைப்பாளர் தினமுரசுக்குத் தெரிவித்தார்.

திருத்தங்கள், சுற்றுநிருபங்கள் என்பவற்றைப் படித்து கிரகிக்க மறுக்கும் இந்தக் கணக்காளர் தாபன விதிக் கோவையின் பழைய பதிப்பொன்றைக் கையில் வைத்துக் கொண்டு, "அதன்படிதான் நடப்பேன்" என்பது பைத்தியக்காரத்தமானது எனப் பாதிப்புற்ற ஊழியர் ஒருவர் கூறினார்.

மாகாணசபையின் கோளாறே இப்படியான அதிகாரிகள்தான் என்பது பிரதம செயலருக்கு எப்போதுதான் புரியுமோ?

# ஆசிரியர் இல்லை போதிக்க!

மொனறாகலை மாவட்டத்திலுள்ள ஒரேயொரு தமிழ்மொழி மூல முஸ்லிம் பாடசாலையான பகினிகஹவெல முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் கடந்த இருபது வருடங்களாக கணித, விஞ்ஞான ஆசிரியர்கள் நியமிக்கப்படவில்லை.

இதனால் இப்பாடசாலையின் கல்வித்தரம் வெகுவாகக் குறைந்து வருகின்றது. இங்கு சுமார் ஐநூறு வரையான மாணவர்கள் கல்வி பயில்கின்றனர். க.பொ.த. உயர் தரப் பிரிவும் இயங்குகின்றது.

கணித, விஞ்ஞான ஆசிரியர்கள் இன்மையால் அண்மைக் காலமாக இப்பாடசாலை மேற்படி பாடங்களில் பெரும் வீழ்ச்சி கண்டு வருகிறது.

கடந்த சில ஆண்டுகளாக ஊர் நலன் விரும்பிகளும், பெற்றோர்களும் இணைந்து தற்காலிகமாக ஆசிரியர் ஒருவரை நியமித்து பாடம் கற்பிக்க ஏற்பாடு செய்தனர். ஆனால் தற்போது அவரும் வேறிடம் சென்றுவிட்டார்.

எனவே, இப்பாடசாலையின் நீண்டகாலத் தேவையாக இருக்கும் கணித, விஞ்ஞான ஆசிரியர் தேவையினை நிவர்த்தி செய்ய சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்குமாறு பகினிகஹவெலயைச் சேர்ந்த ஆசிரியர் எஸ்.எம்.முஸம்மில் கேட்டுள்ளார்.

# வேண்டும் பொதுத் தொலைபேசி!

(மன்னார் நிருபர்)

மன்னார் நகரில் பொதுத் தொலைபேசி கூண்டுகளை அமைக்குமாறு தொலை பேசிப் பாவனையாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இங்குள்ள தனியார் தொலைத் தொடர்பு நிலையங்களில் கூடுதலான கட்டணம் அறவிடப்படுகின்றன.

அட்டைத் தொலைபேசி வசதி, நாணயத் தொலைபேசி வசதி என்பவற்றை நகரில் உள்ள முக்கிய இடங்களில் அமைத்தால் இங்குள்ள மக்களின் தொலைத் தொடர்புத் தேவைகளை நிறைவேற்றிக்கொள்ளமுடியும்.

இங்குள்ள இலங்கை செஞ்சிலுவைச் சங்க அலுவலகத்தில் நாணயத் தொலைபேசி இருக்கின்ற போதிலும் இது அடிக்கடி பழுதடைகின்றது.

மன்னார் பிரதான தபாலகம், பஸ் நிலையம், போன்ற இடங்களில் பொதுத் தொலைபேசிக் கூண்களை அமைக்க முடியும் எனச் சுட்டிக்காட்டப்படுகிறது.

# மத அவதூறுப் பிரசாரம்

குறிப்பிட்ட ஒரு மதக்குழுவைச் சார்ந்தோர் திருக்கோணமலையில் நடத்தும் தமது மதப்பிரசாரக் கூட்டங்களில் தேவையற்ற விதத்தில் கீழ்த்தரமான வார்த்தைகளில் இந்து தர்மத்தைக் குறைகூறி வருவதாகப் புகார் கிளம்பியுள்ளது.

இது தொடர்பாக திருக்கோணமலை மாவட்ட இந்து இளைஞர் பேரவையினரும் தமது ஆட்சேபனைக் கடிதமொன்றை கொழும்பிலிருக்கும் குறிப்பிட்ட மதக்குழுவினரின் தலைமைப்பீடத்துக்கு அனுப்பி வைத்துள்ளனர். அந்தக் கடிதத்தில் இந்துக்கள் மனம் புண்படும்படியாக வார்த்தைப் பிரயோகங்கள் செய்வதையோ இந்து தர்மத்தைக் கண்டிப்பதையோ கைவிடும்படி மத போதகர்களுக்கு பணிப்புரை வழங்குமாறும் கேட்கப்பட்டுள்ளது.

# திட்டமிட்ட குடியேற்றம்

90ம் ஆண்டுகாலப் பதற்றத்தைப் பயன்படுத்தி மூதூர் நகரில் திணைக்களங்களுக்குச் சொந்தமான காணிகளில் சுமார் 35 சிங்களக் குடும்பங்கள் அடாத்தாகக் குடியேறின. நகரமத்தியில் கொட்டில்கள் போட்டு வாழும் இவர்களது பிரதான தொழில்கள் ரி.வி.படம் காண்பிப்பது, கசிப்பு வடித்து விற்பது, சுவிப்டிக்கட் விற்பது என்பவையே. இவர்களுக்கு படையினரின் ஆசியும் உண்டு.

தற்போது உயர் மட்டத்தினர் சிலர் மேற்படி குடியேற்றக்காரர்களுக்கு அக்காணிகளை பெர்மிட் மூலம் உறுதிப்படுத்துவது பற்றி ஆராய்ந்து வருகிறார்கள். இச் சிங்களக் குடும்பங்கள் மூதூரைச் சேர்ந்தவர்கள் அல்லர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# முதன்மை வேட்பாளர் யார்?

## ஐ.தே. கட்சிக்குள் சர்ச்சை

(கண்டி நிருபர்)

மத்திய மாகாண சபையின் அடுத்த முதலமைச்சராக ஐ.தே. கட்சி நிறுத்தும் வேட்பாளர் யார்? இப்படி கேட்கிறார்கள் இப்பிரதேச மக்கள். மத்திய மாகாண சபையின் அடுத்த தேர்தல் இன்னும் சில மாதங்களில் நடைபெற இருப்பது தெரிந்ததே.

இந்நிலையில் இன்றைய முதலமைச்சர் திரு. டபிள்யூ.பீ.பீ. திஸாநாயக்காவை நிறுத்துவதாக அன்று முன்னாள் டி.யூ.என்.எஃப் பைச் சேர்ந்தவரும் இப்பொழுது ஐ.தே.கட்சியில் இணைந்து அமைச்சராக மாகாண சபையில் பணிபுரியும் திரு.கெஹலிய ரம்புக்வெல்ல என்பவரை நிறுத்துவதா என்ற சர்ச்சை ஐ.தே. கட்சி வட்டாரங்களில் பரவலாக ஆரம்பிக்கத் தொடங்கியுள்ளது.

கண்டி மத்திய சந்தைக்கு முன்பாக கடந்தவாரம் இடம்பெற்ற ஐ.தே.கட்சியின் மேதின விழாவின்போது மேடை மீது அமர்ந்திருந்த முதலமைச்சர் திஸாநாயக்கா, "நானே மீண்டும் முதலமைச்சராக வருவேன்!" என உறுதியாகக் கூறியதும் அதே மேடையில் வீற்றிருந்த திரு ரம்புக்வெல்ல அமைதியாக மனச் சோர்வுடன் காணப்பட்டார். அவரது ஆதரவாளர்களே பெரும் அதிருப்திக்கு உள்ளானார்கள்.

ரம்புக்வெல்லக்கு உரையாற்ற இடமளிக்காமல் விட்டதும் முன்னாள் டி.யு.என்.எஃப் ஆதரவாளர்கள் மத்தியில் பெரும் சர்ச்சையைக் கிளப்பியுள்ளதாகவும் பேச்சுக்கள் அடிபடுகின்றன.

இது இவ்வாறிருக்க 'இவ்விருவருமே வேண்டாம்; கண்டி மாவட்ட எம்.பி.திரு திஸ்ஸ அத்தநாயக்காவை நிறுத்தினால் பிரச்சனை சுமுகமாகத் தீர்ந்துவிடும்' என்று வேறு சிலர் அபிப்பிராயப்படுகின்றனராம். இந்த குசுகுசுப்புகள் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்காவுக்கும் எட்டியுள்ளதாம்.

# புலிகள் புதிய ஆளணி சேர்ப்பு!

தமது இயக்கத்தில் மேலும் ஆளணியினரைத் திரட்டிக்கொள்ளும் பொருட்டு கிழக்கில் புலிகள் இயக்கத்தினர் புதிய அங்கத்தவர்களைச் சேர்த்து வருகிறார்கள். படையினரின் கண்காணிப்பின் கீழ் உள்ள பகுதிகளிலும் புலிகள் இயக்கத்தினரின் வசமுள்ள பகுதிகளிலும் இந்த ஆட்சேர்ப்பு நடவடிக்கை இடம்பெறுகிறது.

இதற்கென விசேட பிரிவுக் காரியாலயம் ஒவ்வொன்று திறக்கப்பட்டுள்ளது. 'புதிய அங்கத்தவர் சேர்க்கும் இடம்' என்ற அறிவித்தல் பலகை தொங்கவிடப்பட்டுள்ளது. மட்டக்களப்பு- இலுப்படிச் சேனையிலும் புதிய ஆட்சேர்ப்பு விசேட பிரிவுக் காரியாலயம் திறக்கப்பட்டுள்ளது.

# இந்தியா பயணம்

மட்டக்களப்பு மாவட்டக் கூட்டுறவுச் சங்க ஊழியர்கள் கல்விச் சுற்றுலாஒன்றை மேற்கொண்டு இந்திய நாட்டிற்குப் பயணம் செய்யவுள்ளனர். 15 நாட்கள் இந்தியாவில் தங்கியிருந்து கூட்டுறவுத்துறை சம்பந்தமான அறிவைப் பெற்றுக்கொள்ளும் முகமாகவே இந்தப் பயணம் ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாக கூட்டுறவுச் சங்கக் கணக்காளரும் மாவட்ட சமாதான நீதிவானுமாகிய திரு.எஸ். நமசிவாயம் தெரிவித்தார்.

இதற்காக ஏற்படும் செலவை மாவட்டக் கூட்டுறவுச் சபையும் அந்தந்தக் கூட்டுறவுச் சங்கங்களும் ஏற்றுக்கொள்ளும்.


COMPUTER EDUCATION & TRAINING

MICROSOFT OFFICE '97 — Windows '97, Word, Excel, Power Point — காலம் : 3 மாதம்

TYPESETTING (DTP) — Aldus Pagemaker, Corel draw, Word Art, Art Gallery, Type Twister — காலம் : 3 மாதம்

Free Study Pack

ADVANCED DIPLOMA IN INFORMATION TECHNOLOGY
காலம் : 3 மாதம் தவணைமுறைக் கட்டணங்கள்

DIPLOMA IN COMPUTER STUDIES
காலம் : 3 மாதம்

UNLIMITED PRACTICAL HOURS
வெளிநாடு செல்வோர்க்கு குறுகிய கால வகுப்புகள்

அனைத்து வகுப்புகளும் ஒவ்வொரு வாரமும் புதன் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் ஆரம்பம்

LOTUSSE ACADEMY
257, JAMPETTAH STREET, COLOMBO 13. PHONE : 075 - 338724



அஸ்மா வைத்தியம்



* அஸ்மா
* இழுப்பு
* இருமல்
* மூக்கினுள் சவ்வு வளர்தல்
* தொய்வு(மூட்டு)
* இளைப்பு(மாய்ச்சல்)
* சளி
* நெடுநாள் தும்மல்

போன்ற குணங்களுக்கு முழு சுகமடைய

போன்றவற்றில் இருந்து ஹோமியோபதி வைத்திய முறைப்படித் தயாரிக்கப்பட்ட உடலுக்கு பாதுகாப்பான, பக்க விளைவுகள் அற்ற மருந்துகளைக் கொண்டு கிரந்தியான, குளிரான, சமிபாடு அடையாத உணவுகளை உண்ணுதல் மற்றும் குளித்தல் போன்ற பல விளக்க முறைகளுடன் சிகிச்சை அளிக்கப்படுகிறது.

வீரகேசரி வியாழக்கிழமை 30.10.1997

அஸ்மா நோயைக் குணப்படுத்திய டாக்டருக்கு நன்றி

பல வருடங்களாக இரவு, பகலாக நித்திரையின்றி, அமைதியின்றி அஸ்மாவால் அவஸ்தைப்பட்டுக் கொண்டிருந்த நான் தற்சமயம் இலக்கம் 25, சென் சில்வெஸ்டர் றோட், கல்கிசையிலுள்ள அஸ்மா சிகிச்சை நிபுணர் Dr. சுறாஜ் சோமசுந்தரம் அவர்களிடம் சிகிச்சை பெற்ற பின்னர் பூரண சுகமடைந்து மறுபிறவி எடுத்துள்ளேன் என்பதனை இந்நோயால் கஸ்டப்படும் பிறருக்கு தெரிவிப்பதன் மூலம் டாக்டருக்கு எனது நன்றிக்கடனைச் செலுத்துகின்றேன். இப்படிக்கு ராஜ் பெர்னாண்டோ 156/44, ஜிந்துபிட்டி வீதி, கொழும்பு - 13.

வீரகேசரி சனிக்கிழமை 02.05.1998

அஸ்மா நோயைக் குணப்படுத்திய டொக்டருக்கு நன்றி

இப்படிக்கு: ... 221/6, நாயக்ககந்த வீதி. ... வத்தளை. T.P: 933912.

டாக்டர் சுறாஜ். சோமசுந்தரம்
Ph.DH(Ind);M.B.B.SCH (Cey)
Govt.Reg. No: A 1553(1970)

25, சில்வெஸ்டர் றோட்,
கல்கிசை. (மவுண்ட்லேவினியா) (கொழும்பு)
(பஸ்ஸால் இறங்க வேண்டிய இடம் ஓடியன் தியேட்டர்)

தினமும் மாலை 4 மணி முதல் 7 மணி வரை

தொலைபேசியில் தொடர்பு கொண்டு பதிவு செய்தால், காலை நேரங்களிலும் பார்வையிடப்படும். தபால் மூலம் வைத்தியம் செய்யப்படமாட்டாது.

074 - 201582






மலையாள மாந்திரிகம்

மலையாள மாந்திரிகத்தை இலங்கையில் திட்டவட்டமாக கற்றவர் பி.கே.சாமி அவர்களே! இதை ஒட்டி எத்தனை எத்தனையோ விருதுகள் பெற்றுள்ளார். இச்சேவையில் கெடுதலுக்கு இடமில்லை. நன்மைக்கே இடம். நிச்சயமாக ஒருவரை விரும்பினால் திருமணம் செய்வதென்று முடிவெடுத்தால் பரிபூரண உதவி செய்வார். காதலர்களை சேர்த்து வைப்பது, பிரிந்த காதலை ஒன்று சேர்ப்பது, பிரிந்தவரை அழைத்து எடுப்பது, திருமண தோஷத்திற்கு சாந்தி பரிகாரம் செய்வது, பிறந்த திகதி, மாதத்தை வைத்து வாடிக்கையாளரை கண்ட மாத்திரத்தில் இதுதான் இவர்களின் பிரச்சனை என்று கூறுவதுடன் கணவன் மனைவி பிரச்சனை, தொழில் முன்னேற்றம், வெளிநாட்டுப் பிரயாண தடைநீங்க, இன்னும் மாந்திரிக வேலைகளுக்கும் ஜாதக வேலைகளுக்கும் வெளிநாட்டிலும் உள் நாட்டிலும் 33 வருட உண்மை சேவை புரிவதாலும் வாடிக்கையாளர் மனதை கோணாது செயல்படுவதாலேயும் இன் நிறுவனம் வரையறுக்கப்பட்ட நிறுவனமாக விஸ்தரிக்கப்பட்டுள்ளது. கடல் கடந்து செயல்படக்கூடிய எத்தனை எத்தனையோ வசிய யந்திரங்கள் உண்டு.

தேவையான வெளிநாட்டவர்கள் உங்கள் ஆடர்களை இலங்கை நேரப்படி காலை 9 மணி முதல் இரவு 9 மணி வரையே தொலைபேசி அல்லது பெக்ஸ் ஆடர்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.



தேவைகளுக்கு உலக மாந்திரிக சக்கரவர்த்தி
P.K. SAAMI J.D.G.A.N&JP
SRI DURGAADEVI MANTHIRIKA
UCHCHADA PEEDAM
NO. 162, KOTAHENA STREET,
MAY FIELD ROAD, COLOMBO-13.

வெளிநாட்டவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி
Fax-00941342464.
Tel-00941431137.
உள்நாட்டவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்கள்
342463-344831



மனோதத்துவ வைத்தியம் வவுனியாவிலும் சந்திக்கலாம்

இளைஞர்களே! உங்கள் அடிமனதில் ஆழப்பதிந்துள்ள தாழ்வு மனப்பான்மையை மனோதத்துவ சிகிச்சை மூலம் மாற்றி வெற்றிப் பாதையில் விரைந்திட பிரபல மனோதத்துவ நிபுணர் டாக்டர் ஆறுமுகம் அவர்களைச் சந்தியுங்கள். இளம் சமுதாயத்தினரை வாட்டும் உடல் மெலிவு, கனவில் சக்தி இழத்தல், ஞாபக மறதி, பயம், நடுக்கம், வெட்கம், சந்தேகம், ஏமாற்றம், நித்திரையின்மை போன்ற தன்னம்பிக்கை இழக்கக்காரணமான வியாதிகளை மனோதத்துவ சிகிச்சை மூலம் நீக்கி புத்துயிர் பெறுங்கள்.

SEXUAL DISORDERS

தாம்பத்திய பாலியல் குறைபாடுகளுக்கு நோயும் காரணமானாலும் 85% தாழ்வு மனப்பான்மையே காரணம் என்பதை 90 நிமிடத்தில், தான் வீரியம் உள்ள ஆண்மகனாகி விட்டேன் என்று அடிமனதில் பதிய வைத்த பின்னரே பணம் பெறப்படும்.

வெளிநாட்டில் வசிப்போருக்கு

வெளிநாட்டில் இருப்பவர்கள் தங்களின் தாம்பத்திய குறைபாடுகளுக்கு விரிவான விளக்கத்துடன் கடிதத் தொடர்பு மூலம் தொடர்பு கொள்ளலாம். மனோதத்துவ சிகிச்சையைப் பதிவு நாடா மூலம் பெற்றுச் சுகமாக்கலாம். உடன் பதில் தேவையானோர் தபால் செலவுக்குப் முதற் பணம் அனுப்ப வேண்டும்.

மட்டக்களப்பு விலாசத்திற்கு மட்டும் கடிதத்தொடர்பு கொள்ளவும்

மனநிலை பாதிப்புக்கள், மன நோய்கள், "ஹிஸ்டீரியா" - ஆச்சரியப்படும் வகையில் பலர் சுகமடைந்துள்ளனர். மற்றும் ஆஸ்மா, தலையிடி, வாதம், பயோரியா, வெள்ளை போதல், கிரந்தி நோய்க்கும் குழந்தைப்பேறு இன்மைக்கும் தீர்க்க முடியாத வியாதிக்கும் மருந்து உண்டு. பலர் நீரிழிவு நோயில் இருந்து முற்றாகக் குணம் அடைந்துள்ளனர். விடுமுறை நாட்களிலும் சந்திக்கலாம்.

கவனத்திற்கு. புதிய செல்டெல் No. 072 - 609388.

கொழும்பில் ஜூன் 22 முதல் 30 வரை

DR. P. ARUMUGAM, S.A.M.P.
Beauty Lodge, 67A, wolfendhal street, Colombo - 13.
T.P. 338165, 338166. (5 லாம்புச் சந்தியில் இருந்து 100 யார் தூரத்தில் உம்பிச்சி பிலேஸ் பள்ளி வாசலுக்கு முன்னால் உள்ளது).

கொழும்பு நாட்களில் மட்டும் செல்டெல் NO.-072- 609388.
கொழும்பில் முன்கூட்டியே பதிவு செய்யவும்.

ஓட்டமாவடியில் ஜூன் - 3-4 வரை
Dr. முகைதீன் டிஸ்பென்செரி, ஓட்டமாவடி - T.P. 065 - 57345

கல்முனையில் ஜூன் - 6,7,8
T.M.M. பாமஸி - T. P. - 065 - 29329

வவுனியாவில் ஜூன் - 13, 14, 15
வவுனியாவில் (2 ஆம் குறுக்குத் தெரு) ஞான வைரவர் கோவில் ஒழுங்கை Vanni Inn இல் சந்திக்கலாம். T.P. 024- 22074 இல் முன் கூட்டியே பதிவு செய்யவும்.

மற்றைய நாட்களில
DR. P. ARUMUGAM,
No.33, Tissa Weerasingam sq.,
Boundary Road, Batticaloa விலும் சந்திக்கலாம்.



சித்தர் மாந்திரீகம்

அதிஷ்டகரமான வாழ்க்கை அமைய வேண்டுமா? காதல் விவகாரம் கைகூட வேண்டுமா? தொழில் சிறந்திட வேண்டுமா? இல்லற வாழ்வு இனித்திட வேண்டுமா? இவ்விதமாக உங்கள் பிரச்சனைகள் எதுவாயினும் உடனடியாக பூரணவெற்றி பெற்றிட ஒரு தடவை மட்டக்களப்பு கோளாவில் மணி மாந்திரீகச் சித்தர் "சக்திசரவணா"வுடன் தொடர்புகொள்ளுங்கள். சங்கடங்கள் தீர சக்தி சரவணாவை நாடுங்கள். சோதிட ரீதியாக உத்தரவாதமான எதிர்காலப்பலன்கள் எம்மிடம் அறியலாம். வெளிநாட்டு அன்பர்களுக்கான சிறந்த துரித விசேட சேவை ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. உங்கள் வெற்றியும், திருப்தியும் எமது குறிக்கோளாகும்.

1ந் திகதி முதல் 25ந் திகதி வரை

SHAKTHY SARAVANA,
30/16, MALLIKA LANE,
WELLAWATTA, COLOMBO-06.
TELE PHONE: 500067.

25ந் திகதி முதல் 30ந் திகதி வரை

SHAKTHY SARAVANA,
82, MANIKKAVASAGAR ROAD,
TRINCOMALEE.
TELE PHONE: 026-20347

வியாழன் விடுமுறை



ஹோமியோபதி

தமிழ்நாட்டின் பிரபல
ஹோமியோபதி சிகிச்சைநிபுணர்
Dr. ரா. தியாகராஜன்
D.H.M.S. AMRSH (Lond)
நாட்பட்ட தீராத வியாதிகளுக்கு சிறப்பான சிகிச்சை அளிக்கிறார்.
ஹோட்டல் கிறீன்லண்ட்ஸ்.
தொலைபேசி : 585592 - 581986

22.5.98 - 26.5.98

இந்திய தொலைபேசி : 0091-431 - 432946
0091-431 - 432046
வெளிநாடுகளில் இருப்பவர்களுக்கும் சிகிச்சை அளிக்கப்படும்.



NISACO STEEL FURNITURE



Special Discount on This Month Only

Open on Every Sunday 8.am to 8.pm

நிசாகோ இன்டஸ்ட்ரீஸ்
204, ஆஸ்பத்திரி வீதி, களுபோவில, தெஹிவல Tel: 074-201727 Fax: 561367
(Opposite Buddagosha Vidyalaya)
FACTORY & SHOW ROOM
391/1, Millagaha Estate, Aturugiriya Road, Hokandara North, Hokandara. Tel/Fax: 561367
(Near the telecommunication Exchange Hokandara)

www.padippakam.com

## எக்ஸ்ரே ரிப்போர்ட்

நாரதர்

# புனர் நிர்மாணப் பொறியும் புலிகளின் மூன்று தாக்குதல்களும்

ஒரே வாரத்தில் இரு முக்கிய பிரமுகர்கள் யாழ்ப்பாணத்தில் கொல்லப்பட்டுள்ளனர்.

**ஒருவர் பிரிகேடியர் லறி விஜயரத்ன. இன்னொருவர் யாழ் மாநகர முதல்வர் சரோஜினி யோகேஸ்வரன்.**

வடமராட்சியில் தமிழர்கள் பலர் கைது செய்யப்பட்டு காணாமல் போயினர். சூரியக்கதிர் நடவடிக்கைக்குப் பின்னர் யாழ் குடாநாட்டில் மக்கள் மத்தியில் படையினர் நடத்திய மாபெரும் களையெடுப்பு வேட்டையில் வடமராட்சி படைப்பிரிவுக்கு தளபதியாக இருந்தவர் பிரிகேடியர் விஜயரத்னாதான்.

அதன்பின்னர் வடமராட்சி மக்களுடன் நெருங்கிப் பழக ஆரம்பித்தார்.

**புலிகள் மட்டுமல்ல, ஏனைய தமிழ்க் கட்சிகள் தமிழ் மக்களிடம் செல்வாக்கு பெறுவதையும் விஜயரத்ன விரும்பவில்லை.**

யாழ் குடாநாட்டைப் பொறுத்தவரை படைத்தரப்பின் அதிகாரிகள் மிகப் புத்திசாலித்தனமானவர்கள்.

இராணுவ உளவுப் பிரிவில் கடமையாற்றிய அதிகாரிகளே இப்போது படைப் பிரிவுத் தளபதிகளாக உள்ளனர்.

**உளவுப் பிரிவு என்பது நாசூக்காக நடந்துகொண்டு, மக்கள் மத்தியில் தகவல் கொடுப்பவர்களை உருவாக்கி எதிரி பற்றிய தகவல்களை திரட்டுவதில் ஈடுபடும்.**

**யாழ் குடாநாட்டை கட்டியாளவும், அங்குள்ள மக்களை கையாளவும் கூடியதாக இராணுவப் புலனாய்வு பிரிவில் இருந்த அதிகாரிகளையே தளபதிகளாக மாற்றியது புத்திசாலித்தனம்தான்.**

கைப்பற்றப்பட்ட பிரதேசம் ஒன்றை தக்கவைக்க வேண்டுமானால், என்னென்ன உபாயங்களை கையாளவேண்டும்? என்பதும் இராணுவத்தினருக்கான பயிற்சிகளில் ஒன்று.

அதுவும் தமது எதிரி பலமாக இருப்பதால், வெற்றியை தக்கவைக்க கடுமையாக முயற்சிக்க வேண்டிய கட்டத்தில் படையினர் உள்ளனர்.

யாழ் குடாநாட்டைப் பொறுத்தவரை சூரியக்கதிரின் பின்னர் இரண்டு கட்டமாக காய்களை நகர்த்தியது படைத்தரப்பு.

**முதற்கட்டம்: பரவலான களையெடுப்பு. புலிகள் என்று சந்தேகிக்கப்பட்டோர் அனைவரும் கைதாகி காணாமல் போயினர். எதிர்க்கும் திறனை அழித்தல், எதிரிக்கு உதவாமல் மக்களை அச்சுறுத்தல் என்ற இரண்டு உள்நோக்கங்கள் களையெடுப்பு நடவடிக்கைக்கு காரணமாக இருந்தன.**

இரண்டாவது கட்டம்: போரினால் பாதிக்கப்பட்ட மக்களை சலுகைகள், உதவிகள் மூலம் கவர்ந்து இழுப்பது.

போராட்டத்தினால் பிரயோசனம் இல்லை என்ற எண்ணத்தை மக்களிடம் தோற்றுவித்து, எதிரிக்கு வெகுஜன அடித்தளம் இல்லாமல் செய்தல், எதிரி பற்றிய தகவல்களை அறிதல் என்பவை இரண்டாம் கட்டத்தின் பின்னுள்ள இராணுவ நோக்கங்களாகும்.

இவற்றுக்கு அரசியல் நோக்கங்களும் இருக்கின்றன. சலுகைகளால் மக்களை மயக்கி,அபிவிருத்தி பற்றிய கனவுகளில் மூழ்க வைத்து அரைகுறையான தீர்வை இருகரம் நீட்டி வாங்கக்கூடிய பக்குவ நிலைக்கு கொண்டு வருவதே அரசியல் நோக்கமாகும்.

**இவ்வாறு அரசியல் நோக்கமும், இராணுவ நோக்கமும் ஒன்றோடு ஒன்று பின்னிப் பிணைந்து உருவாக்கப்பட்ட திட்டத்தையே புலிகள் 'புனர்நிர்மாணப் பொறி' என்று அழைக்கின்றனர்.**

மூன்று விதமான பொறிகள் சந்திரிக்கா அரசால் வைக்கப்பட்டுள்ளன என்பது புலிகளது கருத்து.

அந்த மூன்றும் பின்வருமாறு:

1. தீர்வுப் பொறி
2. இராணுவப் பொறி
3. புனர்நிர்மாணப் பொறி.

யாழ் குடாநாட்டில் மக்களை திசை திருப்பி, அரசியல் தீர்வைவிட அன்றாடப் பிரச்சனைகளது தீர்வுக்கே மக்கள் அவாக் கொண்டுள்ளனர் என்று உலகுக்கு காண்பிக்க வைக்கப்பட்ட பொறிதான் புனர் நிர்மாணப் பொறி.

இந்தப் பொறியை முன்கொண்டு செல்லும் பொறுப்பு யாழ் மாவட்ட படை அதிகாரிகளிடம் வழங்கப்பட்டுள்ளது.

**ஆகவே, இராணுவ அதிகாரிகளாக மட்டுமல்லாமல், அரசியல்வாதிகள் போன்றும் படை அதிகாரிகள் சிலர் செயற்பட வேண்டி இருக்கிறது.**

முன்னர் பிரிகேடியர் ஹமங்கொடவும் அவ்வாறுதான் செயற்பட்டார். மக்களைக் கவர முற்பட்டார். பாடசாலைகளுக்கு விஜயம் செய்து மாணவ சமூகத்துடன் பரிச்சயம் ஏற்படுத்த முயன்றார். உள்ளூர் பிரமுகர்களை பழக்கம் பிடித்துக் கொண்டார்.

தனது நண்பர் ஒருவரிடம் பிரிகேடியர் ஹமங்கொட கூறினாராம்: **"இங்கே பிரபாகரனைவிட எனக்குத்தான் செல்வாக்கு."**

பிரிகேடியர் ஹமங்கொட பலியான பின்னர் புலிகள் பின்வருமாறு அவரைப்பற்றி விமர்சித்தனர்: "குடாநாட்டில் **'மக்களின் மனங்களை வெல்லும்' வஞ்சக நாடகத்தில் முக்கிய பாத்திரம் வகித்தவர் அவர்தான்."**

பிரிகேடியர் ஹமங்கொடவின் பின்னர் யாழ் குடாநாட்டில் அவரது பாணியில் செயற்பட்டு வந்தவர்கள் இரண்டுபேர். ஒருவர் பிரிகேடியர் மெண்டிஸ். இன்னொருவர் பிரிகேடியர் விஜயரத்ன.

தன்னைச் சந்தித்த தமிழ்க்கட்சி பிரமுகர் ஒருவருக்கு பிரிகேடியர் விஜயரத்ன கூறிய ஆலோசனை: "செத்த வீடு, கலியாண வீடு, பூப்புனித நீராட்டு என்று எது நடந்தாலும் சனங்களின் வீடுகளுக்கு செல்லுங்கள். வராதே என்றாலும் போகவேண்டும். அழைக்காவிட்டாலும் போய்வரவேண்டும். அப்போதுதான் நெருக்கமான தன்மை ஏற்படும்."

**பிரிகேடியர் விஜயரத்ன கூறியது மக்களை வசப்படுத்தி, எதிரியை தனிமைப்படுத்தி வெற்றி பெறுவதற்கான உபாயங்களேயாகும்.**

உலகில் கெரில்லாக்களை எதிர்த்து போராடும் இராணுவங்கள், பிற பிரதேசங்களை கைப்பற்றி நிலைகொள்ளும் இராணுவங்கள் ஆகியனவற்றுக்கு கற்றுக் கொடுக்கப்படும் முக்கிய பாடங்களே அவையாகும்.

இந்தியப் படை அதிகாரிகள் சிலர்கூட மேற்கண்ட உபாயப்படிதான் நடந்துகொள்ள முற்பட்டனர்.

**ஒரு இந்திய இராணுவ அதிகாரி அகதி முகாமில் இருந்த மக்களிடம் கூறினாராம்: "உங்களுக்கு என்ன வேண்டும்? சாப்பாடு தருகிறேன், தண்ணீர் தருகிறேன். எல்லாம் தருகிறேன்.இங்குள்ள புலிகள் யாரென்று காட்டித்தாருங்கள். இல்லையானால் ஒன்றும் தரமாட்டோம்."**

எனவே, பிரிகேடியர் விஜயரத்ன தனிப்பட்ட ரீதியில் நல்லவராக இருந்திருக்கக்கூடும். ஆனால் வடமராட்சி மக்களுடன் அவரது அணுகுமுறை என்பது இராணுவ நலன், இராணுவ உபாயம் சார்ந்த ஒன்றாகவே இருந்தது.

**கைது செய்து காணாமல் போன சம்பவத்தின்போது பொறுப்பாக இருந்தவரும் அவரே. பின்னர் என்ன உதவி கேட்டாலும் செய்து தரக்கூடியவராக இருந்தவரும் அவரே.**

புலிகள் ஊடுருவல் செய்ய முடியாத, ஏனைய இயக்கங்கள்கூட தனது அனுமதி இல்லாமல் சுதந்திரமாக நடமாட முடியாத பகுதியாக, வடமராட்சியை கட்டுப்பாட்டில் வைத்திருக்கவே விஜயரத்தினா விரும்பினார்.

**வல்வெட்டித்துறை பிரபாகரன் பிறந்த ஊர் என்பதால், அங்கு கொடிகட்டிப் பறப்பவர் என்று விஜயரத்னாவுக்கு படையினர் மத்தியில் வியப்புடனான மரியாதையும் இருந்தது.**

வல்வெட்டித்துறையில் இருந்த பிரபாகரன் வீட்டை பத்திரிகையாளர்களுக்கு காண்பித்து, 'இப்போது எங்கள் கையில்' என்று விஜயரத்ன கூறியதும் பிரபாகரனுக்கு விடுக்கப்பட்ட சவால் போலவே அமைந்தது.

அப்போதுதான பிரிகேடியர் விஜயரத்னாவை தீர்த்துக்கட்டும் முடிவை பிரபாகரன் மேற்கொண்டாரோ தெரியவில்லை.

ஏனெனில், பிரிகேடியர் விஜயரத்ன தப்பிச் சென்றுவிடக்கூடாது என்ற பிடிவாதத்துடனேயே தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

**பதவி உயர்வும், இடமாற்றமும் பெற்று கொழும்பு செல்கிறார் என்பது தெரிந்த பின்னரும் தப்பிச் சென்றுவிடக்கூடாது என்று திட்டம் தீட்டும் அளவுக்கு கோபம் இருந்திருக்கிறது.**

பிரியாவிடைக் கூட்டம் பற்றிய தகவல் புலிகளுக்கு தெரியவந்ததா? அல்லது பிரியாவிடைக் கூட்டமே புலிகளின் தூண்டுதல்பேரில் நடைபெற்ற ஏற்பாடுதானா? என்று சந்தேகம் தோன்றியுள்ளதாம்.

நிச்சயமாக, குறிப்பிட்ட நேரத்திற்கு, குறிப்பிட்ட இடத்திற்கு வருவார் என்று தெரிந்தால்தான் காத்திருக்க முடியும். எப்போது வருவார். என்று தெரியாமல் காத்திருந்தால், சந்தேகப் பார்வையில் சிக்கி மாட்டிக்கொள்ள நேரும்.

பொலிஸ் நிலையம், இராணுவ முகாம், தடை அரண்கள் ஆகியவை சூழந்த பகுதியில்தான் தாக்குதல் நடந்துள்ளது. இவ்வாறான பகுதியில் ஆகக்கூடியது ஒரு மணிநேரத்திற்கு மேல் தரித்து நிற்கமுடியாது. சுற்றித்திரிந்தால் இலக்கு தவறிவிடும்.

**எனவே, பிரியாவிடை நடைபெறும் நேரத்தை நன்கு தெரிந்து கொண்டு, அது முடிவடையும் நேரத்தையும் கணிப்பிட்டு அதற்கேற்பவே கரும்புலி வந்து காத்திருந்திருக்கிறார். அதனால்தான் சந்தேகப் பார்வைகளில் விழவில்லை.**

இன்னொரு விடயமும் கவனிக்கத்தக்கது. பிரியாவிடை நடைபெற்ற வர்த்தக சங்க கட்டடத்திற்குள் பத்தோடு பதினொன்றாக நுழைந்து கரும்புலித் தாக்குதல் நடத்தக்கூடிய வாய்ப்பும் இருக்கிறது.

**அவ்வாறு நடைபெற்றிருந்தால் வர்த்தகர்கள் பலரும் உயிரிழந்திருப்பர். அதனைத் தவிர்க்கும் வகையிலேயே பொது இடத்தில், அதுவும் பொலிஸ் நிலையம் அருகே வைத்து தாக்குதல் நடந்துள்ளது.**

பொலிஸ் நிலையம் முன்பாக உள்ள வீதித்தடையில் வாகனம் மெதுவாகத்தான் சென்றாக வேண்டும். அப்போது தாக்குவது என்பதுதான் திட்டம்.

ஆனால், வாகனத்தை கண்டதுமே சிறிது



பதற்றமடைந்த நிலையில் ஓடிவந்த கரும்புலி தரையில் ஏதோ தடுக்கி கீழே விழுந்திருக்கிறார்.

அவ்வாறு விழுந்ததும் குண்டை வெடிக்கச் செய்திருக்கிறார்.

பிரிகேடியர் விஜயரத்ன சென்ற வாகனத்தில் இருந்து கரும்புலி தடுக்கி விழுந்த இடம் ஐந்தடி தூரத்தில் இருந்தது.

வெடித்ததும் பறந்த சன்னங்கள் துளைத்துத்தான் பிரிகேடியர் விஜயரத்ன பலியானார். சாரதியும்,மெய்க்காவலர் ஒருவரும் பலியானதும் அப்படித்தான்.

முதலில் திட்டமிட்டபடி வாகனத்தில் மோதி வெடித்திருந்தால் பிரிகேடியரின் உடல் **பலத்த சேதத்துக்கு உள்ளாகி இருக்கும். அவர் சென்ற வாகனமும் சின்னாபின்னமாகி இருக்கும். வாகனத்தின் பின்னால் இருந்த சிப்பாய் ஒருவர் உயிர் தப்பியிருக்கவும் முடியாது.**

கரும்புலி கீழே விழுந்த நிலையில் வெடித்தமையால்தான் வழக்கத்துக்கு மாறாக அவரது தலையும் சிதறியிருக்கிறது. நின்ற நிலையில் வெடித்தால் தலை தனியாக விழுந்திருக்கும்.

அதனால்தான் கரும்புலி ஆணா, பெண்ணா என்று உடனடியாக இனம் காண முடியாமல் செய்திகள் வெளியாகி இருந்தன.

**குறிப்பிட்ட கரும்புலி முன்னரே பிரிகேடியருக்கு பரிச்சயமானவர். அவர் ஓடிவருவதைக் கண்ட பிரிகேடியர் கையசைத்ததாகவும் தகவல் ஒன்று வெளியாகியுள்ளது. பிரிகேடியருடன் பொதுமகனாக பரிச்சயம் ஏற்படுத்திக் கொண்டவர்தான், கரும்புலியாக மாறினாரா? என்ற சந்தேகத்தை மேற்கண்ட தகவல் கிளப்பியுள்ளது.**

மக்களை வசப்படுத்தி எதிரியை வெற்றி கொள்ளும் படையினரின் தந்திரத்தை முறியடிக்க, படையினரை வசப்படுத்தி வலைவிரிக்கும் தந்திரத்தை புலிகளும் கையாளவே செய்வர்.

பொதுமகனாக படையினருடன் பழகுவோரில் புலிகளும், புலிகளது உளவுப் பிரிவினரும் இருக்கவே செய்வர்.

**மக்களை வசப்படுத்த, மக்களோடு நெருக்கமாக பழகும் தந்திரம் ஒரு விஷப்பரீட்சை. எதிரிக்கு விரிக்கும் வலையில் தாமே கால் இடறிவிழவும் கூடும் என்பதாலேயே பல அதிகாரிகள் விஷப்பரீட்சையில் இறங்காமல் முகாமுக்குள்ளேயே இருந்து விடுவதுண்டு.**

பிரிகேடியர் விஜயரத்ன துணிச்சலாக கால் வைத்தார். ஒவ்வொரு அடியையும் நிதானமாக எடுத்துவைத்தார். ஆனால் தனது அடிகள் ஒவ்வொன்றும் எண்ணப்படுகின்றதென்பதை ஊகிக்க முடியாதளவுக்கு புலிகளைப் பற்றி தப்புக் கணக்குப் போட்டதுதான் தவறாகிவிட்டது.

1996 ஜூலை 04ம் திகதி ஸ்ரான்லி வீதியில் பிரிகேடியர் ஹமங்கொட பலியான தாக்குதலை, புனர்நிர்மாணப் பொறிக்கு விழுந்த அடி என்று புலிகள் விபரித்தனர்.

அதன்படி பார்த்தால் பிரிகேடியர் விஜயரத்னமீதான தாக்குதல் 'புனர்நிர்மாணப் பொறி' மீது விழுந்த இரண்டாவது அடி.

பிரிகேடியர் விஜயரத்ன பலியான மூன்றாம் நாள் யாழ் மாநகர முதல்வர் சரோஜினி யோகேஸ்வரன் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

**இத்தாக்குதலும் 'புனர்நிர்மாணப் பொறி'க்கு எதிரான புலிகளது மற்றொரு அடியாகவே அமைந்துள்ளது.**

'யாழ் நகரை சிங்கப்பூராக மாற்றிக் காட்டப்போகிறேன்' என்று சரோஜினி யோகேஸ்வரன் சொன்னபோதே, புலிகளின் கோபத்தை சீண்டிவிட்டார்.

திருமதி யோகேஸ்வரனுக்கு மிரட்டல்கள் எதுவும் வரவில்லை என்று செய்திகள் வெளியாகியுள்ளன.

**அவை தப்பான செய்திகள்தான். யாழ் நகரை சிங்கப்பூராக்குவேன் என்று அவர் கூறிய விடயம் புலிகளுக்கு அதிருப்தி ஏற்படுத்தியுள்ளது என்ற தகவல் முரசில்கூட தலைப்புச் செய்தியாக வெளியாகியிருந்தது.**

உள்ளூராட்சிசபை உறுப்பினர்கள் பதவி விலகவேண்டும் என்று 'தமிழர் விழிப்புக் குழு', 'சங்கிலியன் படை' என்ற பெயர்களில் யாழ் குடாநாட்டில் பிரசுரங்களும் விநியோகிக்கப்பட்டன.

'தமிழர் விழிப்புக்குழு' வெளியிட்ட பிரசுரம் புலிகளது வழக்கமான பிரசுரங்களின் அச்சுக் கோர்ப்பாகவே இருந்தது.

இதனையெல்லாம் கண்டறிய முடியாதளவு சிறுபிள்ளைத்தனமானவராக திருமதி யோகேஸ்வரன் இருந்திருக்க முடியாது.

**பிரிகேடியர் ஹமங்கொட**
**பிரிகேடியர் விஜயரதன**
**யாழ் மேயர் சரோஜினி**
**மூவரும்—புலிகள் கூறும்**
**புனர்நிர்மாணப் பொறியோடு**
**தொடர்பு கொண்டவர்கள்**

**திருமதி யோகேஸ்வரனுக்கு எச்சரிக்கை கிடைத்திருக்கிறது, அல்லது புலிகளுக்கு தனது அபிவிருத்தி முழக்கங்கள் பிடிக்கவில்லை என்ற உண்மை தெரிந்திருக்கிறது என்பதை உறுதிப்படுத்தும் ஆதாரம் உண்டு.**

இந்திய பிரதிநிதியுடன் யாழில் நடைபெற்ற சந்திப்பில் உரையாற்றிய திருமதி யோகேஸ்வரன், "எமக்குத் தேவை அபிவிருத்தியல்ல, அரசியல் தீர்வுதான் தேவை!" என்று சுருதியை மாற்றிக்கொண்டார்.

**யாழ்நகரை சிங்கப்பூராக்குவேன் என்றவர், ஒரு மாதகாலத்திற்குள் தனது நிலைப்பாட்டை தலைகீழாக மாற்றியதற்கு காரணம் இல்லாமல் போயிருக்குமா?**

யாழ் விளையாட்டரங்குக்கு துரையப்பாவின் பெயரை நீக்குமாறு புளொட் கொண்டுவந்த தீர்மானத்தை நிராகரித்த செய்தியும் புலிகளுக்கு கோபத்தை ஏற்படுத்தியிருக்க வேண்டும்.

**நிராகரித்தது மட்டுமல்லாமல், துரையப்பா 30 வருடமாக தமிழ் மக்களுக்கு சேவையாற்றியவர் என்று கூட்டணி உறுப்பினர் கூறியதை திருமதி யோகேஸ்வரனும் மறுத்துரைக்கவில்லை என்பதும் பிரபாகரனின் கவனத்துக்கே நேரடியாக சென்றதாகத் தகவல்.**

தமிழரின் அரசியல், இராணுவ பலத்தை நிலைநாட்ட ஆயிரக்கணக்கான ஆண்களும், பெண்களும் தங்கள் உயிர்களை தியாகம் செய்து வருகின்றனர். அந்தப் போராட்டத்தில் குளிர்காய்ந்தபடி, அந்தப் போராட்டத்தையே கொச்சைப்படுத்துகின்ற, பலவீனப்படுத்துகின்றவர்களை எப்படி அனுமதிப்பது? என்பது புலிகளது வாதம்.

**அந்த வாதம் சரியோ, பிழையோ, புலிகள் இல்லையானால் திருமதி சரோஜினி மாநகர முதல்வராகியிருக்க கூட்டணியினர்கூட அனுமதித்திருக்க மாட்டார்கள். முதல்வராகப் போட்டியிட பெரிய தலைகள் பல விழுந்தடித்து நின்றிருக்கும். திருமதி யோகேஸ்வரனை திரும்பியும் பார்த்திருக்க மாட்டார்கள்.**

யாழ் மேயராக யார் வந்தாலும் புலிகள் அனுமதிக்கப்போவதில்லை, இன்னொரு துரையப்பாவாகவே கருதுவர் என்று நன்கு தெரிந்த பின்னர், அரசுக்கு கொடுத்த வாக்குறுதியைக் காப்பாற பலிக்கடாவாக நிறுத்தப்பட்டவரே திருமதி யோகேஸ்வரன்.

ரி.56 ரக துப்பாக்கியால்தான் திருமதி யோகேஸ்வரன் சுடப்பட்டுள்ளார்.

நீண்ட துப்பாக்கியை கொண்டுவந்து புலிகள் சுடமுடியுமா? என்று சந்தேகம் கிளப்பப்படுகிறது.

கடந்த வருடம் யாழ்ப்பாணத்தில் பொதுஜன முன்னணிப் பிரமுகர் தர்மலிங்கம் ரி.56 ரக துப்பாக்கியால்தான் சுட்டுக் கொல்லப்பட்டார். துரையப்பாவின் உருவப் படத்தை திரைநீக்கம் செய்துவைத்த சில நாட்களின் பின்னரே அவர் கொல்லப்பட்டிருந்தார்.

தர்மலிங்கத்தின் வீடு கொழும்புத் துறையில் இருந்தது. அவரைச் சுட்டவர்கள் துப்பாக்கியை எங்கோ மறைத்து வைத்துவிட்டு, பாசையூர் கடலில் குதித்து நீந்திச் சென்றனர். மீன்பிடித்துக்கொண்டிருந்த மீனவர்கள் சிலரை மிரட்டி, தங்களை மறுகரையில் கொண்டுசென்று விடுமாறு கேட்டு தப்பிச் சென்றனர்.

இந்த தகவல் எப்படியோ படையினருக்கு கிடைத்ததால் குறிப்பிட்ட படகுக்கு சொந்தமான மீனவர் கைது செய்யப்பட்டார்.

ரி.56 மட்டுமல்ல பல்வேறு ஆயுதங்களும், கைக்குண்டுகளும், தற்கொலைத் தாக்குதல் அங்கிகளும் இராணுவக் கட்டுப்பாடு பகுதிகளுக்குள் தாராளமாக பாதுகாக்கப்பட்டு வைக்கப்பட்டுள்ளன.

தேவைப்படும்போது எடுத்து பாவித்துவிட்டு மறுபடி வைத்துவிட்டு, கைவீசிக் கொண்டு சாதாரண மக்களோடு மக்களாக கெரில்லாக்கள் கலந்துவிடுவர்.

**திருமதி யோகேஸ்வரனை சுட்டவர்கள் பின்பக்க வழியாகவே பாய்ந்து சென்றுள்ளனர். வீடு நாவலர் றோட்டில் இருக்கிறது. பின்பக்க வேலியால் பாய்ந்து சென்றால், இராசாவின் தோட்டத்தில் மிதக்கலாம். அங்கிருந்து குருநகர் கடற்கரை வரை சோதனையில் சிக்காமலேயே சென்றிருக்க முடியும்.**

சைக்கிளில் வந்தனர் என்பதெல்லாம் தவறான அவசரக் கதைகள். வந்தவர்கள் இருவருக்கும் திருமதி யோகேஸ்வரனை நன்றாக அடையாளம் தெரியாது.

"மிஸிஸ் யோகேஸ்வரன்?" என்று கேட்டார் முன்னால் வந்தவர். அவரது முதுகின் பின்னால் நின்றவரிடம்தான் ரி.56 இருந்தது. முதுகின் மறைவில் நின்றதால் திருமதி யோகேஸ்வரனுக்கு விபரீதம் புரியவில்லை.

**"நான்தான், உள்ளே வாருங்கோ!" என்று கூறினார். கூறிமுடிக்க முன்னரே முன்னால் இருந்தவர் நகர, பின்னால் நின்றவர் சுடத் தொடங்கினார்.**

அருகிலிருந்த பரமசிவம் சூடு விழ முன்னரே பயத்தில் கீழே விழுந்துவிட்டார். பின்னர்தான் ஒரு தோட்டா அவரது கணுக்காலில் துளைத்தது.

**வீட்டின் முன்பக்க கிணற்றடியில் துணி துவைத்துக் கொண்டிருந்த பெண் சூட்டுச் சத்தம் கேட்டு ஓடிவந்து பார்த்தபோது சுட்டவர்களைக் காணவில்லை. முன்பக்கமாக ஓடியிருந்தால் அவரது பார்வையில் பட்டிருப்பார்கள். பின்பக்கமாக தாவி ஓடிவிட்டனர்.**

இச் சம்பவம் யாழ் மக்களைப் பொறுத்தவரை அதிர்ச்சியான விடயமாக இருக்கவில்லை. ஏனெனில் இப்படித்தான் நடக்கும் என்று எதிர்பார்த்த ஒரு விடயமாகவே இருக்கிறது.

அஞ்சலி செய்யக்கூட மக்கள் ஆர்வம் காட்டவில்லை. புளொட்டும், ஈ.பி.ஆர்.எல்.எஃப். கட்சிகள்தான் வாழைகளும், தோரணங்களும், வெள்ளைக் கொடிகளும் கட்டின. மக்கள் தாமாக கொடிகளைப் பறக்கவிடவில்லை.

**துரையப்பா கொல்லப்பட்டபோதுகூட வெள்ளைக் கொடிகள் கட்டக் கூடிய பொதுமக்கள் இருந்தனர். திருமதி யோகேஸ்வரனுக்கு அதற்கும் ஆட்கள் இல்லாமல் போய்விட்டனர்.**

இன்னொரு விடயம் பாதுகாப்பில்லாமல் இருந்தவரை சுட்டுவிட்டனரே என்கின்றனர் கூட்டணியினர். துரையப்பாவும் பாதுகாப்பு இல்லாமல்தான் நடமாடினார். அப்போது மட்டும் பாதுகாப்பில்லாத ஒருவரை சுடலாமா? என்று கூட்டணியினர் கேட்கவில்லை என்பதும் மறுக்கமுடியாதது.

# பொறுப்பும் - மறுப்பும்

யாழ் மாநகர முதல்வர் சரோஜினி யோகேஸ்வரன் கொலைக்கு சங்கிலியன் படை முதலில் உரிமை கோரியது. மறுநாள் மறுத்தது.

யாழ் மேயர் கொலையை புலிகளுக்கு எதிரான பிரசாரமாக அரசு பெரிதுபடுத்த முற்பட்டதாலேயே மறுப்பு வெளியாகியது. சங்கிலியன் படைக்கும் தமக்கும் தொடர்பில்லை என்று புலிகள் கூறினாலும், அது பெரிதாக நம்பப்படமாட்டாது. சங்கிலியன் படை உரிமை கோரியது என்பது, புலிகள் உரிமை கோரியது போன்றே கருதப்பட்டது. அதனால்தான் 19.05.98ல் மறுப்பு வெளியானது.

அதேசமயம் 18.05.98 அன்று புலிகளின் குரல் வானொலி இரவுச் செய்தியில், 'யாழ் மேயர் கொலைக்கு சங்கிலியன் படை உரிமை கோரியுள்ளது என்று செய்திகள் தெரிவிக்கின்றன' எனக் கூறப்பட்டது.


தவறுதலாக உரிமை கோரப்பட்டதாக சங்கிலியன் படை பின்னர் கூறிய காரணம் வலுவில்லாமல் இருந்தது. முதலில் உரிமை கோரப்பட்டதே உண்மையானதாகும்.

சங்கிலியன் படை உரிமை கோரிவிட்டு மறுத்ததும், புலிகளுடன் தமக்கு தொடர்பில்லை என்று கூறியிருப்பதும் தொடரப்போகும் விபரீதங்களுக்கு கட்டியம் கூறுவது போல உள்ளது.

'பதவி ஆசை கொண்டவர்களை ஒழித்துக்கட்ட **மக்கள் மத்தியில் இருந்து** சங்கிலியன் படை போன்றவை தோன்றுவது தவிர்க்க முடியாதது' என்று புலிகள் கூறியுள்ளமையும் உள்ளூராட்சி சபை உறுப்பினர்களின் எதிர்காலத்தை கேள்விக் குறியாக்கியுள்ளது.

யாழ் மேயர் கொலையை புலிகள் இன்றுவரை உத்தியோகபூர்வமாக உரிமை கோரவும் இல்லை. மறுக்கவும் இல்லை. தாம் செய்யாத ஒரு செயல் தம்மீது விழுந்தால் மறுக்காமல் இருப்பது புலிகளது வழக்கமுமில்லை.

பிரிகேடியர் விஜயரத்தின மீதான தாக்குதலும் புலிகளால் உரிமை கோரப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. ■



## இவைதான் ரி.56

ரி.56 ரக துப்பாக்கிகள் இவைதான். சுடுகுழலைவிட இவற்றின் உடல்தான் நீளமானவை. ஆனால் பழைய ஷொட்கன் போன்ற துப்பாக்கிளுக்கு சுடுகுழல் உடலையும், பிடியையும் விட மகா நீளம். அதனால்தான் வெட்டிப் பாவிப்பதுண்டு. ரி.56 ரக துப்பாக்கியின் கைப்பிடியையும், சுடுகுழலையும் நீக்கிவிட்டால்கூட உடலின்நீளம் 20 அங்குலம். பின்னர் சுடுகுழலை வெட்டிப் பயன் என்ன? அதனால் வெட்டிப்பாவிப்பதில்லை. தவிர சுட்டுக் கொண்டிருக்கும்போது சுடுகுழல் வெட்டியிருக்கிறதா என்று கூர்ந்து பார்த்தாலும் தெரியாது. ■

# சுட்டது எந்தத் துப்பாக்கி?

யாழ் மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரனை சுடுவதற்கு பயன்படுத்தப்பட்ட துப்பாக்கி சிறியதாக இருந்தது. இவ்வாறு சம்பவத்தின்போது மேயரின் அருகில் அமர்ந்திருந்தவரான பரமசிவம் கூறினாராம்.

ஆனால், மேயரின் உடலில் இருந்து எடுக்கப்பட்ட ரவைகள் ரி.56 துப்பாக்கிக்குரியவை. ஒருவேளை ரி.56 ரக துப்பாக்கியின் சுடுகுழல் வெட்டப்பட்டு சிறிதாக்கப்பட்டிருக்கலாமோ? என்று சந்தேகம் எழுந்தது.

ஏ.கே.42 ரி.56, எம்.16 போன்ற துப்பாக்கிகளின் சுடுகுழல்கள் அனைத்தும் கிட்டத்தட்ட ஒரே அளவானவையே. எப்படித்தான் சுடுகுழலை வெட்டினாலும் பிஸ்டல் அளவுக்கு சிறிதாக்க முடியாது. தவிர இலக்கு வைத்தோ, எட்டத்தில் நின்றோ சுடமுடியாது. பிஸ்டலின் தரம் கூட இருக்காது. அதைவிட பிஸ்டலையோ, ரிவோல்வரையோ கொண்டுவந்து சுட்டிருப்பார்கள். பிஸ்டலுக்கா பஞ்சம்? ரி. 56இன் நீளம் 25 அங்குலம். பிஸ்டலின் நீளம் 7 அங்குலம்.

யாழ் மேயரின் வீட்டு கதவருகே நின்றுதான் துப்பாக்கிப் பிரயோகம் நடந்துள்ளது. எட்டத்தில் நின்றே சுட்டுள்ளனர். எட்டத்தில் நின்று சுட வசதியாகவும், வீட்டுக்குள் எழுந்து தப்பி ஓட முற்பட்டால்கூட தப்பவிடாமல் சுடுவதற்கு இலக்குக்காகவுமே சுடுகுழல் நீண்ட துப்பாக்கி பயன்படுத்தப்பட்டிருக்கிறது. முன்னர் தர்மலிங்கத்தையும் அவரது வீட்டு சன்னல் வழியாக எட்டநின்று ரி.56 ரக துப்பாக்கியாலேயே சுட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

அதுதவிர, வெடிச்சத்தம் கேட்டதும் பயத்தில் கீழே விழுந்துவிட்ட பரமசிவம் துப்பாக்கியை கூர்ந்து அவதானித்திருக்க முடியாது. பயக் கலக்கத்திலும் வெடி அதிர்விலும் எல்லாமே குழப்பமாகவே தெரிந்திருக்கும். அதனால் முன்னுக்கு பின் முரணாகப் பல தகவல்களை கூறியுமிருக்கிறார். ●

www.padippakam.com




# அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

அரசியல் தொடர் அற்புதன் எழுதுவது

# பிரேமதாசாவை சந்திக்க மறுத்த பிரபாகரன்

**1987 ந**வம்பர் மாதத்தில் ஒருநாள். யாழ்ப்பாணம் சித்தங்கேணியில் டாங்கிகள் சகிதம் இந்தியப் படையினர் சென்று கொண்டிருக்கின்றனர்.

சோதியா தலைமையிலான மகளிர் அணியினர் பதுங்கி நிலை எடுத்து தாக்குதல் ஒன்றை ஆரம்பித்திருக்கின்றனர்.

**இந்தியப் படையினரும் திருப்பித் தாக்குகின்றனர். மோதல் தீவிரமாகிறது.**

இந்தியப் படையின் டாங்கி பெண் புலிகளின் தாக்குதலால் சிதறுண்டது.

மானிப்பாயில் இந்திய இராணுவத்தினர் ட்றக் ஒன்றில் சென்று கொண்டிருக்கின்றனர்.

பெண் ஒருவர் நின்று கைகாட்டி மறிக்கின்றார். பெண் என்றதும் ட்றக் நிறுத்தப்படுகிறது.

திபு திபுவென்று பாய்ந்து வரும் பெண் புலிகளால் ட்றக் அபகரிக்கப்படுகிறது. இந்தயப் படையினர் ட்றக்கைவிட்டு தப்பியோடுகின்றனர்.

இத்தாக்குதலிலும் சோதியா பங்கு கொண்டார். அதன்பின்னர் வன்னிக்காட்டுப் பகுதியில் இந்தியப் படையினருடன் நடைபெற்ற மோதல்களிலும் சோதியா பங்கு கொண்டார்.

காட்டில் கிணறுகள் வெட்ட வேண்டி இருந்தது. மகளிர் அணியுடன் சேர்ந்து சோதியாவும் ஈடுபட்டார்.

காட்டு வாழ்க்கையில் உடல் நலம் பாதிக்கப்பட்ட நிலையில் 11.01.1990ல் சோதியா மரணமானார்.

சோதியாவின் மரணத்திற்கு புலிகளால் விடுக்கப்பட்ட அஞ்சலிக் கவிதை:

"முலையில் பெண்ணை
முடங்க விட்டவரின்
காதில் ஓங்கி
அறைந்த கை அவள்!
நேரில் பகைவர்
கவச வண்டியை
மோதி உடைத்த
மூச்சு அவள்!"

## பிரபா–ஹமீத்

திருக்கோணமலையிலும், பருத்தித் துறையிலும் தமிழ்ப் பெண்கள் சிலருடன் பொலிசார் அத்துமீறி நடந்ததை அடுத்து, புலிகளுக்கும் பொலிசாருக்கும் இடையே பிரச்சனை ஏற்பட்டது. பருத்தித்துறை பொலிஸ் நிலையம் புலிகளால் சுற்றி வளைக்கப்பட்டது. பொலிசார் அத்தனை பேரும் வாகனங்களில் ஏற்றப்பட்டு பலாலி இராணுவ முகாமுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

திருமலையில் பொலிசாரின் நடத்தை குறித்து விசாரிக்க உயர் அதிகாரிகள் ஒப்புக் கொண்டனர்.

வல்வெட்டித்துறையில் இருந்த பொலிஸ் நிலையமும் புலிகளால் முற்றுகையிடப்பட்டது. அங்கிருந்த பொலிசாரும் பலாலி இராணுவ முகாமுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

பொலிஸ் நிலையங்களை இயங்க விடக்கூடாது என்பதுதான் புலிகளின் நோக்கமாக இருந்தது.

பொலிஸ் நிலையங்களை யாழ்ப்பாணத்தில் புலிகள் முற்றுகையிட்ட சம்பவத்தால் அரசு, புலிகள் பேச்சு முறிவடையுமோ என்ற சந்தேகம் ஏற்பட்டது.

**தனது முக்கிய அமைச்சரான ஏ.சி.எஸ். ஹமீத்தை யாழ்ப்பாணம் அனுப்பி வைத்தார் பிரேமதாசா.**

பலாலி இராணுவ முகாமில் சென்று இறங்கிய ஏ.சி.எஸ். ஹமீத்தை புலிகள் வரவேற்று அழைத்துச் சென்றனர்.

இன்னொரு, நாட்டின் அமைச்சருக்கு கொடுக்கப்படும் வரவேற்புப் போன்றே அது அமைந்திருந்தது.

பிரபாகரனை நேரில் சந்திக்க விரும்புவதாக அமைச்சர் ஹமீத்திடம் கூறி அனுப்பியி



ருந்தார் பிரேமதாசா.

யாழ்ப்பாணம் சென்ற அமைச்சர் ஹமீத்தை பிரபாகரன் சந்தித்தார்.

**இலங்கை அமைச்சர் ஒருவரை பிரபாகரன் சந்தித்தது அதுதான் முதற்தடவையாகும். பிரபாகரனை சந்தித்த ஒரே ஒரு இலங்கை அமைச்சர் இன்றுவரை ஏ.சி.எஸ். ஹமீத்தான்.**

1990 ஏப்ரல் 18ம் திகதி சந்திப்பு நடைபெற்றது. பிரபாகரனுடன் மாத்தையா, அன்ரன் பாலசிங்கம், யோகி யாழ் மாவட்ட புலிகளின் தளபதி பானு, திருமதி அடேல் பாலசிங்கம் ஆகியோர் கலந்துகொண்டனர்.

## மறுப்பு

ஜனாதிபதி பிரேமதாசாவின் விருப்பத்தை பிரபாகரனிடம் நேரில் தெரிவித்தார் அமைச்சர் ஹமீத்.

**"வடக்கு-கிழக்கு மாகாண சபை கலைக்கப்படட்டும், ஆறாவது சட்ட திருத்தம் நீக்கப்படட்டும் மேலும் எமக்குள் புரிந்துணர்வான சூழல் ஏற்படட்டும், ஜனாதிபதி பிரேமதாசாவை சந்திக்கலாம்" என்று பிரபாகரன் கூறிவிட்டார்.**

பிரேமதாசாவை சந்திப்பதை தவிர்க்கவே பிரபாகரன் விரும்பினார். ஹமீத்தை சந்திக்கக்கூட பிரபாகரன் விரும்பியிருக்கவில்லை. அன்ரன் பாலசிங்கம், மாத்தையா ஆகியோர் மிக வற்புறுத்தியதாலேயே சந்திக்க முன்வந்தார்.

**பிரேமதாசா சர்வகட்சி மாநாடு ஒன்று ஆரம்பித்த உடனேயே பிரேமதாசாவுடன் பேச்சை முறிப்பதற்கான காலகட்டம் நெருங்கிவிட்டது என்று பிரபாகரன் முடிவு செய்துவிட்டார்.**

யாழ்ப்பாணத்தில் உள்ள கலை இலக்கிய வாதிகளை பிரபாகரன் சந்தித்து உரையாடினார்.

அப்போது பிரபாகரன் கூறியது இது தான்: "எல்லோரும் சண்டை முடிந்துவிட்டது என்று நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். இனிமேல்தான் சண்டை ஆரம்பமாகப் போகிறது.

சிங்கள அரசாங்கங்கள் தாமாக முன் வந்து எங்கள் உரிமைகளை ஒருநாளும் தரப்போவதில்லை.

நீங்கள் அனைவரும் மக்களை போர் ஒன்றை எதிர்கொள்ளும் விதமாக, உறுதி குலையாதவிதமாக தயார்படுத்த வேண்டும்" என்று கூறினார்.

இன்னொன்றையும் அங்கு கூறினார்: "பேச்சு நடத்தும் எங்கள் ஆட்களுக்கு ஒரு காலவரையறை கொடுத்திருக்கிறேன். அதற்குள் சரிப்பட்டுவராவிட்டால் நான் சண்டையை தொடங்குவேன். அப்போது நீங்கள் கொழும்பில் நிற்கிறீர்களோ, யாழ்ப்பாணத்தில் நிற்கிறீர்களோ என்று பார்த்துக் கொண்டிருக்க மாட்டேன் என்றும் எங்கள் ஆட்களிடம் கூறியுள்ளேன்" என்றும் பிரபாகரன் தெரிவித்தாராம்.

அன்னை பூபதி நினைவு நாளை முன்னிட்டு பிரபாகரன் விடுத்த செய்தியிலும், சுதந்திரத்தீயை அணையாது பாதுகாப்போம்" என்றே குறிப்பிட்டிருந்தார்.

பிரபாகரன் விடுத்த செய்தியின் சுருக்கம்:

எமது புனித விடுதலைப் போராட்டத்தில் வரலாற்று காவியமாகிவிட்ட தியாகிகளில் அன்னை பூபதி உன்னத இடத்தை வகிக்கிறார்.

ஒரு பெண்ணாக, ஒரு தாயாக, குடும்பத்தின் தலைவியாக சாதாரண பற்று உறவுகளைத் துறந்து தனது இன விடுதலைக்காக தனது உயிரை அர்ப்பணித்தார்.

பிரபாகரனின் கருத்துக்கள் மற்றும் பிரேமதாசாவின் இழுத்தடிப்புக்கள் என்பவற்றை உற்று நோக்கியவர்களுக்கு யுத்தம் விரைவில் வெடிக்கப்போகிறது என்பது தெரிந்துவிட்டது.


09.05.90 அன்று புலிகளின் மக்கள் முன்னணி ஒரு அறிக்கை வெளியிட்டது.

'ஒரு இலட்சம் மலையக தமிழ் மக்களை கட்டாயமாக நாடு கடத்த இலங்கை அரசு முயற்சி செய்கிறது.

**மலையகத்தில் வாழும் தமிழ் மக்கள் அனைவரும் இலங்கையின் குடிமக்களே. அவர்கள் அனைவருக்கும் குடியுரிமை உடனே வழங்கப்படவேண்டும்.**

**மலையக மக்களை திருப்பி அனுப்ப செய்யப்பட்ட ஒப்பந்தங்கள் அந்த மக்களை கலந்தாலோசிக்காமல் செய்யப்பட்டவை.**

ராஜிவ்-ஜே.ஆர். ஒப்பந்தம் இன்று செத்துவிட்டதைப் போலவே அந்தப் பழைய ஒப்பந்தங்களும் செல்லுபடியற்றவை.



யாழ்ப்பாணத்தில் பிரபா–ஹமீத் சந்திப்பு

மலையக தமிழ் மக்களை நாடு கடத்தும் முயற்சிகளை வன்மையாக கண்டிக்கிறோம்' என்று அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது.

## ஈரோஸ் மாற்றம்

ஈரோஸ் இயக்கம்மீது புலிகள் வெளிப்படையாகவே கண்டனம் தொடுத்தனர்.

இந்திய உளவுப் பிரிவான 'றோ'வுடன் ஈரோஸ் தலைவர்களில் ஒருவரான சங்கர்ராஜுக்கு தொடர்பு இருந்தது.

மற்றொரு தலைவரான பாலகுமார் புலிகளுடன் தொடர்பாக இருந்தார். ஈரோஸ் இரட்டை வேடம் போடுகிறது என்று புலிகள் பகிரங்கமாகவே தெரிவித்தனர்.

இதனையடுத்து பாலகுமார் பத்திரிகையாளர் மாநாடு ஒன்றை நடத்தினார்.

"தமிழ் பேசும் மக்களின் தேசிய சக்தியின் முழுமையான வெளிப்பாடாக விடுதலைப் புலிகள் திகழ்கின்றனர். தமிழ் மக்களுக்கு எதிரான அடக்குமுறைக்கு எதிர்ப்பு, தேசிய பாதுகாப்பு ஆகிய உணர்வுகளின் அடையாளச் சின்னமாகவும் புலிகள் திகழ்கின்றனர்.

தனித்துவமான தலைமையாக அவர்கள் உருவாகட்டும். அதற்கு நாங்கள் துணை நிற்கிறோம்" என்று கூறினார் பாலகுமார். (தொடர்ந்து வரும்)

# பலிக்களமும் பகடைக்காயும்

**யா**ழ் மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரன் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

தனது ஐம்பத்தெட்டு வயதுக்குப் பின்னர் அரசியலுக்கு வந்தவர் அவர். வந்தவர் என்பதைவிட வரவைக்கப்பட்டவர்.

1994ல் நடைபெற்ற பொதுத் தேர்தலில் அரசியலில் புது முகமாக அவரை அறிமுகம் செய்தனர் கூட்டணியினர்.

கொழும்பில் திரு. குமார் பொன்னம்பலம் தலைமையில் போட்டியிட்ட சுயேட்சைக் குழு சார்பாகவே அவர் போட்டியிட நிறுத்தப்பட்டார்.

குமார் பொன்னம்பலம் தலைமையிலான சுயேட்சைக் குழுவுடன் கொழும்பில் கைகோர்த்த கூட்டணியினர் தமது வேட்பாளராக திருமதி யோகேஸ்வரனை வழங்கினார்கள்.

**வெற்றிபெறவே போவதில்லை என்று நன்கு தெரிந்த நிலையில்தான் திருமதி யோகேஸ்வரனை தள்ளிவிட்டனர்.**

அதேசமயம் பொதுஜன முன்னணியுடனும் கூட்டணிக்கு மறைமுகமான உறவு இருந்தது. அதனால் இராஜரத்தினம் என்பவரை மக்கள் செல்வாக்குள்ள வேட்பாளர் என்று பொதுஜன முன்னணி பட்டியலில் போட்டியிட கூட்டணியின் முக்கிய பிரமுகர் ஒருவரே சிபாரிசு செய்தார்.

குமார் பொன்னம்பலம் தலைமையிலான சுயேட்சைக்குழு தோல்வி பெற வேண்டும் என்று திட்டமிட்டு, தமிழ் வாக்குகளை உடைக்கவே குறிப்பிட்ட பிரமுகர் அப்படி ஒரு நாடகம் ஆடினார்.

எனவே, தோற்கவேண்டும் என்று விரும்பிய ஒரு குழுவுக்கு கூட்டணியினரால் வழங்கப்பட்ட வேட்பாளர்தான் திருமதி யோகேஸ்வரன். அதற்கு முன்னர் கணவர் இருந்த காலத்தில்கூட அரசியலின் பக்கம் அவர் தலைவைத்துப்படுத்தது கிடையாது.

திருமதி மங்கையர்க்கரசி தலைமையில் மகளிர் பேரவை இயங்கியது. சத்தியாக்கிரகம், உண்ணாவிரதம் என்று பல போராட்டங்களில் மகளிர் பேரவை பங்கு கொண்டது உண்டு. கூட்டணித் தலைவர்களில் ஒருவரான யோகேஸ்வரனின் பாரியார் அவற்றில் கலந்து கொண்டதே கிடையாது.

கணவர் இறந்து ஐந்து வருடங்களின் பின்னர்தான் அரசியலில் இறங்கினார் அவர்.

**கொழும்பில் தோல்வி நிச்சயம் என்று கருதி தேர்தலில் இறக்கப்பட்ட அந்த அபலைப் பெண்மணி, சுடப்படுவது நிச்சயம் என்று கருதப்பட்ட யாழ் தேர்தல் களத்தில் அவசர அவசரமாக முன்னிறுத்தப்பட்டார்.**

யாழ் மாநகர சபைத் தேர்தலில் போட்டியிடத்தக்க பல பிரமுகர்கள், நீண்டகால அரசியல்வாதிகள் கூட்டணியில் இருந்தனர்.

மாவை சேனாதிராஜா முன்னர் யாழ் பாராளுமன்ற உறுப்பினராக இருந்தவர். அவர்தான் நிறுத்தப்படுவார் என்று கருதப்பட்டது.

**யாருமே முன்வரவில்லை. அதன்பின்னரே திருமதி யோகேஸ்வரனை தொடர்பு கொண்டு பலிக்களத்திற்கு அனுப்புவதுபோல தேர்தல் களத்திற்கு அனுப்பிவைத்தனர்.**

தேர்தலை பகிஷ்கரிக்குமாறு புலிகள் நேரடியாகக் கூறவில்லை. அவ்வாறு கூறினால் படையினரே முன்னின்று தேர்தலை நடத்தி முடிக்கலாம் என்று கருதியே பகிஷ்கரிப்பு அறிவித்தல் விடுக்கவில்லை.

**ஆயினும், 'உலகை ஏமாற்றுகின்ற கபட நாடகமே இது' என்று தமது கருத்தைப் புலிகள் கூறியிருந்தனர். அதுதவிர, தமிழர் விழிப்புக்குழு என்ற பெயரில் வேட்பாளர்களுக்கு எச்சரிக்கைகளும் அனுப்பப்பட்டிருந்தன.**

தேர்தல் தொடர்பாக புலிகளின் கருத்துக்கள் மற்றும் விழிப்புக் குழுக்களின் பிரசுரங்கள் தொடர்பாக முரசிலும் செய்திகள் வெளியாகி இருந்தன.

யாழ் குடாநாட்டில் உள்ளுராட்சித் தேர்தலில் தமிழ்க் கட்சிகள் போட்டியிட முன்வந்த பின்னர்தான் அங்கு தமிழ்க் கட்சிகள்மீது புலிகளது தாக்குதல்கள் ஆரம்ப



மாகின. அதற்கு முன்னர் ஒரு வருடகாலம் ஏனைய தமிழ்க் கட்சிகள் யாழில் இருந்தன. எங்கும் சிறு தாக்குதல்கூட நடைபெறவில்லை.

"எங்கள் வழியில் குறுக்கிடாமல் மக்களுக்கு உதவி செய்யுங்கள்" என்று தமிழ்க் கட்சிகளது உறுப்பினர்கள் சிலருக்கு புலிகள் கூறியதும் உண்டு.

**ஆனால், உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிட தமிழ்க் கட்சிகள் முன்வந்த பின்னர், அரசின் ஏமாற்று நாடகத்தில் பங்கு கொள்ளும் கட்சிகள் என்ற கோணத்தில் புலிகளது குறி இக்கட்சிகள்மீதும் திரும்பி உள்ளது.**

புலிகள் மட்டுமல்ல, தமிழ்ப் பத்திரிகைகள், புத்திஜீவிகள், மக்கள் என்று சகல தரப்பினதும் கடும் எதிர்ப்பின் மத்தியில்தான் தமிழ்க் கட்சிகள் தேர்தலில் போட்டியிட்டன.

**யாழ் இராணுவ நிர்வாகம், காணாமல் போனோரின் அவலக் கதைகள், அரசியல் தீர்வு இழுத்தடிப்புக்கள் என்று பல்வேறு விடயங்களை மூடிமறைத்து, உலகின் கண்களுக்கு யாழ் நிலவரத்தை வெள்ளையடித்துக் காண்பிக்க நடந்த தேர்தலே உள்ளூராட்சித் தேர்தல்.**

பத்திரிகைகள், புத்திஜீவிகள், மக்கள் என்று சலக தரப்பாரினதும் கருத்துக்களைப் புறங்கையால் தள்ளிவிட்டே தமிழ்க் கட்சிகள் இத் தேர்தலில் போட்டியிட்டன.

அபிவிருத்தி என்றும், அடிப்படை வசதிகளை மக்களுக்கு ஏற்படுத்தலாம் என்றும் இக் கட்சிகள் மக்களை ஏமாற்றின. தேர்தலில் போட்டியிடாவிட்டால்கூட, உள்ளூராட்சி அதிகாரிகள் மூலம் அதனை செய்ய இக் கட்சிகள் அழுத்தம் கொடுத்திருக்கலாம்.

உள்ளூராட்சித் தேர்தல் மூலம் மக்களுக்கு கிடைக்கும் பயனைவிட அரசுக்கு கிடைத்த பலன் பல மடங்காகும். நான்கு கட்டடத்தை உ.சபைகளால் கட்ட முடியும். நாற்பது கட்டடத்தை உடைக்குமளவுக்கு போரை விரிவுபடுத்த உலக உதவி பெற இத் தேர்தல் உதவியுள்ளதே. அதனை எப்படி நிறுத்துவது?

எனவே, யாழ் உள்ளூராட்சித் தேர்தல் என்பது அரசின் நாடகத்தில், அரசுக்கு சாதகமான வியூகத்தில் தமிழ்க் கட்சிகள் பங்குகொண்ட தேர்தல் என்பதே உண்மை.

எனவே அரசுக்கு எதிராகப் போராடும் புலிகளின் எதிர்த்தாக்குதலையும் எதிர் பார்த்தே இக்கட்சிகள் தேர்தலில் குதித்திருக்க வேண்டும்.

**ஒன்றில் மரணத்தை எதிர்பார்த்து காத்திருக்க வேண்டும். அல்லது மரணத்தை தடுக்க அரச படைகளுடன் நின்று முயற்சிக்க வேண்டும். தங்களுக்காக போட்டியிட்ட கட்சிகளது உறுப்பினர்களை பாதுகாக்கும் பொறுப்பு அரசுக்கு இருக்கிறது.**

அதைவிடுத்து, பாதுகாப்பின்றி இருந்தார் என்பதும், சகோதரப் படுகொலை என்ற பழைய வார்த்தைப் பிரயோகங்களை கூறுவதும் அர்த்தமற்றது.

**புலிகள் தாக்குவார்கள் என்பது தெரிந்தும் பாதுகாப்பின்றி இருந்தது முட்டாள்தனம். தங்களால் தேர்தல் களத்தில் பலிக்கடாவாக இறக்கப்பட்ட ஒருவரது பாதுகாப்பில் கூட்டணித் தலைமை அக்கறை இன்றி இருந்தது பொறுப்பற்றதனம்.**

**தேர்தலில் போட்டியிடுவோருக்கும், வெற்றி பெறுவோருக்கும் உயிராபத்து என்று தெரிந்து கொண்டே தேர்தலை நடத்தியது அரசு. அதே அரசு தனது விருப்பப்படி போட்டியிட்ட ஒருவரை பாதுகாக்கத் தவறிவிட்டது.**

திருமதி சரோஜினி யோகேஸ்வரன் அனுதாபத்துக்குரியவர். ஏனெனில் முன் கூட்டியே தெரிந்த பலிக்களத்தில் பகடைக் காயாக உருட்டப்பட்டுவிட்டார். அவரது உயிர்பற்றி அவரது சகாக்களே அக்கறைப் படவில்லை. மாண்டபின்னர் வழக்கம் போல பூசிமெழுகி ஏதேதோ கூறுகிறார்கள். சுட்டது புலிகள்தான் என்று சொல்ல வழக்கம்போல தயங்கியும் உள்ளனர்.



படிப்பகம்

www.padippakam.com

# அலசுவது– இராஜதந்திரி

# இந்திய – அமெரிக்க நெருக்கடி

# சந்திரிக்கா அரசுக்கு தலையிடி

இந்தியாவின் அணுக்குண்டு பரிசோதனையின் பின்னர் தென்னாசியப் பிராந்தியத்தில் ஏற்பட்டுள்ள நிலவரங்களை இலங்கைத் தமிழ் பேசும் தரப்பினர் உற்று நோக்கவேண்டியவர்களாகின்றனர்.

**இலங்கை, இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ், நேபாளம், பூட்டான், மாலைதீவு ஆகிய ஏழு நாடுகளைக் கொண்டதே தென்னாசியப் பிராந்தியமாகும்.**

இப்பிராந்தியத்தில் இந்தியாவே இன்றுவரை வல்லாதிக்கம்மிக்க நாடாக திகழ்ந்து வருகிறது.

தென்னாசியாவில் இந்தியாவின் பலத்தை குறைப்பதற்கான முயற்சியில் அமெரிக்கா பல்லாண்டுகளாக தீவிர கரிசனம்காட்டி வருகிறது.

இந்தியாவுக்கும் அமெரிக்காவுக்கும் ஒத்துப்போக முடியாமைக்கு அடிப்படையான காரணம் இரு நாடுகளையும் சேர்ந்த முதலாளிகளின் சந்தை தேடும் போட்டிகளேயாகும்.

வளர்ந்து வரும் இந்திய தேசிய முதலாளிகள் தமது நாட்டுக்குள் அமெரிக்க முதலாளிகள் புகுந்து சந்தையைக் கைப்பற்ற அனுமதிக்கமாட்டார்கள்.

இந்தியாவுக்குள் மட்டுமன்றி, தென்னாசியாவிலும் தமது சந்தை வாய்ப்புக்களை விரிவாக்குவதே இந்திய முதலாளிகளதும் அபிலாசையாகும்.

தென்னாசியா போன்ற பெரும் சந்தையை இழக்க அமெரிக்க முதலாளிகளும் விரும்பமாட்டார்கள்.

**உலகெங்கும் சந்தை வாய்ப்புக்களை விரிவாக்காவிட்டால், அமெரிக்க முதலாளிகளது உற்பத்திப் பொருட்களை கடலில்தான் கொட்டவேண்டும். பெரும் முதலாளித்துவ நிறுவனங்கள் பலவற்றை இழுத்து மூடவேண்டும்.**

தொழிலாளர் பிரச்சனைகள் முதற்கொண்டு பாரிய நெருக்கடிகளுக்குள் அமெரிக்கா சிக்க வேண்டி இருக்கும்.

வளம் கொழிக்கும் நாடாகவும், வசீகரமான பூமியாகவும் பாடப் புத்தகங்களிலும், செய்திகளிலும் காண்பிக்கப்படும் அமெரிக்காவின் வளமும், வசீகரமும் உலகின் பல நாடுகளை சுரண்டியும், அத்துமீறல்கள் மூலமும் உருவாக்கப்பட்டவையே.

**உலக நாடுகள் அமெரிக்காவுக்கு அடங்கியிருந்தால்தான் அந்த நாடுகளை தனது உற்பத்திப் பொருட்களை விற்கும் சந்தையாக தொடர்ந்து வைத்திருக்கலாம்.**

தென்னாசியாவில் எதிர்காலத்தில் பெரும் சந்தை வாய்ப்புக்களை அமெரிக்கா . எதிர்பார்க்கின்றது. தமது உற்பத்திப் பொருட்களைக் கொண்டுவந்து இங்கே குவித்து விற்பனை செய்ய அமெரிக்க முதலாளிகள் கனவு கண்டுவருகிறார்கள்.

**அதற்கு ஒரே தடை இந்திய முதலாளிகள்தான். தென்னாசியப் பிராந்தியத்தின் ஏழு நாடுகளிலும் மிக வளர்ச்சியடைந்த முதலாளிகள் இந்தியாவில்தான் உள்ளனர்.**

எனவே, தமக்கு போட்டியாக அல்லது வில்லனாக இப் பிராந்தியத்தில் அமெரிக்கா காலூன்றுவதை இந்திய முதலாளிகள் விரும்பப்போவதில்லை.

எனவே, அமெரிக்க, இந்திய பலப்பரீட்சை என்பது தனிப்பட்ட கிளின்ரனுக்கும், வாஜ்பேயிக்கும் இடையிலான பிணக்கல்ல. சந்தை வாய்ப்புக்கள், அதனோடு இணைந்த நலன்கள், பாதுகாப்பு என்பவற்றின் அடிப்படையிலானவை.

தென்னாசியப் பிராந்தியத்தைப் பொறுத்தவரை ஒரே உறைக்குள் இரு கத்திகள் இருப்பது சாத்தியமில்லை.

**அமெரிக்கா இப்பிராந்தியத்தில் ஆதிக்கம்பெற வேண்டுமானால் சந்தை வாய்ப்புக்களை விரிவாக்கிக் கொள்ள வேண்டுமானால், இந்தியா தனது வல்லமையை இழந்தாகவேண்டும். கைகட்டி பணிந்து நடக்கவேண்டும்.**

அணு ஆயுத தடை போன்ற விடயங்களில் அமெரிக்கா காட்டும் இடங்களில் கையொப்பம் இடுவது போன்ற அடக்கமான நாடாக மாறியாகவேண்டும்.

அதற்கு இந்தியா தயாராக இல்லையெனில் இந்தியாவை பலவீனமாக்கி, அதன் வல்லமையை தகர்க்கும் சதித் திட்டங்களில் அமெரிக்கா ஈடுபட்டே தீரும் என்பது இரகசியமானதல்ல.

இந்தியாவைப் பலவீனமாக்கும் முயற்சிகளுக்கு இந்தியா-பாகிஸ்தான் விரோதமே முன்னர் அமெரிக்காவுக்கு சாதகமாக அமைந்திருந்தது.

**இலங்கையில் இனப்பிரச்சனை கூர்மையடைந்த பின்னர் இந்தியாவை சுற்றி சதிவலை பின்ன வசதியாக அமெரிக்கா குந்தியிருக்கக்கூடிய தளமாக**



**இலங்கைத் தீவு மாறியிருந்தது.**

இனப்பிரச்சனையைத் தீவிரமாக்குவதன் ஊடாகவே இலங்கை அரசுக்கு உதவும் போர்வையில் உள் நுழைய முடியும் எனக் கருதியே அமெரிக்கா, தாராளமான இராணுவ, பொருளாதார உதவிகளை இலங்கை அரசுக்கு வழங்கியிருந்தது.

அமெரிக்கா போன்ற நாடுகள் பக்கபலமாக உள்ள துணிச்சலில் ஜே.ஆர். இராணுவ அடக்குமுறையை வடக்கு-கிழக்கில் கட்டவிழ்த்து விட்டபோதே ஆயுதப் போராட்டம் தீவிரம்பெற்று வளர்ந்தது.

இலங்கை அரசுக்கு உதவியபடியே ஈழப்போராளிகளையும் கைக்குள்போட்டுக் கொண்டு பிள்ளையையும் கிள்ளி தொட்டிலையும் ஆட்டுவிக்க அமெரிக்கா முயன்றிருந்தது.

**அதன்மூலம் இலங்கை அரசுக்கும், போராளிகளுக்கும் இடையே மத்தியஸ்தம் செய்துவைத்து, இலங்கையில் சகல இன மக்களதும் அபிமானத்தை பெற்றுக்கொண்டு எவ்வித எதிர்ப்பும் இன்றிக் காலூன்றவே அமெரிக்கா திட்டமிட்டிருந்தது.**

இத் தந்திரங்களை முறியடிக்கும் விதமாகவே இந்திய அரசு இலங்கை, இந்திய ஒப்பந்தத்தை செய்ததுடன், இந்தியாவின் அனுமதி இன்றி வெளிச் சக்திகள் இலங்கையில் தளம் காண அனுமதிக்கக்கூடாது என்ற விதியையும் ஒப்பந்தத்தில் பிரதானமாகச் சேர்த்துக் கொண்டது.

**இந்தியா தனது நலனை பாதுகாக்க மேற்கொண்ட முயற்சியை தவறாகக் கருத முடியாது. ஆனாலும், தனது நலனுடன், இலங்கைத் தமிழர் நலனையும் ஒன்று சேர்த்து இரு தரப்பு நலனுக்கு ஏற்ற ஒப்பந்தம் ஒன்றை செய்ய இந்தியா அன்று தவறியிருந்தது.**

முழுக்க முழுக்க இந்திய நலனை முதன்மைப்படுத்தியதாகவும், வீரம் செறிந்த ஆயுதப் போராட்டம் ஒன்றை நடத்தியிருந்த தமிழர் தரப்பின் அபிப்பிராயத்தை துளியும் கணக்கில் எடுக்காமலுமே இந்திய அரசு நடந்து கொண்டது.

ஆனாலும், இந்திய நலனைக் காப்பதிலும், இலங்கையில் அமெரிக்காவின் தலையீடு வேகமாக வளர்வதை தடுப்பதிலும் ஒப்பந்தம் தற்காலிக வெற்றியைப் பெற்றிருந்தது.

**இப்போது மறுபடி அமெரிக்கத் தலையீடு இலங்கையில் தீவிரம் பெற்றிருக்கிறது. இந்தியாவில் நிலவும் உள்நாட்டு அரசியல் குழப்பங்களால், இந்தியாவின் கவனம் திசை திரும்பியிருந்த சூழலைப் பயன்படுத்தி இலங்கையில் சற்று ஆழமாகவே அமெரிக்கா புகுந்துள்ளது.**

**இலங்கை அரசுக்கு உதவி,** படையினருக்குப் பயிற்சி, புலிகள்மீதான தடை, அரைகுறை தீர்வுப் பொதிக்கு ஆதரவு என்று முழுக்க முழுக்க இலங்கை அரசின் இன ஒடுக்குமுறை மற்றும் இராணுவத்தீர்வு முயற்சிகளுக்கு அமெரிக்கா பச்சைக்கொடி காட்டி வருகிறது.

எப்போதுமே ஒரே கல்லில் இரண்டு மாங்காய்கள் அடிப்பதே அமெரிக்காவின்



கொள்கையாகும். இலங்கைத் தரைப்படையினருக்கு பச்சைக் கொமாண்டோக்கள் மூலம் பயிற்சி வழங்கிய அமெரிக்க அரசு, இலங்கைக் கடற்படையினருக்கு தனது கடல் கொமாண்டோ பிரிவான 'சீல்' பிரிவு மூலம் பயிற்சி அளித்து வருகிறது.

**கடற்பயிற்சி என்ற போர்வையில் இலங்கை, இந்தியக் கடற்பரப்பில் 'சீல்' கொமாண்டோக்கள் இராணுவ ஆய்வுகளையும், உளவுச் சதிகளையும் மேற்கொண்டு வருவதாக நம்பப்படுகிறது.**

சிலாபம் பகுதியில் வானொலி அறிவியல் நிலையம் என்ற பெயரில் தொலைத் தொடர்பு தளத்தை உருவாக்கி, அமெரிக்க சி.ஐ.ஏ. உளவுப் பிரிவினர் செயற்பட திட்டமிட்டுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகி உள்ளன.

இந்து சமுத்திரத்தில் கடல் வழியான இராணுவ நகர்வுகளுக்கு ஏற்ற பிரதான கேந்திர தளமாகவும் இலங்கை விளங்குகிறது.

**எனவே இலங்கை அரசை தனது கைக்குள் போட்டுக்கொள்வதற்கு விலையாக, இனப்பிரச்சனையில் தமிழர் தரப்பின் கழுத்தை நெரித்து உதவ அமெரிக்கா தயாராகவே இருந்து வருகிறது.**

அதுமட்டுமன்றி சிங்களப் பேரினவாத சக்திகள் எப்போதுமே இந்தியாவை அவநம்பிக்கையுடனேயே நோக்கி வருகின்றனர்.

இந்திய- புலிகள் முரண்பாடு காரணமாக அந்த அவநம்பிக்கை பின்தள்ளப்பட்டிருந்ததே தவிர, இல்லாமல் போகவில்லை.

**கலைஞர் கருணாநிதி முதல்வரானதும் தென்னிலங்கையில் ஏற்பட்ட சல சலப்புக்கள் முதற்கொண்டு, பாரதிய ஜனதா ஆட்சிக்கு வந்த பின்னர் சிங்கள பத்திரிகைகளில் பக்கம் பக்கமாக வெளிப்பட்ட சந்தேகங்கள் வரை அந்த அவநம்பிக்கையின் விளைவுகளேயாகும்.**

தமிழ்நாட்டுத் தமிழர்கள், மற்றும் பெரும்பான்மையான இந்துக்களைக் கொண்ட நாடு என்ற இரண்டு அம்சங்களும் என்றென்றைக்கும் இந்தியா தொடர்பான அவநம்பிக்கைகளை சிங்கள மக்களிடம் தக்கவைத்திருக்கும்.

**திரு.நாகேந்திர நாத் ஜா தெரிவித்த கருத்துக்கள் தொடர்பாக இலங்கை அரசு காட்டிய பதற்றமும், ஆட்சேபமும் கூட அந்த அவநம்பிக்கையின் வெளிப்பாடுகளேயாகும்.**

எனவே இலங்கை அரசும் பேரினவாதிகளும் தமிழர் தரப்பை பலவீனமாக்கி குறைந்தபட்ச தீர்வை திணிக்கும் தமது முயற்சிகளுக்கு இந்தியாவைவிட, அமெரிக்காவையே உற்ற துணையாக நம்பிக்கை கொண்டுள்ளனர்.

**இந்தியாவைப் பகைக்காமல், அமெரிக்காவின் அன்பிலும், அரவணைப்பிலும் திளைத்தபடி இராணுவத் தீர்வை முனைப்பாக்கி, தமிழர் தரப்பை பலவீனமாக்குவதே இன்றைய ஆட்சியாளரின் தந்திர நோக்கமாக இருக்கிறது.**

ஆனால், இந்தியாவின் அணுக் குண்டு பரிசோதனையை அடுத்து, தனது இந்திய விரோத நிலைப்பாட்டை பகிரங்கப்படுத்தும் நிர்ப்பந்தம் அமெரிக்காவுக்கு ஏற்பட்டுள்ளது.

பொருளாதார தடை பற்றிய மிரட்டல்களை வெளியிட்டு, இந்தியாவை பலவீனமாக்கும் தனது உள்நோக்கத்தை பகிரங்கமாகவே பிரகடனம் செய்துமுள்ளது.

இந்நிலையில் இந்திய அரசு முன்பைவிட, மேலும் தனது பாதுகாப்பிலும், தென்னாசிய பிராந்தியத்தில் அமெரிக்காவின் காலூன்றலை தடுப்பதிலும் மறைமுகமாகக் கவனம் செலுத்த ஆரம்பிக்கும்.

**ஆகவே, இலங்கையில் அமெரிக்காவுக்கு தளமும் கொடுத்தபடி, இந்தியாவையும் பார்த்துப் புன்னகைக்கும் சந்திரிக்கா அரசின் இராஜதந்திரம் தர்மசங்கடமான கட்டத்தை அடைந்துள்ளது.**

தென்னாசியப் பிராந்தியத்தில் தனது மேலாதிக்கத்தை நிலைநிறுத்த முயலும் அமெரிக்கா ஒருபுறமும், தனது பலத்தை தக்கவைக்க திட சங்கற்பம் பூண்டுள்ள இந்தியா மறுபுறமும் நிற்கிறது.

இதில் இந்தியாவின் பக்கம் மாலைதீவு, பூட்டான், நேபாளம் போன்ற நாடுகள் உள்ளன. அமெரிக்காவுடன், பாகிஸ்தான், பங்களாதேஷ் போன்ற நாடுகள் நிற்கின்றன.

**இதில் எந்த அணியையும் சாராமல் நடுநிலை வகிப்பதாக இலங்கை அரசு கூறுமானால், அதனை நம்புவதுபோல இந்தியா காட்டிக்கொள்ளுமே தவிர, சந்தேகம் தீவிரமாகும்.**

ஆனால், சந்திரிக்கா அரசுக்கு இனிமேல் அமெரிக்க உறவை கத்தரிக்கக்கூடிய வாய்ப்பு இல்லை என்பது நன்கு புலனாகின்றது. இராணுவத் தீர்வை நம்பியிருக்கும் நிலையில், அமெரிக்காதான் நம்பிக்கையான கூட்டாளியாக விளங்குகிறது.

இந்நிலையில் இலங்கைத் தமிழர் தரப்பு விவேகமாகவும், தீர்க்கதரிசனத்துடனும் தனது சர்வதேச கண்ணோட்டத்தை வகுக்க வேண்டியதாகிறது.

**அமெரிக்காவுக்கு தலையையும், இந்தியாவுக்கு வாலையும் காட்டுகின்ற போக்கிலேயே தமிழ்க் கட்சிகள் செயற்பட்டு வருகின்றன.**

அமெரிக்க தூதரக விருந்துக்களில் ஓடோடிச் சென்று நாக்கு நனைப்பதுடன், அமெரிக்க பிரதிநிதிகளை புனிதர்களாகவும், நீதிமான்களாகவும் சித்தரித்தும் வருகின்றனர்.

மறுபுறத்தில் இந்திய தூதரக அதிகாரிகளைச் சந்தித்து, பிச்சைப் பாத்திரம் ஏந்தி நின்று வேண்டுகோள்களையும் விடுக்கின்றனர்.

**தென்னாசியப் பிராந்தியத்தின் நலன், இந்திய நலன், இலங்கைத் தமிழர் நலன் ஆகிய மூன்றும் ஒன்றோடு ஒன்று பின்னிப் பிணைந்தே இருக்கின்றன.**

இந்தியாவை பலவீனமாக்கவும், தென்னாசியாவில் ஆதிக்கம் பெறவும் அமெரிக்கா இலங்கையை தளமாகக் கொள்கிறது. அதற்கு நன்றிக் கடனாக தமிழ் பேசும் தரப்பின் பலத்தை ஒடுக்கும் அரசின் முயற்சிக்கு தோள் கொடுத்து நிற்கிறது.

**இந்நிலையில் தென்னாசியாவில் அமெரிக்காவின் மேலாதிக்கத்தை எதிர்த்து குரல் கொடுப்பதும் இத்தீவில் அமெரிக்காவின் சமாதான நாடகங்களை நிராகரிப்பதுமே தமிழர் தரப்பின் நிலைப்பாடாக அமைய வேண்டும்.**

இந்தியா உட்பட தென்னாசிய மக்களதும், உலகெங்கும் உள்ள அமெரிக்க எதிர்ப்புச் சக்திகளதும் ஆதரவைப் பெறுவதே தமிழ்பேசும் தரப்பின் வெளி நாட்டு கொள்கையாக இருக்க வேண்டும்.

**அமெரிக்க நிலைப்பாடு எவ்வகையிலும் தமிழ் பேசும் தரப்புக்கு ஆபத்தாகவே அமையும் என்பது உறுதியான பின்னரும், அமெரிக்க ஆதிக்கத்தை எதிர்ப்பதற்கு பின்நிற்பது அவசியமல்ல.**

இலங்கை இனப்பிரச்சனைக்கு மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் ஒன்றுதான் தேவை. அமெரிக்கா அல்லாத மூன்றாம் தரப்பு மத்தியஸ்தமாக அது அமையவேண்டும்! ■

---

## சந்திக்கு வராத சங்கதிகள்

**நக்கீரன்**

**யா**ழ்ப்பாணத்திற்கு பல்வேறு நாடுகளின் தூதர்கள் விஜயம் செய்த பின்னர்தான் இந்தியாவின் தூதராக சச்சதேவ் ராஜேஸ்குமார் சென்றிருந்தார். இவர் இந்திய தூதரக அரசியல் பிரிவு செயலாளர்.

யாழ்ப்பாண உள்ளூராட்சிச் சபை உறுப்பினர்களை சந்தித்தது அவர் வாழ்க்கையில் பெரிய துரதிஷ்டமாக இருக்கக்கூடும்.

இனப்பிரச்சனையைத் தீர்க்குமாறு கோரி தமிழ்க் கட்சிகள் கூட்டாக மகஜர் கொடுத்ததாக பத்திரிகைகளுக்கு சொல்லப்பட்டது கலப்பட மில்லாத பொய்.

யாழ்ப்பாணம் நாவலர் மண்டபத்தில் 14.05.98 அன்று காலை உள்ளூராட்சி சபை உறுப்பினர்களை இந்தியத் தூதர் சந்திக்க ஏற்பாடாகி இருந்தது.

சந்திப்பின் ஆரம்பத்திலேயே தமிழர் தம் ஒற்றுமை கொடி கட்டிப்பறந்தது. உள்ளூராட்சி சபை அதிகாரிகள் செய்த ஏற்பாடுகளால் சில கட்சிகளுக்கு பலத்த அதிருப்தி. வேண்டுமென்றே தங்கள் கட்சியின் உள்ளூராட்சி சபை உறுப்பினர்களை பின் ஆசனங்களுக்குத் தள்ளி ஒரம் கட்டிவிட்டனர் என்று குமுறல். அதில் ஒரளவு நியாயமும் இருந்தது.

தமிழ்க் கட்சி ஒன்றின் முக்கியஸ்தர் ரொம்பவும் உணர்ச்சிவசப்பட்ட நிலையில், உள்ளூராட்சி அதிகாரி ஒருவரை 'நீ வெளியே வாடா பார்த்துக் கொள்கிறேன்' என்று அன்பாக எச்சரித்தார். அதிகாரி திரு திருவென்று முழித்துக் கொண்டிருந்தார்.

தமிழ்க் கட்சிகளின் ஐக்கியம், பெருந்தன்மை என்பவற்றை நேரில் அறியக்கூடிய அரிய வாய்ப்பை தமிழ் தெரியாத காரணத்தால் தவறவிட்டார் இந்தியப் பிரதிநிதி.

யாழ் குடாநாட்டுக்கு வெளிநாட்டுத் தூதர்களை அனுப்பிவைத்து, அங்குள்ள உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள் ஊடாக கோரிக்கைகளை அடுக்கி, மனம் இரங்கி வெளிநாடுகள் வழங்கும் உதவிகளை பெறுவதுதான் அரசாங்கத்தின் கச்சிதமான திட்டம். இந்த மாபெரும் ஏமாற்று நாடகத்தில் உள்ளூராட்சி சபை உறுப்பினர்களும் நடிகர்களாகியுள்ளனர்.

## வந்தனர் – கண்டனர் – சென்றனர்

அதாவது, பிச்சைப் பாத்திரம் ஏந்துவது உள்ளூராட்சிச் சபை உறுப்பினர்கள். ஆனால் பிச்சை விழுவது அவர்களது பாத்திரங்களில் அல்ல. அரசிடம்தான் உதவிகள் சேரும். கொடுப்பதும் கொடுக்காததும், பிரிப்பதும், குறைப்பதும் அரசின் இஷ்டம்.

யாழ உள்ளூராட்சிச் சபை தேர்தல்கள் முடிந்த பின்னர் இன்றுவரை எத்தனையோ தூதர்கள் யாழ் சென்றனர். இனப்பிரச்சனை தீர்வைவிட, யாழ் மக்கள் நாடுவது நிவாரண உதவிகளையே என்று உள்ளூராட்சிச்சபை கட்சிகள் விளம்பரம் செய்து அரசுக்கு உதவியது தான் மிச்சம். உதவிகள் எதுவும் கிடைக்கவேயில்லை.

இந்தியத் தூதரிடமும் பிச்சைப் பாத்திரம் ஏந்தினார்கள். மூக்குக் கண்ணாடி முதற் கொண்டு பாக்குவெட்டி வரை தந்துதவுமாறு ஆளாளுக்கு எழுந்து நின்று கேட்டது கண் கொள்ளாக்காட்சி.

சகல சபைகளது தேவைகளையும் உள்ளடக்கி பொதுப்பட்டியல் ஒன்றை கொடுத்திருந்தாலாவது சின்னதாக ஒரு மரியாதையாக இருந்திருக்கும்.

ஆளாளுக்கு பிச்சைப்பாத்திரம் ஏந்தி, இந்தியப் பிரதிநிதியின் பொறுமைக்கு விடாப் பிடியான சவால்விட்டனர்.

இந்த விடயத்தில் புளொட் பிரதிநிதியை பாராட்டலாம். அந்த மனுசன்தான் ஆளாளுக்கு பிச்சை கேட்ட கூச்சலுக்கிடையே, அரசியல் தீர்வுதான் முக்கியம் என்ற திசையில் பேச்சைத் தொடங்கினார். பின்னர்தான் பிச்சைப் பாத்திரங்களை பக்குவமாக கீழே வைத்துவிட்டு, ஏனைய கட்சிகளும் அரசியல் தீர்வின் அவசியம் குறித்துச் செப்பினார்கள்.

▫▫▫

**ச**மீபத்தில் தென்னாபிரிக்கத் தூதர் தலைநகருக்கு விஜயம் செய்திருந்தார். தமிழ்க் கட்சிகள் சிலவற்றையும் சந்தித்திருந்தார்.

இலங்கை இனப்பிரச்சனைக்கு தீர்வு காணும் முயற்சிக்கு உதவத் தயார் என்று அவர் கூறினார். ஆனால் எந்த ஒரு தமிழ்க் கட்சியும் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் தேவை என்பதை அவரிடம் வலியுறுத்திக் கூறவில்லை.

இலங்கை அரசிற்கு பிடிக்காத ஒன்றை இக் கட்சிகள் எப்படி வலியுறுத்தும்? அதுதவிர, மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் ஏற்படுமானால் தாங்கள் ஒரம்கட்டப்படுவோம் என்ற சுயநல அச்சமும் தமிழ்க் கட்சிகளிடம் நீக்கமற நிறைந்துள்ளது.

எனவே, மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்துக்கு இப்போது முத்தரப்பு எதிர்ப்பாக உள்ளது.

1. அரசு.
2. எதிர்க்கட்சி
3. தமிழ்க் கட்சிகள்.

மூன்றாம் தரப்பு தலையிட்டால் தற்போதுள்ள அரைகுறை தீர்வுப் பொதிக்கும் மேலாக கொடுத்தாக வேண்டுமே என்பதால் அரசு எதிர்க்கிறது.

தனது நிலைப்பாட்டை தெளிவாக கூற வேண்டி ஏற்படும் என்பதால் எதிர்க்கட்சி மறுக்கிறது.

தாங்கள் ஒரம் கட்டப்பட்டுவிடுவோம். அதை விட அரசு, புலிகள் மோதலில் குளிர்காய்ந்து கொண்டிருப்பது. இலாபம் என்று நினைத்து தமிழ்க் கட்சிகள் தயங்குகின்றன.

## கைநழுவும் வாய்ப்புக்கள்

தமிழ்க் கட்சிகளின் இந்த தயக்கத்தால் பல நல்ல சந்தர்ப்பங்கள் கைநழுவிப் போயுள்ளன. பழம் நழுவிப் பாலில் விழுவதற்கு பதிலாக, பாழாய்ப் போய்க்கொண்டிருக்கிறது.

தென்னாபிரிக்கத் தூதரின் விஜயமும் அப்படித்தான். உதவத் தயார் என்கிறார். அதுதான் சந்தர்ப்பம் என்று மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்தை கேட்க ஆளில்லை.

ஒலரா ஒட்டுணுவும் தானாகவே மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் பற்றிப் பேசினார். அவரைச் சந்தித்த தமிழ்க் கட்சிகள்...மூச்!

மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் என்பது சாதாரண விடயமல்ல. இங்கு பல்லாயிரம் உயிர்கள் பலியாகி, போராட்ட அதிர்வுகள் உலகில் எதிரொலித்த நிலையில்தான் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் இல்லாமல் தீர்க்கக்கூடிய பிரச்சனை அல்ல இது என்ற உண்மை சர்வதேச இராஜதந்திரிகளுக்கு புரியத் தொடங்கியுள்ளது.

தமிழ்க் கட்சிகள் ஒன்று சேர்ந்து இன்று வலியுறுத்த வேண்டிய ஒரு விடயத்தை, அவர்கள் தாமாக முன்வந்து "நாம் உதவத் தயார்" என்று கூறுகிறார்கள்.

இத் தருணத்தில் 'மூன்றாம் தரப்பு' மத்தியஸ்தத்தை கோரினால், அரசு அதனை மறுக்கும். அரசியல் தீர்வுக்கு அரசே தடை என்ற உண்மை அப்போது அம்பலமாகும்.

அதைவிடுத்து 'போர் நிறுத்தப்பட வேண்டும் என்றும், புலிகளோடு அரசு பேச்சு நடத்துமாறு கோரிக்கை விட்டு நாடகமாடுவதும் ஏமாற்றுத் தந்திரங்கள்.

போரை நிறுத்தோம் என்று அரசு கூறுகிறது. புலிகளோடு பேச்சில்லை என்று தடையும் விதித்துவிட்டது. பொதியும் 'பொறி' என்று தெரிந்துவிட்டது. பின்னர் திரும்ப திரும்ப கீறல் விழுந்த ரெக்கோட் மாதிரி அதே கோரிக்கைகளை விட்டுக் கொண்டு இருப்பானேன்?' யாரை ஏமாற்றுகிறார்கள்?

தென்னாபிரிக்காவின் தீர்வு முயற்சிகளில் பரஸ்பர விட்டுக் கொடுப்புக்கள் பற்றிய அனுபவங்களை அறிய வருமாறு தென்னாபிரிக்கத் தூதர் தமிழ்க் கட்சிகளிடம் கேட்டுக் கொண்டாராம்.

முதுகெலும்பு முறியுமளவுக்கு வளைந்து விட்டுக் கொடுப்பது எப்படி? என்பதை தூதருக்கு தமிழ்க் கட்சிகள் எடுத்து விளக்கியிருக்கலாம். விட்டுக்கொடுப்பு விஷயத்தில் இவர்களை வெல்ல உலகில் யாருண்டு?! அந்தப் பெருமையைக் கூடவா தூதரிடம் சொல்லி மகிழ மறந்து போயினர்?!



படிப்பகம்

www.padippakam.com

ஜனாதிபதி ஒபேடே 'லாங்கி' இனத்தைச் சேர்ந்தவர். அதனால் இராணுவத்தில் 'லாங்கி' இனத்தைச் சேர்ந்த அதிகாரிகளின் பட்டியலை தயாரித்தான் இடி அமீன்.

"'அசோலி' இனத்தவரும் ஒபேடேவுக்கு ஆதரவானவர்கள்தான்..." என்று உளவுப் பிரிவின் தகவல் தெரிவித்தது.

**"நல்லது, இரண்டு இனத்தைச் சேர்ந்தவர்களையுமே தூக்கிப்போட்டு விட வேண்டியதுதான். உடனே பெயர் விபரங்கள் என் மேசைக்கு வந்து சேரவேண்டும்!"** என்றான் இடி அமீன்.

ஒபேடேயின் அமைச்சரவையில் பொதுச் சேவை அமைச்சராக இருந்தவர் ஜொஷ்வா வக்கோலி.

தனது அலுவலகத்தில் இருந்து புறப்பட்ட அமைச்சர் வழிமறிக்கப்பட்டார்.

"தளபதி உங்களை அழைத்துவரச் சொன்னார்."

"என்ன விஷயம், ஃபோனில் பேசிக் கொள்கிறேனே...?" என்று ஃபோனை தொட்டவரிடம் இருந்து, ஃபோன் பிடுங்கப்பட்டது.

அமைச்சருக்கு விஷயம் புரிந்து விட்டது. இடி அமீனை தீர்த்துக்கட்டும் திட்டம் அவருக்கும் தெரிந்தே இருந்தது.

'அத் திட்டத்தை அறிந்துதான் தன்னை கைது செய்ய உத்தரவிட்டுள்ளானோ?' என்று நினைத்தபோது அமைச்சருக்கு பயத்தில் வியர்த்துவிட்டது. புறப்பட்டார்.

இடி அமீன் முன் நிறுத்தப்பட்டார்.

**"வரவேண்டும், வரவேண்டும் அமருங்கள்"** என்றான். அவனது உபசாரம் கேலியா, இல்லையா? என்பதை தீர்மானமாக அறிய முடியாமல் தவித்தார். மெல்ல நாற்காலி நுனியில் அமர்ந்தார்.

# இடி அமீன்

பிஸ்டலை உருவி மேசை மேல் போட்டான் அமீன். அமைச்சருக்கு இதயப் பரப்பு தட தடத்தது.

**"இருந்தது போதும், எழுந்து நில்லும்!"** என்றான் திடீரென்று இடி அமீன். அவன் குரல் மரணதூதனின் குரல் போலத்தான் அமைச்சருக்கு கேட்டது.

**"என்னடா இரு என்கிறான் எழுந்து நில் என்கிறான் என்று யோசிக்கிறீரா?"** என்று கேட்டுவிட்டு அமீன் சொன்ன விளக்கம் அமைச்சரை தூக்கிவாரிப் போட்டது.

**"இருக்கச் சொன்னபோது நீர் அமைச்சராக இருந்தீர், எழுந்துகொள்ள சொன்னபோது நீர் எனது கைதியாகி விட்டீர்!"** உரத்துச் சிரித்தான்.

சட்டென்று முகம் இறுகி, **"ஏன்டா டேய், என்னை என்ன விரல் சூப்பும் குழந்தை என்றா நினைத்து விட்டீர்கள்? ஒபேடே தனது மனைவியை முத்தமிடும் சத்தம்கூட எனக்குக் கேட்காமல் போகாது தெரியுமா? நீ என்ன அமைச்சர்?"**

பயத்தில் உறைந்திருந்த அமைச்சர், "பொதுச்சேவை அமைச்சர்" என்றதும், அதிரச்சிரித்து, **"இனி உமக்கு நாம் சேவை செய்கிறோம், உமது அயராத சேவையை கௌரவிக்க, சில காலம் ஓய்வு தரப்போகிறோம்"** என்றான்.

மறுநொடியே சிப்பாய்களால் தரதரவென்று இழுத்துச் செல்லப்பட்டார் அமைச்சர் வக்கோலி.

வக்கோலியைத் தொடர்ந்து ஜனாதிபதி ஒபேடேக்கு நெருக்கமான பலர் மளமளவென்று கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்களை தடுத்து வைக்க விசேஷ முகாம் ஒன்று உருவாக்கப்பட்டது.

ஜனாதிபதி ஒபேடேயின் சிங்கப்பூர் பயணத்தோடு அமீனை தீர்த்துக்கட்ட திட்டம் தீட்டப்பட்டதால், ஒபேடேயின் ஆட்களை தீர்த்துக் கட்டும் படலத்திற்கு 'சிங்கப்பூருக்கு அனுப்புதல்' என்று பெயர் சூட்டி இருந்தான் அமீன்.

ஒபேடேயின் ஆதரவாளர்களை தடுத்துவைத்து சித்திரவதை செய்யும் முகாமுக்கு 'சிங்கப்பூர்' என்று பெயர் சூட்டினான்.

**"சிங்கப்பூரில் அமைச்சர் வக்கோலிக்கு சமூக சேவை அமைச்சு தரப்பட்டிருக்கிறது"** என்று கூறினான் அமீன்.

உத்தரவைக் கேட்ட சிறையதிகாரிக்கு புரியவில்லை. **"சிறை அறைகளை கழுவிச் சுத்தம் செய்யும் சேவையை, ஏன் சமூக சேவை என்று அழைக்கக்கூடாது?"** என்று அமீன் கேட்ட கேள்விக்கு "முடியும், அழைக்கலாம்!" என்றார் அதிகாரி.

அமைச்சர் வக்கோலியும், வேறு சில கைதிகளும் சிறை அறைகளை சுத்தம் செய்யும் வேலையில் இறங்கியபோது, அங்கு கண்ட காட்சிகளால் கதிகலங்கிப் போனார்கள்.

சிறை அறைகளில் ஒன்றரை அங்குல உயரத்திற்கு இரத்தம் தரையில் உறைந்திருந்தது. எலும்புத்துண்டுகள், சதைகள், மூளையின் பாகங்கள், உதிர்ந்த பற்கள் போன்றவை சிதறிக்கிடந்தன.

குடலைப் புரட்டும் மணமும், பயங்கரமும் அமைச்சர் வக்கோலியை சுய நினைவிழக்கச் செய்தன.

சக கைதிகள் அவரைத் தூக்கிச் சென்று முதலுதவி செய்தனர் சில கைதிகளும் நாற்றம் தாங்காமல் வாந்தி எடுத்தனர்.

ஒரு அறையைச் சுத்தம் செய்து முடிக்க ஆறுமணிநேரம் சென்றது. சிப்பாய்கள் இடைக்கிடையே வந்து துப்பாக்கியின் முனையில் உள்ள கத்தியால கைதிகளின் முதுகில் கீறிவிட்டுப் போவார்கள்.

முக்கிய அமைச்சர் உட்பட பலர் கைது செய்யப்பட்டு காணாமல் போய்க்கொண்டிருந்தபோதும், உகண்டா மக்களிடம் எதிர்ப்பு எதுவும் ஏற்படவில்லை.

**"ஜனாதிபதி ஒபேடேயை கொலை செய்ய சதி செய்த சுயவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்!"** என்று இடி அமீன் அறிவித்தான்.

படைகளுக்குள் இடி அமீனின் கை மேலோங்கியதால், ஒபேடையின் நம்பிக்கைக்கு



பாத்திரமானவரும், அமீனை தீர்த்துக்கட்டும் திட்டத்தின் சூத்திரதாரியுமான அகெனா அடொஃகோ தலைமறைவானார்.

அவரையும் சில அதிகாரிகளையும் வலைபோட்டு தேடினார்கள் அமீனின் ஒற்றர்கள்.

1971 மார்ச் மாதத்தில் உகண்டாவில் கம்பாலா நகரில் மக்கள் கூடும் நான்கு இடங்களில் கைக்குண்டுகள் வெடித்தன. நாற்பதுக்கு மேற்பட்ட மக்கள் துடி துடித்து மாண்டனர்.

"ஜனாதிபதி ஒபேடேயின் ஆதரவாளர்களே குண்டுவெடிப்புகளுக்கு காரணம். குண்டுகளை எறிந்த நான்கு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்." என்று இடி அமீன் பத்திரிகைகளுக்கு செய்தி கொடுத்தான்.

குண்டுகளை வீசியது இடி அமீனின் ஆட்கள். குண்டுவெடிப்பு நடைபெற முன்னரே கைது செய்து 'சிங்கப்பூர்' முகாமில் வைக்கப்பட்டிருந்த நான்குபேர் பழி போட தெரிவு செய்யப்பட்டனர்.

**"கைக்குண்டு வீசியது நீங்கள்தான் என்று**



**ஒப்புக்கொண்டால், உங்களை உயிரோடு விடுகிறேன். வெளிநாட்டுக்கு அனுப்பி வைக்கிறேன்!"** என்று ஆசை காட்டினான் இடி அமீன்.

அவர்கள் தயங்க, இடி அமீனின் பிஸ்டல் வெடித்தது.

'டுமீல்'

நால்வரில் ஒருவன் துடி துடித்து, இரத்தம் சிந்தி செத்துப்போவதைப் பார்த்து, "நீங்கள் சொல்கிறபடி செய்கிறோம்" என்றனர் மீதி மூவரும்.

ஒருநாள் முழுக்க மூவருக்கும் பொய் சொல்லப் பயிற்சி தரப்பட்டது.

பத்திரிகையாளர்கள் மாநாட்டை கூட்டி மூன்றுபேரையும் பேட்டி காண ஏற்பாடு செய்யப்பட்டது. இடி அமீன் சொல்லச் சொன்ன பொய்களை கிளிப்பிள்ளைகள் போல பத்திரிகையாளர்களிடம் கூறினர்.

"ஒபேடேயை கொல்ல சதி நடந்தது என்று அறிந்ததும் எங்களால் பொறுக்க முடியவில்லை. முன்னாள் ஜனாதிபதி கபாகாவின் ஆட்கள்தான் சதி செய்ததாக தகவல் கிடைத்தது. அதனால்தான் கம்பாலாவிற்குள் கைக்குண்டு வீசினோம்," என்று கூறினார்கள்.

பத்திரிகையாளர் மாநாடு முடிந்து, அன்றைய செய்திகளை சுடச்சுட அச்சடித்துக்கொண்டிருந்த பத்திரிகை அலுவலகங்களுக்கு, அன்று நள்ளிரவு அவசர செய்தி ஒன்று வந்தது.

"பொதுமக்கள் கூடும் இடங்களில் கைக்குண்டு வீசிய மூவரும் கைது செய்யப்பட்டதும், தங்கள் குற்றத்தை ஒப்புக்கொண்டதும் தெரிந்ததே. ஜனாதிபதி ஒபேடே நாடு திரும்பிய பின்னர் விசாரணைகளைத் தொடரலாம் என்று கருதி தனிச் சிறைக்கு கொண்டுசெல்லப்பட்டனர்.

அப்போது மூவரும் தப்பியோடினர். அதனால் நடைபெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தில் மூவரும் சுட்டுக் கொல்லப்பட்டனர்."

## உண்மைத் தொடர்

## அதிர் இடி 10

**கடந்தவாரம்**

**1971 ஜனவரி மாதம் உகண்டா ஜனாதிபதி ஒபேடே சிங்கப்பூருக்குச் செல்கிறார். தான் திரும்பிவரும் முன்பாக இடி அமீனை தீர்த்துக்கட்டும் பொறுப்பை நம்பகமான அதிகாரிகளிடம் ஒப்படைத்துவிட்டுச் சென்றார். ஆனால் இடி அமீனுக்கு ஜனாதிபதியின் திட்டங்கள் தெரிந்துவிடுகின்றன. இடி அமீன் முந்திக்கொள்கிறான்.**

**இனி....**

ஜனாதிபதி ஒபேடேவுக்கு மக்களிடம் நல்ல அபிப்பிராயம் இருக்கவில்லை. கைக்குண்டு வீசியது ஒபேடேயின் ஆட்கள் என்றும் மக்கள் நம்பியதால், ஒபேடேயை வெறுக்க ஆரம்பித்தனர்.

இத் தகவல்கள் யாவும் சிங்கப்பூரில் இருந்த ஒபேடேக்கு தெரிந்தே இருந்தது. நாடு திரும்பினால் தானும் கைது செய்யப்படலாம் என்ற பயத்தில் சிங்கப்பூரிலேயே குடும்பத்தினருடன் தங்கியிருந்தார் ஒபேடே.

சிங்கப்பூரில் இருந்த ஜனாதிபதி ஒபேடேயின் தொலைபேசி இலக்கத்துக்கு ஒரே ஒரு தடவை மட்டும் ஃபோன் செய்திருந்தான் அமீன்.

**"எப்போது நாடு திரும்புகிறீர்கள்? மிக்க ஆவலோடு எதிர்பார்த்துக் காத்திருக்கிறேன்"** என்று அமீன் கூறியது எந்த அர்த்தத்தில் என்பது ஒபேடேக்கு தெரியாதது அல்ல.

"வருகிறேன், விரைவில்!" என்றவரிடம், **"உகண்டா மண்ணில் உங்கள் பாதம் பட்டதும் நீங்கள் இதுவரை காணாதளவில், இனி எப்போதுமே காணாதளவில் வரவேற்புக் கொடுக்கப் போகிறேன்"** என்றான் அமீன்.

இடி அமீன் உயிரோடு இருக்கும்வரை உகண்டாவுக்கு திரும்பிச் செல்வதேயில்லை என்று முடிவு செய்து கொண்டார் ஒபேடே.

உடனடியாக ஆட்சியைக் கைப்பற்ற நினைத்தால் அமீன் கைப்பற்றியிருக்கலாம்.

அவ்வாறு கைப்பற்றினால் தன்னை பதவி ஆசை கொண்டவன், தளபதிப் பதவி கொடுத்த ஒபேடேயின் முதுகில் குத்தியவன் என்றெல்லாம் மக்கள் தூற்றுவார்கள் என்று நினைத்தான்.

அதனால் படிப்படியாக முன்னேறினான். அவனது திட்டங்கள் பிசகில்லாமல் பலித்தன. "ஜனாதிபதி ஒபேடே நாடு திரும்ப ஏன் தாமதம்?" என்று கேட்ட பத்திரிகைகளுக்கு: **"அதுதான் எனக்கும் புரியவில்லை. இன்னமும் ஒரு மாதத்தில் ஜனாதிபதி நாடு திரும்பாவிட்டால், பெரும் நெருக்கடி ஏற்படும் என்று ஜனாதிபதிக்கு எடுத்துக் கூறியுள்ளேன்."** என்றான் இடி அமீன்.

## தருவது ரசிகன்

அவன் கூறிய ஒரு மாதத்தின் பின்னர் ஆங்காங்கே கலவரங்கள் நடந்தன. அரச உடமைகளை கும்பல்கள் தீயிட்டுக் கொளுத்தின.

எல்லாமே இடி அமீனின் ஏற்பாடு. "நாட்டுக்கு தலைவன் வேண்டும். உடனே வேண்டும். ஒபேடே எங்களுக்கு வேண்டாம்!" என்று தெருக்களில் சுலோகங்கள் எழுதப் பட்டன.

காலத்தைக் கனிய வைத்தான். கனிந்தது.

1971 ஜூலை 24ம் திகதி உகண்டாவின் கேந்திர நிலைகளை இடி அமீனின் விசுவாசத் துருப்புக்கள் கைப்பற்றிக் கொண்டன.

ஒபேடேயின் சதித்திட்டக் கூட்டத்தில் கலந்து கொண்டவர் சுலைமான் ஹுசைன். அவர்தான் இராணுவத்தில் சீஃப் ஒஃப் ஸ்டாஃப் பதவியில் இருந்தவர்.

அவர்மீது சந்தேகம் இல்லாததுபோல இடி அமீன் நடித்துக் கொண்டிருந்தான். அவரும் அதனை நம்பி தலைமறைவாகாமல் இருந்தார்.

ஜூலை 24ம் திகதி அவரும் கைதானார்.

"பிடித்துவிட்டோம் என்ன செய்வது?" என்று வோக்கியில் அமீனிடம் கேட்டனர்.

சற்றும் தாமதிக்காமல் அமீன் மறுமுனையிலிருந்து, **"தலையைச் சீவி சிங்கப்பூருக்கு அனுப்புங்கள்!"** என்றான்.

சீவிய தலையை கொண்டுவந்து அமீன் முன்னால் வைத்தனர். இரத்தம் வழிந்து கொண்டிருந்தது.

இடி அமீன் எழுந்தான்.

தலையைத் தூக்கிக் கொண்டுபோய் தன் அறையில் இருந்த குளிர் சாதனப் பெட்டியில் வைத்தான்.

**(இடி தொடரும்)**

## மீண்டும் ஒப்பந்தம்



**பொப்** பாடகி மடோனா குழந்தை பெறும் ஆசையில் கார்லோஸ் என்பவருடன் ஒப்பந்த முறையில் உறவு வைத்தார். குழந்தை பிறந்ததும் அவருக்கு சேரவேண்டிய பணத்தை கொடுத்து அனுப்பி விட்டார்.

இப்போது மடோனாவுக்கு அழகான பெண் குழந்தை இருக்கிறது. அக்குழந்தையின் வரவால் மேலும் ஒரு குழந்தையைப் பெறுவதற்கு மடோனாவுக்கு ஆசை வந்து விட்டது.

பெண் குழந்தை இருக்கிறது. ஆண் குழந்தை ஒன்றும் பெற்றுவிட்டால் நன்றாக இருக்கும் என்று நினைக்கிறார்.

மடோனாவிடம் ஏராளமான பணமும் சொத்துக்களும் இருக்கின்றன. எனவே நம்பிக்கையான ஆண் ஒருவரை தேடினார். ஒப்பந்தம் முடிந்தபின்னரும் "போகமாட்டேன்!" என்று அடம்பிக்காமல் இருக்க வேண்டும் அல்லவா?.

நம்பகமான ஆண் யாரும் மாட்டவில்லை. இறுதியில் பழைய நண்பரான காலோஸையே மீண்டும் நாடியிருக்கிறார்.

இரண்டாவது குழந்தை பெற ஒத்துழைத்தால், பங்களா ஒன்றும், கார் ஒன்றும் சில இலட்சம் டொலர்களும் தரப்படும் என்பது ஒப்பந்தமாம். கார்லோசுக்கு என்ன கசக்கவா போகிறது?

## நூல் எழுதிய இரும்பு மனிதர்



ஈராக்கின் சதாம் உசேனுக்கு முன்னர் அமெரிக்காவை ஆட்டிப் படைத்தவர் லிபிய அதிபர் கடாபி. அமெரிக்க குண்டுவீச்சு விமானங்கள் பல முறை வேட்டை நடத்தியும் கடாபியை ஒழிக்க முடியவில்லை.

இன்றுவரை அமெரிக்காவை எதிர்த்து வரும் இரும்பு மனிதரான கடாபிக்கு வயதாகி வருகிறது. அதனால் முன்னர் போல இவரது பெயர் உலகச் செய்திகளில் பரபரப்பாக அடிபடுவதில்லை.

ஆனாலும் கடாபி சுறுசுறுப்பாகவே இருக்கிறார். சமீபத்தில் நூல் ஒன்றை எழுதி வெளியிட்டுள்ளார். இதில் விசேஷம் என்னவென்றால் அதனை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து அமெரிக்காவில் விற்பனைக்கு விட்டுள்ளனர்.

'நரகத்தில் இருந்து தப்பி ஓடல்' என்பதுதான் நூலின் தலைப்பு. நரகம் என்று கடாபி கூறுவது, இன்றைய நவநாகரிக நகரங்களை.

சன நெருக்கடியால் பெருநகரங்கள் அழுக்காகவும், நச்சுத்தன்மை சூழ்ந்தும் காணப்படுகின்றன. "மக்களின் சுவாசம் பைத்தியம் பிடித்த நாயின் வாயில் இருந்து வடியும் விஷக்கிருமிகளை ஒத்திருக்கின்றன!" என்று விபரித்திருக்கிறார்.

## பயமுறுத்தும் இரகசியம்



**இ**ப்போது வயதாகிவிட்ட முன்னாள் பிரபலங்கள் சிலருக்கு வயிற்றில் புளியைக் கரைத்திருக்கிறார் எலிசபெத் டெய்லர்.

தனது சுயசரிதையை எழுதப்போவதாக எலிசபெத் டெய்லர் அறிவித்திருக்கிறார்.

'கிளியோபாத்ரா' படம் மூலம் அந்தக் காலத்தில் பல கோடி ஜொள்ளர்களையும் பெற்றவர் நடிகை எலிசபெத் டெய்லர். இதுவரை எட்டுத் தடவை திருமணம் செய்துள்ளார். அதைவிட பிரபலப் பிரமுகர்களுடனும் நெருக்கமான உறவுகள் இருந்தன. அந்தப் பிரமுகர்கள் தான் இப்போது கலங்கிக் கொண்டிருக்கின்றனர்.

'அதிர்ச்சி தரும் பல இரகசியங்களை வெளியிடப் போகிறேன்' என்றும் பயமுறுத்தியுள்ளார் டெய்லர்.

பிரபல நடிகை ஒருவருக்கும் தனக்கும் இருந்த நெருங்கிய உறவைப் பற்றியும் எழுதப்போகிறாராம். எலிசபெத் டெய்லருக்கு 'எய்ட்ஸ்' என்று வதந்தி பரவவும் இந்த உறவே காரணமாக இருந்தது.

இரண்டு தடவை தனக்கு கணவராக இருந்த பிரபல நடிகர் ரிச்சர்ட் பர்ட்டனுடன் தான் வாழ்ந்த வாழ்க்கை பற்றிய சுவையான சங்கதிகளையும் எழுதப் போகிறாராம்.

## அப்பாவின் அடிச்சுவட்டில்



கராத்தே படங்கள் மூலம் உலகெங்கும் பல கோடிக் கணக்கான இரசிகர்களை பெற்றிருந்தவர் புரூஸ்லீ. 32 வயதில் மரணம் அடைந்து இரசிகர்களை சோகக் கடலில் தள்ளினார்.

அதன் பின்னர் புரூஸ்லியின் ஒரே மகன் பிராண்டன் லீ சினிமாவுக்கு வந்தார். ஆறு படங்களில் நடித்தார். தந்தையைப் போலவே கராத்தேயில் கலக்கினார். அவரும் விபத்து ஒன்றில் பலியானார்.

இப்போது புரூஸ்லியின் ஒரே மகளான ஷான்னன்லீ சினிமாவுக்குள் புகுந்துவிட்டார். 28 வயதாகும் ஷான்னன்லீ முதலில் நடிக்கும் திரைப்படம் 'என்டர் தி ஈகிள்'.

இதற்காக கடந்த மூன்று மாதகாலமாக தீவிர கராத்தே பயிற்சி கற்றுக் கொண்டாராம். புரூஸ்லீ இறக்கும்போது ஷான்னன்லீக்கு நான்கு வயது. தற்போது கணவரோடு கலிஃபோர்னியாவில் வசிக்கிறார்.

"என் அண்ணன் இருந்திருந்தால் எனக்கு அவரே கற்றுத்தந்திருப்பார்." என்று ஏங்குகிறார் ஷான்னன்லீ.

## இப்படியும் ஒரு ஆய்வு

இந்திய இளைஞர்கள், யுவதிகளுக்கு செக்ஸ் விஷயத்தில் அறிவு போதாது என்று ஆய்வு ஒன்று மூலம் தெரியவந்துள்ளது.

இந்தியா முழுவதும் 15 முதல் 22 வயது வரையுள்ளவர்களிடம் ஆய்வு நடத்தப்பட்டது. ஆய்வில் தெரியவந்துள்ள சமாச்சாரங்கள்:

* செக்ஸ் உடற்கூறு, இனவிருத்தி மற்றும் பால்வினை நோய்கள் சம்பந்தமாக இரு தரப்பினருமே குறைந்த அளவுதான் தெரிந்து வைத்துள்ளனர்.
* நடுத்தர வர்க்க இளைஞர்கள் பலர் நீலப்படம் மற்றும் புத்தகங்கள் மூலம்தான் 'செக்ஸ்' பற்றி அறிந்துகொள்கின்றனர்.
* கர்ப்பம், குழந்தை பிறப்பது ஆகிய சமயங்களில் உடல் நலத்தை பாதுகாக்கும் முறைகள் போன்ற இனவிருத்தி சம்பந்தமான தகவல்கள் பலருக்குத் தெரியவில்லை.



* இளம் மனைவி கணவனின் விருப்பத்துக்கு ஏற்ப செக்ஸ் உறவில் ஈடுபட முடிவதில்லை. மேலும் செக்ஸ் விஷயத்தில் மனைவியைவிட கணவரே தீர்மானிக்கிறார்.
* பால்வினை நோய்களால் அவதிப்படுபவர்கள் முறையான சிகிச்சை எடுத்துக் கொள்வதில்லை.



படிப்பகம்

www.padippakam.com

## சின்ன எமன்



← மிகச் சிறிய கைத்துப்பாக்கி. ஆக 3 அங்குலம் நீளம். ஒரு அங்குல அகலம். கடுகளவே ஆனாலும் உயிரைக் குடிப்பதில் பெரியளவான துப்பாக்கிக்கு ஈடானது. .32 ரக தோட்டாக்கள் இதற்கு தோதானவை.

அவுஸ்திரேலிய விமான நிலையத்தில் பயணி ஒருவரிடம் இருந்து கைப்பற்றினார்கள். உடம்பு முழுக்க நுணுக்கமாகத் தடவித்தான் கண்டுபிடிக்க வேண்டும். ஏனென்றால் எங்கே வேண்டுமானாலும் இதை ஒளித்து வைத்துக் கொள்ளலாம் அல்லவா?

## ஆடையில் உடன்பாடு



உடையிலே உடன் ↘ பாட்டுக் காட்சி. பாலஸ்தீன, இஸ்ரேலிய தலைவர்கள் கைகுலுக்க, மத்தியில் நிற்பவர் கிளின்ரன். உலக அழகிப் போட்டியின் ஒரு கட்டமாக சிறந்த உடையலங்காரப் போட்டி நடந்தது. அப்போதுதான் இந்த உடன்பாட்டுக் காட்சியுடன் கூடிய ஆடையுடன் தோன்றினார் இஸ்ரேலிய அழகி ஹகிட் ராஸ்.

அமெரிக்க நரியார் செய்து வைத்த உடன்பாடு உடையும் கட்டத்தில் உள்ளது. சுதந்திர பாலஸ்தீனத்தை பிரகடனம் செய்வோம் என்று கூறியுள்ளார் அரபாத். இஸ்ரேல் மட்டுமல்ல, எந்த அடக்குமுறையாளரும் தாமாக விட்டுக் கொடார். போராடும் சக்திகளின் பலம்தான் அவர்களை இறங்கிவரச் செய்யும்.

## படகு வீடு



← படகுவீடு அழகாகத் தெரிகிறதல்லவா. தரையில் இருக்கும் வீடல்ல இது. கடலில் மிதக்கும் வீடு.


இந்தியாவில் கேரள மாநிலத்தில் கடலின் சழிமுகப் பகுதிகளில் தேங்கியிருக்கும் நீரில் இந்த படகு வீடுகள் உள்ளன. சுற்றுப் பயணிகளை கண்டியிழுக்கின்றன.

இந்த படகு வீடுகளுக்குள் உணவு விடுதிகள் உள்ளன. இயற்கை எழிலை இரசித்தபடி ஜோடி ஜோடியாக அமர்ந்து உணவு அருந்துவது புதுமையான, இனிமையான அனுபவம்.

சுடச்சுட மீன் கிடைக்கும். ஓடர் செய்ததும் உடனே கடலில் தூண்டிலை வீசிப் பிடித்து சுடச்சுட தயாராக்கி விடுவார்கள்.

மரங்களாலும் கயிறுகளாலும் இந்த படகுவீடுகள் உருவாக்கப்பட்டுள்ளன. நீளம் 74 அடி. அகலம் 25 அடி. உயரம் 5 அடி. 'கெட்டுவலம்' என்று மலையாளத்தில் அழைக்கிறார்கள்.

## வான் வலம்



→ எத்தனை விமானங்கள் என்று சட்டுப் புட்டென்று எண்ணிப் பாருங்கள். எண்ணியாகிவிட்டதா? ஹய்யா... ஏமாந்து போனீர்கள்.

இதில் ஒன்றுகூட விமானம் கிடையாது. அத்தனையும் பறவைகள். பிளமிங்கோ பறவைகளே இவை. கழுத்து நீண்டிருப்பதால் விமானம் போல தெரிகின்றன. இடம்பெயரும்போது கூட்டமாக பறந்து செல்லும். பறக்கும்போது தலை, உடல், கால்கள் மூன்றும் இணையாக இருப்பதால் அசல் விமானங்கள் போலவே தெரியும்.

## வைத்த குறி தப்பாது



↘ கடுதாசி விளையாட்டுக்காகப் பயன்படும் அட்டைகளில் ஒன்றை மேலே சுண்டி வீசினால் அது மேலே எழுந்து காற்றில் அசைந்தாடிக் கீழே வந்து விழும். இதுவும் ஒரே நொடியில் நிகழ்ந்துவிடும்.

இந்த ஒரே நொடி அவகாசத்தில் சுமார் 25 மீட்டர் தொலைவில் நின்றபடி, ஒரு இளம் பெண் தனது துப்பாக்கியால் சுட்டு அந்த அட்டையைச் சின்னாபின்னமாக்கி விடுவார்.

ஒருவருடைய வாயில் உள்ள சிகரெட்டையோ அல்லது கை விரல்களில் பிடித்திருக்கும் ஒரு நாணயத்தையோ குறிபார்த்துச் சுட்டு விடுவார். சிகரெட்டைப் பிடித்திருக்கும் வாய்க்கோ அல்லது நாணயத்தைப் பற்றியிருக்கும் விரல்களுக்கோ எள்ளளவு தாக்கமும் ஏற்படுவதில்லை.

இத்தகைய சாகச செயல்களைப் புரிந்து சாதனைபடைத்தவர் இன்றல்ல- இற்றைக்கு 72 ஆண்டுகளுக்கு முன்னர் தனது 66வது வயதில் காலமாகி விட்டார். அமெரிக்காவின் ஒஹையோ மாநிலத்தில் டார்கோ கவுண்டியில் வாழ்ந்த அன்னி ஒக்லே என்ற பெண்தான் இச்சாதனையாளர். இவர் தனது 8வது வயதில் குறி தவறாமல் சுடும் பயிற்சியைத் தானாகவே கற்றுக்கொண்டார்.

இவருடைய 16வது வயதில் சின்சினாட்டி என்ற இடத்தில் முகாமிட்டிருந்தபோது அங்கு பிரசித்தி பெற்ற குறி தவறாது சுடும் வீரரெனக் கருதப்பட்ட ஃபிராக் பட்லர் என்பவர் தன்னை வெல்லுமாறு சவால் விட்டார். அன்னி வென்றார். பட்லர் அன்னியின் சுடுவீச்சின் முன் மட்டுமல்ல விழி வீச்சின் முன்னும் வீழ்ந்துபோனார். அதாகப்பட்டது காதலரானார்.

குறி தவறாது சுடும் வீரர்கள், வீராங்கனைகள் பட்டியலில் சாதனையாளராக பொறிக்கப்பட்டுள்ளது 'அன்னி'யின் பெயர்.

## மரபுப் போர் காட்சி

↓ இப் புகைப்படம் ஒலுமடுவில் 20.04.98 அன்று நடைபெற்ற பாரிய சண்டையின்போது புலிகளால் எடுக்கப்பட்டது.

டாங்கிகள், துருப்புக்காவி கவச வாகனங்களுடன் படையினர் முன்னேறினர். புலிகளின் காப்பரணை மிக மிக நெருங்கிய டாங்கி ஒன்று, காப்பரணில் இருந்து புலிகளால் தாக்கப்பட்டு செயல் இழந்து நிற்கும் காட்சியே இதுவாகும்.



## தகவல் பெட்டி

மிக எட்டத்தில் நின்று மோட்டார் ஷெல்களை ஏவி படை முன்னேற்றத்தை தடுக்க முடியாது. நெருங்கித் தாக்கியும், ஆர்.பி.ஜி. மற்றும் லோ போன்ற ஆயுதங்களால் டாங்கிகளைத் தாக்கியுமே சண்டை நடந்தது என்று 'எக்ஸ்ரே ரிப்போர்ட்'டில் கூறியிருந்தோம்.

படத்தில் பாருங்கள், நிலக்கீழ் காப்பரணில் புலிகள் நிற்கிறார்கள். மிக அருகில் நின்று டாங்கியைத் தாக்கியுள்ளனர். மரபுப் போர் முறையில் இரு தரப்பும் மோதின.

தரையோடு தரையாக நகரக் கூடிய வகையில் பதுங்கு குழிகளையும், காப்பரண்களையும் புலிகள் அமைத்திருப்பதையும் படத்தில் காணலாம். ஷெல் வீச்சுக்கள், விமானத்தாக்குதல்களால் பல மரங்கள் முறிந்திருக்கின்றன. இலங்கை வரலாற்றில் முதலாவது மிகப் பாரிய மரபுச் சமராக மாறியுள்ளது 'ஜயசிக்குறுய்' சமர்.



படிப்பகம்

www.padippakam.com

திரையுலக மறுபக்கம் 56

# வாரிசு நடிகரின் வேட்டை
## நாடகத்தில் நடித்த தெய்வநாயகி

எம்.ஜி.ஆர்., சிவாஜி கணேசன், ஜெமினி கணேசன் ஆகியோருடன் இணைந்து நடித்து பிரபலமான மூன்றெழுத்து நடிகை அவர். அவரது வாரிசாக திரையுலகுக்கு வந்தார் மகள். அவருக்கும் மூன்று எழுத்தில் பெயர் வைக்கப்பட்டது.

தாயார்தான் மகளுக்கு ஆலோசனைகள் சொல்லி ஊக்குவித்தார். எம்.ஜி.ஆர்., என்.டி.ஆர். இருவருமே அப்போது முதலமைச்சர்களாக இருந்தனர்.

இருவருடனும் தாய்க்குலத்திற்கு பரிச்சயம். அதிலும் என்.டி.ராமராவுடன் சற்றுக் கூடுதலான நெருக்கம் நடிக்கும் காலத்தில் இருந்தது.

அந்தப் பரிச்சயத்தை பயன்படுத்தி தன் மகளுக்கு சிபாரிசு செய்ய அவர்களை நாடினார். எம்.ஜி.ஆர். உதவினார். என்.டி.ஆர். பார்க்கலாம் என்றாரே தவிர பெரிதாக உதவவில்லை.

எப்படியோ மகளுக்கு தமிழ்ப் படங்களில் கதாநாயகி அந்தஸ்து பெற்றுக் கொடுத்துவிட்டார் தாய்க்குலம்.

சில படங்கள் தோல்வி கண்டதால் மகளுக்கு வாய்ப்புக்கள் குறைந்து கொண்டிருந்தன.

### வாரிசு நடிகர்

வாரிசு நடிகர் ஒருவரை நாடினார் தாய்க்குலம். நடிகருக்கோ தளதளவென்று இருக்கும் பெண்கள் என்றால்தான் பிடிக்கும் என்பது பிரபலமான சங்கதி.

மூன்றெழுத்து நடிகையோ கொடிபோன்றவர். அதனால் நடிகரின் ஆதரவு கிடைக்குமோ கிடைக்காதோ என்ற சந்தேகத்தில்தான் சென்றார் தாய்க்குலம்.

நடிகரோ ஏகப்பட்ட மரியாதை கொடுத்து தாய்க்குலத்தை வரவேற்றதுடன் மகளை தன்னிடம் அனுப்பிவைக்கும்படியும், மாலையில் புதிய படம் ஒன்றுக்கான கதை விவாதம் இருப்பதால், இயக்குநரிடம் அறிமுகம் செய்து வைப்பதாகவும் கூறினார்.

'நீங்கள் வரவேண்டாம், மகளை மட்டும் அனுப்பினால் போதும்' என்று நடிகர் அழுத்திக்கூறியபோதே, தாய்க்குலத்திற்கு விஷயம் புரிந்துவிட்டது.

அன்று மாலையே மகளை தனியாக அனுப்பி வைத்தார். நடிகர் லேசான போதையில் இருந்தார். நடிகையையும் மது அருந்துமாறு கட்டாயப்படுத்தினார். நடிகையும் அருந்தினார்.

போதை ஏறிய நிலையில் தள்ளாடிய நடிகையின் கண்களில் நடிகர் மட்டுமல்லாமல், இன்னொருவரும் தெரிந்தார். இருவரும் தன்னை நெருங்குவதை உணர்ந்த நடிகை, அவர்களிடம் இருந்து தப்ப வேண்டும் என்று நினைத்தாரே தவிர, ஒரு அடி கூட எடுத்துவைக்க முடியவில்லை. அத்தனை போதை.

நடிகருடன் கூட இருந்தவர்தான் இயக்குநர். நடிகரின் வெற்றிப் படங்கள் சிலவற்றை இயக்கி, நடிகருடன் நகமும் சதையுமானவர்.

இருவருமே ஒன்றாகத்தான் நடிகைகளை இரசிப்பது வழக்கம். அன்றும் நடிகையை இரசித்து முடித்தனர். மறுநாள் காலையில், போதை தெளிந்தபோது நடிகைக்கு முதல் நாள் இரவு நடந்த சம்பவங்கள் கனவு போலத் தெரிந்தன. நடிகர் மட்டும்தான் அப்போது அறையில் இருந்தார். இயக்குநர் நள்ளிரவே சென்றுவிட்டார்.

உடைகளை சரிப்படுத்திக்கொண்ட நடிகை "நேற்றிரவு உங்களுடன் கூட இருந்தாரே அவர் யார்?" என்று கேட்டார். "என்ன உளறுகிறாய் கனவு கினவு கண்டாயா?" என்று கேட்டார் நடிகர். நடிகைக்கே குழப்பமாகிவிட்டது.

ஆனால், அதே இயக்குநர் படத்தில் வாரிசு நடிகருடன் நடித்தபோது நடிகைக்கு உண்மை புரிந்துவிட்டது. பின்னர் ஒரு நாள் நடிகையிடம் வாரிசு நடிகருக்கு தெரியாமல் தனியாக வந்து போன இயக்குநர் அந்த இரகசியத்தை உடைத்துவிட்டார்.

### பேரை மாத்து

பழநிமலை அடிவாரத்தில் ஓர் குடும்பம். பூர்வீகம் கேரளத்து திருச்சூர். பக்தர்களுக்கு வழி காட்டியாக வேலை பார்த்து வந்தார் தந்தை. அதுதான் வருமானம்.

தெய்வநாயகிக்கு பத்து அல்லது பதினொரு வயது தாவணிபோட ஆரம்பித்தார்கள். 'மக்தா சீன் கொம்பனி' என்ற பெயரில் ஒரு நாடகக் குழு நாடகங்களை நடத்தி வந்தது. அதில் சின்னசின்ன வேஷங்களில் தெய்வநாயகி நடித்துவந்தார்.

பழநிக்கு நாடகம் நடத்தச் சென்ற கே.ஏ. தங்கவேலுவிடம் தன்மகளுக்கு சந்தர்ப்பம் தருமாறு கேட்டார் அப்பா. "சென்னைக்கு வந்து, என்னைப் பாருங்க" என்றார் தங்கவேலு.

1961ம் ஆண்டின் கடைசியில் தெய்வநாயகி குடும்பம் சென்னைக்கு வந்தது. விடுதலை இராமசாமியின் நாடகக் குழுவில் தெய்வநாயகி சேர்ந்தார். 16 வயது. அவரைநம்பி ஒரு பெரிய குடும்பம்.

நாடகம் மட்டும் நடித்தால் வருமானம் போதுமா? படக் கம்பனிகளுக்கு ஏறி இறங்கினார். மகளே உன் சமர்த்து படத்தில் தோழி வேஷம் கிடைத்தது.

படப்பிடிப்பு தளத்தில் எம்.ஆர்.ராதா கேட்டார். "உன் பேரு என்ன?" "தெய்வநாயகி." தெய்வநாயகியா? நோ...நோ! இதெல்லாம் ஓல்ட் மொடல். சினிமாவுக்கு எடுபடாது. விஜயா, கிஜயா இப்படி ஏதாவது வச்சுக்கோ" என்றார் ராதா.

ராதா சொன்னதை அப்பாவிடம் சொன்னார் தெய்வநாயகி. விஜயா என்று பெயர் மாறியது.

கே.ஆர்.விஜயாவை இயக்குநர் கே.எஸ். கோபால கிருஷ்ணனிடம் அறிமுகம் செய்து வைத்தார் துணை நடிகர் ஏஜண்ட் அச்சுதன். 'கற்பகம்' படத்தில் கதாநாயகி வேடம் கிடைத்தது.

# இன்ப அதிர்ச்சி
## மீனாவின் பிரிய ...

வித்தியாசமான இரசிகர் ஒருவர் பற்றி கேளுங்கள்:

"மைசூரில் எனக்கு ஒரு இரசிகர் ... கடிதம் போடுவார். என் படங்ளைப் பற்... எழுதுவார். நான் நடித்த படத்தை மட்டும் ... என்னை மாதிரி ஒரு பொண்ணைத்தான் ... வேன் என்று சொல்லுவார்.

சமீபத்தில் ஒருநாள் திடீரென்று ... கூடவே ஒரு பொண்ணையும் அழைத்து...

அந்தப் பொண்ணைத்தான் க... போறதாகச் சொன்னார். அவ ரொம்... "உன் பேரு என்னம்மா?" என்று கே... இருந்தா. நான் மறுபடியும் கேட்ட... வாய்பேச வராது" என்றார் இரசிகர்.

"உங்கள் பொற்காலம் படம் பார்... தான் ஒரு ஊனமுள்ள பொண்ணை... ணம் பண்ண நினைத்தேன். அடுத்த... கல்யாணம்." என்றார். நான் கலங்... டேன். என் கழுத்தில் இருந்த செயினை எடுத்து அந்தப் பொண்ணு கழுத்திலே போட்டேன். அன்னிக்கு முழுக்க என் மனசு ரொம்ப சந்தோசமாக இருந்தது" என்று கூறியிருக்கிறார் மீனா.





கார்த்திக்-சுவா...
படம்: சுந்தரபாண்...

### அல்வா கொடுக்கிறான்

பல படங்களில் சொந்தக் குரலில் பாடியிருக்கிறார் வடிவேலு. தற்போது 'மனைவிக்கு மரியாதை' படத்திலும் ஒரு பாடலைப் பாடியிருக்கிறார்.

"அல்வா கொடுக்கிறான், அடடா அல்வா கொடுக்கிறான். திண்டுக்கல்லுக்கே பூட்டுக் கொடுத்து, திருப்பதிக்கே லட்டு கொடுத்து, திருநெல்வேலிக்கே அல்வா கொடுக்கிறான், திருவாரூருக்கே தேரு கொடுத்து, தஞ்சாவூருக்கே தட்டுக் கொடுத்து, திருப்பூருக்கே பனியன் மாட்டப் பார்க்கிறான்.

சேலத்துக்கு மாம்பழம் கொடுத்து, சிவகாசிக்கு வெடியைக் கொடுத்து, பண்ருட்டிக்கே பலா கொடுத்து, பாண்டிச்சேரிக்கே தண்ணிக்காட்டப் பார்க்கிறான்..." என்று போகிறது பாடல். இசை: சிற்பி. பாடல்: பழனிபாரதி.

பாண்டியராஜன், குஷ்பு ஜோடியாக நடிக்கும் படம் இது.

### காக்கைச் சிறகினிலே

பார்த்திபன் நடிக்க பி.வாசு இயக்கும் படத்துக்கு 'காக்கைச் சிறகினிலே' என்று பெயர் சூட்டியுள்ளனர்.

பார்த்திபனுக்கு ஜோடி ப்ரீதி விஜயகுமார். இன்னொரு கதாநாயகி புதுமுகம். விசு, எஸ்.எஸ். சந்திரன், கசன் கான், கமித்ரா ஆகியோரும் நடிக்கின்றனர். இசை: இளையராஜா. பாடல்: ஆர்.வி. உதயகுமார்.

### 'கவர்மெண்ட்'

நெப்போலியன் கதாநாயகனாக நடிக்க மூன்று மொழிகளில் தயாராகும் படம் 'கவர்மெண்ட்' உயரமான நெப்போலியனுக்கு உயரமான ஜோடி ரஞ்சிதா. வித்தியாசமான வேடத்தில் ரகுவரன் நடிக்கிறார். நிழல்கள் ரவி, சாருலதா, வினோத்குமார் ஆகியோர் நடிக்கின்றனர்.

இயக்கம், கன்னடப்பட இயக்குநரான ஓம் பிரகாஷ். இசை குணசிங்.

### சுவாதி விருந்து

'அண்ணன்' படத்தில் படு கவர்ச்சி காட்டியுள்ளாராம் சுவாதி. ராமராஜனுக்கு முதுகு தேய்த்து மசாஜ் செய்யும் காட்சியில் தனது செழிப்பான பிரதேசங்களை காண்பித்து கவர்ச்சிக் கொடி நாட்டியிருக்கிறாராம்.

கார்த்திக்கின் ஜோடியாக நடித்துள்ள சுந்தர பாண்டியன் படத்திலும் கவர்ச்சி விருந்து படைத்திருக்கிறாராம். போதாக்குறைக்கு கார்த்திக்குக்கு சிறப்பு விருந்து வழங்குகிறார். என்றும் கிசுகிசுக்கள் வெளியாகியுள்ளன.

கீர்த்திரெட்டி
படம்: இனியவளே

### சினிமா விமர்சனம் ஷங்...

படம்: ஜீன்ஸ்

### நெஞ்சம் உருகாதா?

"ராதா, ராதா, அனுராதா, நெஞ்சம் கொஞ்சம் உருகாதா..." என்று தொடங்கும் பாடல் காட்சி 'சந்திப்போமா' படத்திற்காக படமாக்கப்பட்டது.

சூர்யா, ப்ரீதா விஜயகுமார் இருவரும் சேர்ந்து ஆடிப்பாடினார்கள். படத்தில் சூர்யாவின் பெயர் விஷ்வா. ப்ரீதாவின் பெயர் நிலானி.

மணிவண்ணன், சரத்பாபு, ஆனந்தராஜ், பிரகாஷ் ராஜ், அம்பிகா, ராதிகா ஆகியோரும் நடிக்கின்றனர்.

இசை: தேவா. பாடல்கள்: வைரமுத்து, பழநிபாரதி, காளிதாசன்.

### ஒரே காட்சிகள்

'நாம் இருவர் நமக்கு இருவர்', 'உதவிக்கு வரலாமா', 'காதலா காதலா', 'ஜீன்ஸ்' நான்கு படங்களும் ஒரே கால கட்டத்தில் வெளியாகியதால், மேற்படி பட இயக்குநர்கள் இரசிகர்களிடம் வசமாக மாட்டிக் கொண்டனர்.

'ரூமச்' ஆங்கிலப் படத்தை தழுவியே நான்கு படங்களின் கதைகளும் உருவாகின. ஆள்மாறாட்டம்தான் கதைக் கரு. அதிலும் சில காட்சிகள் நான்கு படங்களிலும் ஒரே மாதிரியாக வந்துள்ளன.

'நாம் இருவர் நமக்கு இருவர்' படத்தில் பிரபுதேவா தோற்றத்தை மாற்றிமாற்றி குழப்புவார். அதுபோல உதவிக்கு வரலாமாவில் கார்த்திக்கும், ஜீன்ஸில் ஐஸ்வர்யாவும் குழப்புகிறார்கள்.

'எனது மனதில் ஒரு பொறி எழும். அதனை வைத்துத்தான் கதை பண்ணுவேன்' என்று ஷங்கர் இந்திய தொலைக்காட்சிக்கு பேட்டி கொடுத்திருந்தார். ஹொலிவுட் படங்களை பார்க்கும் போதுதான் பொறி கிளம்புகிறதாக்கும்.

### கவிதை ராஜா

இசை ராஜாவான இளையராஜா கவிதை எழுதியிருக்கிறார். ஆன்மீகம் தொடர்பாக அவர் எழுதிய கவிதைகள் ஒரு தொகுப்பாக வெளிவரவுள்ளன. கலைஞர் கருணாநிதி அணிந்துரை எழுத மலேசியத் தமிழர்கள் வெளியிட உள்ளனராம்.

### மகேஸ்வரி தயார்

சிம்ரானின் அசுர வளர்ச்சியுடன் மல்லுக்கட்ட தொடை தட்டி புறப்பட்டுள்ளார் மகேஸ்வரி. அதன் முதற்கட்டமாக சிம்ரானின் மனேஜரான முனுசாமியை வளைத்துப் போட்டிருக்கிறார். வளைத்துப் போடுவதில் அனுபவம் உள்ள மகேஸ்வரி அடுத்து குறிவைத்திருப்பது சிம்ரானின் மீது பிரியமுள்ள இளம் ஹீரோக்கள் மீது.



நாகார்ஜுன்-கஸ்தூரி-ரம்யா கிருஷ்ணன்
படம்: அன்னமாச்சார்யா

### ...கும்...கும்... கும்மாளம்

"சும்மா வெட்கப்படாமல் கட்டிப்பிடி, நீ பிடிக்கிற பிடியிலே சார் மூச்சுத்திணறனும்" என்று காட்சி விளக்கம் கொடுத்தார் இயக்குநர் ராஜ்கபூர்.

"மீன் குஞ்சுக்கு நீந்தக் கற்றுக் கொடுக்கணுமா சார்" என்று தமாஷ் பண்... சத்யராஜ்.

மீன் குஞ்சுதான் என்பதை கமரா... தொடங்கியதும் நிரூபித்தார் மந்த்ரா.

குலுங்க குலுங்க ஓடிவந்து சத்யராஜை தழுவியபடி 'கும்மாளம்... இது கும்மாளம்...' பாட்டுக்கு ஆடினார் மந்த்ரா.

காட்சி முடிந்ததும் சத்யராஜ் "கும் கு..." என்று ஜோக்கடிக்க இயக்குநர் உட்பட அ... ...க்க, மந்த்ரா வெட்கத்தில் குலுங்கினார்.

கல்யாண கலாட்டா படத்திற்காக 'கும்மாள...' தொடங்கும் பாடல் காட்சி சமீபத்தில் படமாகி... மந்த்ரா கவர்ச்சியில் தூள்கிளப்புகிறா...

முகப்பில் | கார்த்திக்: படம்: அரிச்சந்திரா | ஐஸ்வர்யா ராய்–பிரசாந்த்: படம்: ஜீன்ஸ் | சூர்யா-ராதிகா படம்: காதலே நிம்மதி

த்தார்
ரசிகர்

ா சொல்வதைக்
ி. வாராவாரம்
க்கம் பக்கமாக
ா பார்ப்பாராம்.
பாணம் பண்ணு
 வந்துவிட்டார்.
ாண்டு வந்தார்.
ணம் பண்ணப்
ழகா இருந்தா.
ன். அவ பேசாம
ர. "அவளுக்கு
பின்னர்
கல்யா
ரம்

## காத்திருக்கும் நாயகிகள்

கார்த்திக் என்றாலே சில நடிகைகள் ஒட்டம் பிடிக்கிறார்கள். 'அந்தாளுடன் சேர்ந்து நடித்தாலே வம்பு' என்கிறார்கள்.

'மற்ற நடிகர்களும் ஒன்றும் யோக்கியர்கள் கிடையாது. ஆனால் கார்த்திக்குடன் நடித்தால் தான் கிசுகிசுக்கள் வருகின்றன. சினிமாப் பத்திரிகையாளர்களும் கூர்ந்து கவனிக்கிறார்கள். அதுதான் வம்பு' என்று விளக்கம் கொடுத்தாராம் ஒரு ஐந்தெழுத்து நடிகை.

"என்னுடன் நடிப்பதற்காக எத்தனையோ நடிகைகள் காத்திருக்கிறார்கள். ஈடுகொடுக்க முடியாத நடிகைகள் சிலர் உளறுவதற்கெல்லாம் நான் என்ன செய்வது?" என்று கேட்கிறார் கார்த்திக்.

சமீபத்திய சில படங்கள் தோல்வி காண்பதால் சற்று வருத்தத்தில் இருக்கிறார் கார்த்திக். 'உள்ளத்தை அள்ளித் தா' போன்ற படங்கள் மூலம் மறுபடி நிமிர்ந்த மார்க்கெட், சமீபத்திய சில படங்களின் தோல்வியால் சிறிது தளர்ந் துள்ளது.

'உதவிக்குவரலாமா' படத்தில் நகைச்சுவை இருந்தும் படம் பெரியளவுக்கு ஓடவில்லை.

## ஹொலிவூட்டில் கமல்

மருதநாயகத்தில் நடிக்கவைக்க வெள்ளைக்கார நட்சத்திரங்களை வலைபோட்டு தேடுகிறார் கமல். அதற்காக இலண்டன் போயிருந்தார். பின்னர் அப்படியே ஹொலிவூட் சென்றிருக்கிறார்.

பாடசாலை விடுமுறை என்பதால், பிள்ளைகளையும் அழைத்துக் கொண்டு கமலின் மனைவி சரிகாவும் ஹொலிவூட்டுக்குச் சென்றுவிட்டார்.

'காதலா காதலா' கலகலப்பாக ஓடிக்கொண்டிருப்பதால் கமலுக்கு மகா சந்தோசம். ஜாலி சுற்றுலா போய் விட்டார்.

## வார விருந்து

அப்பா விஜயகுமாரும் அம்மா மஞ்சுளாவும் மகள் ப்ரீதிக்காக வாய்ப்புத் தேடும் வேட்டையில் மும்முரமாக உள்ளனர்.

முன்னர் ஞாயிறு தோறும் வீட்டில் விருந்து வைப்பார்கள். இந்த விருந்தில் பலதும் பத்தும் பரிமாறப்படும். பலதும் நடந்தேறும். நம்பகமானவர்களுக்கு மட்டுமே அழைப்பு உண்டு.

ப்ரீதி நடிக்க வந்தபின்னர் வாரத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட நாட்கள் விருந்து அமர்க்களமாக நடக்கிறதாம்!




## மினி சினி

★ பிரபு-தேவயாணி நடிக்கும் 'என் உயிர் நீதானே' படம் 'பெல்லி சேஸ் கொந்தாம்' என்ற தெலுங்குப் படத்தின் தமிழ்ப் பதிப்பு என்பது தெரியும். தமிழில் பிரபு-தேவயாணி நடிக்கும் வேடங்களில் தெலுங்கில் வெங்கடேஷ்-சௌந்தர்யா நடித்தார்கள்.

★ ஜெய்சங்கர் கதாநாயகனாக நடித்த முதல் படம் 'இரவும் பகலும்'. இப்போது இதே பெயரில் புதியபடமொன்று தயாராகி வருகிறது. ஜி. கிருஷ்ணகுமார் என்பவர் இயக்கும் இப்படத்தில் முற்றிலும் புதுமுகங்கள் நடிக்கிறார்கள்.

★ 'காதலுக்கு மரியாதை' வெற்றிப்படத்தைத் தயாரித்த சங்கிலி முருகன், அடுத்துத் தயாரிக்கும் படத்தில் அஜித்குமார் கதாநாயகனாக நடிக்கிறார். இப்படத்தை 'பூச்சுடவா' பட இயக்குநர் உதயசங்கர் இயக்குகிறார்.

★ 'கபடி கபடி' படத்தை இயக்கி நடித்து வரும் பாண்டியராஜன் அடுத்து 'டபுள்ஸ்' என்ற படத்தை இயக்கி நடிக்கவுள்ளார். 'டில்லிபாபு', 'அட்ரா சக்கை அட்ரா சக்கை' ஆகிய படங்களுக்குப் பிறகு இப்படத்தில் இரட்டைவேடத்தில் இவர் நடிக்கிறார்.

★ மலையாள மொழி மாற்றுப்படமான 'அசுரவம்சம்' வெற்றி பெற்றதைத் தொடர்ந்து இன்னொரு மொழிமாற்றுப்படத்திற்கு 'அசுரயுத்தம்' என்ற பெயர் வைக்கப்பட்டுள்ளது. இப்படத்தில் பானுச்சந்தர்-சுருதி நடித்துள்ளார்கள்.

★ ஆர். வி.உதயகுமார் இயக்கத்தில் 'வெள்ளி நிலவே' படத்தில் கதாநாயகனாக நடிக்கும் ஸ்ரீகாந்திற்கு தமிழில் பின்னணிக் குரல் கொடுப்பவர் யார் தெரியுமா? டாக்டர் ராஜசேகரின் தம்பியும் நடிகருமான செல்வா.

★ ஆர்.கே செல்வமணி இயக்கத்தில் சரத்குமார் கதாநாயகனாக நடிக்க இருந்த 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' என்ற படத்திட்டம் தற்போது கைவிடப்பட்டு விட்டது.

★ அரவிந்தசாமி-கௌதமி-ரஞ்சிதா நடித்துள்ள 'சாசனம்' படத்தை 22 நாட்களில் 34 இலட்சம் ரூபா செலவில் எடுத்து முடித்துள்ளார் இப்படத்தின் இயக்குநர் மகேந்திரன்.

★ சுஹாசினி தமிழில் நடிக்காவிட்டாலும் புதிய கன்னடப் படங்களில் நடித்து வருகிறார். தற்போது இவர் ஒளிப்பதிவாளர் தினேஷ்பாபு இயக்கும் 'ஹென்திரி கெல்தினி' என்ற படத்தில் கதாநாயகியாக நடித்து வருகிறார்.

★ விஜய்-கௌசல்யா நடிக்கும் 'ப்ரியமுடன்' படத்தின் இயக்க மேற்பார்வையாளராகப் பணிபுரியும் எஸ்.ஏ. சந்திரசேகரன் இப்படத்தில் 'நைன்டீன் செவன்டி ரூ' என்ற நகைச்சுவை வேடத்தில் நடித்தும் வருகிறார்.

யன்

## ...ரைக் காணவில்லை

...ந்த், ஐஸ்வர்யா ராய், நாசர்+நாசர், செந்தில், எஸ்.வி.சேகர், ராதிகா.

...குமான்.
...ரமுத்து.
...சாக்குமார்.

...பிரமாதமான எதிர்பார்ப்பை உருவாக்கி, ...மாதமான ஏமாற்றத்தை கொடுத்துள்ள

...ட்ல்மேன், காதலன், இந்தியன் போன்ற ...பளிச்சிட்ட ஷங்கரை ஜீன்ஸில் காண ... கம்பியூட்டர் கிராபிக்ஸ் சாகசங்களும், ...ன செலவு செய்து எடுக்கப்பட்ட சில ...ம்தான் ஜீன்ஸை காப்பாற்றுகின்றன. ...ிரசாந்த்தும் கட்டித் தழுவும் காட்சிகள், ...ஐஸ்வர்யா ஆடும் காட்சிகள் என்று ...கிராபிக்ஸ் வெளுத்து வாங்கியிருக்கிறது. ...லக அதிசயங்களையும் ஒரே பாடலுக்குள் ...ும் அவசரத்தில் அவற்றின் முழு அழகை ...பிக்க முடியாமல் கமரா திணறியிருக்

...யா ராய் கவர்ச்சி+நடிப்பு இரண்டிலும் ...றோர். பிரசாந்த்தும் ஆடிப்பாடி நடித்தி... ஆனாலும் நாசர் போல் முகபாவத்தால் ...வேடத்தையும் வித்தியாசப்படுத்தி காட்ட ...ல் முடியவில்லை.

... பாட்டியாக வந்து தூள்கிளப்புகிறார். ...ல் கோல்ட். படத்தின் அச்சாணியே ...ர்.

...களில், 'அன்பே அன்பே', 'கண்ணோடு ...ல்லாம்' இரண்டும் சூப்பர் ரகம்.

... பணமதிப்பில் சுமார் 20 கோடி ரூபாய் ...யாரான படம். விளம்பரம், எதிர்பார்ப்புக் ...க படுதோல்வியில் இருந்து தப்பினாலும், இந்தியன், ஜெண்டில்மேன் அளவுக்கு ...வதில்லை. போட்ட முதல் திரும்பாது.




பிரசாந்த்-ஐஸ்வர்யா ராய்
படம்: ஜீன்ஸ்

...னார்
...ஒடத்
...றுகத்
என்ற
தான்
...வரும்
என்று

## பறக்கும் படையும் தடுக்க முடியவில்லை

'ஜீன்ஸ்' பட திருட்டு வீடியோக்களை தடுக்க கராத்தே வீரர் ஹுசைனி தலைமையில் பறக்கும் படை ஒன்றை அமைத்தார் இயக்குநர் ஷங்கர்.

ஒரு புண்ணியமும் இல்லை. உலகெங்கும் ஜீன்ஸ் பட வீடியோக் கொப்பிகள் வெளியாகிவிட்டன. நம்நாட்டிலும் மினி சினிமாக்களில் 'ஜீன்ஸ்' போட்டிருக்கிறார்கள்.

## காதோடு சொல்லுகிறோம்

கீர்த்தியுள்ள நடிகையை சரியாகப் புரிந்து கொண்டவர் இளைய திலகம் மட்டும்தானாம். படப்பிடிப்பின்போது நெருக்கம் இல்லாததுபோல முகத்தை வைத்திருப்பார்களாம். படப்பிடிப்பு முடிந்ததும் நடிகை தங்கியிருக்கும் விடுதிக்கு போய்விடுவாராம் திலகம்.

'சர' நடிகரும் 'மா' நடிகையும் காய் விட்டுப் பிரிந்துவிட்டார்கள். 'மா' நடிகை பேட்டி கொடுத்து ஊருக்கும் தகவல் சொல்லியிருந்தார். இதெல்லாம் வெளியாரை ஏமாற்றத்தானோ? என்று சந்தேகம் வருகிறது. சமீபத்தில் நட்சத்திர தம்பதி கொடுத்த விருந்தில் இரண்டுபேரும் கலந்து கொண்டனராம். உச்சக்கட்டத்தில் இரண்டுபேரும் 'தண்ணீர்' குடித்துவிட்டு போட்ட கும்மாளம் கொஞ்ச நஞ்சமில்லையாம். தமிழக பிரபல வார இதழ் ஒன்று இத் தகவலை வெளியிட்டுள்ளது.

## நிழலும் நிஜமும்

'காதலா காதலா' படத்தில் ஒரு காட்சி. பிரபு தேவாவுக்கு திக்குவாய். அவருக்கும் ரம்பாவுக்கும் பதிவுத் திருமணம். அவரது பெயரைக் கேட்பார் ரெஜிஸ்தார். பிரபுதேவா திக்குவார். ஒங்கி ஒரு அறைவிடுவார் ரெஜிஸ்தார். தன்னைத் தான் பிரபுதேவா கேலி செய்வதாக நினைத்து அறைந்துவிட்டார். ஏனென்றால் ரெஜிஸ்தாரும் திக்குவாய்க்காரர்.

இக்காட்சியில் திக்குவாய்க்காரராக நடித்தவர் மதன்பாப். உண்மையாகவே அவருக்கு திக்குவாய். பலரும் கிண்டல் செய்ததால், 'யோகா', 'தியானம்' போன்ற பல சுயபயிற்சிகள் மூலம் திக்குவாய் பிரச்சனையை சரிசெய்துவிட்டாராம். இப்போது பிஸியான நடிகர். பாடகராகவும் இருக்கிறார்.

"பெரிய நடிகர்களின் இடத்தை எட்டிப்பிடித்து விட்டார் மைந்தன். இனித்தான் சர்வ ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். கவிழ்த்துவிடுவார்கள் சிறுக்கிகள்" என்கிறார் இயக்குநரான தந்தைக் குலம். மகன் யார் தெரியும்தானே. மூன்றெழுத்து நாயகன்.

## தாலி செண்டிமெண்ட்

'ஜீன்ஸ்' படத்தின் கம்பியூட்டர் கிராபிக்ஸ் மத்தியிலும் தாலி செண்டிமெண்ட்டை விட்டுவைக்கவில்லை. ராதிகா அடிக்கடி தாலியைக் காட்டி நாசரை பயமுறுத்துகிறார். படம் பார்ப்பவர்களை வெறுப்பூட்டுகிறார்.

"தாலி இல்லாத படம் எப்போது எடுக்கப்போகிறார்கள்? கதையை நம்புவதைவிட தாலிக் கயிற்றை நம்புகிறார்கள்" என்று சத்யராஜ் சொன்னது மெத்தச் சரி.

# பட்டது போதும்

## படாமல் இருப்போம்

பாதையில் போக
முடியாத பரிதாபம்
பாதைகள் எங்கும்
பள்ளமும் குழியும்
பக்கத்தில் பார்த்தால்
படுகாயம் மிஞ்சும்
போதாத குறைக்கு
பரல்களும் உரசும்!
□•□
வந்ததே மின்சாரம்
என்றொரு செய்திக்கு
மிஞ்சிய இருளுக்குள்
நாம்படும்பாடு
சொல்லாமல் வரும்
பேசாமல் போய்விடும்
சுவைத்ததும் சமைத்ததும்
பாதியில் தீ(ய்)ந்திடும்!
□•□
கப்பலில் வந்ததுக்கு
காசு கூடவாம்
சொற்பமென்றால்
சொல்லாமல் போய்விடலாம்!
அப்பாடா அடியோ
மரண அடிதான்
சப்பாத்து சாராயம்
சகலதும் அத்துப்படி!
□•□
ஏப்ரல் ஒன்றுக்கு
எவரும் மிச்சமில்லை
முட்டையும் மையும்
முழுகாத குறைதான்.
பள்ளிக்குச் சென்றோர்
பாதியில் வீடுவந்து
சட்டையை மாற்றி
சரிசெய்த கதை!
□•□
பட்டது போதும்
படாமல் இருப்போம்
சுட்டதும் செத்ததும்
மறப்போமென்றால்,
சுணை கெட்டு
சுத்துமாத்துகள்
சூறாவளித்தனம்!
□•□
சாக்கடை நுளம்புகள்
சாகடித்து முடிக்க...
சாலையில் இறங்கி
கருகிப் போகிறோம்;
இயற்கையும் செயற்கையும்
இணைந்தே கொல்லுது
இனிமேலும் சாவு!
மிஞ்சியிருக்கா?
□•□
'கல்வி'த் தரம்
கருகிப் போகிறது
கல்வி மான்கள்
கவலையிது
கவலைகள் மட்டும்
கரிசனை பெறாது
கருவறை தன்னில்
ஊட்டுதல் நன்று!
□•□
மொத்தத்தில் நாமெல்லாம்
மூழ்கிப் போனோம்!
மூழ்கிய எம்முடலில்
மூச்சும் இல்லை.
வரிசையில் முந்தியவன்
வாய்ப்பைப் பெற
வாய்பார்த்த விசுக்கோத்தாய்
வாய்விட்டழுகிறோம்!

சரா மாஸ்ரர்- யாழ்ப்பாணம்.

# காயத்தின் மருந்து

நாம்–
நேசிப்புக் காலங்களில்
பரிமாறியவைகளில்
எதுவும்–
என்னிடமில்லை.
நான்–
காணாமல் போயிருந்த
காலங்களில்தான்–
அவை இல்லாமல் போனது!

என்றாலும்...
நாம் பேசிக்கொண்ட
வயசுப்பட்ட வார்த்தைகள்–
என் செவிகளில்
இளமையாய்
ஒலித்துக் கொண்டிருக்குதே...!

தனிமை என்பது
எனக்கு இல்லை
கூடவே–
நீ– இருக்கையில்!

என் சிந்தனைகள்
தடம் மாறும்போது
இடையில் புகுந்து
நடைப்படுத்துவதும்
உன் நினைவு தானே..!

காற்றில் கலந்திருக்கும்
உன்–பேச்சுத்தானே
நான்–
ஓய்வெடுத்து உறங்குவதற்கு–
தாலாட்டு..!

இன்னுமொன்று–
என் சோகங்களையும்...
சந்தோசங்களையும்
ஒப்புவிப்பது
நான் வேண்டும்போது
என்னுள் தோன்றும்
உன்னிடம் தானே..!

எதையும் விட்டு
நீயும்..
உன் நினைவும்
என்னுள் இருப்பதே
ஆத்ம திருப்தி கண்மணி..!

ரெட்ணம் சாந்தசீலன்–
பொத்துவில்.

# பேசும் படம்









தமிழ்ப்பட நடிகைகளில் நீண்டகாலம் நடிப்புத் தூணாக நிலைத்து நிற்பவர் லட்சுமி. அன்று இளம் கதாநாயகி. இன்று குணசித்திர நடிகை. சமீபத்தில் வெளியான 'ஜீன்ஸ்' படத்தில் பாட்டியாக வந்து லட்சுமி அடிக்கும் கூத்து இருக்கிறதே, சொல்லி வேலையில்லை.

லட்சுமியின் அம்மா ருக்மணியும் அந்தக் காலத்தில் பெரிய நடிகை. தாயின் மடியில் இருக்கும் பிஞ்சுக் குழந்தை லட்சுமியேதான். தாயைப் போல பிள்ளை, நூலைப்போல சேலை. (படம்-1)

படம்-2, 'ஒரு வயதில் எப்படி இருக்கிறேன் பாருங்களேன்' என்கிறார்.

பதினோரு வயதில் நாட்டிய அரங்கேற்றம். சிவாஜி சென்று வாழ்த்தினார். (படம்-3) அதே சிவாஜி கணேசனுடன் பின்னர் ஜோடி சேர்ந்து 'டூயட்' பாடி நடித்தார் லட்சுமி.

கதாநாயகியாக முதலில் நடித்த படம் 'ஜீவனாம்சம்'. "என்ன இளமையில் அழகாக இருக்கிறேனா?" என்கிறார். எத்தனை இரசிகர்களின் தூக்கத்துக்கு வேட்டு வைத்தாரோ? (படம்-4)

# புதிய கிரியைகள்

ஆயுத பூஜை செய்ய
ஆண்டுக்கொரு
விஜயதசமி தேவையில்லை
சுபமுகூர்த்தம் பார்ப்பதும்
காலதாமதம் என்பதற்காக
நின்ற இடத்திலே
கண்டபடி
துப்பாக்கி பூஜை நடக்கிறது!
••
அர்ச்சகர்களாக
அனைவருக்கும்
வேகப்பயிற்சி
மண்ணுக்கு விடுதலையும்
விண்ணுக்கு ஆக்கிரமிப்பும்
விரைவு விரைவாக!
••
அஸ்வமேத யாகத்துக்கு
இனி அராபியக் குதிரை எதற்காக?
ஆச்சாரியர் ஊதியத்தை
கட்டுப்படுத்த
அமெரிக்காவை
அழைத்தால் போதும்!
••
செங்கம்பள விரிப்பு
சிறிதும் தேவையில்லை
சிறு துவாரத்துள்ளும்
சீ.ஐ.ஏ. புகுந்துவிடும்
வெற்றி நிச்சயமாம்!
••
வெள்ளை மாளிகையின்
மூல விக்கிரகத்துக்கு
தீப ஆராதனை செய்து
வாய் பிளக்க
அரோகரா கோஷமா?
••
அதோ
பிளந்த வாய்க்குள்ளே
அழிந்துகொண்டிருக்கும்
உலகம் தெரிகிறது!

"கல்வியூர்க்கவிராயர்"-கோட்டைக்கல்லாறு

# சிரிப்பு!

இரகசிய
சோகங்களுக்கான
மறைப்புத்திரை...
**
வாழ்தலின்
கட்டாயத்திற்கான
வெளிப்பூச்சு...
**
மரணத்தை–
தற்காலிகமாக
மறந்துபோகிற
மருந்து...!

சௌஜன்யா.

# தேன் கிண்ணம்



# மிதி

மண்ணை மிதித்தோம்
சோறு கிடைத்தது!
0–0
விண்ணை மிதித்தோம்
உலகம் சுருங்கியது!
0–0
நிலவை மிதித்தோம்
விஞ்ஞானம் விரிந்தது.
0–0
காதலை மிதித்தோம்
தோல்வி கிடைத்தது.
0–0
மனிதர்களை மிதித்தோம்
யுத்தம் தொடங்கியது!

எஸ். பிரபா.

# பேனா நண்பர்கள்



பெயர்:
ஜே. யூட் புஸ்பாந்தன்,
வயது: 23
முகவரி:
பிரதான வீதி,
மன்னார்.
பொழுது போக்கு:
வானொலி, பத்திரிகை.



பெயர்:
பி. ஜெயந்தி,
வயது: 18
முகவரி:
கந்தே நுவர,
அல்வத்த அஞ்சல்,
மாத்தளை.
பொழுது போக்கு:
வானொலி, ரீ.வி.



பெயர்:
எம். ரஹ்மத்துல்லா,
வயது: 29
முகவரி:
307, காலி வீதி,
கொழும்பு-04.
பொழுது போக்கு:
ரீ.வி., பேனா நட்பு.



பெயர்:
ஜே. நிஹாத்,
வயது: 19
முகவரி: 42, புனித
அந்தோனியார் வீதி,
திருமலை.
பொழுது போக்கு:
வழமையானவை.

# இந்த வாரம் உங்கள் பலன்

(24.05.1998 தொடக்கம் 30.05.1998 வரை)

சோதிட மாமணி
'தில்லை'

## நவக்கிரக சஞ்சாரம்

இடபம் - சூரியன், புதன், செவ்வாய்.
சிம்மம் - இராகு.
கும்பம் - வியாழன், கேது.
மேடம் - சனி, வெள்ளி.

சந்திரன்– மேடம், இடபம், மிதுனம், கர்க்கடகம்.
ஆகிய இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்.

### மீனம்: சுப நேரம்

(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- வெளியிட வாழ்க்கை, செலவு மிகுதி. | பி.ப. | 1 | மணி |
| திங்கள்- தொழில் சிறப்பு, மனமகிழ்ச்சி. | பகல் | 12 | மணி |
| செவ்வாய்- மனக்குறை நீங்கும், புதிய முயற்சி. | பி.ப. | 2 | மணி |
| புதன்- வெளியிடப் பயணம், கௌரவ மிகுதி. | பகல் | 12 | மணி |
| வியாழன்- உயர்ந்த நட்பு, தொழில் விருத்தி. | பகல் | 11 | மணி |
| வெள்ளி- தொழில் சிறப்பு, பணவரவு. | மு.ப. | 10 | மணி |
| சனி- இனசன நன்மை, மனமகிழ்ச்சி. | பகல் | 12 | மணி |

அதிஷ்டநாள்- திங்கள், அதிஷ்ட இலக்கம்-1

### மேடம்: சுப நேரம்

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- முயற்சி பலிதம், காரியானுகூலம். | மு.ப. | 10 | மணி |
| திங்கள்- தொழில் சிறப்பு, அந்நியர் உதவி. | பகல் | 12 | மணி |
| செவ்வாய்- வெளியிட வாழ்க்கை, பணக்கஷ்டம். | பி.ப. | 2 | மணி |
| புதன்- தொழில் கஷ்டம், கடன் படல். | பகல் | 11 | மணி |
| வியாழன்- வீண் முயற்சி, உறவினர் உதவி. | பகல் | 12 | மணி |
| வெள்ளி- பெரியோர் பகை, மனக்கலக்கம். | பகல் | 11 | மணி |
| சனி- புதிய முயற்சி, மனமகிழ்ச்சி. | பி.ப. | 2 | மணி |

அதிஷ்டநாள்- செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-4

### இடபம்: சுப நேரம்

(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணிமிருகசீரிடத்துமுன்னரை)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- வெளியிட வாழ்க்கை, செலவு மிகுதி. | பி.ப. | 1 | மணி |
| திங்கள்- அந்நியர் நட்பு, காரியானுகூலம். | பகல் | 11 | மணி |
| செவ்வாய்- பிரயாணக் கஷ்டம், தேகசுகம் பாதிப்பு. | பி.ப. | 2 | மணி |
| புதன்- தொழில் விருத்தி, மன மகிழ்ச்சி. | பகல் | 12 | மணி |
| வியாழன்- பெரியோர் சகாயம், உறவினர் உதவி. | பி.ப. | 1 | மணி |
| வெள்ளி- வெளியிடப் பிரயாணம், அந்நியர் உதவி | பகல் | 12 | மணி |
| சனி- வீண் மனஸ்தாபம், மனக்கலக்கம். | பகல் | 11 | மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-5

### மிதுனம்: சுப நேரம்

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- மனக்கலக்கம், குடும்பசுகம் பாதிப்பு. | பகல் | 12 | மணி |
| திங்கள்- தொழில் மந்தம், பணக்கஷ்டம். | பகல் | 11 | மணி |
| செவ்வாய்- பிரயாண மிகுதி, பலவித நஷ்டம். | பி.ப. | 2 | மணி |
| புதன்- வீண்குறை கேட்டல், தொழில் கஷ்டம். | பி.ப. | 1 | மணி |
| வியாழன்- பெரியோர் உதவி, காரியானுகூலம். | பகல் | 11 | மணி |
| வெள்ளி- தொழில் விருத்தி, உயர்ந்த நட்பு. | பகல் | 12 | மணி |
| சனி- இனசன மகிழ்ச்சி, கௌரவ மிகுதி. | பி.ப. | 2 | மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-7

### கும்பம்: சுப நேரம்

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் மூக்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- தொழில் மந்தம், மனக்கவலை. | பகல் | 12 | மணி |
| திங்கள்- வீண் முயற்சி, பொருள் நஷ்டம். | பகல் | 11 | மணி |
| செவ்வாய்- தொழில் உயர்ச்சி, மனமகிழ்ச்சி. | மு.ப. | 10 | மணி |
| புதன்- பெரியோர் உதவி, பணவரவு. | பி.ப. | 2 | மணி |
| வியாழன்- இனசன நன்மை, காரியானுகூலம். | பி.ப. | 1 | மணி |
| வெள்ளி- வெளியிடப் பயணம், உயர்ந்த நட்பு. | பகல் | 12 | மணி |
| சனி- புதிய முயற்சி, பணவரவு. | பி.ப. | 1 | மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-5

### கர்க்கடகம்: சுப நேரம்

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- மனக்குறை நீங்கும், பலவித பேறு. | பகல் | 12 | மணி |
| திங்கள்- தொழில் விருத்தி, உயர்ந்த நட்பு. | பி.ப. | 1 | மணி |
| செவ்வாய்- உறவினர் உதவி, காரியானுகூலம். | பகல் | 11 | மணி |
| புதன்- வெளியிடப் பயணம், செய்தொழில் நன்மை. | மு.ப. | 10 | மணி |
| வியாழன்- கடன் சுமை, மனக்கலக்கம். | பகல் | 12 | மணி |
| வெள்ளி- தொழில் கஷ்டம், பணச் செலவு. | மு.ப. | 10 | மணி |
| சனி- வீண்குறை கேட்டல், அந்நியர் நட்பு. | பகல் | 12 | மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-1

### மகரம்: சுப நேரம்

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- பிரயாண கஷ்டம், செலவு மிகுதி. | பி.ப. | 2 | மணி |
| திங்கள்- தொழில் உயர்ச்சி, மனமகிழ்ச்சி. | பகல் | 12 | மணி |
| செவ்வாய்- வெளியிட வாழ்க்கை, உயர்ந்த நட்பு. | பி.ப. | 2 | மணி |
| புதன்- பிரயாண மிகுதி, வெளியிட வாழ்க்கை. | பி.ப. | 1 | மணி |
| வியாழன்- முயற்சி பலிதம், உறவினர் உதவி. | பி.ப. | 2 | மணி |
| வெள்ளி- இனசன நன்மை, உயர்ந்த நிலை. | பகல் | 12 | மணி |
| சனி- மனக்குறையதிகம், தேகசுகம் பாதிப்பு. | பி.ப. | 2 | மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-7

### சிம்மம்: சுப நேரம்

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- பிரயாண மிகுதி, மனக்கவலை. | பகல் | 11 | மணி |
| திங்கள்- தொழில் சிறப்பு, பணவரவு. | பி.ப. | 2 | மணி |
| செவ்வாய்- கடன் தொல்லை, பெரியோர் உதவி. | பகல் | 11 | மணி |
| புதன்- இனசன நன்மை, மனமகிழ்ச்சி. | பி.ப. | 3 | மணி |
| வியாழன்- அந்நியர் சுகம், காரியானுகூலம். | மு.ப. | 10 | மணி |
| வெள்ளி- வெளியிட வாழ்க்கை, உயர்ந்த நிலை. | பி.ப. | 2 | மணி |
| சனி- வீண் மனஸ்தாபம், குடும்பக் கலகம். | பி.ப. | 1 | மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-2

### தனு: சுப நேரம்

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- மனக்கிலேசம், பிள்ளைகளால் கவலை. | பி.ப. | 1 | மணி |
| திங்கள்- தொழில் உயர்ச்சி, மனமகிழ்ச்சி. | பகல் | 12 | மணி |
| செவ்வாய்- இனசன நன்மை, காரியானுகூலம். | பி.ப. | 1 | மணி |
| புதன்- பொருள் வரவு, இனசன நன்மை. | பி.ப. | 2 | மணி |
| வியாழன்- உயர்ந்த நட்பு, பலவித பேறு. | பகல் | 12 | மணி |
| வெள்ளி- காரியத்தடை, மறைமுக எதிர்ப்பு. | பி.ப. | 1 | மணி |
| சனி- தொழில் கஷ்டம், மனக்கலக்கம். | பகல் | 12 | மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-4

### விருட்சிகம்: சுப நேரம்

(விசாகத்து நாலாஙகால், அனுஷம், கேட்டை)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- வீண்குறை கேட்டல், உயர்ந்த நட்பு. | பகல் | 11 | மணி |
| திங்கள்- தொழில் விருத்தி, மனமகிழ்ச்சி. | மு.ப. | 10 | மணி |
| செவ்வாய்- வெளியிட வாழ்க்கை, உயர்ந்த நிலை. | பி.ப. | 2 | மணி |
| புதன்- துயர் அதிகம், கடன் தொல்லை. | பகல் | 11 | மணி |
| வியாழன்- பிரயாண மிகுதி, தேகசுகம் பாதிப்பு. | பகல் | 12 | மணி |
| வெள்ளி- பொருள் நஷ்டம், மனக்கவலை. | மு.ப. | 10 | மணி |
| சனி- இனசன நன்மை, காரியானுகூலம். | பி.ப. | 2 | மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-8

### துலாம்: சுப நேரம்

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- முயற்சி பலிதம், உறவினர் உதவி. | பகல் | 12 | மணி |
| திங்கள்- அந்நியர் உதவி, மனமகிழ்ச்சி. | பி.ப. | 2 | மணி |
| செவ்வாய்- பெரியோர் நட்பு, வெளியிட வாழ்க்கை. | பகல் | 11 | மணி |
| புதன்- துயர் நீங்கும், தேகசுக நன்மை, | பி.ப. | 2 | மணி |
| வியாழன்- மனக்குறையதிகம், கடன் தொல்லை. | பகல | 11 | மணி |
| வெள்ளி- தொழில் கஷ்டம், பணமுடங்கல். | பகல | 12 | மணி |
| சனி- எதிர்பார்த்த நன்மை, காரியானுகூலம். | பகல் | 11 | மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-6


### கன்னி: சுப நேரம்

(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- கடன் சுமை, மனக்கவலை. | பகல் | 12 | மணி |
| திங்கள்- பெரியோர் உதவி, பணவரவு. | பகல் | 11 | மணி |
| செவ்வாய்- துயர் நீங்கும், செய்தொழில் விருத்தி. | பி.ப. | 2 | மணி |
| புதன்- இனசன நன்மை, கௌரவ மிகுதி. | பி.ப. | 1 | மணி |
| வியாழன்- தொழில் விருத்தி, அந்நியர் உதவி. | பகல் | 12 | மணி |
| வெள்ளி- வெளியிட வாழ்க்கை, மனமகிழ்ச்சி. | பி.ப. | 1 | மணி |
| சனி- காரியானுகூலம், பணவரவு. | பி.ப. | 2 | மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-5

# குழந்தையின் வளர்ச்சிக் கட்டங்கள்




# டென்ஷனோ-டென்ஷன்

- மனதிற்கு கடிவாளம் இடுங்கள். அமைதியாக ஐந்து நிமிடங்கள் இருந்து செயற்படுங்கள்.
- நீங்கள் செய்யும் வேலையில் முழு ஈடுபாட்டோடு செயற்படுங்கள். உண்மையான ஈடுபாடு இருந்தால் டென்ஷன் வராது.
- பிரச்சனைகளை சற்றே ஆறப்போடுங்கள். குழம்புவதால் தெளிவான முடிவிற்குப் பதிலாக டென்ஷன் மட்டுமே அதிகமாகும்.
- நாளைய வேலைகளைப் பற்றி இன்றே சில யோசனைகளைச் செய்துவிட்டால் நாளை வேலையில் நிதானமாகச் செயற்பட முடியும்.
- எந்தக் காரியத்தை எடுத்தாலும் நாளை நாளை என்று தள்ளிப்போடாதீர்கள். அதை அன்றே செயற்படுத்த முயற்சி செய்யுங்கள். சீக்கிரம் செல்ல வேண்டும் என்றால் கடிகாரத்தை 10 அல்லது 5 நிமிடங்கள் முந்தி வையுங்கள். இதனால் காலைக் கெடுபிடி குறையும்.
- வாழ்க்கையை இயந்திரத்தனமாக வைத்துக் கொள்ளாமல், உங்களுக்கென சில பொழுதுபோக்குகள், சில விருப்பங்கள் வைத்துக் கொள்ளுங்கள். உங்கள் திறமைக்கு முக்கியத்துவம் கொடுங்கள்.
- பொறாமை என்னும் எமனுக்கு இடம் கொடுக்காதீர்கள். அது உங்கள் திறமையை மங்கச் செய்துவிடும். குறுக்கு வழிகளைத் தேடும். பின் டென்ஷனோ டென்ஷன்தான்.
- அடிக்கடி இசையை விரும்பிக் கேளுங்கள் பொறுமையாகச் செயற்படுங்கள். ஒரு மனிதனுக்கு பொறுமை மட்டும் இருந்து விட்டால் அவன் உலகையே ஆள்வான்.
- உணர்ச்சிகளையும், மகிழ்ச்சியையும், கோபத்தையும் அளவோடு வெளிப்படுத்துங்கள் தியானம் செய்ய பழகுங்கள். சில மணிநேரமாவது மனதை அமைதியான நிலையில் வைத்திருங்கள்.
- நம்மால் முடியும் என்ற தன்னம்பிக்கையை வளர்த்துக் கொள்ளுங்கள். முறையான உடற்பயிற்சி செய்யுங்கள். டென்ஷனை வெல்ல முடியும்.



## கெடாத மீன்

சமையலுக்காக மீன்களை வாங்கும் போது நல்ல மீனாக வாங்க வேண்டியது முக்கியம். மீனைத் தொட்டுப்பார்த்தால் கைக்குக் கெட்டியாக இருக்க வேண்டும். வெறும் செவுள் நிறத்தை மட்டும் பார்த்து வாங்கக்கூடாது. வால் பகுதி தொய்ந்து விழாமல் விறைப்பாக நிற்கிறதா என்று பார்க்கவும். வாங்கிய மீனை அப்படியே போட்டு வைக்காமல் விரைவில் வெட்டிக் கழுவ வேண்டும். ஆற்றுமீன், குளத்துமீன் என்றால் உயிருடன் வாங்க வேண்டும்.

# கண்ணீரில் கரைந்த இரவுகள் 36

**புவனா**



காரைவிட்டு கீழே இறங்கினால் கூட்டத்தில் சிக்கித் திணறிவிடுவார் என்று கருதியே மெய்க்காப்பாளர்கள் தடுத்தனர்.

ஒரே பார்வையில் அவர்களை அடக்கிவிட்டு, கீழே இறங்கினார் டயானா. தங்களிடம் பேசுவதற்காகத்தான் டயானா கீழே இறங்குகிறார் என்றே கூட்டத்தினர் நினைத்தனர்.

டயானா நேராகக் கீழே விழுந்து கிடந்த வயோதிபர் அருகே சென்று, அவரை கைகொடுத்து அணைத்துத் தூக்கினார்.

டயானாவைக் காணும் ஆர்வத்தில் முட்டிமோதிய கூட்டத்தினர் அப்போதுதான் விழுந்து கிடந்த வயோதிபரைக் கண்ணுற்றனர்.

தங்கள் செயலுக்காக அவர்கள் வருத்தப்படுவது போல இருந்தது. கூட்டத்தினரின் ஆரவாரம் ஓய்ந்தது. முட்டி மோதாமல் எட்ட நின்று கொண்டனர்.

அதற்கிடையே கூட்டத்தினர் மத்தியில் நின்ற புகைப்படப் பிடிப்பாளர்கள் வயோதிபரை டயானா அணைத்துத் தூக்கிய காட்சியை சுட்டுவிட்டனர்.

மறுநாள் பத்திரிகைகளில் முதற்பக்கத்தில் அக் காட்சி வெளியாகி இருந்தது.

சாள்ஸ் முன்பாகவும் ஒரு பத்திரிகை இருந்தது. சாள்ஸுக்கு பொறுக்க முடியவில்லை. "இதெல்லாம் விளம்பரம் தேடும் விளையாட்டு!" என்று கூறினார்.

மகாராணியின் தாயாரான தனது பாட்டியிடமே சாள்ஸ் அவ்வாறு கூறினார்.

சாள்ஸின் பாட்டியை டயானாவுக்கு ஆரம்பத்தில் இருந்தே அவ்வளவாகப் பிடிப்பதில்லை. ராணியின் தாயாரும் எப்போதாவதுதான் டயானாவுடன் பேசிக்கொள்வார்.

டயானாவின் பாட்டியான சீமாட்டி ஃபேர்பொய் ருத் ஒரு காலத்தில் ராணியின் தாயாருக்கு உதவியாளராகப் பணிபுரிந்தவர்.

தன்னிடம் பணிபுரிந்தவரின் பேத்திதானே என்று இளக்காரமாக நினைக்கிறாரோ என்றும் டயானா சில சந்தர்ப்பங்களில் நினைத்தது உண்டு.

## யார் குற்றவாளி?

சாள்ஸுக்கும் டயானாவுக்கும் இடையே விரிசல் ஏற்பட்ட பின்னர் ராணியின் தாயாருடன் டயானாவுக்கு மேலும் கசப்பு ஏற்பட்டது.

தனது பேரன் சாள்ஸ் எவ்வளவுதூரம் மோசமாக நடந்தாலும் அதனையிட்டு பெருமை கொள்ளும் சுபாவம் உடையவராக அவர் இருந்தார்.

சாள்ஸ்-டயானா இடையே பிணக்கு இருக்காதா?' என்று பத்திரிகைகள் கேள்வி எழுப்பின.

சாள்ஸ் தன் ஏமாற்றத்துக்கும் டயானாமீதே பழி போட்டார்.

"அரச குடும்பத்துக்கு ஏற்ற மருமகளாக டயானா இருந்திருந்தால், மகாராணி பதவி விலகி இருப்பார். என்னை அரசனாக்கியும் இருப்பார்" என்றார்.

டயானாவும் விடவில்லை. திருப்பி அடித்தார்.

"மகாராணியுடன் இணைந்து அரச அலுவல்களைப் பொறுப்புடன் கவனிப்பதில்லை. தனது தம்பிகளான அன்ட்ரூ, மற்றும் எட்வேட் ஆகியோரிடம் பொறுப்புக்களைவிட்டு விட்டு படுசோம்பேறியாக இருக்கிறார். கமீலாவுடன் செலவிடும் நேரத்தை அரச பணிகளில் செலவிட்டால் மன்னர் பதவி தானாக தேடி வந்திருக்கும்." என்றார் டயானா.

டயானா கூறியதுதான் உண்மை என்றே பலரும் ஒப்புக்கொண்டனர்.

"சாள்ஸின் சோம்பேறித்தனத்துக்கு டயானா சாட்சி கூறிவிட்டார். அடுத்து கமீலாவிடம் கேட்டால் சாள்ஸ் அங்கும் சோம்பேறிதானா? என்று தெரிந்துவிடும்" என்று கிண்டல் பண்ணியது ஒரு குறும்புப் பத்திரிகை.

## புத்தக வெளியீடு

டயானாவுடன் தனக்கு ஏற்பட்ட உறவை விபரித்து ஜேம்ஸ் ஹெவிட் எழுதிய புத்தகம் உலகெங்கும் பரபரப்பாக விற்பனையானது.

டயானா அந்தப் புத்தகம் பற்றி என்ன கூறுகிறார்? என்று அறிய பல செய்தி நிறுவனங்கள் பலத்த முயற்சி செய்தன.

டயானா கருத்துக்கூற மறுத்துவிட்டார்.

ஹெவிட் எழுதிய புத்தகம் ஒன்றை தன் நண்பி ஒருவர் மூலம் தருவித்து, தனியாக அமர்ந்து படித்துப் பார்த்தார் டயானா.

அதுதவிர சில சஞ்சிகைகளுக்கும் தனது அனுபவங்களை எழுதி பணம் சம்பாதித்தான் ஹெவிட்.

சஞ்சிகை ஒன்றில் அவனது விபரிப்பு சிலிர்ப்பூட்டியது.

'டயானாவின் இதழ்கள் மிக மென்மையானவை. முத்தமிடும்போது ஈரமான மலரை ஸ்பரிசிப்பது போல உணர்ந்தேன்.

என்னைவிட டயானா முத்தமிடுவதில் பக்குவம் தெரிந்தவர். என் மேலுதடுகளையும், கீழ் உதடுகளையும் தன் மென்மையான இதழ்களால் கௌவிப்பிடித்து ஸ்பரிசிக்கையில், என் கால்கள் தரையில் இல்லை. என் உணர்ச்சிகள் இந்த உலகில் இல்லை.

உணர்ச்சிகள் மேலிடும் போதெல்லாம் ஆனால் இதுவெல்லாம் கடினமான முயற்சிகளின் பின்னர்தான். ஏனெனில் டயானா எளிதில் உணர்ச்சிவசப்படாத பெண்.

சோகமோ, கோபமோ, தாபமோ எதுவானாலும் நன்கு யோசித்துத்தான் வெளிக்காட்டுவார். அதனால் அவரை என் வழிக்கு கொண்டுவர நான் பாடாய்ப் பட வேண்டியிருந்தது. என்று விபரித்திருந்தான் ஹெவிட்.

டயானாவுக்கு நம்பமுடியவில்லை. அந்த சஞ்சிகையை தூக்கி எறிந்தார். ஒரு மூலையில் போய் விழுந்தது.

அப்போது அங்கு வந்த இளவரசர் வில்லியம் அப்புத்தகத்தை கண்டுவிட்டான்.

"ஏனம்மா கீழே எறிந்திருக்கிறாய்?" என்று அதனை எடுக்கச் சென்றவனை தடுக்க டயானா பட்டபாடு பெரும்பாடு.

"இப்படி ஒரு தர்மசங்கடம் நேரவே கூடாது. ஆனாலும் வில்லியம் வளர்ந்துவிட்டான். இனிமேல் அவனிடம் இச் செய்திகள் எட்டும். சஞ்சிகைகள் அவன் கரங்களில் சேரும். தன் பெற்றோரைப் பற்றி வெளியாகும் செய்திகளால் அவன் மனம் என்ன பாடு படுமோ?" என்று டயானா தன் நண்பிகளிடம் கூறினாராம்.

ஆனால் டயானா எதிர்பார்த்ததற்கு மாறாக, தன் பெற்றோரின் இயல்புகளை புரிந்துகொள்ளக்கூடிய பக்குவம் உள்ள ஒருவனாகவே வில்லியம் வளர்ந்து வந்தான்.



## "கமீலாவிடமும் கேட்கவேண்டும்"

தோன்றியதற்கு டயானாதான் முழுக்காரணம், எல்லாத் தவறும் டயானாமீதே என்று ராணியின் தாயார் கூறிவந்தார்.

இதற்கிடையே 1991ல் மகாராணியின் உரை ஒன்று சாள்ஸுக்கு அதிர்ச்சியாக அமைந்தது.

எலிசபெத் மகாராணி விரைவில் பதவி விலகி, தன்னை மன்னராக முடிசூடிக்கொள்ள அனுமதிப்பார் என்று சாள்ஸ் எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்.

டயானாவை விவாகரத்து செய்யாமல் இருந்தமைக்கும் அதுதான் முக்கிய காரணம்.

கமீலாவும் அதனால்தான் பொறுமையாக இருந்தார். தனது காதலர் இளவரசராக இருப்பதைவிட அரசராக வருவது நல்லது என்று கமீலா நினைத்திருக்க வேண்டும்.

இல்லையெனில் டயானாவை விவாகரத்துச் செய்யுமாறு கமீலாவே சாள்ஸை நச்சரித் திருப்பார்.

சாள்ஸுக்கும் டயானாவை தலைமுழுகுவதில் எவ்வித தயக்கமும் இல்லை. அப்படித் தலைமுழுகினால் தனது தலையில் மகுடம் ஏறாமல் போகுமே என்பதுதான் ஒரே ஒரு தயக்கம்.

அப்படியிருக்கையில் மகா ராணி தனது உரையில்: "நாட்டுக்கும், பொதுநலவாய நாடுகளின் கட்டுக்கோப்புக்கும் நான் மேலும் சிலகாலம் தொடர்ந்து சேவை செய்யப் போகிறேன்!" என்று கூறிவிட்டார்.

'பட்டத்துக்குரிய இளவரசர் இன்னும் எத்தனை காலம் அதே பதவியில் இருக்க முடியும்? அரசராக வேண்டும் என்ற ஆசை


தாயாருடன் மகாராணியார்

டயானா வாய்விட்டுப் புலம்புவார். என்னைப் புகழ்ந்தும், அன்பாகவும் அழைத்து மகிழ்வார். இறுக, இறுக மிக இறுக தன் கரங்களால் என்னை அணைத்தபடி காது மடல்களுக்கு அருகே இருந்து அவரது புகழ் மொழிகள் கேட்கும்.

அந்த புகழ்மொழிகளும், சிணுங்கல்களும் எந்த ஆணையும் உணர்ச்சியின் உச்சாணிக் கொம்பில் ஏற்றிவைத்துவிடும்.

குறிப்பாக தன் தாயாரை அவன் நன்கு புரிந்து வைத்திருந்தான்.

தன் தந்தையார் மற்றும் பாட்டி, பூட்டி ஆகியோரைவிட தாயாருடனே வில்லியமுக்கு அதிக ஒட்டுதல்.

வில்லியம் எத்தனைதூரம் பக்குவம் பெற்றுவிட்டான் என்பதை டயானா உணர்ந்து கொள்ளக்கூடிய சந்தர்ப்பம் ஒன்று வந்தது.

(அடுத்த வாரமும் வரும்)


# பட்டுச் சேலை பரிசுத் திட்டம்

**மகளிர் மட்டும் • மகளிர் மட்டும்**

★ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

★ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

★ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.



**வாரம் ஒரு பட்டுச் சேலை** DT

பெயர்:..........................
முகவரி:..........................
..........................
தொழில்:..........................
கையொப்பம்:..........................

**உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை**

பி.கு: அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

**கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 30-05-1998**

அனுப்பவேண்டிய முகவரி- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.

## இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை? பொரல்ல வாசகிக்கு அதிஷ்டம்!

இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி இவர்தான்

**எம். ஏ. ஹலீமா,**
15ஏ, என்.எச்.எஸ்.கோதமி வீதி, பொரல்ல.

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக.வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.

அந்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!

இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.

## தினமுரசு-அம்மன் ஜுவல்ஸ் இணைந்து வழங்கும் தங்கமாலை பரிசுப் போட்டி

தினமுரசு-அம்மன் ஜுவல்ஸ் பரிசுக் கூப்பன் இல 02

- முதல் பரிசுக்குரிய அதிஷ்டசாலிக்கு அம்மன் ஜுவல்ஸ் வழங்கும் தங்கமாலை பரிசாகக் காத்திருக்கிறது. இரண்டாவது அதிஷ்டசாலிக்கு தங்கமோதிரமும் மூன்றாவது அதிஷ்டசாலிக்கு சமையல் அடுப்பும் காத்திருக்கிறது.
- 50 அதிஷ்டசாலிகளுக்கு ஆறுதல் பரிசுகள் காத்திருக்கின்றன.
- பெண்கள் மட்டுமே பங்குகொள்ள முடியும்.
- தொடர்ந்து 25 வாரங்களுக்கு வெளியாகும் பரிசுக் கூப்பன்களை சேகரித்துக் கொள்ளுங்கள். நாம் அனுப்புமாறு கூறும்போது மட்டுமே கூப்பன்களை அனுப்புங்கள்.



படிப்பகம்

www.padippakam.com






அச்ச மில்லை அமுங்குத லில்லை,
நடுங்குத லில்லை நாணுத லில்லை,
பாவ மில்லை பதுங்குத லில்லை,
ஏது நேரினும் இடர்ப்பட மாட்டோம்!
-சுப்பிரமணிய பாரதியார்.

## பாப்பா முரசு சிறுகதை

## தகுதியானவர் யார்?



அந்தக் காட்டில் பறவைகளுக்கான தேர்தல் நடந்தது. 'யார் வெற்றி பெறுகிறார்களோ அவர்களே அப்பறவைக் கூட்டத்திற்குத் தலைவனாக இருப்பார்' என்று அறிவிக்கப்பட்டது.

பல பறவைகள் தேர்தலில் மிக மும்முரமாக இறங்கிப் போட்டியிட்டன. ஒவ்வொரு பறவையும் தத்தமது அருமை பெருமைகளையும், வீரத்தையும் எடுத்துக் காட்டி தம்மை தலைவனாக்கும்படி கேட்டுக் கொண்டன.

கடைசியாக மயில் எழுந்து, காரசாரமாகப் பேசியதுடன், தனது அழகிய தோகையை விரித்து நடனமும் ஆடியது.

ஒருவழியாகத் தேர்தல் முடிந்தது. மயிலின் அழகான தோற்றத்தையும், அதன் நடனத்தையும் இரசித்த பறவைகள் மயிலைத் தலைவனாகத் தேர்ந்தெடுத்தன.

மயில் பறவைகளின் தலைவனாகத் தேர்ந்தெடுக்கப்பட்டதை, பறவைகள் எல்லாம் மகிழ்ச்சியுடன் கூடிக் கொண்டாடின.

அப்போது, குருவி ஒன்று எழுந்து பறவைகளைப் பார்த்து,

“சபையோர்களே! மயிலார் நம் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுவிட்டார். நம்மை ஆளும் பொறுப்பு இனி அவருடையது. இனி நம்மை எல்லாம் காப்பவர் அவர்தான்.

நமது எதிரியான கழுகு, பருந்து, ராஜாளி போன்றவை நம்மோடு சண்டையிட வந்தால் நம்மை மயிலார்தான் காப்பாற்றுவார். நாம் நம் எதிரிகளிடமிருந்து எவ்வாறு தப்பிக் கொள்வது என்பது பற்றி மயிலார் கூறுவார்!” என்று கூறிவிட்டு அமர்ந்தது.


குருவியின் பேச்சைக்கேட்டு மற்றப் பறவைகள் கைதட்டின. தலைவனாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட மயில் நல்ல கருத்தை வெளியிடும் என்று ஆவலோடு பறவைகள் எதிர்பார்த்தன.

ஆனால் மயில் ஏதும் பேசாமல் மௌனமாக இருந்தது.

இதைப் பார்த்த பறவைகள், 'மயிலின் அழகையும் அதன் நடனத்தையும் பார்த்து அதைத் தலைவனாகத் தேர்ந்தெடுத்து விட்டோமே. மயிலை நடனமாடச் சொன்னால், அழகாக நடனமாடும். எதிரிகளிடமிருந்து இதன் அழகும், நடனத்திறமையும் நம்மைக் காப்பாற்றுமா?' என்று தமது மடத்தனத்தை எண்ணிநொந்து கொண்டன.

தம்மை ஆழ்வதற்குத் தகுதியானவர், எதிரிகளிடமிருந்து காப்பாற்றக்கூடிய வீரமும் விவேகமும் உடையவராக இருக்க வேண்டும் என்பதை அந்தப் பறவைகள் பின்னர்தான் புரிந்து கொண்டன.

## அதிசயம் - ஆனால் உண்மை!



**மீன் பலூன்:**
1816ம் ஆண்டு இங்கிலாந்தில் பறக்கவிடப்பட்ட பலூன் இராட்சத மீன் உருவில் அமைக்கப்பட்டிருந்தது.



**காட்டு முட்டைகோவா**
தென்னாபிரிக்காவின் பிரின்ஸ் எட்வேர்ட் தீவுகளில் காட்டு முட்டைக் கோவா செடி மட்டும் தான் வளரும்.



**நான்கு தக்காளிகள்:**
நியூயோர்க்கைச் சேர்ந்த திருமதி விவியன் என்பவரது தோட்டத்தில் வளர்ந்த தக்காளிச் செடியில் இருந்து 4 தக்காளிகள் ஒன்றாகச் சேர்ந்து காய்த்திருந்தது.



**ஒருவர் கட்டிய தேவாலயம்:**
ஃபிரான்ஸ் நாட்டில் உள்ள பிகார்டி என்ற இடத்திலுள்ள விக்னஸ் என்ற தேவாலயம் அப்பே போல் லெகோட்ரே என்ற தனிமனிதர் ஒருவரால் கட்டப்பட்டது. இதை அவர் கட்டி முடிக்க 43 வருடங்கள் பிடித்தன.

## வாரம் ஒரு நாடு

### கானா

தலைநகர்- அக்ரா
பரப்பு- 2,38,537 சதுரகிலோமீட்டர்
மக்கள் தொகை- 1.75 கோடி
மொழி- ஆங்கிலம் (ஆட்சிமொழி) 8 பெரிய தேசிய மொழிகள்
எழுத்தறிவு- 60%
சமயம் - கிறிஸ்தவம், இஸ்லாம் மற்றும் மரபுவழி நம்பிக்கைகள்
நாணயம்- செடி
தனிநபர் வருமானம்- 400 டொலர்.

**அமைவிடம்:**

மேற்காபிரிக்க நாடு. அட்லாண்டிக் கடலில் தெற்கு நோக்கிய கடற்கரைப் பரப்பைக் கொண்டுள்ளது. இதன் மேற்கே ஐவரி கோஸ்ட்டும்; வடக்கில் வோல்டாவும்; கிழக்கில் டோகோவும் எல்லைகளாக அமைந்துள்ளன.

**வரலாறு:**

பிரிட்டனிடமிருந்து 1957ல் சுதந்திரம் பெற்றது. குவா மனக்குமா முதல் ஜனாதிபதி. 1960 ஜூலையில் பொதுநலவாயத்திற்குள் அமைந்த குடியரசு என்னும் அந்தஸ்து பெற்றது.



**பொருளாதாரம்:**

விவசாயம் முக்கிய தொழில். கொக்கோ மிகுதியாக ஏற்றுமதி செய்யப்படுகிறது. இரப்பர், கோப்பி, பனைப் பொருட்கள், விளைகின்றன. மங்கனீஸ், பொக்சைட் போன்ற கனிமங்களும் கிடைக்கின்றன.

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 30.05.1998.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 246
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 244

**பரிசுக்குரியவர்:**
வினோத்,
ஸாஹிரா கல்லூரி, கம்பளை.

**பாராட்டுக்குரியவர்கள்:**

| | |
|---|---|
| நித்தியாஸ்ரீ சுப்பிரமணியம், மகளிர் உயர்தரப் பாடசாலை, கண்டி. | ஜே. பெசில் மாக்கலஸ், மமா/அட்/என்பீல்ட் த.வி, டிக்கோயா. |
| ஃபாத்திமா ஃபய்ஹா ஃபாரீஸ், கேம்பிரிட்ஜ் சர்வதேச பாடசாலை, மாத்தளை. | என். ரூபிணி, றோ.க.த.வித்தியாலயம், வத்தளை. |
| ஆர். யோகராஜ், நு/மெதோடிஸ்ட் தமிழ் மகா வித்., கந்தபொளை. | சிந்துஷன் சந்திரசேகர், கண்டி வீதி, அரியாலை. யாழ்ப்பாணம். |
| சுல்பா அக்பர், ரோயல் ஆங்கில பாடசாலை, மாத்தளை. | மு. பிரிதிகலா, ப/கோணக்கலை தமிழ் வித்தியாலயம், பசறை. |
| ஆர். மூஸா கலீம், ஹிஜ்ராபுர, தெல்தெனிய. | ஃபாத்திமா மிஃப்ரா, 'பி' டவுன், ஹட்டன். |

## இயூக்லிட்



நவீன உலகில் அறிவியல் துறை அளப்பரிய பணிகளை ஆற்றிவருகிறது. அறிவியல் வளர்ச்சிக்கு கணக்கியல் இன்றியமையாதது. ஆய்வுத்துறையின் சகல நிலைகளிலும் கேத்திரகணிதமே பிரதான இடத்தை வகிக்கிறது.

கேத்திரகணிதத்தின் தந்தை எனப்போற்றப்படுபவர் கிரேக்க நாட்டு அறிஞரான இயூக்லிட் என்பவர். இவர் கிறிஸ்துவுக்கு முன் மூன்றாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். மிகச் சிறு வயதிலேயே பல வகையான கோணங்களை வரைந்து அவற்றிலேயே புலன் முழுவதையும் செலுத்தியவாறு புற உலகத்தையே மறந்த நிலையிலிருப்பாராம். இதனால் இவரை ஒரு மனநோயாளி என்றே இவருடைய உறவினர்களும் கருதினர்.

இசை, ஓவியம் மற்றும் கண்ணொளி சார்ந்த வித்தியாசமான துறைகளிலும் பயின்ற இயூக்லிட், கணக்கியலில்தான் அதிக ஈடுபாடு கொண்டிருந்தார். கோடுகள், கோணங்கள், வட்டங்கள், வரிகள் ஆகியவற்றை வரைந்து பல தத்துவங்களை உருவாக்கினார். ஆனால் அன்றைய உலகம் இயூக்லிட்டின் கருத்துக்களை ஏற்க மறுத்தது. எல்லோரும் இவருடைய கோட்பாடுகளை ஏளனம் செய்தனர். ஆனால் இன்றைய கேத்திரகணித வளர்ச்சிக்கான மூலதத்துவத்தை இயூக்லிட் அன்றே வகுத்துத் தந்தார். ஆனால் அவருடைய காலத்தில் அவருடைய ஆற்றலை எவரும் மதிக்காமல் ஏளனம் செய்தமையினால் மனமொடிந்து காணப்பட்டார். ஆக 50 ஆண்டுகள் மட்டும் வாழ்ந்து மறைந்தார்.

## புகைபிடிக்கும் பழக்கம்

'புகை பிடித்தல் உடல் நலத்திற்குக் கேடு' என்று தெரிந்தும் பலர் புகைபிடிக்கின்றனர். புகை பிடிக்கும் பழக்கத்தை முதலில் அறிமுகப்படுத்தியவர்கள் யார் தெரியுமா? அமெரிக்க பழங்குடியினரான சிவப்பிந்தியர்கள்.

சிவப்பிந்தியர்கள்தான் முதன் முதலாக புகையிலையைப் பயிர் செய்தார்கள். இதை அவர்கள் மருத்துவ குணமுள்ள தாவரமாகப் பயன்படுத்தினார்கள். அவர்களின் பல்வேறு சடங்குகளிலும் புகையிலையைப் பயன்படுத்தினார்கள்.



அமெரிக்காவில் இருந்து மருத்துவ காரணங்களுக்காக ஐரோப்பிய நாடுகளுக்கு புகையிலை ஆங்கிலேயரால் கொண்டுசெல்லப்பட்டது. ஃபிரான்ஸில் 1556லும், போர்த்துக்கலில் 1558லும், ஸ்பெயினில் 1559லும், இங்கிலாந்தில் 1565லும் புகையிலை பயிரிடப்பட்டன.

புகையிலை உபயோகிக்கும் பழக்கம் அதிகரித்த பின்பு சட்டங்களும் மாறின. புகைப்பிடிப்பவர்களுக்கு துருக்கி நாட்டில் மரணதண்டனை விதிக்கும் சட்டம் வந்தது. ரஷ்ய மன்னர் புகையிலை போடுவோரின் மூக்கை வெட்டி சைபீரியாவுக்கு நாடுகடத்தும் சட்டம் கொண்டுவந்தார்.

இவை எல்லாம் சரிப்பட்டு வராமல் உலகமே புகைபிடிக்கும் பழக்கத்திற்கு அடிமையாகி உள்ளது. ஏராளமானோரின் உயிரையும் குடித்து வருகிறது.

## தோடம்பழம் (ORANGE)


- **தோடம்பழத்தின் பிறப்பிடம் எது?**
மலேசியா.



- **மிகவும் புகழ்பெற்ற தோடம்பழம் எது?**
விதைகள் இல்லாத, சாறு நிறைந்த 'வேலன்ஸியா' என்பதே புகழ்பெற்ற தோடம்பழம் ஆகும்.
- **'உடல் நலத்திற்கு மிகவும் நல்லது' என இது கருதப்படுவது ஏன்?**
இதில் நிறைய விட்டமின் 'சி' சத்தும், கனியுப்புக்களும் இருப்பதால் இது உடல்நலத்திற்கு மிகவும் நல்லது எனக் கருதப்படுகிறது.
- **தோடம்பழ உற்பத்தியில் முதலிடம் வகிக்கும் நாடு எது?**
பிரேஸில்.

## ஏன் தெரியுமா?

ஒரு கண்ணாடி டம்ளரில் பாதியளவு தண்ணீரை நிரப்பிக்கொள்ளுங்கள். அதில் சில எண்ணெயத்துளிகளை விடுங்கள். தண்ணீரோடு எண்ணெய் சேராமல் தனியாக மிதக்கிறது அல்லவா? ஒரு சிறு குச்சியைக் கொண்டு இரண்டையும் சேர்த்துக் கலக்கிப் பாருங்கள். அப்படியும் எண்ணெயும் தண்ணீரும் ஒன்றாகக் கலக்காமல் தனித்தனியாக நிற்கிறதல்லவா?



ஏன் இப்படி என்று உங்களுக்குத் தெரியுமா? விஷயம் இதுதான்.

எல்லாப் பொருட்களுமே 'மாலிக்யூல்' எனப்படும் மூலக்கூறுகளால் ஆனவை. ஆனால் தண்ணீரின் மூலக்கூறுகளும் எண்ணெயின் மூலக் கூறுகளும் முற்றிலும் வித்தியாசமானவை. இவை ஒன்றோடு ஒன்று இணையாது. அதனால்தான் தண்ணீரில் மூலக்கூறுகள் தனியாக இணைந்து நிற்கிறது. அதேபோல் எண்ணெயின் மூலக்கூறுகளும் தனியாக இணைந்து நிற்கிறது.

எண்ணெய் தண்ணீரைவிட எடை குறைவாக இருப்பதால் தண்ணீருக்கு மேல் மிதக்கிறது. இப்போது விளங்கியதா?

www.padippakam.com

## திக் திக் திக் 12

# நந்தினி 440 வோல்ட்

### கிரைம் சக்கரவர்த்தி ராஜேஷ்குமார்

காலையில் நந்தினி கண் விழித்த போது ஆஸ்பத்திரி முழுவதும் ஏக பரபரப்பில் இருந்தது. அவள் எழுந்து உட்கார்ந்ததைப் பார்த்ததும்- பாரி அவளுடைய கையைத் தொட்டான்.

"குட் மார்னிங் நந்தினி..."

"குட் மார்னிங்"- புன்னகைத்தாள்.

"நல்லாத் தூங்கினியா, நந்தினி...?"

"ம்..."

"கொஞ்ச நேரத்துல டாக்டர் வந்திடுவார்... உன்னோட கண்கட்டை அவிழ்த்துடுவார்..."

"இப்போ மணி என்னங்க..?"

"ஏழு..."

"ம்..."

"டாக்டர் ஆறுமணிக்கே வந்து கண்கட்டை அவிழ்க்கிறதா சொன்னாரு..."

"அ...அது...அ...அது...வந்து....?"

"என்னங்க....?"

"சொன்னதும் பயந்துடாதே நந்தினி...! டாக்டர் குணசீலனோட அஸிஸ்டெண்ட் டாக்டர் பிரதாப்ன்னு ஒருத்தர் இருந்தாரே..."

"ஆமா,..?"

"அவரை ராத்திரி யாரோ சுத்தியலாலே மண்டையிலே அடிச்சுக் கொன்னிருக்காங்க... ஹாஸ்பிடலோட ஸ்டோர்ஸ் ரூம்ல இது நடந்திருக்கு... பொலிஸ் வந்து பார்த்துட்டிருக்காங்க... என்கொய்ரி பண்ணிட்டிருக்காங்க..."

"அடடே... கொஞ்சம் தமாஷா... சிரிச்சுப் பேசுவாரே...அவரா?"

"அவரே தான்..."

"என்ன காரணம்...? யார் பண்ணினாங்க...?"

"பொலிஸ் இப்பத்தான் வந்திருக்காங்க...! டாக்டர் அவங்ககிட்டே பேசிட்டு இப்போ வந்துடறேன்னு சொன்னார்..."

"மாமாவும் அத்தையும் எங்கே...?"

"வெளியே உட்கார்ந்திருக்காங்க..."

"விமல், சொப்னா...?"

"மர்டர் நடந்த இடத்துக்கு வேடிக்கை பார்க்கப் போயிருக்காங்க..."

"என்னங்க...?"

"ம்..."

"எனக்குப் பார்வை கிடைச்சுடுமா..?"

"கண்டிப்பா கிடைச்சுடும் நந்து..."

"எனக்குப் பார்வை வருமோ வராதோன்னு பயமாயிருக்குங்க...!"

"சீ...! எதுக்காக அப்படி நினைக்கிறே...?"

"பண்ணியிருக்கிற ஆபரேஷன் மூலமா, உனக்குக் கண்டிப்பா பார்வை கிடைக்கும்ன்னு டாக்டர் மனோகர் டேவிட் சொல்லியிருக்கார்..."

அவர்கள் பேசிக் கொண்டிருக்கும் போதே விமலும் சொப்னாவும் உள்ளே வந்தார்கள். விமல் குரல் நடுங்கச் சொன்னான்:

"டாக்டர் பிரதாப்பை ரொம்பவும் கொடூரமாக கொன்னிருக்காங்க பாரி... பாக்கப் பார்க்க வயித்தைக் கலக்குது..."

"பொலிஸ் என்ன சொல்றாங்க...?"

"அவங்களுக்கும் ஒண்ணுமே புரியலை... இரத்தக் கறையோடு இருந்த சுத்தியலை மாத்திரம் கைப்பத்தியிருக்காங்க.... பாடியை மார்ச்சுவரிக்கு கொண்டு போயிட்டாங்க... வெளியிலிருந்து ஏகப்பட்ட ஜனம் வந்திட்டாங்க..."

"டாக்டர் இப்போ வர்றேன்னு சொன்னாரா...?"

"அஞ்சு நிமிஷத்துல வர்றதா சொன்னார்...!" என்று சொன்ன விமல், நந்தினியின் பக்கமாய் திரும்பினான். "என்ன அண்ணி.. கண்ணுல ஏதாவது வலி இருக்கா...?"

"ஊ...ஹு"...ம்..."- நந்தினி புன்னகையோடு தலையாட்டினாள்.

சரியாய்ப் பத்து நிமிஷம் கழித்து டாக்டர் குணசீலன், டாக்டர் மனோகர் டேவிட்டும் உள்ளே வந்தார்கள். பாண்டுரங்கனும், வாகீசனும், பரிமளமும் அவர்களைத் தொடர்ந்து வந்தார்கள். டாக்டர் குணசீலன் பாரியின் பக்கமாய்த் திரும்பினார்.

"ஸாரி... ஆஸ்பத்திரியில எதிர்பாராத விதமா ஒரு அசம்பாவிதம் நடந்துடுச்சு... உங்களுக்குத் தெரியும்... பொலிஸ் இன்வெஸ்டிகேஷனை முடிச்சுட்டு வர கொஞ்சம் லேட்டாயிடுச்சு..."

"ஸோ... வாட் டாக்டர்..?"

"மிஸஸ் நந்தினி..."

"டாக்டர்..."

"இப்போ உங்க கண்கட்டை அவிழ்க்கப் போறோம்... கண்ணிமைகளை மெதுவா பிரிச்சுப்பார்க்கணும்... ஐ லிட்ஸ் கொஞ்சம் இட்சிங்கா இருக்கும்... கையை வெச்சுத் தேச்சுடாதீங்க..."

'மாட்டேன்' என்பதுபோல் தலையாட்டினாள், நந்தினி.

டாக்டர் மனோகர் டேவிட் அருகே வந்தார். நந்தினிக்குப் பின்பக்கமாய்ப் போய் நின்றுகொண்டு- கட்டின் முடிச்சு மேல் கையை வைத்தார்.

ஆச்சரியப்பட்டார்.

"கட்டோட முடிச்சு நெகிழ்ந்திருக்கே...?"

நந்தினி பேசாமல் இருந்தாள். டாக்டர் குணசீலன் மட்டும் கட்டைப் பார்த்துவிட்டுச் சொன்னார். "போன வாரம் பூராவும் நந்தினி கட்டில்ல படுத்திட்டே இருந்தாங்க... புரண்டு படுக்கும்போது கட்டோட முடிச்சு தலையணையோட உரசி உரசி நெகிழ்ந்து போயிருக்கலாம் டாக்டர்..."

"மே...பி!" என்ற மனோகர் டேவிட் கட்டை அவிழ்த்தார். ஒரு மீட்டர் நீளத்துக்கு பாண்டேஜ் துணி வந்ததும்- மருந்து அப்பிய பஞ்சுத் துணுக்குகள் தெரிந்தன. மெதுவாய் அதைப் பிரித்து எடுத்தார். மருந்து கலந்த நீரை பஞ்சால் நனைத்துக் கண்களின் மேற்பரப்பைத் துடைத்துவிட்டார்.

எல்லோரும் துடிக்கிற இதயங்களோடு- நந்தினியையே பார்த்துக்கொண்டிருக்க-

டாக்டர் கொஞ்சம் தள்ளி நின்று சொன்னார்: "லேசா கண்ணைத் தொறந்து பாரம்மா..."

ஒரு அரும்பை மலர்த்திப் பார்க்கிற மாதிரி தன்னுடைய இரண்டு கண்களையும் மெல்ல மலர்த்தினாள் நந்தினி.

வெள்ளைக் கோட்டுகளோடு நின்றிருந்த டாக்டர்கள் மெல்ல மெல்ல புலப்பட ஆரம்பித்தார்கள். அதைத் தொடர்ந்து பாரி, விமல், சொப்னா, பாண்டுரங்கன், வாகீசன், பரிமளம், நர்ஸ் எல்லோருமே பார்வைக்குப் பட்டார்கள்.

நந்தினியின் மூளைப் பிரதேசத்திற்குள் சட்டென்று அந்த யோசனை மின்னல் தெறித்தது.

'வேண்டாம்..! இப்போது சொல்லக் கூடாது. பார்வை எனக்குத் தெரிகிற விஷயத்தை இப்போதே வெளிப்படுத்திவிடக் கூடாது.. இரண்டு நாட்கள் கழித்து கண் தெரிகிறது என்று சொல்லிக் கொள்ளலாம்... பிரதாப்பின் கொலை விஷயமாய் என்மீது சந்தேகம் திரும்பினாலும் தப்பித்துக்கொள்ளலாம்...'

"என்ன நந்தினி... கண் தெரியுதா...?"

"நான் முன்னாடி நிக்கிறேனே... தெரியுதா...?"


"கதவு பக்கமா பார்க்காதேம்மா... கண்ணைக் கூசும்... லெப்ட் சைட்ல திரும்பி ஜன்னல் பக்கமா பாரு..."

"அண்ணி... நான் தெரியறேனா...?"

அறை பூராவும் குரல்கள் எதிரொலிக்க- நந்தினி மட்டும் மௌனமாயிருந்தாள், ஒரே இலக்கை வெறித்துப் பார்த்தபடி.

"என்னம்மா... ஒண்ணும் பேசாமே இருக்கே...?"

"டாக்டர்...!"



"ம்..."

"எனக்கு ஒண்ணுமே தெரியலை டாக்டர். கண்ணு முன்னாடி வெள்ளையா ஒரு திரையைத் தொங்கப் போட்ட மாதிரி இருக்கு. அவ்வளவுதான்..."

மனோகர் டேவிட்டும் குணசீலனும் திகைத்துப்போய் ஒருத்தரையொருத்தர் பார்த்துக்கொள்ள, மற்றவர்கள் அதிர்ந்து போனார்கள்.

"கண்ணு ரெண்டையும் கொஞ்சம் முழிச்சுப்பார்க்கிற மாதிரிப் பாரம்மா..." டேவிட் மனோகர் சொல்ல அப்படியே பார்த்தாள்.

"ஒண்ணுமே தெரியலை டாக்டர்..."

பாரி பதற்றமாய் அவளுடைய கைகளைப் பற்றிக் கொண்டான். "அவசரப்படாமே கொஞ்சம் மெதுவா ட்ரை பண்ணிப்பாரு நந்தினி."

"இல்லீங்க... எனக்கு ஒண்ணுமே தெரியலைங்க...!"

டாக்டர் மனோகர் டேவிட் அருகில் வந்து- நந்தினியின் கண்ணிமையைத் தாழ்த்திப் பார்த்தார். கையிலிருந்த பென் டார்ச்சால் ஒரு சின்ன வெளிச்சக் கொத்தை உற்பத்தி செய்து அவளுடைய கண்ணுக்குள் பாய்ச்சினார்.

"வலி ஏதாவது தெரியுதாம்மா..?"

"இல்ல டாக்டர்..."

"எரிச்சல்...?"

"ஊஹு"...ம்..."

"கண்ணுக்கு முன்னாடி வெள்ளையா திரை தொங்கற மாதிரி இருக்குன்னு சொன்னே...! அந்தத் திரையில ஏதாவது பிம்பம் அசையற மாதிரி தெரியுதாம்மா...?"

"ஊ...ஹு"...ம்.."

"அப்படி படுக்கையில கொஞ்சம் சாஞ்சு படும்மா...!"- டாக்டர் சொன்னார்.

நந்தினி படுத்துக்கொள்ள- அருகிலிருந்த நாற்காலியில் உட்கார்ந்து அவளைத் தீவிரமாகப் பரிசோதிக்க ஆரம்பித்தார் மனோகர் டேவிட்.

(தொடர்ந்து வரும்)

---

### வல்வெட்டித்துறையிலிருந்து அமெரிக்காவரை கப்பலோட்டிய தமிழர்கள்.

## பயணம் - 03

# 'அன்ன பூரணி அம்மா'

பாஸ்போர்ட் எடுக்க வேண்டும், விசா எடுக்க வேண்டும்; விமானத்தில் ஏறிக்குந்த வேண்டும்; அமெரிக்கா போய்ச் சேர்ந்து விடலாம்!.

"அமெரிக்காவுக்கு எப்படிப் போகலாம்?" என்று யாராவது கேட்டால் இப்படித்தான் என்னால் பதில் சொல்லமுடியும்.

ஆனால் பாய்மரக்கப்பலிலே அமெரிக்காவுக்குச் சென்ற பயணக் கதையைக் கேட்கக் கேட்க எனது தேகமெல்லாம் புல்லரித்தது.

இந்தப் பயணக்கதையை எழுதுவதற்காக, அந்தப் பாய்மரக்கப்பலில் சாகசப் பயணம் நடாத்திய சிலரை சந்தித்துப் பல நாட்கள் பேசினேன்.

சிலர் இன்று உயிரோடில்லை. ஆனாலும் அவர்களுடைய வீரசாகசங்களைக் கேட்டறிந்து கொண்டேன்.

'வளரும் பயிரை முளையில் தெரியும்' என்பார்கள்.

அந்த மனிதன் வாழ்க்கையைப் பொறுத்தவரையில் இது நூற்றுக்கு நூறு உண்மைதான்! கடலோடும் கலையில் வல்வெட்டித்துறையில் முன்னோடியாகத் திகழ்ந்தவர்களில் ஒருவரான புண்ணியமூர்த்தித் தண்டையலுக்கு இந்தியாவிலுள்ள அதிராம்பட்டின கப்பல் முதலாளியிடமிருந்து அழைப்பு வந்தது!

கப்பலோட்டி பொருள் ஈட்டித்தர வல்லவர்கள் வல்வெட்டித்துறைத் தண்டையல்கள் என்பதைத் தென்னிந்திய கப்பல் முதலாளிகள் நன்கு தெரிந்து வைத்திருந்தார்கள்!

புண்ணியமூர்த்தித் தண்டையல் ஊர்காவற்றுறையிலிருந்து தோணியொன்றில் தான் அதிராம்பட்டினத்துக்குச் சென்றார்.

முப்பது அல்லது நாற்பது மைல்களுக்கு இடைப்பட்ட தூரம்தான், ஊர்காவற்றுறையிலிருந்து தென்னிந்தியாவிலுள்ளது அதிராம்பட்டினம்.

குஞ்சியப்பு, மாமன் வீட்டுக்குப் போய் வருவது மாதிரித்தான் வல்வெட்டித்துறைக் கடலோடிகளுக்குத் தென்னிந்தியா.

புண்ணியமூர்த்தித் தண்டையல் அதிராம்பட்டினம் நோக்கித் தோணியில் சென்று கொண்டிருந்தபோது அந்தத் தோணியில் ஒன்பது வயது கூட ஆகாத சிறுவன் ஒருவனும் இருந்தான்!.

ஆழ்கடலில் போய்க்கொண்டிருக்கிறோமே என்ற சிறிதளவு பயம் கூட இல்லாமல் குமுறும் அலைகளைக் கிழித்துக் கொண்டு அசைந்து அசைந்து-பேரிரைச்சலுக்கிடையே செல்லும் தோணிக்குள் இருந்த அச்சிறுவன் வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தான்.

தண்டையலுக்கு அச்சிறுவன் மருமகன்.!

ஒரு காலத்தில் பாய்மரக்கப்பலில் வல்வெட்டித்துறையிலிருந்து அமெரிக்காவுக்கு அச்சிறுவன் சாதனைப்பயணம் செய்வான் என்று எவருக்குத்தான் தெரியும்? 1919ம் ஆண்டில் இச்சம்பவம் நடந்தது!

'முளையில் தெரிந்த' அச்சிறுவன் இரத்தினசாமி. பாய்மரக் கப்பலில் அமெரிக்காவுக்குச் சென்ற கடலோடிகளில் ஒருவர்.

ஐயாத்துரை இரத்தினசாமியை வல்வெட்டித்துறை 'வித்தனை' என்ற இடத்திலுள்ள அவரது இல்லத்தில் சந்தித்தேன்.

நான் சந்தித்தது ஒன்பது ஆண்டுகளுக்கு முன்னர். இப்போது அவருக்கு வயது 74.

வேட்டிகட்டியிருந்தார். வெறும் மேலுடன் இருந்த அவரது தோற்றமும், பேச்சும், துணிச்சல்காரராக இருக்கவேண்டுமென்பதை எடுத்த எடுப்பிலே காட்டி விட்டன!

தனது மாமா புண்ணியமூர்த்தித் தண்டையலுடன் சேர்ந்து தான் கடலோடு விளையாட ஆரம்பித்த நினைவுகளை-ஒன்பது வயதிலிருந்து சொல்லத்தொடங்கினார்.

"அதிராம்பட்டினத்தில் கப்பலை முதலாளியிடமிருந்து பொறுப்பேற்றுக் கொண்ட எனது மாமா, அங்கிருந்து பிடிகரணையும், அண்ணாமலை வெள்ளை அழகான நாம்பன் மாடுகள் நூறு அளவிலும் ஏற்றிக்கொண்டு ஊர்காவற்றுறை நோக்கி வந்தார்........

'முகமட் ஹஜி' தான் அந்தக் கப்பலின் பெயர்.

முஸ்லிம் முதலாளிக்குச் சொந்தமான கப்பல்.

சமையல் செய்கிறவர்களுக்கு உதவியாக 'எடுபிடி' செய்து கொடுப்பேன்.

பதினோராவது வயதில் எனது மாமாவுடன் கோக்கோநாடாவுக்குச் சென்று வந்த நினைவுகள் என் மனத்திரையில் இப்போதும் பளிச்சிடுகின்றன.

கச்சான், எள்ளு, கடலை போன்றவற்றை கோக்கோநாடாவிலிருந்து ஏற்றிக் கொண்டு கப்பல் திரும்பும்.

ஊர்காவற்றுறை, காங்கேசன்துறை, வல்வெட்டித்துறை, பருத்தித்துறை ஆகிய துறைகளில் கொண்டுவந்த பொருட்களை இறக்குவோம்.

> **வல்வெட்டித்துறையிலிருந்து அமெரிக்காவரை சென்ற 'அன்ன பூரணி அம்மா' கப்பல் பற்றிய சுவையான உண்மைக் கதை. விறுவிறுப்பான விவரிப்பால் நம்மை அக்காலத்திற்கே இழுத்துச் செல்கிறார் ராஜகோபால்.**

படிக்காமல் கடலோடித்திரிவதிலேயே ஆர்வமாக இருந்த என்னை கெட்டு ஒழிந்து போகப் போகிறேனே என்று சொல்லி வல்வெட்டித்துறை சிதம்பரக் கல்லூரியில் படிக்க விட்டார்கள்.

பன்னிரண்டாவது வயதில் படிக்கத் தொடங்கினேன்.

நன்றாக ஞாபகம் இருக்கிறது.


1929 ஆம் ஆண்டு-

அப்போது எனக்கு இருபத்தொரு வயது.

படிப்புக்கு முற்றுப்புள்ளி வைத்து விட்டு மலேயாவுக்குப் போய்விட்டேன்.

வேலை தேடினேன் அங்கு! என் பொல்லாத காலம் அங்கு ஆட்குறைப்பு நடந்து கொண்டிருந்தது.

மூன்று வருடம் எப்படியோ அங்கு காலத்தைப் போக்கிவிட்டு வீடு நோக்கி ஓடிவந்தேன்!



வல்வெட்டித்துறைக்குத்தான்!

மீண்டும் கப்பல் என்னை அழைத்தது.

என்னைக் கடலோடியாக்கிக் கொள்ள முடிவுசெய்தேன்.

மலபார், கொச்சிக்குப் பயணம் தொடர்ந்தது.

இங்கிருந்து புகையிலை கொண்டு செல்வோம். கள்ளிக்கோட்டிலிருந்து ஓடுகளைக் கொண்டு வருவோம்."

இரத்தினசாமி பழைய சம்பவங்களை ஒன்றன்பின் ஒன்றாக இரை மீட்டிக் கொண்டிருந்தார்.

எப்படியோ-

கடலில் மிதந்து உலகத்தைச் சுற்றிப் பார்த்து விடவேண்டுமென்ற ஒரு இலட்சியம் அவர் அடிமனதில் பசுமரத்தாணி போல் பதிந்துவிட்டது.

ஜெர்மனியர் ஒருவருடன் அவரது நவீன 'பிளாஸ்டிக்' வள்ளத்தில் அவருக்கு உதவியாக இருந்து உலகத்தைச் சுற்றத் தயாரானபோது தனது உறவினர் ஒருவர் தடுத்து நிறுத்திய சம்பவத்தை இரத்தினசாமி இன்னமும் மறக்காமல் சொல்கிறார்.

திருமலைத் துறைமுகத்துக்கு ஒஸ்கார்ஸ்க் என்ற ஜெர்மனியர் வள்ளத்தில் வந்து சேர்ந்தார்!

அவர் திரும்பிச் செல்லும்போது தனக்கு உதவியாக ஒருவரைக் கூட்டிச் செல்ல விரும்பினார்.

இரத்தினசாமிக்கு அவரது நட்புக் கிடைத்தது.

**ஏ.கே. ராஜகோபால்**

இரத்தினசாமியின் துடிப்பு ஜெர்மனியருக்குப் பிடித்து விட்டது.....!

அவருடன் போவதற்கு எல்லாமே தயார். கடைசி நேரத்தில் இரத்தினசாமியை அவரது உறவினர் ஒருவர் தடுத்து நிறுத்தி விட்டார்.

1936-ம் ஆண்டு இந்தச் சந்தர்ப்பத்தை அவர் இழந்தார்- இந்தக்கவலை அவரைச் சிறிது நாட்கள் பெரிதும் வாட்டியது.

எப்படியாவது கப்பலில் உலகம் சுற்றியே தீருவதென்ற முடிவுக்கு வந்தார்!

ஆனாலும் இவ்வளவு விரைவாக அந்தச் சந்தர்ப்பம் தனக்கு வரும் என்று இரத்தினசாமி நினைத்திருக்கவில்லை.

(அடுத்த வாரமும்...)


படிப்பகம்

www.padippakam.com




31

**பட்டுக்கோட்டை பிரபாகர்**

"நீங்க ஒரு கொலை செய்யணும் முடியுமா?" என்று துர்க்கா கேட்டதும் மைக்கல் அல்ஃபோன்ஸா சில விநாடிகள் அவளை உற்றுப் பார்த்தான். பிறகு ஏதோ ஒரு மகத்தான ஹாஸ்யம் கேட்டவன் போல சிரிக்கத் தொடங்கினான்.

"ஏன் சிரிக்கிறீங்க?" என்றார் ஈஸ்வர் புரியாமல்.

ஆஷ்ட்ரேயில் காத்திருந்த புகையும் சிகரட்டை எடுத்து தொடர்ச்சியாக மூன்று முறை இழுத்து புகை பரப்பி அதை அழுத்தி நசுக்கி விட்டு, "கொல்லன் பட்டறைக்குப் போய் வண்டிக்கு ஒரு அச்சாணி செய்யணும்-முடியுமான்னு கேள்வி கேட்டா அவன் சிரிக்கமாட்டானா? கொலை பண்றது எனக்குத் தொழில். என்கிட்ட வந்து முடியுமான்னு கேட்டா எப்படி? யாரைன்னு செல்லுங்க, எப்போ நடக்கணும்னு சொல்லுங்க போதும்," என்றான் அல்ஃபோன்ஸா.

"என் மகளைக் கல்யாணம் பண்ணிக்கப்போற சந்திரசேகரை நீங்க கொலை செய்யணும்!"

"கொலை அவசியம் தானா? அவனைத் தனியா தள்ளிக்கிட்டு வந்து, அவன் உடம்புல ரெண்டு மூணு நரம்புக்கு சுளுக்கு எடுத்துட்டு உங்க வழிக்கு வராம இருக்கச் சொல்லி மிரட்டி வெச்சா போதாதா?"

"மத்த விஷயத்துல மிரட்டல், அடி உதை இதெல்லாம் பலன் கொடுக்கும். காதல் விஷயத்தில மட்டும் இது வொர்க் அவுட் ஆகாது. அதுக்கு சக்தி அதிகம். எல்லா மிரட்டல்களையும் தாண்டி சாதிக்கத்துடிக்கும் இந்தக் காதல். அவன் என் பொண்ணு மேல அழுத்தமான காதலை வளர்த்து வைச்சிருக்கான். அவன் மனசுல சந்தேகத்தை ஏற்படுத்தி, அவளை விட்டு விலக வைக்க நாங்க செஞ்ச பெரிய முயற்சிகள் தோத்துடுச்சி. அவன் ரொம்ப பிடிவாதக்காரன். ஆள் பலம் பணபலம் அவனுக்கும் இருக்கு, அதனாலதான் கடைசி வழியா இந்த வழியை யோசிச்சோம்!" என்றாள் துர்க்கா.

அல்ஃபோன்ஸா தன் தாடையை லேசாகத் தடவிக் கொண்டான். கொஞ்சம் விஸ்கியைக் கிளாஸில் ஊற்றி எதுவும் கலக்காமல் கவிழ்த்துக்கொண்டான்.

"ரைட்டு! செஞ்சிடலாம். அவன் ஃபோட்டோ, அட்ரஸ் எல்லாம் கொண்டாந்திருக்கீங்களா?"

துர்க்கா கைப்பையிலிருந்து ஒரு சிறிய கவர் எடுத்துக்கொடுத்தாள்.

"இதில எல்லா விபரமும் இருக்கு!"

"இது எப்போ நடக்கணும்?"

"இன்னைக்கு வியாழன். வர்ற ஞாயித்துக்கிழமை காலையில அவங்க ரெண்டு பேரும் இரகசியக் கல்யாணம் செய்துக்கிறதா திட்டம்."

"அப்போ இன்னைக்கு இராத்திரியே முடிச்சிடவா?"

"வேணாம். என்னை ஏமாத்திட்டதா அவங்க ரெண்டு பேரும் சந்தோஷப் பட்டுக்கிட்டிருக்காங்க. இந்த சந்தோஷம் ரெண்டு நாளைக்காவது அவங்களுக்கு நிலைக்கட்டும்."

"அப்படின்னா சனிக்கிழமை முடிச்சிடவா?"

"ரைட்டு! விடிஞ்சா தன் திட்டப்படி கல்யாணம் நடக்கப் போகுதுன்னு அந்த மதுமிதா நம்பிக்கிட்டு இருப்பா. அந்த நம்பிக்கையில இடி விழணும்!"

"நடத்திடலாம். கவலையை விடுங்க. அப்புறம்..."

"சொல்லுங்க!"

"முன் விரோதத்தால திட்டமிட்டு நடந்த கொலை மாதிரி இது தெரிஞ்சா உங்க பக்கம் பொலீஸ் பார்வை திரும்பறதுக்கு வாய்ப்பு இருக்கு இல்லையா?"

"ஆமாம்.."

"அதனால இது வழிப்பறி, திருட்டுக்காக நடந்த கொலை மாதிரி பொலிஸை நம்ப வெச்சிடட்டுமா?"

"அப்படியே செய்யுங்க. எக்காரணம் கொண்டும் இதில என் பேர் சம்பந்தப்படக் கூடாது."

"சம்பந்தப்படாதுங்க மேடம்!"

"வேற ஏதாவது பேசணுமா இதில்?"

"லேசா தட்டி வைக்கிற வேலை. ஆஸ்பத்திரியில படுக்க வைக்கிற வேலை- இந்த மாதிரி இருந்தா இலவசமாகவே செய்து கொடுப்பேன். இதில ரிஸ்க் அதிகம். நானே நேரடியா இறங்க வேண்டியிருக்கும். அதனால..."

"நீங்க தயங்க வேண்டியதில்லை. உங்களுக்கு எவ்வளவு வேணும்? செய்யப் போற வேலைக்கு உண்டான கூலியைக் கேக்கறது தப்பில்லை, சொல்லுங்க."

"எவ்வளவு தரலாம்னு நீங்க மனசுல ஐடியா வெச்சிருக்கீங்க?"

"இதென்ன காய்கறி வியாபாரமா? வழக்கமா நடத்திக்கிட்டு இருக்க? நீங்க தான் கேக்கணும்."

"அப்படியா! இந்தக் கொலை நடக்கறதால உங்களுக்கு என்ன லாபம்னு சொல்லுங்க!"

"மதுமிதா மறுபடி என் கட்டுப்பாட்டுக்குள்ள வந்துடுவா."

"எனக்குப் பணக் கணக்கில் சொல்லுங்க. அப்படி மதுமிதா உங்கள் கட்டுப்பாட்டுக்குள்ளே வர்றதால உங்களுக்கு என்ன லாபம்?"

"அவளுக்கு மார்க்கெட் இருக்கிறவரைக்கும் நடிக்க வைப்பேன். அவ நடிச்சி சம்பாரிச்சுக் கொடுக்கிறதெல்லாம் லாபம்தான். ஆனா சினிமால யாருக்கு எத்தனை வருஷம் மார்க்கெட் இருக்கும்னு கியாரண்டியா சொல்ல முடியாது. வரிசையா ரெண்டு படம் விழுந்திருச்சின்னா வீட்ல சும்மா உட்கார வெச்சிடுவாங்க."

"ரொம்ப சாமர்த்தியமா பேசறீங்க. சரி, அந்த விபரம் எல்லாம் எனக்கு அநாவசியம். எனக்கு அஞ்சி இலட்சம் கொடுப்பீங்களா?"

"அஞ்சி இலட்சமா?"

"என்ன இவ்வளவு அதிசயப்பட்டுக் கேக்கறீங்க? சினிமாவுல இருக்கிற உங்களுக்கு அஞ்சி இலட்சம் பெரிய தொகையா? நான் அதிகமா எதுவும் கேக்கலைன்னு நினைக்கிறேன். ஒரு உயிரை எடுக்கிறது சாதாரண மேட்டரா என்ன?"

துர்க்கா யோசனையில் ஆழ்ந்தாள்.

ஈஸ்வர் அவள் காதருகில் குனிந்தார்.

"துர்க்கா, உனக்காக இலவசமா செஞ்சி தருவான்னு நினைச்சியா? பேசாம இந்த ஐடியாவை ட்ராப் பண்ணிடலாமா?" என்று கிசுகிசுப்பாகக் கேட்டார்.

அவரை முறைத்துவிட்டு, "அல்ஃபோன்ஸா, நீங்க சொன்ன மாதிரி இதைத் திருட்டுக்காக நடந்த கொலையா செட்டப் செஞ்சிடுவீங்க தானே?" என்றாள் துர்க்கா.

"அதெல்லாம் கச்சிதமா செஞ்சிடுவேன் மேடம்."

"ரைட்டு. அஞ்சி இலட்சம் தர்றேன். அட்வான்ஸ் ஒரு இலட்சம் நாளைக்குத் தர்றேன். மீதிப் பணம் வேலை முடிஞ்சதும் தர்றேன்."

"எனக்கு அட்வான்ஸ் எதுவும் தேவையில்லைங்க. வார்த்தை போதும். மொத்தப் பணத்தையும் காரியத்தை முடிச்சிட்டு நான் வாங்கிக்குவேன். நீங்க புறப்படலாம்."

இருவரும் எழுந்து கொண்டார்கள்.

"வர்றேன் அல்ஃபோன்ஸா!"

"ஒரு நிமிஷம் மேடம். கொடுத்த வாக்கை காப்பாத்தறதில நீங்க எப்படிப் பட்டவங்கன்னு எனக்குத் தெரியாது. ஆனா அப்படிக் காப்பாத்தாதவங்ககிட்ட நான் ரொம்பவும் கேவலமா நடந்துக்குவேன். சும்மா ஒரு தகவலா சொன்னேன். புறப்படுங்க."

அவனைத் திரும்பிப் பார்த்துவிட்டு, வேகமாக நடந்தாள் துர்க்கா. அவளைப் பின் தொடர்ந்து வந்து காரை ஸ்டார்ட் செய்தார் ஈஸ்வர்.

கார் ஓடிக்கொண்டிருந்தது.

"துர்க்கா!" என்றார் ஈஸ்வர்.

"என்ன?"

"அநாவசியமா ஒரு பெரிய வில்லங்கத்தில மாட்டிக்கப் போறோமோன்னு எனக்குக் கவலையா இருக்கு."

"இதில என்ன வில்லங்கம் இருக்கு? திருட்டுக்காக கொலை நடந்ததா அவன் செட்டப் செய்யப் போறான். அல்ஃபோன்ஸா வரைக்குமே பொலிஸ் வராது. அப்படியே வந்தாலும் இதைச்செய்யச் சொன்னது நாம தான்னு அவன் கண்டிப்பா காட்டிக் கொடுக்கமாட்டான்."

"எப்படி நம்பறது?"

"சில விஷயங்களை நம்பித்தான் ஆகணும்!"

"எனக்கென்னமோ..."

"கொஞ்சம் பேசாம இருக்கீங்களா? எனக்கு எல்லாம் தெரியும்!" என்று துர்க்கா அதட்டலாகச் சொன்னதும் வாயை மூடிக் கொண்டார் ஈஸ்வர்.

அந்த ஆஸ்பத்திரியின் ஸ்பெஷல் வார்டில் மதுமிதாவின் அறையில் மேஜையின்மேல் சுவாமிப்படங்கள் சுவரோரமாகச் சாய்த்து வைக்கப்பட்டு, புதுமாலைகள் அணிவிக்கப்பட்டிருந்தன. இரண்டு குத்து விளக்குகள் எரிந்து கொண்டிருந்தன. ஊதுபத்திகள் புகைந்து கொண்டிருந்தன.



புதுப்பட்டுப் புடவையில் மதுமிதா நின்றிருந்தாள். பட்டு வேஷ்டி சட்டையில் சந்திரசேகர் நின்றிருந்தான். அருகில் சீஃப் டாக்டரும், சாரியும், சந்திரசேகரின் நண்பன் ஒருவன்- கழுத்தில் கேமிரா வைத்தொங்க விட்டிருந்தான். தோளில் சிறிய கையடக்க வீடியோ கேமிராவைத் தாங்கி அவர்களைக் கவர் செய்து கொண்டிருந்தான்.

சாரி தன் வாட்சில் மணி பார்த்துவிட்டு, "தம்பி, முகூர்த்த நேரம் வந்துடுச்சு!" என்றார். தனியாக வைக்கப்பட்டிருந்த ஒரு மாலையை எடுத்துக் கொடுக்க, அதை சந்திரசேகர் மதுமிதாவுக்கு அணிவித்தான். மதுமிதாவிடம் தரப்பட்ட மாலையை சந்திரசேகருக்கு அணிவித்தாள்.

சாரி எடுத்துத் தந்த தாலியை டேப்ரெக்கார்டரில் நாதஸ்வரம் முழங்க சந்திரசேகர் மதுமிதாவுக்குக் கட்ட... சாரியும், டாக்டரும், வீடியோ கிராஃபரும் கை தட்டினார்கள்.

"கங்கிராஜுலேஷன்ஸ் மதுமிதா!" என்றார் டாக்டர். சந்திரசேகரின் கையைப்பற்றிக் குலுக்கி வாழ்த்துக்கள் சொன்னார்.

"இத்தனை சிம்பிளான ஒரு கல்யாணத்தை என் அனுபவத்தில இன்னைக்குத்தான் பார்க்கறேன். நல்லா இருங்க!" என்றார்.

அந்த அறையிலிருந்த டெலிஃபோன் ஒலித்தது.

(தொடர்ந்து வரும்)

"முழு மனச்சாட்சியுடன் விமரிசனம் எழுதுவது சிரமம். நன்றாக இல்லை என்று உண்மையை எழுதினால், பட முதலாளிக்கு வருத்தம் ஏற்படும். வேண்டுமென்றே சிறப்பாக எழுதினால், 'குப்பைப்படத்தை நன்றாக எழுதியிருப்பதாக எழுதியிருக்கிறானே... பணம் வாங்கி இருப்பான்' என்று இரசிகர்கள் பேசுவார்கள். அதனால்தான் பட்டும் படாமல் வழவழாவென்று விமரிசனம் எழுத நேரிடுகிறது."

ஒரு கட்டுரையில் வி.எஸ். சந்தரராஜன்,
'கலை'-ஜுலை 1949 இதழில்...

# நில்-கவனி-முன்னேறு

**கவியரசு கண்ணதாசன்**

**இயக்குநர் கே. பாலசந்தரை படம் பிடித்துக் காட்டுகிறார் கவியரசு கண்ணதாசன்! மனிதர்களது குணாம்சங்களை விவரிப்பதில் கவிஞர் கில்லாடி!**

எழுத்தாளராக இருந்து டைரக்டர்களாக வந்தவர்கள் பெரும்பாலும் வெற்றி பெற்றிருக்கிறார்கள். ஆனால் அவர்களிலே பலரிடத்திலே தன்னம்பிக்கையும் துணிச்சலும் குறைவு.

அவர்கள் பாட்டெழுதுகிறவர்களானாலும் சரி நடிப்பவர்களானாலும் சரி, அவர்களிடம் 'எனக்கு இப்படித்தான் இருக்கவேண்டும்' என்று கேட்கும் திறமை சில டைரக்டர்களிடம் மட்டும் உண்டு.

களிமண்ணைக் கொடுத்தால் எல்லோரும் பொம்மை பிடிக்கலாம். ஆனால் பிள்ளையார் பிடிக்கக் குரங்காய் முடியும் கதைதான் பெரும்பாலும் நடக்கிறது. சொல்லிக் கொடுப்பவர் தவறாகச் சொல்லிக் கொடுத்தால் நடிப்பவரும் அல்லவா தவறாக நடித்துவிடுவார்!

திக்கு வாயைத் திருத்தப் போன ஆசிரியர், தானும் திக்கிக் கொண்டு வெளியேறிய கதைதான் தெரியுமே!.

திறமையுள்ளவர்கள் மட்டுமே, புதிய திறமையாளர்களை உற்பத்தி செய்ய முடியும்.

அந்த வகையில் இன்று தலைசிறந்து விளங்குபவர் டைரக்டர் கே. பாலச்சந்தர்.

என்னை இந்த வாரம் 'கலாகேந்திராவின்' புதிய படத்திற்காக அழைத்திருந்தார்கள். இரண்டு மாத இடைவெளிக்குப் பிறகு அங்கே பாலச்சந்தரைச் சந்தித்தேன். கதை அம்சத்தில் துணிந்து தலைகீழான மாற்றங்களைச் செய்தவர் பாலச்சந்தர். 'கெட்டுப்போனவர்கள் கதையையே அவர் எழுதுகிறார்' என்ற குற்றச்சாட்டு உண்டு. சமுதாயம் அப்படித்தானே போய்க் கொண்டிருக்கிறது?

ராமாயணத்துச் சீதைகள் நாட்டில் எவ்வளவு பேர் இருக்கிறார்களோ அவ்வளவுக்கு 'அரங்கேற்றம்' கதாநாயகிகளும் இருக்கிறார்கள்.

பாலச்சந்தர் வெற்றியில் மயங்குவதுமில்லை; தோல்வியில் கலங்குவதுமில்லை.

இன்று தமிழ்ப்பட நட்சத்திரங்களில், பத்துக்கு ஒன்பதுபேர் அவரால் அறிமுகப்படுத்தப்பட்டவர்கள். உச்சத்திலிருக்கும் ரஜனிகாந்த், கமலஹாசனிலிருந்து அகால மரணமடைந்த ஷோபா வரையில் அனைவருமே அவரது சிருஷ்டிகள்தான்.

பாலச்சந்தர் விரும்பினால் இன்று பத்து நட்சத்திரங்களை ஒன்றாக வைத்துப்படம் எடுக்க முடியும். ஆனால் அவர் ஒவ்வொரு படத்திலும் இரண்டொரு புது முகங்களைப் படவுலகிற்குக் கொண்டுவருகிறார்.

அப்படிப் புதுவெள்ளம் வந்துகொண்டே இருக்கவில்லையென்றால் இரண்டொரு நடிக-நடிகையரே ஏக சக்ராதிபதிகள் ஆகிவிடுவார்களல்லவா?

'பாமா விஜய'த்தில் நான் ஒரு பாடல் எழுதினேன்.

"வரவு எட்டணா செலவு பத்தணா" என்பது பல்லவி; அதில் ஓரிடம் 'பாமா விஜயம் கிருஷ்ணனுக்காக, இங்கே எதுக்காக? பாட்டிகளெல்லாம் குமரிகளாக மாறணும் அதுக்காக'-இதை பாலசந்தர் இரசித்தார். ஆனால் இதற்கு வாயசைக்க வேண்டிய நடிகை மறுத்துவிட்டார். காரணம் அவர் பாட்டியான பிறகும், குமரியாக நடித்துக் கொண்டிருந்தவர்.

பாலச்சந்தரோடு பழகிய இந்தப் பத்துப் பதினைந்து ஆண்டுகளில், எனக்கு ஒரு பொழுதும் கசப்பான அனுபவமே ஏற்பட்டதில்லை.

சில டைரக்டர்களிடம் பாட்டெழுதுவது என்றால் எனக்கொரு குஷி. அவர்களிலே பாலச்சந்தரும் ஒருவர்.

நல்ல குடை என்றால் அது நாட்பட உழைக்கவேண்டும். நல்ல டைரக்டர் என்றால், ஆயுள் காலம்வரை நிமிர்ந்து நிற்க வேண்டும்.

அடிப்படைத் திறமையுள்ளவர்கள் எப்பொழுதும் நிமிர்ந்தே நிற்பார்கள்.

எம்.ஜி.ஆர்., சிவாஜி, எம்.எஸ்.விசுவநாதன், கே.வி.மகாதேவன், டி.எம்.எஸ்., பி.சுசிலா ஆகியோரோடு நானும் தொழிலுக்கு வந்து முப்பது வருடங்களுக்கு மேலாகின்றன. எங்களுக்குப் பிறகு எவ்வளவோ பேர் வந்திருக்கிறார்கள். ஆனால் எங்கள் நாற்காலியைப் பறிக்கக்கூடிய மாதிரி இன்னும் யாரும் வரவில்லை. அந்தத் தனித்தன்மை பாலச்சந்தருக்கும் உண்டு.



சிந்தனையிலே தெளிவு இருக்கின்றவரையிலே, ஒரு மனிதன் தன்னைப் பற்றித்தான் பயப்பட வேண்டுமே தவிர, யாரைப் பற்றியும் பயப்படத் தேவையில்லை.

பாலச்சந்தர் தான் சொல்கின்ற மாதிரி செய்யக்கூடிய கம்பெனிகளை மட்டும் கையில் வைத்திருக்கிறார். எதிலும் யோசித்து ஈடுபடுகிறார். புதிய டைரக்டர்களைப் புகழும்போது வரைமுறை இல்லாமல் புகழ்ந்துவிடுகிறார். யாரைப் பற்றியும் கேவலமாகப் பேசுவதில்லை. நாற்பது வயதைத் தாண்டி விட்டார், ஆனால் வயது தெரியாது.

பாலச்சந்தருக்காக நான் இயற்றிய பாடல்கள் எவையும் வீணாவதில்லை.

ஸ்டுடியோ செட்டிலே நடந்து கொண்டிருந்த சினிமா ஷூட்டிங்கை முதன் முதலில் வீடுகளுக்குள்ளே கொண்டுபோன பெருமை பாலச்சந்தருக்கு உண்டு. இன்றுதான் எல்லோரும் அதைச் செய்து கொண்டிருக்கிறார்கள்.

'பாலச்சந்தர் வழி, பாலச்சந்தர் முறை' என்று தமிழ்ப் படவுலகில் தனி முறை; தனி வழியுண்டு.

அக்கவுண்டென்ட் ஆபீஸில் குமாஸ்தாவாக வேலை பார்த்த பாலசந்தர், தமிழ்ப்பட உலகில் புகுந்து ஆயிரத்துக்கு மேற்பட்ட குடும்பங்களை வாழ வைத்திருக்கிறார். அவர்களில் எத்தனை பேர் அவரிடம் நன்றியோடு இருப்பார்களோ எனக்குத் தெரியாது.

ஆனால் புலி நின்று பின்னால் திரும்பிப்பார்ப்பது வேட்டைக்காரனைக் கவனிக்கவே தவிர தனக்கு நன்றியுள்ளவனைக் கவனிக்க அல்ல

பாலச்சந்தரின் இரசனையும் திறமையும் தொடர்வதாக!



படிப்பகம்

www.padippakam.com

# உயிரே!

வயிற்று வலியால் புழுவாய்த் துடித்தாள் சீதா.

மாலை ஆபீஸிலிருந்து வீடு திரும்பிய வாசு சீதாவைப் பார்த்ததும், "என்ன சீதா- என்னாச்சு?" பதற்றத்துடன் கேட்டான்.

"அடிவயித்திலே வலியா இருக்குங்க. தாங்க முடியலே!" பல்லைக்கடித்தபடியே சொன்னாள்.

வலி பொறுக்க முடியாமல் அழுதிருந்ததை அவளது விழிகள் சொன்னது.

"எப்போதிலேர்ந்து இப்படி இருக்கு?"

"காலையிலேர்ந்து வலி இருக்கு. சுமா ராத்தான் வலி இருந்துச்சு. ஆனா நேரமாக ஆக அதிகமா இருக்கு" என்றாள்.

ஸ்கூல் சென்றுவிட்டு வந்த களைப்புடன் தூங்கிக் கொண்டிருந்தாள் நான்கு வயது தீபிகா.

"சரி.... நான் போய் ஆட்டோ கூப்பிட்டுக்கிட்டு வந்திடறேன். நாம டாக்டர்கிட்டே போவோம். தீபிகாவை பக்கத்து வீட்டுல



விட்டுட்டுப் போவோம். அவங்க பார்த்துக் கட்டும்." என்று கூறிவிட்டு அவசரமாய் வெளியேறினான் வாசு.

ஆட்டோ வந்து அது கல்பனா நர்ஸிங் ஹோமிற்கு விரைந்தது.

டாக்டர் கல்பனா சிரித்த முகமாய் வரவேற்றார்.

பரிசோதித்தார்.

இரத்தம், யூரின், ஸ்கேனிங் எனத் தொடங்கி.... "பயப்படும்படியா எதுமில்லே கருத்தடை சாதனத்தை ரொம்ப நாளா தொடர்ந்து போட்டிருந்ததாலே அந்த இடத்திலே புண்ணாகி ஸெப்டிக் ஆகியிருக்கு. இப்போ ஒரு இஞ்செக்ஷன் போடுகிறேன். மருந்து மாத்திரை எழுதித்தர்றேன். சாப்பிடுங்க. சரியாயிடும். அந்தக் கருத்தடை சாதனத்தை இப்போ எடுத்துடுவோம் கொஞ்ச நாளைக்கு நீங்க ரெண்டு பேரும் எச்சரிக்கையா இருங்க!" என்றார் டாக்டர்.

டாக்டர் சொல்லச் சொல்ல வாசுவிற்கு அதிர்ச்சியாய் இருக்க.....

சீதா அச்சத்தினால் வாசுவைப் பார்க்க முடியாமல் தவித்தாள்.

வீட்டிற்குத் திரும்பும் வழியில் வாசுவும் சீதாவும் எதுவும் பேசிக்கொள்ளவில்லை.

வீட்டிற்கு வந்தார்கள்.

வாசு பக்கத்து வீட்டிற்குச் சென்று தீபிகாவை அழைத்து வந்தான்.

சாப்பிட்டார்கள்.

பால் எடுத்துக் கொண்டு அறைக்குள் வந்தாள் சீதா.

பாலை வாங்கி கொண்ட வாசு "உட்காரு சீதா!" என்றான்.

அவள் அமர்ந்தாள்.

அருகில் தீபிகா உறங்கிக்கொண்டிருந்தாள்.

"எனக்குத் தெரியாமே... ஏன் இப்படி செஞ்சே?" அமைதியாய்க் கேட்டான் வாசு.

அவள் மௌனமாய் அமர்ந்திருந்தாள்.

"சொல்லு சீதா.... ஏன்?"

"நமக்கு தீபிகா மட்டுமே போதுங்கிறதாலேதான்."

"இப்படியொரு மடத்தனமான முடிவை நீ எப்படி எடுத்தே..?"

"நம்ம சாந்தி முகூர்த்தத்தப்போ. நீங்க என்கிட்டே பேசினது.... சொன்னது எல்லாமே தீபிகாவை நல்லபடியா பார்த்துக்கணும்.... அவமேலே அன்பாக இருக்கணும்... தாய் இல்லாத குறையே அவளுக்குத்தெரியக் கூடாது. நமக்குன்னு ஒரு குழந்தை பிறந்த பிறகு அவளை அலட்சியப்படுத்தக்கூடாது. என் மனைவி இறந்திட்டதாலே... எனக்கு உடல் சுகத்துக்காக நான் கல்யாணம் பண்ணிக்கலே. அவ பெண் குழந்தையா இருக்கா இப்போ வளர்க்கவும் சரி .... பிற்காலத்திலே ஒரு பெண்ணுக்குத் தாய் அவசியங்கிறதுனாலேயுந்தான் நான் மறு கல்யாணம் பண்ணிக்கிட்டேன்னு..... நீங்க திரும்பத் திரும்ப ராத்திரி முழுவதும் அதைப்பத்தியே பேசுனதாலே நான் இந்த முடிவுக்கு வந்தேன்." சொல்லி நிறுத்தினாள் சீதா.

"நான் அப்படி சொன்னதுக்குக் காரணம்... அந்த குழநதை வளர வளர இது நம்மோட அம்மா இல்லே. நம்ம அம்மா இறந்துட்டாங்க. தாய் இல்லாத பிள்ளை அப்படிங்கிற தாழ்வு மனப்பான்மை வந்திடக் கூடாதுன்னுதான். எந்தக் குறையும் தெரியாமே வளர்க்கணுங்கிறதுக்காக நான் சொன்னதைக் கேட்டு நீ இப்படியொரு தவறான முடிவுக்கு வந்துட்டியே?" ஆதங்கமாய்க் கேட்டான்.

சீதா பதில் பேசாமல் இருந்தாள்.....

"நமக்கு கல்யாணமாகி இவ்வளவு காலமாகியும் குழந்தை உண்டாகாம இருக்கேன்னு நான் கவலைப்பட்டுக்கிட்டே இருக்கேன். டாக்டர்கிட்டே 'செக்கப்'புக்குப் போயி யாருக்காவது ஒருத்தர்கிட்டே குறை இருக்குன்னு சொல்லி அது மனசுக்குக் கவலையா போயிடுமேன்னு நினைச்சிக்கிட்டிருந்தேன். ஆனா நீ என்னடான்ன.....?"

"ஏழைக் குடும்பத்திலே பிறந்த என்னை நீங்க கல்யாணம் பண்ணிக்கிட்டது எனக்கு வாழ்க்கைத் தரணுங்கிறதுக்காக இல்லே. தீபிகாவை நல்ல முறையிலே வளர்க்க ஒரு பொண்ணு தேவைங்கிறதுனாலேதான் பண்ணிக்கிட்டீங்க போலிருக்குன்னு நினைச்சேன். சாந்தி முகூர்த்தத்தப்போ நீங்க திருப்பித் திருப்பி அதையே சொன்னதும் எனக்கு ஒரு வாழ்க்கை அமைந்த வரையிலும் சரி அது போதும் நமக்கு. தீபிகாவுக்கு ஒரு நல்ல தாயா இருப்போம்னு முடிவு பண்ணேன்."

"உன்னோட நல்ல குணத்தை நினைச்சுப் பெருமைப்படறேன் சீதா. ஆனா நீ இவ்வளவு காலமாக என்னைப் புரிஞ்சிக்கலையேன்னு நினைச்சு வருத்தமா இருக்கு. தீபிகாவை உன் சொந்தக் குழந்தையா நினைச்சாலும் உனக்குன்னு ஒரு குழந்தை பிறக்கணும் சீதா. தாய்மையிலேதான் ஒரு பொண்ணோட வாழ்க்கை பூரணமடையுது. நான் தீபிகாவுக்கு அப்பா. அதே போல நான் உனக்கு கணவன். தீபிகாவுக்கு எப்படி ஒரு குறை இருக்கக்கூடாதுன்னு நினைக்கிறேனோ! அதே போல என் மனைவியான உனக்கும் எந்தக் குறையும் இருக்கக்கூடாதுன்னு நினைக்கிறேன். நமக்கும் ஒரு குழந்தை வேணும். தீபிகாவுக்கும் ஒரு உறவு வேணும்."

**பி.ஆர்.**

"தங்கமான மனசுங்க உங்களுக்கு!" கண்ணீர் பெருகக் கூறினாள்.

வாசு அவளை அருகில் அழைத்து ஆறுதலாய் அணைத்து முத்தம் பதித்தான்.

# நாணத்தால் அல்ல!

காட்டாற்று வெள்ளம்போல, நினைவுகள் திக்கின்றிப் பாய்ந்தோடின. அது கரையின்றிக் கடந்தபொழுதும், விடியவில்லை, என் கண்ணீர்போல.

திருமணம் முடிந்து, சாந்திமுகூர்த்தத்திற்காக அலங்காரம் செய்து கொண்டிருக்கும் எனக்குள் எழுந்த எண்ணப் புயலை எவர் இதயக்கரையில் வெட்கமின்றிக் கடந்து சென்று விளக்க முடியும்? எவர் விளங்கிக் கொள்வார்?- நான் தடுமாறுவது எனக்கு நன்றாகத் தெரிகிறது.

பருவம் தொட்டு வளர்ந்த கனவுகள், சிறகடித்து பறக்க வேண்டிய வேளையில், முடமாகிக் கிடக்கிறது. பௌர்ணமியைத் தரிசிக்க வேண்டித் தவமிருந்த அலைகள், ஏன் அதைக் காணும் நேரத்தில் நுரை என்ற திரை கொண்டு முகத்தை முக்காடு போட்டுக் கொள்ள வேண்டும்?



எல்லாம் இந்த அண்ணனால்தான்! நான் எவ்வளவோ மன்றாடினேன்:

"அண்ணே, இந்தச் சம்பந்தம் வேண்டாம்! மாப்பிள்ளை வீட்டுக்காரங்க ஏற்கனவே நம்ம சக்திக்குமீறிக் கேட்டு வாங்கிட்டாங்க! இப்ப கடைசியாக பத்திரிகை அடிச்ச பிறகு, 'மேலே 5 பவுன் போட்டால் தான் தாலி கட்டுவேன்'னு சொல்றது அயோக்கியத்தனம்! வேண்டாம்- இந்தக் கல்யாணத்தை நிறுத்திடு!" என்று கெஞ்சினேன்.

யார் கேட்டார்கள்? பாவம், அண்ணன், தன் ஒரே தங்கையின் கல்யாணத்தை எப்படி எல்லாமோ செய்ய ஆசைப்பட்டுக் கடைசியாக, எப்படியாவது செய்தால் போதுமென்ற நிலைக்கு வந்துவிட்டான்.

"என்ன ராணி! அவசரப்பட்டு மாப்பிள்ளைக்கு முந்தி நீ அணைச்சிடாதே..!" என்று என் காதோரம் சொன்னவளை நிமிர்ந்து பார்த்தேன்.

"லைட்டை!" என்று பலமாகக் கூற, அனைவரும் சிரித்துவிட்டார்கள்.

ஆனால் நான்?- என்னால் நடிக்கக்கூட முடியவில்லை. குழந்தையை எடுத்து ஆசையாகக் கொஞ்ச ஓடியவள், தவறுதலாக அக்குழந்தையின் நெஞ்சில் மிதித்துவிட்டுத் திகைத்து நிற்கும் நிலையில் நான் இருக்கிறேன். இந்த இரவு இப்பொழுதே விடிந்துவிடக்கூடாதா?

விடிந்துவிட்டால் மட்டும், என்ன வாழப் போகிறது? என்னைப் பெண் பார்க்க வந்து கொண்டிருந்தவர்களைப் போல மீண்டும் வரத்தான் போகிறது.

இப்போது போட்ட கடைசி 5 பவுனுடன் மேலும் 7 பவுன் சேர்ந்து பேசியிருந்தால், அந்த வி.ஐ.பி. உதவி மேனேஜர் கிடைத்திருப்பானோ? சே.. என்ன மட்டமான எண்ணம்! எப்படியெல்லாம் மனத்தை குழப்பிவிட்டார்கள்?

அந்த செயின் உறுத்த, அதைப் பார்க்கிறேன். எப்படியெல்லாம் மனத்தை குழப்பிவிட்டார்கள்?- என் பெண்மையைவிட, தாலியை விட தான்தான் உயர்வு என்று கூக்குரலிட்டு என் நெஞ்சின் மேல் ஊஞ்சலாடியது.

எனக்கு, என்னமோ அவன்... அவர் முதலில் செயினை மனதார மணந்து கொண்டு, இரண்டாம் தாரமா எனக்குத் தாலி கட்டியது போல தோன்றுகிறது. செயினை எடுத்து முதுகுப் பக்கம் போடுகிறேன்.

"ஐயா! என் மகளை ஏத்துக்க! நீ நல்லாயிருப்பே! பெருமாளே, உன் திருத்தலத்துக்கு நடந்தே வர்றேன்!" என்று அவள் முணுமுணுப்பதை, பலமுறை நான் கேட்டிருக்கிறேன். பாவிகள் எத்தனை பேர், அம்மாவின் வேண்டுகோளை வரதட்சணை என்ற காலால் மிதித்து எறிந்தார்கள்!

ஏதோ தூக்குத் தண்டனைக் கைதி, இறுதியாக ஜனாதிபதிக்குக் கருணை மனு போட்டுக் காத்திருப்பது போல், அம்மா ஒவ்வொரு முறையும் காத்திருப்பாள். இந்த முறை அவள் தப்பித்துக்கொண்டாள், ஆனால் நான்..?

ஒவ்வொரு முறையும் பெண் பார்க்க வருபவரைக் கதவின் இடுக்கு வழியே பார்த்தபடி, அவனை மனதார இரசிக்கவும் முடியாமல், வெறுக்கவும் முடியாமல், 'நம் விலைக்கு இது படியுமோ? இல்லையோ?' என்று எனக்குள் நடக்கும் மனப் போராட்டம்தான் எத்தனை பெரிய கொடுமை!

**என். ராஜா**

வீட்டின் சுண்ணாம்புச் சுவர் உதிர்ந்து ஆங்காங்கே செங்கல் தெரிவது போல தோன்றுகிறது. மாவிலைத் தோரணங்களுக்கிடையே சிலந்தி வலை பின்னியுள்ளதோ?

சேலையைப் பார்க்கிறேன். பச்சை நிறம்... ச்சே! இதில் கூட என் விருப்பம் இல்லை. மாப்பிள்ளைவீட்டாருக்கு ராசியான நிறம் என்று பச்சையில் எடுத்துவிட்டார்கள். பத்தாவது படிக்கும்போது, எனக்குப் பிடிக்காத தாவணியை எடுத்து வந்ததற்காக, அதை கொல்லைப் பக்கம் தூக்கி எறிந்தேன். அப்படி இச்சேலையை எறிய முடியுமா?

இனி நான் மாற வேண்டும். என் விருப்பம் என்று, அவர்கள் தங்களை விருப்பப்படி விதவிதமான முகமூடிகளை எனக்கு மாட்டுவார்கள். காலவெள்ளத்தில் என் முகம் எனக்கே மறக்கடிக்கப்படும். இல்லை. மறைக்கப்படும்!

எமக்கு இருப்புகொள்ளவில்லை. குழப்பத்தில் மயக்கமே வந்துவிட்டது. அவனை... அவரைப் பற்றி என் இந்த எண்ண ஓட்டம்! என் பிரச்சனைதான் என்ன? புரியவில்லை. பிரச்சனையே அவனா? அவரா?

கடைசி நேரத்தில் இந்த அதிகப்படியான நகைக்காக வீட்டில் ஒரு குருக்ஷேத்திரமே அரங்கேறிவிட்டது. அண்ணன் பணம் புரட்ட முடியாமல் திண்டாடி, விரக்தி அடைந்து, இறுதியில் தான் வாங்கிப்போட்ட செயினை அண்ணியிடம் கேட்க, அண்ணி மறுக்க, கோபத்தில் அண்ணன் செயினை அறுத்துவிட்டான்.

இப்பொழுது அண்ணி, அவள் அம்மா வீட்டிற்குக் குழந்தை கணேசோடு சென்றுவிட்டாள். நான் ஆவலோடு எதிர்பார்த்த ஓர் இனிய நிகழ்ச்சி எப்படியெல்லாம் 'சீர்பற்றாக் குறை' என்ற பெயரில் சீரழிக்கப்பட்டுவிட்டது!

இந்த மாதிரியான மாப்பிள்ளைதான் எனக்கு வாய்ப்பான் என்று முன்பே தெரிந்திருந்தால், இவனுக்கு துரோகம் கூட செய்திருக்கலாம்...ம். சே! என்ன வக்கிரமான உணர்வு!

இந்தத் தாலி மட்டும் ஏறாமல் இருந்திருந்தால், என்ன நடந்திருக்கும்? முழங்காலைக் கட்டிக்கொண்டு வானத்தை வெறித்து, தலையணையில் முகம் புதைத்துத் தூங்குகின்றோமா? இல்லையா? என அறியாமல் இருந்திருப்பேன்.

எதிர்வீட்டு விஜயாவின் முதலிரவு அனுபவத்தை அவளிடம் கேட்டு மயங்கியிருப்பேன். புத்தகத்தைத் திறந்து படிக்காமல், என் காவிய கதாநாயகன் என்னை அடைய, உயிரைப் பணயம் வைத்து வரும் அழகைக்கண்டு மெய் சிலிர்த்துப் போயிருப்பேன்.

இனிமேல் இந்த சுகமான கனவு ஆசைகளை மனத்தில் போட்டு அசைக்க முடியாது. நேரம் ஆகிக்கொண்டே போகிறது!

"சீக்கிரம் சூர்யா!" என்று அறைக்குள் வேகமாக வந்த அம்மா என்னைப் பார்த்து மெல்லிய புன்னகை செய்துவிட்டு, மிச்சமிருந்த மல்லிகைப் பூவையும் அள்ளி என் கூந்தலில் சூட்டிவிட்டு வெளியேறுகிறாள்.

நான், அம்மா சென்ற பாதையையே பார்க்கிறேன். 'அம்மா! நீதான் என்னைப் பெண் பார்க்க வரும் ஆட்களுக்காக எப்படி எல்லாம் பாசமாகப் பார்த்து ஏக்கத்தோடு காத்திருப்பாய்!'

நேரம் வந்துவிட்டது. முதலிரவு அறைக்குள் தள்ளப்படுகிறேன். என் முன்னே, தனிமையில் இரு கண்கள் சந்திக்கின்றன.

"கணவனே! உன்னை அணைக்க அல்ல, பார்க்கவே வெட்கப்படுகிறேன். ஆனால், நிச்சயம் நாணத்தால் அல்ல!"

# ஆறாத காயங்கள்

உத்ரன் அந்த ஆஸ்பத்திரியை விட்டு வெளியே வந்தான். முகத்தில் வெயில் சுள்ளென்று பட்டது. எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியிலும் வலி தெரிந்தது. பக்கத்தில் கைதாங்கலாக அணைத்து வந்த அப்பாவை பார்த்தான். அவர் முகத்தில் பயமும், வேதனையும் தெரிந்தது. இன்றைய இலங்கை வாழ் தமிழனின் முகத்தில் நிரந்தரமாக பச்சை குத்தப்பட்ட உணர்ச்சிகள். சொந்த மண்ணிலேயே அநாதைகளாக்கப்பட்ட மக்கள். தமிழனுக்கு விதிக்கப்பட்ட இந்த சாபத்திற்கு விமோசனமே கிடையாதா?

"அப்பா இனியும் என்னால் நடக்க முடியாது. நீங்க போய் ஆட்டோவை கூட்டி வாங்க. நான் இவ்விடத்திலேயே நிற்கிறேன். ப்ளீஸ் பா" உத்ரனின் கண்கள் நீரைக் கசிந்தன. இந்த வயதில் அப்பா தன்னால் அலைக்கழிவதை பார்க்கும்போது பாதுகாப்புப்படை கைது செய்து கொண்டு போய் அடித்ததில் தான் செத்திருக்கலாம் என்று தோன்றியது.

'இப்போது மட்டுமா அவரை அலைக்கழிக்கிறேன்? தன் நினைவு தெரிந்த நாளாய் தன்பொருட்டு அவர் அலைந்த அலைச்சல்' அவன் நினைவுகள் பின்நோக்கிச் சென்றது.

யாழ்ப்பாண மண்ணில் யுத்த சூழலிலேயே வாழ்ந்த அந்தக் காலங்கள். வெளியில் போய் திரும்பிவர கொஞ்ச நேரமானாலும் அம்மா வாசலோடு நிற்க, அப்பா சட்டையை போட்டுக்கொண்டு அவனைத் தேடி கிளம்பி விடுவார்.

"நான் என்ன சின்னக் குழந்தையா தொலைந்து போக?" யுத்தக்கருவின் ஆரம்பம் தெரியாமல் உத்ரன் அப்போது கோபப் பட்டதுண்டு! ஆனால் யுத்தம் வளர்ந்து பெரிதாகி கைவீசி நடக்கத் தொடங்க,உத்ரன் தனக்குத் தானே சிறையிட்டுக்கொண்டான். அநாவசியமாக வெளியில் திரிவது கிடையாது. அந்த வயதுக்குரிய சுற்றல்கள் கிடையாது.

வீட்டிற்குள் இருந்த பிள்ளைகளும் சுற்றிவளைப்பில் கைதாகி காணாமல் போவோர் பட்டியல் எண்ணிக்கையை கூட்டிக்கொண்டு போக அப்பா பயந்தார்.

"இவனை எப்படியாவது வெளியில் அனுப்பிட்டா பிறகு நாம நிம்மதியாக இருக்கலாம்!" அம்மாவிடம் அப்பா எப்போதும் பேசும் வார்த்தைகள். அதற்காக அவர் அலைந்த அலைச்சல் சொல்லி மாளாது. கப்பல் டிக்கெட்டுக்கு அலைந்து கொழும்பு கூட்டி வந்து, போதாததிற்கு ஏஜென்ஸி பின்னால் அலைந்து, அவன் லண்டன் பயணமாக விமானத்தில் ஏறிய அன்று அவர் முகத்தில் பிரிவுத் துயருக்குப் பதில் ஒரு நிம்மதி பரவி நின்றதை உத்ரனால் உணர முடிந்தது.

ஆனால் அன்று அவர் விட்ட நிம்மதிப் பெருமூச்சின் வெப்பம் குறையும் முன்பே இடைநடுவில் அவன் திருப்பி அனுப்பப் பட்டான்.

ஏஜென்ஸியில் வாய்மூல வாக்குறுதிகள். அதன் காரணமாக மகனுடன் ஊர் திரும்பாமல் தொடர்ந்து கொழும்பிலேயே தங்கினார். ஆனால் எந்தக் கைதுக்குப் பயந்து மகனை வெளியில் அனுப்ப எண்ணினாரோ அது கொழும்பிலேயே நடந்தது.

சந்தேகத்தின் பெயரில் கைது. அவனை வெளியில் எடுக்க மீண்டும் அலைச்சல். ஆனால் அந்த அலைச்சல் தந்த வேதனையை விட உத்ரன் காட்டிக்கொடுக்கப் பட்டது அவனுடன் படித்த ஒரு மாணவனாலேயே என்று அறிந்தபோது, அவர் மிகவும் நொந்து போனார். 'தமிழனுக்கு தமிழனே எதிரியா?' இந்தக் கேள்வி அவர் நெஞ்சின் வேதனையைக் கூட்டியது.

உத்ரனுக்கு இந்த செய்தி தெரிய வந்தபோது அவனும் கூட துடித்துப் போனான்.



**மட்டுநகர் நர்மி**

பள்ளிக்கூட நாட்களிலும் சரி, அவனது பல்கலைக்கழக வாழ்க்கையிலும் சரி அவனுக்கு எதிரிகள் இல்லை என்றே எண்ணியிருந்தான் உத்ரன். அந்தளவிற்கு எல்லோருடனும் நட்பாக பழகும் சுபாவம் உடையவன். ஆனால் அவனுக்குத் தெரியாமலே அவனுக்கு எதிரியை ஒரு 5'5" உருவாக்குமென்று அவன் சத்தியமாய் எண்ணவில்லை.

செதுக்கிய நாசி. நீண்ட கூந்தல். கவி பேசும் கண்கள்.சிவந்த நிறம் பெயர் பிரேமி. பல்கலைக்கழகத்தில் அவனுக்கு ஜூனியர்.

அவளின் கண்களில் தெரிவது மீனாவின் சாயலா? ஸ்ரீதேவியின் சாயலா? என்று மாணவர்கள் பட்டிமன்றம் நடத்தினார்கள். அவளுக்கு சுடிதார் அழகா, சட்டை அழகா, சேலை அழகா? என்று தங்களுக்குள் விவாதப்பட்டுக் கொண்டார்கள். அவள் சிரித்தால் சங்கீதம் என்றார்கள். பேசினால் குரல் தேன் என்றார்கள். மொத்தத்தில் மாணவர்களின் கனவுக்கன்னியாக, அவர்களை தன் அழகால் கட்டிப்போட்டவள், தன் அறிவால் பேராசிரியர்களை கட்டிப் போட்டாள்.

அவளுடன் பேசினாலே சொர்க்கம் என்று அலைந்த முட்டாள்களுள் ஒருவனாக இல்லையென்றாலும், உத்ரன் அவளின் அறிவார்ந்த பேச்சை இரசித்தவன்.

தமிழ் சங்கத்தின் தலைவனாக உத்ரன் இருந்தது, அவர்களுக்குள் பேசுவதற்கு நிறைய சந்தர்ப்பத்தை ஏற்படுத்தித் தந்தது. கெட்டிக்கார மாணவனாக உத்ரன் இருந்தது, அவனின் குரல் வளம் எல்லாம் அவளை கவரவே அவர்கள் நட்பு காதலாக மலர்ந்தது.

அவனுக்கு அவள் கிடைத்ததையிட்டு எல்லோரும் பொறாமைப்பட்டாலும் அடிபட்ட நாகமாக சீறியது முகுந்தன் மட்டும் தான். அவளிடம் தங்கள் காதலை வெளிப்படுத்தி அவள் நட்பையும் இழக்க வேண்டி வருமோ என்று எல்லோரும் பயந்திருந்த போது நேரடியாக அவளிடம் 'ஐ லவ் யூ' சொல்லி மூக்குடைபட்டவன்தான் இந்த முகுந்தன். பிரேமி உத்ரனை விரும்பியபோது முகுந்தனை மேலும் சீண்டிவிட்டனர் அவனின் நண்பர்கள்.

தன் பணம், அழகு, அந்தஸ்து எல்லாமே, படிப்பைத் தவிர மற்றப்படி மிகச்சாதாரண உத்ரனிடம் தோற்றுப் போனதை முகுந்தனால் ஜீரணிக்க முடியவில்லை. உத்ரனுக்கு எத்தனையோ வழிகளில் தொல்லை கொடுத்து வந்தான். பல்கலைக்கழகம் முடிந்து வெளியேறிய பின்பும் அவன் இப்படி கீழ்த்தரமான பழிவாங்கலில் ஈடுபடுவான் என்று உத்ரனால் நம்ப முடியாமலிருந்தது.

"உத்ரா பார்த்து ஏறப்பா?" அப்பாவின் குரலால் கலைக்கப்பட்டான். ஆட்டோ ஓடிக்கொண்டிருந்தது. வெளியே தெரியும் காட்சிகளில் மனம் பதியாமல், வெறித்து பார்த்தபடி அமர்ந்திருந்தான்.

"உத்ரா, இனியும் நாம கொழும்பில நிற்க வேண்டாமென்று நினைக்கிறன். என்ட நண்பனொருவன் மட்டக்களப்பிலிருக்கிறான். அவனிட்ட டெலிஃபோனில கதைத்தாப் போல நீ போறது சரிவர மட்டும் அங்க வந்து நிற்கும்படி 'சொல்லுறான். யோசித்துப் பார்த்ததில எனக்கும் அது தான் சரியென்று படுகுது. ஏனென்டா நம்மட ஊருக்கு போனால் நினைத்தவுடன் திரும்பி வர முடியாது. நீ என்னப்பா சொல்கிறாய்?"

உத்ரனுக்கு ஆயாசமாயிருந்தது. 'மட்டக்களப்பு மட்டும் பாதுகாப்பே' என்று வாய் மட்டும் வந்த கேள்வியை விழுங்கினான். தமிழனைப் பொறுத்தவரை இலங்கை மண்ணே பாதுகாப்பில்லை என்று தோன்றியது. கொழும்பை பாதுகாப்பு பிரதேசமாய் நினைத்து சனம் ஓடிவந்தது போக, இப்போது தமிழ் ஊர்களே பாதுகாப்பு என்று எண்ணும் அளவிற்கு நிலைமை மாறிப் போனதை நினைக்க சிரிப்பு வந்தது.

"சரியப்பா. ஏஜென்ஸிட்ட விபரம் சொல்லிப்போட்டு நாம மட்டக்களப்பிற்கு போவம்."

★★★

விமானம் இலண்டன் விமான நிலையத்தை அண்மித்து விட்டதாக விமானத்தில் ஒலிபரப்பான செய்தியை கேட்டபடி அமர்ந்திருந்தான் உத்ரன். பயந்து மட்டக்களப்பிற்குப் போனது, ஏஜென்ஸி ஏமாற்றாமல் அவனுடைய பிளைட் விபரம் அறிவித்த பின்பு மட்டக்களப்பிலிருந்து முதல் நாள் புறப்பட்டு, கொழும்பு நகரத்தையடையாமல் நேரடியாகவே கட்டுநாயக்கா சென்று விமானம் ஏறியது, எல்லாமே கனவு போல் இருந்தது.

விமானம் தரையை முத்தமிடத் தொடங்கியபோது, வயிற்றுக்குள் பட்டாம் பூச்சி பறந்தது. ஒரு கள்வனைப்போல வேறொரு நாட்டுக்குள் நுழைவது அவமானமாகப் பட்டது. ஆனால் தமிழனாகப் பிறந்தால் மான, அவமானமெல்லாம் பார்க்கக்கூடாதென்று தோன்றியது. இலண்டன் பொலிஸ் பிடித்து திருப்பி அனுப்பினால், நினைவே உதறிப் போட்டது.

இலண்டன் மண்ணில் கால் வைத்ததும் பாஸ்போட்டைக் கிழித்துப்போட்டான். கைதியானான். ஆனால் இலங்கையில் கைது செய்யப்பட்டபோது இருந்த பயம் இப்போது இருக்கவில்லை.

www.padippakam.com

# இலக்கிய நயம்

## அறிவும் பொறியும்

### தருவது ராதிகன்

"**வா**ரும் சிஷ்யரே!
ஐம்பொறிகள் யாவை?
அதை விளக்குக?"

"கண், செவி, மூக்கு
வாய், மெய்!"

"ஐம்பொறி என்று
அழைப்பது ஏன்?"

"பற்றென்னும் புற்றில்
வீழ்த்தி விடும் அதனால்!"

"கண் தொழில் காண்பது
அது எப்படி பொறியாகும்?"

"புறத்தோற்றம் காட்டும்
அகத்தோற்றம் காட்டாது!
எந்தப் புற்றுக்குள்
எந்தப் பாம்பிருக்கும்
என்று காட்டாமல்
ஆபத்திலும் மாட்டிவைக்கும்!"

"செந்தமிழ் கேட்கும்
செவியை எப்படி
பொறி என்கிறாய்?"

"கேட்பதில்
எது மெய், எது பொய்
என்று பிரித்துத் தராது!
பொய்யை மெய்யாய்
எண்ணவைத்தும் சிக்க வைக்கும்!"

"கண்ணால் காண்பதும் பொய்
காதால் கேட்பதும் பொய்
என்கிறாய்?"

"ஆமாம் குருவே!
அது சத்தியமான வார்த்தை!"

"தீர விசாரித்தறியும்
வாயை ஏன்
பொறி என்கிறாய்?"

"பேசிப் பேசியே
வம்பு வளர்த்து
வழக்கு அழைக்கும்!

உண்டு உண்டு
உண்டி நிரப்பி
தொந்தி வளர்க்கும்!

இரு தொழிலுமே
கெடு தொழில்தான்!"

"ஆவியைச் சுமக்கும்
மெய்
ஏன் பொறியானது!"

"தழுவத் துணைதேடும்
உருகச் சுகம் தேடும்
காமத் தீயினிலே
வீழ்த்திப் பொசுக்கிவிடும்!"

"மெய் வெறுத்தீர்,
மூக்கு என்ன
பாவம் செய்தது?"



"வாசனையை நாடவைத்து
யோசனையை மழுங்கடிக்கும்!"

"மழுங்கடிக்கும் என்றா
கூறுகிறீர்?
நறுமணம் எது
நாற்ற மணம் எதுவென்று
பிரித்துத்தரும்
சிறப்பை ஏன் மறந்தீர்?"

"பிரித்துத் தருவதால்தான்
சந்தன வாசனைகளில்
சிந்தனை பாய்கிறது!
சுந்தர பெண்டிரில்
மனம் சன்னதமாகிறது!"

"வாசம் காட்டி
மோசம் செய்கிறது
மூக்கு என்கிறீரா?"

"ஆமாம் குருவே!
தாழம்பூவின் மணம்
அழைக்கும்!
உள்ளே பாம்பிருந்து
கொத்தும்!
மணபேதம் காட்டியென்ன
குணபேதம் காட்டவில்லையே!"

குரு மென்மையாக
புன்னகைத்தார்.

"கண்ணால் காண்பதும்
காதால் கேட்பதும்,
வாயால் மொழிவதும்
மூக்கால் அறிவதும்,
மெய்யால் உணர்வதும்,
பொய்யாய் போகுமெனில்,
பிழை பொறியில் அல்ல
உன் அறிவில்!"

"என்ன சொல்கிறீர்கள்
அறிவிலோ குறை?"

"பொறிக்குள் சிக்காமல்
காப்பதுவே அறிவு!
அதன் பெயரே
பகுத்தறிவு!"

"ஐம்பொறி வீச்சு
அறிவையும் மிஞ்சிவிடுகிறதே?"

"பொறி எத்தனை
மனித அறிவு எத்தனை?"

"பொறி ஐந்து
மனித அறிவு ஆறு!"

"பெரிது பெரிது
ஐம்பொறியைவிட
நம் அறிவு பெரிது!"

"ஆமாம்! குருவே
அது உண்மை!"

"கண்டதை அறிவில்
உரசி அலசு.

கேட்பதை அறிவால்
ஆய்ந்து பழகு!

உண்பது செரிக்க
உழைக்கப் பழகு!

மணப்பது அறிய
விழிப்பை நம்பு!

காமத்தை வெல்ல
மனதை அடக்கு!

உன்னால் முடியும்
எல்லாம்
உனக்குள் உண்டு!

வெல்வதும் தோற்பதும்
நம்பித் தடம் புரள்வதும்
வம்பில் தலை நீள்வதும்
மயங்கி சுகம் துய்ப்பதும்
கிறங்கி புறம் கெடுவதும்
எல்லாம் உன் செயல்!

மனதை ஒன்று குவி
காரியம் வெல்லும்!

அறிவை நம்பி நட
வெளிச்சம் பிறக்கும்!"

குரு நீண்ட
விளக்கம் விரித்தார்!

"நல்லது குருவே!
எதையும் என்னால்
துறக்க முடிகிறது!

எதையும் என்னால்
மறக்க முடிகிறது!

எதையும் என்னால்
வெறுக்க முடிகிறது!

ஒன்றே ஒன்றை மட்டும்
உதற முடியவில்லையே!"

"உதற முடியாதது
எதுவோ?"

"காமம், காமம்
தீராக் காமம்!"

"களவும் கற்றுமற
என்பர்!
காமத்தையும் கற்று மற
என்பேன்!"

"கற்று மறப்பதா
தவம் கெட்டுப் போகாதா?"

துறவி சிரித்தார்:

காமத்தில் நீ
பற்றுத் துறக்கவேண்டும்!
அன்றில் நீ
கற்று மறக்க வேண்டும்!

பற்றை துறக்காத
தவம்
முற்றிச் சிறக்காது!

புற்றுக்குள் பாம்பாய்
ஆசை இருக்கையில்
பற்றுத் தீராது!

ஆசையை வெல்ல
ஐம்பொறிகளை ஆள்!

அளவோடு ஆசையை
நிறுத்துகின்ற
அற்புதம் பயில்!
அறிவை துணைகொள்!
அதுவே தவம்!

"இயல்பாகும் நோன்பிற்கொன்று
இன்மை–உடைமை
மயலாகும் மற்றும் பெயர்த்து!"

அதிகாரம்: 35, குறள்: 344

---

என்று அழைத்து, இப்போது 'மம்' என்று சுருக்கிவிட்டனர்.

அம்மா=மம்
பெரியம்மா=மக்ஸிமம்
சின்னம்மா=மினிமம்!

●●

*** பார்த்தீரோ சிந்தியா! அணுக்குண்டால் வாஜ்பேயி தப்பிப் பிழைத்துவிட்டாரே?**

எஸ். உமா, கொழும்பு-10.

உங்கள் கருத்து பாதிதான் சரி! அணு ஆயுத தடை ஒப்பந்தத்தில் இந்தியா கையொப்பமிட மறுத்தபோதே அணுக்குண்டு யோசனை இருந்தது! உடனே தயாரித்து வெடிக்க அணுக்குண்டு என்ன பட்டாசா? கடந்த ஒரு வருடத்தின் முன்னரே ஏற்பாடுகள் தொடங்கிவிட்டன. கொஞ்சம் விரைவு படுத்தியதுதான் வாஜ்பேயி. அப்படி விரைவு படுத்தியதால் பாரதிய ஜனதாவுக்கும் இலாபம் சேர்ந்துள்ளது. அவ்வளவுதான்!

●●

*** யாழ் மாநகர முதல்வர் கொலைக்கு யார் காரணம்? உடன் பதில் தேவை?**

கி. ஜெயந்தன்-கொழும்பு-06.

ஆனானப்பட்ட ஆனந்தசங்கரியே, 'உன்னைச் சொல்லிக் குற்றமில்லை, என்னைச் சொல்லிக் குற்றமில்லை, காலம் செய்த கோலமடி கடவுள் செய்த குற்றமடி!' என்ற பாணியில் அறிக்கை விட்டிருக்கிறார். நீர் என்னை வம்பில் மாட்டவைக்கப் பார்க்கிறீரே! நியாயமா?

●●

*** இந்தியா எமது பிரச்சனையில் சாதகமாக நடந்து கொள்ளுமா?**

பி. தேவராஜ், பதுளை.

பாதகமாக நடக்காமல் இருந்தாலே போதும்!

●●

*** புலிகள்மீதான தடையை இந்திய அரசு நீடித்துள்ளதே?**

சி. ரங்கநாதன், கொழும்பு-09.

அதனைவைத்து எந்த ஒரு முடிவுக்கும் வரவேண்டாம். நீக்கினால் பலவிதமான சர்ச்சைகள் எழும். சந்தேகங்கள் வரும்! ஆகவே தடை நீடிக்கப்படுவது சம்பிரதாயம் மாதிரித்தான்!

●●

*** படைக்கு ஆள் சேர்ப்பு விடயத்தில் ஆளாளுக்கு ஒரு விதமாகக் கூறுகிறார்களே?**

எஸ். ஹனீபா, கல்முனை.

ஒரேவிதமாகக் கூறினால்தான் இன்றைய ஆட்சியில் ஆச்சரியம்!

●●

*** 'புளூபிலிம்' போன்ற சீரழிவுகளுக்கும் போதைப் பழக்கங்களுக்கும் இளம் தலைமுறை பலியாவதை இங்குள்ள சட்டம் ஒழுங்குப் பிரிவினர் ஏன் கண்டுகொள்கிறார்கள் இல்லை?**

ஆ. கௌரிசங்கர், யாழ்ப்பாணம்.

புலியாவதைவிட அப்படிப் பலியாவதால் அவர்களுக்குப் பாதகமில்லைத்தானே!?

●●



*** டாக்டர்களையே நம்பமுடியாது போலிருக்கிறதே?**

செல்வி இ. அனுசியா, கம்பளை.

ஃபிரான்ஸ் நாட்டில் 90 வயதான ஒரு பெண்மணி இறந்துபோனார். அவர் உயில் எழுதி வைத்திருந்தார்.

சொந்தக்காரர்கள் எல்லாம் சேர்ந்து உயிலை எடுத்து வாசித்தார்கள்.

"என்னுடைய நீண்ட ஆயுளுக்கு என்னுடைய குடும்ப டாக்டருக்கு நான் மிகவும் கடமைப்பட்டுள்ளேன். என் அறையில் ஒரு மரப்பெட்டி வைத்திருக்கிறேன். அந்தப் பெட்டியில் உள்ளதெல்லாம் அவருக்குத்தான் சொந்தம்." என்று உயிலில் எழுதி வைத்திருந்தார்.

உடனடியாக டாக்டரை அழைத்து, அவர் முன்னால் மரப்பெட்டியைத் திறந்தார்கள்.

உள்ளே என்ன இருந்தது தெரியுமா?

அந்த அம்மாவுக்கு 20 வருடமாக டாக்டர் கொடுத்த மருந்து, மாத்திரை, டாக்டர் சீட்டு எல்லாம் பத்திரமாக இருந்தன!

அதற்கு என்ன அர்த்தம்?

குடும்ப டாக்டர் கொடுத்த மருந்து, மாத்திரைகளை சாப்பிடாமல் இருந்ததால்தான் 90 வயசு வரைக்கும் நீண்ட ஆயுளோடு இருக்க முடிந்ததாம்.

அதைத்தான் சொல்லாமல் சொல்லி இருந்தார் கில்லாடி ஆச்சி!

●●

*** தமிழ் தெரியாத நடிகைகளை எதற்காக கொண்டு வருகிறார்கள்?**

சா. மகேஷ்வரன், திருமலை.

கதையை நம்பி படமெடுத்தால்தானே கதைக்க கூடியவர்கள் தேவை. சதையை நம்புவதால் குலை குலையாக இறக்குமதி செய்கிறார்கள்.

●●

## சிந்தியா பதில்கள்

*** குடி குடியைக் கெடுக்குமா? சிலர் பெரும் செல்வந்தர்களாக இருக்கிறார்களே?**

தி. தர்மரத்தினம், இரத்தினபுரி.

ஒரு பிச்சைக்காரன் செல்வந்தர் வீட்டுக்குப் பிச்சை கேட்டுப் போயிருந்தான்.

"நீ குடிப்பாயா?" என்று கேட்டார் செல்வந்தர்.

"அய்யோ, இல்லை ஐயா, குடிக்கிறது உடலுக்கும் கேடு; எல்லாத்துக்கும் கேடு!" என்றான்.

உடனே அந்தச் செல்வந்தர் தன் மனைவியைப்பார்த்து: "பார்த்தாயா? குடிக்கிறது தப்பு என்கிறான். பிச்சை எடுக்கிறான். நான் குடிக்கிறேன், நல்லபடியாக இருக்கிறேன்!" என்றார்.

பிச்சைக்காரன் அந்தச் செல்வந்தரைப் பார்த்தான்:

"ஐயா! நான் ஒன்று சொன்னால் நீங்க கோபிக்கக்கூடாது. நான் ஏற்கனவே உங்களை மாதிரிக் குடித்துக்கொண்டுதான் இருந்தேன். அதனாலேதான் இப்படிப் பிச்சைக்காரன் ஆகிவிட்டேன்!" என்று சொல்லி விட்டுப் போய்விட்டான்.

●●

*** 'காதல் மன்னன்' அஜித்குமாருக்கு வெற்றிப் படமா?**

எல். புஸ்பகாந்தன், பண்டாரவளை.

ஓரளவு ஆம்! இப்போது 'அவள் வருவாளா', வசூலாவாளா பார்ப்போம்!

●●

*** இந்தியாவின் அணுக்குண்டு வெடிப்புப் பற்றி உமது அபிப்பிராயம்?**

சா. கோணேஸ்வரன், சிலாபம்

கீரைக் கடைக்கும் எதிர்க்கடை வேண்டும். அமெரிக்காவோ கசாப்புக் கடை. நிச்சயம் எதிர்க்கடைகள் பல வேண்டும். நிற்க, இங்கும் குண்டு வெடித்தால் தமிழர்களைத்தான் பிடிக்கிறார்கள்.



சிதம்பரம்



அப்துல் கலாம்

இந்தியாவும் குண்டு வெடிக்க தமிழர் ஒருவரைத்தான் பிடித்தது. அவர் பெயர் சிதம்பரம். அணுமின்சக்தி கமிஷனின் தலைவர். மற்றொருவர் தமிழ் பேசுபவர்தான்-அப்துல் கலாம். ஐந்து விஞ்ஞானிகளில் இருவர் தமிழ் பேசுவோர். சந்தோசம்தானே!

●●

*** சிந்தியா! இந்தியா அணுக்குண்டு வெடித்தால் அமெரிக்கா ஏன் கோபத்தில் வெடிக்கிறது?**

வி. ஆறுமுகம், கண்டி.

கடைந்தெடுத்த சுத்தமான தூய சுயநலம்தான்! இந்தப் பட்டியலைப் பார்த்தால் இந்தியாமீது கோபப்பட நியாயமே இல்லை என்பது பளிச் பளிச்.

| முதல் சோதனை நடந்த ஆண்டு | | மொத்த சோதனைகள் |
|---|---|---|
| அமெரிக்கா | 1945 | 1030 |
| ரசியா | 1949 | 715 |
| ஃபிரான்ஸ் | 1960 | 210 |
| பிரிட்டன் | 1952 | 45 |
| சீனா | 1964 | 45 |
| இந்தியா | 1974 | 06 |

●●

*** சன் தொலைக்காட்சியில் தமிழுக்குள் ஆங்கிலம் அளவு கடந்து கலக்கிறதே?**

சி. ரவிக்குமார், வவுனியா.

'இந்தியை எதிர்த்து தண்டவாளத்தில் தலைவைத்துப்' படுத்தவரின் குடும்ப தொலைக்காட்சியில் தமிழின் தலை போய்க் கொண்டிருக்கிறது! அதே சன் தொலைக்காட்சி அரட்டை அரங்கத்தில் இரசித்த நகைச்சுவை ஒன்று: அம்மாவை "மம்மி"

---

ஸ்போர்ட்ஸ்

## இருவரும் 15 சதம்



ஒரு நாள் கிரிக்கெட் போட்டிகளில் இந்திய இளம் புயல் சச்சின் டெண்டுல்கர் இதுவரை 15 சதங்களை அடித்துள்ளார். இதேபோல் பாகிஸ்தான் வீரர் சயீட் அன்வரும் 15 சதங்களை அடித்துள்ளார். இவர்களைவிட ஒருநாள் போட்டிகளில் ஒருவர்தான் அதிக சதங்களை அடித்துள்ளார். அவர் மேற்கிந்தியத்தீவின் டெஸ்மன்ட் ஹெயின்ஸ். இவர் 17 சதங்களை அடித்துள்ளார்.

இவரது சாதனையை முறியடித்து ஒரு நாள் போட்டிகளில் அதிக சதமடிக்கும் வாய்ப்பு டெண்டுல்கருக்குத்தான் அதிகம் உள்ளது. அத்துடன் ஒருநாள் போட்டிகளில் டெண்டுல்கர் 7 ஆயிரம் ஓட்டங்களை நெருங்கி விட்டார். ஒருநாள் போட்டிகளில் அதிக ஓட்டங்களைக் குவித்தவரும் ஹெயின்ஸ்தான். இவர் குவித்தது 8649. இந்தச் சாதனையையும் டெண்டுல்கர் 2 ஆண்டுகளுக்குள் எட்டிவிடுவார்.

அத்துடன் ஒருநாள் போட்டிகளில் சிறந்த வீரருக்காக வழங்கும் ஆட்ட நாயகன் விருதைப் பெறுவதிலும் டெண்டுல்கர் உலக சாதனையை நெருங்கிக் கொண்டிருக்கிறார். இந்தச் சாதனை தற்போது மேற்கிந்தியத்தீவு அணியின் விவியன் றிச்சர்ட்ஸிடம் உள்ளது. இவர் 31 தடவை ஆட்டநாயகன் விருதைப் பெற்றுள்ளார். இரண்டாவதாக டெண்டுல்கர் 26 தடவை ஆட்டநாயகன் விருதைப் பெற்றிருக்கிறார்.

ஒரு நாள் போட்டிகளில் 10க்கும் மேற்பட்ட சதங்களை அடித்தவர்கள் விபரம்:

| வீரர் | | சதம் | போட்டிகள் |
|---|---|---|---|
| 1. டெஸ்மன்ட ஹெயின்ஸ் | (மேற்கிந்தியத்தீவு) | 17 | 238 |
| 2. சச்சின் டெண்டுல்கர் | (இந்தியா) | 15 | 188 |
| 3. சயீட் அன்வர் | (பாகிஸ்தான்) | 15 | 151 |
| 4. பிரையன் லாரா | (மே.இ.தீவு) | 12 | 130 |
| 5. கோர்டன் கிறீனிட்ஜ் | (மே.இ.தீவு) | 11 | 128 |
| 6. விவியன் றிச்சர்ட்ஸ் | (மே.இ.தீவு) | 11 | 187 |
| 7. மார்க் வோவ் | (அவுஸ்திரேலியா) | 11 | 157 |
| 8. அரவிந்த டி சில்வா | (இலங்கை) | 10 | 233 |

அதிக தடவைகள் ஆட்ட நாயகன் விருது பெற்றவர்கள் விபரம்:

| வீரர் | | விருது | போட்டிகள்: |
|---|---|---|---|
| 1. விவியன் றிச்சர்ட்ஸ் | (மே.இ.தீவு) | 31 | 187 |
| 2. சச்சின் டெண்டுல்கர் | (இந்தியா) | 26 | 188 |
| 3. டெஸ்மன்ட் ஹெயின்ஸ் | (மே.இ.தீவு) | 26 | 238 |
| 4. அரவிந்த டி சில்வா | (இலங்கை) | 24 | 233 |
| 5. மாட்டின் குரோ | (நியூஸிலாந்து) | 21 | 144 |
| 6. அர்ஜுன ரணதுங்க | (இலங்கை) | 21 | 236 |
| 7. பிரையன் லாரா | (மே.இ.தீவு) | 20 | 130 |
| 8. ஜாவெட் மியான்டாட் | (பாகிஸ்தான்) | 20 | 233 |

## மூத்த வீரர்கள் மோதல்

இலங்கை-இந்திய மூத்த கிரிக்கெட் வீரர்களுக்கு இடையிலான சர்வதேச ஒரு நாள் கிரிக்கெட் போட்டி நடைபெற்றது. இதைத் தொடர்ந்து இந்தியா- பாகிஸ்தான் மூத்த கிரிக்கெட் வீரர்களுக்கிடையிலான ஒருதினப் போட்டிகள் வரும் ஒக்டோபர் 25ம் திகதி முதல் நவம்பர் 5ம் திகதி வரை நடைபெறவுள்ளன.

இதற்காக 18 பேர் கொண்ட பாகிஸ்தான் அணி அண்மையில் அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த அணிக்கு ஸஹீர் அப்பாஸ் கப்டனாக நியமிக்கப்பட்டுள்ளார். பாகிஸ்தான் அணி விபரம் வருமாறு:

ஸஹீர் அப்பாஸ் (கப்டன்), ஜாவெட் மியான்டாட், முடஸார் நஸார், ஆஸிப் இக்பால், வாஸிம் ராஜா, ரிஸ்வான்-உஸ்-ஸமான், ரௌஸிப் அகமட், மஜித்கான், பருக் ஸமான், மன்சூர் அக்தர், சலீம் ஜஃபர், ஸஹீத் அகமட், ஜலாலுதீன், ஷாஹீத் மஹ்பூப், தஸ்லீம் ஆரிப், சஜித் அலி, இக்பால் காஸிம்.



படிப்பகம்

www.padippakam.com

# திருமறை தரும் பொது நெறி 10

## அடிமைகளை மீட்க வந்த அரு மைந்தன்

ஆபிரகாமின் வழிவந்த யாக்கோபின் 12 புதல்வர்களில் ஒருவரான யோசேப்பை, அவர்மீது கொண்ட பொறாமையின் காரணமாக, அவருடைய ஏனைய சகோதரர்கள் வெறுத்தார்கள். தந்தையாரான யாக்கோபு, யோசேப்பு மீது- தங்களைவிட அதிக பாசமும் அக்கறையும் கொண்டிருந்தார் என்பதே வெறுப்புக்கு முக்கியமான காரணமானது. இதனால் யோசேப்பை எகிப்து நோக்கிச் சென்ற வர்த்தகர்களுக்கு அடிமையாக விற்று விட்டார்கள். எகிப்து சென்ற யோசேப்பு ஆண்டவரின் கடாட்சத்தினால் அந்நாட்டு மன்னனின் பெருமதிப்புக்குப் பாத்திரமானார். எகிப்தில் மன்னருக்கு அடுத்த படியாக- அந்நாட்டின் ஆளுநராக- நியமனம் பெற்றார். ஏழு ஆண்டுகாலம் அந்நாட்டு மக்களை வாட்டிய கொடிய பஞ்சத்திலிருந்து தீர்க்கதரிசனத்துடன் பாதுகாத்தார்.

கானான் தேசத்திலும் அக்காலகட்டத்தில் கொடிய பஞ்சம் தலைவிரித்தாடியது. இதனால் தனது தந்தையாரான யாக்கோபு என்ற இஸ்ரயேலரையும் அவர் வழிமரபினரையும் எகிப்துக்குத் தருவித்து, அந்நாட்டில் செழிப்பான கோசேன் பகுதியில் குடியேறி வாழ்வதற்கு யோசேப்பு ஏற்பாடுகளைச் செய்து கொடுத்தார். அவர்கள் அங்கு கால் நடைகளை மேய்த்தும், விவசாயத்திலீடுபட்டும் சிறப்பாக வாழத் தலைப்பட்டனர்.



யாக்கோபும் அவர் மகன் யோசேப்பும் இறந்தபின்னர் பல மாற்றங்கள் எகிப்தில் ஏற்பட்டன. யாக்கோபு கானானிலுள்ள பெயோர்செபா என்ற இடத்தை விட்டுப் புறப்படுவதற்கு முன்னர் ஆண்டவர் அவருக்கு வாக்களித்தார். எகிப்து செல்ல அஞ்சவேண்டாம் என்றும் அவருடைய வழிமரபினர் அங்கு பல்கிப் பெருகிப் பரந்து வாழ வகை செய்வதாகவும் ஆண்டவர் உறுதி கூறினார்.

### இஸ்ரயேலரின் வளர்ச்சி

ஆண்டவரின் கூற்றுக்கேற்ப கோசேன் பகுதியில் இஸ்ரயேலர் குழந்தைச் செல்வங்களையும் ஏனைய வளங்களையும் நிரம்பப் பெற்று பல்கிப்பெருகினர். சகல துறைகளிலும் இஸ்ரயேலர் சிறப்புக்களுடன் மிக வேகமாக வம்ச விருத்தி கண்டு வருவது எகிப்தியர்களுக்குப் பேரச்சத்தை ஏற்படுத்தியது. நாளடைவில் எகிப்து நாடு முழுவதையும் இஸ்ரயேலர்கள் ஆக்கிரமித்து விடுவார்களோ என்ற பயமும் ஏற்பட்டது.

எகிப்து நாட்டில் இஸ்ரயேலரைக் குடியேற்றுவதற்கு உடந்தையாக இருந்த பார்வோன் இறந்துவிட்டார். அவருடைய வாரிசுகளாக ஒன்றன்பின் மற்றொருவராக பலர் மன்னர்களாக ஆட்சி பீடமேறினர். இப்பொழுது அரியணையிலிருந்த பார்வோன், ஏற்கனவே யோசேப்புடன் உறவாக இருந்தவரைப் போலல்லாது, மாறுபட்ட குணமுடையவனாக இருந்தான். தனது முன்னோர்கள் இஸ்ரேலியர்மீது ஏன் நன்றிக்கடன் பட்டிருந்தனர் என்பதற்கான காரணம் இந்த மன்னனுக்குத் தெரியாது போலும். இஸ்ரயேலர் பல்கிப்பெருகி மிகச் சிறப்பாக வாழ்வதை, தனது நாட்டு மக்களுக்கும் தனக்கும் வளர்ந்து வரும் பெரும் சவாலாகக் கருதினான். மன்னனுக்கு ஆலோசனை வழங்குவோரும் தமது நாட்டில் வேற்று இனத்தவர் பெற்றுவரும் பெருக்கத்தையும் பெருவளத்தையும் சுட்டிக்காட்டி, மன்னன் மனத்தில் விடத்தை ஏற்றினர்.

இஸ்ரயேலரை எப்படியாவது அடக்கி ஒடுக்கி அவர்களின் வளர்ச்சியைச் சீர்குலைக்க வேண்டும் என்று பல திட்டங்கள் தீட்டப்பட்டன. இஸ்ரயேலர்மீது கொடிய வேலைப்பளுவினைச் சுமத்திப் பழிவாங்க வேண்டும் என்ற திட்டத்தை முதலில் அமுல்படுத்த ஆரம்பித்தார்கள்.

மந்தைகளை மேய்ப்பதிலும் ஓரளவு விவசாயம் செய்வதிலும் ஈடுபட்டிருந்த மக்களை, ஆண்-பெண் என்ற பாகுபாடோ, சிறுவர்கள், வயோதிபர் என்ற வித்தியாசமோ இன்றி அனைத்து இஸ்ரயேலரையும் ஒன்று திரட்டி மிகக் கடுமையான பணிகளைச் செய்வதற்கு ஈடுபடுத்தலாயினர். கருணையே சிறிதுமில்லாத கொடிய மனம் படைத்த முரடர்களின் கைகளில் சவுக்குகளைக் கொடுத்து இஸ்ரயேலரின் வேலைகளைக் கண்காணிக்க ஏவினர். நின்றால் குத்தும், விழுந்தால் உதையும் என்ற நிலையில், ஓய்வு ஒழிச்சலின்றி இஸ்ரயேலர்கள் மிருகங்களைப் போல் வதைக்கப்பட்டனர்.

அடிமைகளாக்கப்பட்ட இஸ்ரயேலியரைக் கொண்டு பித்தோம், இராம்சேசு என்ற இரு களஞ்சிய நகரங்கள் நிர்மாணிக்கப்பட்டன. மேலும்பல கட்டடங்களும் கோபுரங்களும் மாளிகைகளும் இஸ்ரயேலரின் உழைப்பினால் உருப்பெற்றன.

### அடக்குமுறை

இஸ்ரயேலரின் கடும் உழைப்பின் பயனால் எகிப்துக்கு ஏராளமான நன்மைகள் ஏற்பட்டும், அவர்கள் மீதான வெறுப்பு எகிப்தியர்கள் மத்தியில் அதிகரிக்கவே செய்தது. எத்தகைய எதிர்த்தாக்கத்தினாலும் இஸ்ரயேலரின் வளர்ச்சியைத் தடுத்து நிறுத்த முடியவில்லை. அவர்கள் மென்மேலும் வளர்ந்து கொண்டேபோனார்கள். இதனால் கவலை கொண்ட பார்வோனும் எகிப்தின் உயர் அதிகாரிகளும் கூடி இஸ்ரயேலரை ஒடுக்கப் பல புது நடவடிக்கைகளை எடுத்தனர். ஆனால் பலன்தான் இஸ்ரயேலருக்குச் சாதகமாகவே நடந்துகொண்டிருந்தது.

### இராஜகுமாரி

மென்மேலும் கடுமையாக உழைக்க உழைக்க அவர்களுடைய உடலும் உறுதி பெற்றது. குழந்தைச் செல்வங்களும் குறைவின்றிப் பெருகின.

இறுதியாக பார்வோன், கானான் தேசத்திலிருந்து வந்தவர்களின் வாரிசுகளை முளையிலேயே கிள்ளி விடுவதெனத் தீர்மானித்தான். இஸ்ரயேலியப் பெண்களின் பிள்ளைப் பேற்றினைக் கவனிக்கும் மருத்துவ மாதர்களான சிப்ரா மற்றும் பூவா ஆகிய இருவரையும் அழைத்து அவர்களுக்குப் போதுமான வெகுமதிகளைக் கொடுத்தான். இஸ்ரயேலப் பெண்களுக்கு ஆண் குழந்தைகள் பிறந்தால் உடனேயே அவற்றைக் கொன்றுவிடுமாறு அம்மருத்துவ மாதர்களுக்கு ஆணையிட்டான். ஆனால் அவர்கள் ஆண்டவருக்குப் பயந்தவர்கள் என்பதனாலும், தங்கள் இனக் குழந்தைகளைக் கொல்வதற்கு மனமில்லாதவர்கள் என்பதனாலும் மன்னனின் ஆணைக்குக் கட்டுப்படவில்லை.

மன்னன் பார்வோன் தனது காவலர்களை ஏவி இஸ்ரயேலர்களின் குடியிருப்புகளுக்குள் புகுந்து பிறக்கும் ஆண் குழந்தைகள் அனைத்தையும் கொன்றுவிடுமாறு கட்டளையிட்டான். இக்கட்டளை பிறப்பிக்கப்பட்டதைத் தொடர்ந்து இஸ்ரயேலரின் இல்லங்கள் பிணவீடுகளாக மாறின. எங்கும் அழுகுரலே ஒலித்தது.

"எகிப்து நாட்டுக்காக உழைத்து இறை பக்தியுடன் வாழ்ந்துவரும் அப்பாவி மக்களுக்கு இத்தகைய கொடிய துன்பம் ஏன் வரவேண்டும்?" என்று துயரம் தாங்காது அம்மக்கள் துடித்தனர். 'துயரம் தொடராது- என்றோ ஒருநாள் தங்கள் துன்ப துயரங்கள் நீங்கி அமைதியான வாழ்வு கிட்டும்,' என்று தங்களைத் தாங்களே தேற்றிக்கொண்டனர். ஆண்டவர் தங்களைக் கைவிடமாட்டார் என்ற நம்பிக்கையுடன் வாழ்ந்தனர்.

இத்தனை பெரும் கஷ்டங்களிலிருந்தும் தங்களை மீட்டு விடுதலைக்கு வழிகாட்ட வேண்டும் என்று இறைவனைத் துதித்தனர். தங்களை அடிமைத்தளையிலிருந்து விடுவிக்க வல்ல ஒரு மீட்பரை அனுப்பி வைக்குமாறு பிரார்த்தித்தனர். அவர்களுடைய பிரார்த்தனை வீண்போகவில்லை. அவர்களை விடுவிப்பதற்கான ஒருவரை ஆண்டவர் அனுப்பவே செய்தார்.

### மோசே பிறந்தார்

இஸ்ரயேல் என்ற பெயரை இறைவன் யாக்கோபுக்கு வழங்கினார். அவருடைய பெயரைக் கொண்டே அவருடைய வழிமரபினர் அழைக்கப்பட்டனர். இவர்கள் 'ஹீப்ரு' மொழி பேசுபவர்கள். எபிரேயர் என்றும் இவர்கள் வழங்கப்பட்டனர். இவர்களில் லேவி என்றொரு கோத்திரத்தில் அமரன் என்றொருவருக்கு ஓர் ஆண் மகவு பிறந்தது. அக்குழந்தையின் தாய், அக்குழந்தை பார்வோனின் காவலர் கண்களில் பட்டுவிடாமல் பாதுகாத்து வந்தாள். குழந்தை வளர வளர தாயின் மனம் தவித்தது. குழந்தைகளின் அழுகுரல் எங்காவது கேட்கிறதா, என்று எல்லா இடங்களிலும் கொலைகாரர்கள் வட்டமிட்ட வண்ணமிருந்தனர். அழுகுரல் கேட்டதும் ஓடிவந்து பார்ப்பார்கள். ஆண் குழந்தை என்றால் கொடூரமாக அக்குழந்தையைப் பறித்தெடுத்து, தங்கள் வாளுக்கு இரையாக்கி விட்டு சடலத்தை நைல் நதியிலே வீசி எறிந்து விடுவார்கள்.

லேவி குலத்துப்பெண்ணால் தனது மகனைத் தொடர்ந்து தன் குடிசையில் வைத்து வளர்க்க முடியவில்லை. மூன்று மாதங்கள் மிகச் சிரமமுடன் பாதுகாத்தாள். அதற்குமேல் தன்வசம் வைத்திருக்கப் பயந்தாள். கோரைப் புற்களால் ஒரு பேழையினை அமைத்தாள். நீர் புகாத வண்ணம் மெழுகினால். அப்பேழையை வளைத்துப் பூசினாள். அப்பேழைக்குள் குழந்தையைக் கிடத்தி நைல் நதியின் கரையில் அதனை மிதக்க விட்டாள். தனது மகளான மிரியம் என்பவளை, நதியின் கரையோரம் வளர்ந்திருந்த நாணற் புல் கற்றைகளில் மறைந்து சென்று, குழந்தை யாருடைய கையில் போய்ச் சேர்கிறது என்பதனைப் பார்த்து வருமாறு அனுப்பி வைத்தாள்.

எகிப்து மன்னன் அரண்மனையை ஒட்டிய நைல் நதிக்கரையில் மன்னன் மகள் தனது தோழிகளுடன் விளையாடிக் கொண்டிருந்தாள். அப்போது பேழை ஒன்று நதியில் மிதந்து வருவதைக் கண்டு, தோழியரை அழைத்து அப்பேழையைத் தன்னிடம் கொண்டு வருமாறு பணித்தாள் இளவரசி. பேழையைத் திறந்தபோது அதனுள் அழகிய ஆண் குழந்தை இருப்பதைக் கண்டாள். அக் குழந்தையின் எழில் இளவரசியின் உள்ளத்தில் விபரிக்க முடியாத பாச உணர்வினை ஏற்படுத்தியது. அக் குழந்தையைச் சுற்றியிருந்த துணியைக் கண்டதும் அது எபிரேயக் குழந்தை என்பதை அறிந்து கொண்டாள். இருப்பினும் அதனை அவளால் ஒதுக்கிவிட முடியவில்லை. குழந்தையைத் தன் மகனாக ஏற்று வளர்க்க இளவரசி தீர்மானித்தாள்.

இளவரசியின் கையில் தன் தம்பி கிடைத்துவிட்டான் என்பதனைக் கண்ட மிரியம் மகிழ்ந்தாள். தற்செயலாக அப்பக்கம் வந்தவள்போல் பாவனை செய்தாள். மிரியத்தைக் கண்ட இளவரசி அழைத்தாள். மிரியமும் ஒரு இஸ்ரயேல் பெண் என்பதனால், குழந்தைக்குப் பாலூட்டி வளர்க்க ஒரு செவிலித்தாய் கிடைப்பாளா, என்று வினவினாள், தானே ஒருத்தியை அழைத்து வருவதாகக் கூறிய மிரியம், தனது தாயாரையே இளவரசியிடம் அழைத்து வந்தாள். குழந்தையின் உண்மையான தாயே செவிலித்தாயாக வந்திருக்கிறாள் என்ற உண்மை இளவரசிக்குத் தெரியாது. மிரியமோ அல்லது அவள் தாயோ உண்மையைக் கூறவில்லை.

தனது மகனுக்குத் தானே பாலூட்டி பிரியமுடன் வளர்க்கும் வாய்ப்பினைத் தந்த ஆண்டவரின் கருணையினை வியந்து பிரார்த்தித்தாள். குழந்தை வளர்ந்ததும் சிறுவனை அரண்மனையில் இளவரசியிடம் கொண்டு வந்து சேர்த்தாள் அத்தாய்.

(தொடர்ந்து வரும்)

**திருமறை ⑧ விடை: ☛ மனாசே, எப்ராயிம்**

**பரிசு பெறுவோர்:**

1. செல்வி எஸ். எஸ். நளாயினி, பன்குடாவெளி, செங்கலடி.
2. சி.ரி. பர்னாந்து, 128/8, காசல் வீதி, கண்டி.
3. செல்வி முனீஃபா, 49, எலமல் தெனிய, முருதகஹமுல.
4. எஸ். பெனடிக்ட், வட்டகொட கீழ்ப்பிரிவு, வட்டகொட.
5. செல்வி வீரையா வள்ளிமயில், உனுக்கொட்டுவ எஸ்டேட், கட்டப்புலா.

**திருமறை 10 வினா:-** கானான் தேசத்தவர்களுக்கான இரு பெயர்களையும் தருக?

மே. 30க்கு முன்பாக விடைகளை அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:

**திருமறை 10 – தினமுரசு வாரமலர், த.பெ.இல– 1772, கொழும்பு.**

# வளையாத வாஜ்பேயி

**கிளின்ரன்:** மிஸ்டர் வாஜ்பேயி, யாரைக் கேட்டு அணுக்குண்டுப் பரிசோதனை செய்தீர்கள்?

**வாஜ்பேயி:** ஹா ஹா ஹா... எங்கள் தொழில் நுட்பம், எங்கள் பிரதேசம், எங்கள் தயாரிப்பு.. இதற்கு யாரிடம் கேட்க வேண்டும் அனுமதி?



**கிளின்ரன்:** எங்களிடம் கேட்டிருக்க வேண்டும். இந்த உலகில் எமக்குத் தெரியாமல், ஒருஅணுவும் அசையக்கூடாது. நீங்கள் அணுக்குண்டையே செய்துவிட்டீர்கள்!

**வாஜ்:** எங்களுக்கு அனுமதி தர நீங்கள் யார்?

**கிளி:** சூப்பர் பவர்! நாங்கள் சுண்டுவிரல் அசைத்தால் இந்த பூமிகூட சுற்றுவதை நிறுத்திவிடும் தெரியுமா?

**வாஜ்:** பூமி சுற்றுவதை நிறுத்துவது இருக்கட்டும்.முதலில் உலக மக்களின் தலையைச் சுற்றும் வேலையை நிறுத்துங்கள்.

**கிளி:** உம்மிடம் என்ன பேச்சு, நிறுத்துகிறீர்களா இல்லையா?

**வாஜ்:** முதலில் நீங்கள் நிறுத்துங்கள். எங்கள் நாட்டின் திருப்பதி லட்டுக்கள்போல அணுக்குண்டுகளை செய்து நீங்கள் அடுக்கி வைத்திருக்கிறீர்களே, அதனை தூக்கி கடலில் போடுங்கள்! உலகை அழிக்கும் ஆயுதங்களை உற்பத்தி செய்து குவித்து வருவதை நீங்கள் நிறுத்தினால், நாங்களும் நிறுத்துகிறோம்!

**கிளி:** ஓ. மை கோட், இதனைத்தான் அந்த சதாமும் சொன்னார்.

**வாஜ்:** நியாயத்தை யார் சொன்னாலும் ஒரே விதமாகத்தான் இருக்கும்!

**கிளி:** மிஸ்டர் காந்தி பிறந்த மண்ணில் அணு ஆயுதம் செய்வது, உலக சாந்திக்கு ஆபத்து!

**வாஜ்:** தன்னைக் கொல்ல வரும் பசுவையும் கொல்லலாம் என்றும் காந்திதான் கூறி இருக்கிறார்.

**கிளி:** அதுதான் கையிலே கம்பு வைத்திருக்கிறாரா? பேசியது அன்பு வழி, பிடித்தது கம்பு நுனி! போகட்டும், உங்களை கொல்லவரும் பசு யார் என்று அறியலாமா?

**வாஜ்:** பசுவல்லக் கழுகு! பக்கத்து நாடுகளில் வட்டமிடுகிறது! அங்கிருந்தபடி எங்கள் நாட்டுக்குள் எட்டிப்பார்த்து சதித்திட்டமிடுகிறது! கிட்ட வருமானால் சுட்டு வீழ்த்துவது பாபமும் இல்லை. பழியும் இல்லை!

**கிளி:** (அசடு வழிந்தபடி) ஏதேதோ சொல்கிறீர்கள். உங்கள் ஆட்சிக்கு ஆளாளுக்கு குண்டுவைத்துக் கொண்டிருக்கிறார்கள். முதலில் அதைப்பாரும்.

**வாஜ்:** உள்நாட்டுப் பூசலில் நாங்கள் கிடக்க, உமது மேய்ச்சலுக்கு வழி பண்ணி முடித்துவிடுவீராக்கும்!

**கிளி:** பொருளாதாரத் தடை போடுவோம்!

**வாஜ்:** பேஷ் பேஷ்.

**கிளி:** நட்புறவை நிறுத்துவோம்

**வாஜ்:** பேஷ் பேஷ் பேஷ்

**கிளி:** உலக கண்டனத்தை திரட்டுவோம்.

**வாஜ்:** நீங்கள் சொல்லும்படியெல்லாம் உலகம் ஆடும் காலம் மலையேறிவிட்டது! (பாடுகிறார்)

நடக்கும் என்பார் நடக்காது
நடக்காதென்பார் நடந்துவிடும்.
கிடைக்கும் என்பார் கிடைக்காது.
கிடைக்காதென்பார் கிடைத்துவிடும்!

**கிளி:** வட் டு யூ மீன்?

**வாஜ்:** வியட்நாம் தோற்கும் என்றீர்கள் நடக்கவில்லை, கியூபாவில் பிடலின் ஆட்சி தொடர்ந்து நடக்காது என்றீர்கள், நடக்கிறது. பாலஸ்தீனத்தில் அமைதி கிடைக்கும் என்றீர்கள், கிடைக்கவில்லை, இந்தியாவுக்கு உலக ஆதரவு கிடைக்காது என்கிறீர், கிடைக்கும்!

**கிளி:** இறுதியாக என்ன கூறுகிறீர்?



**வாஜ்:** நண்பராக இரும்! எஜமானாக நினையாதீர்! விருந்தினராக வந்து செல்லும், விரோதியாக உள் நுழைய ஒரு நாளும் எண்ணாதீர்!

**கிளி:** இந்தியாவைச் சுற்றி நாங்கள்தான் இருக்கிறோம்!

**வாஜ்:** கவனித்துக்கொண்டுதான் இருக்கிறோம். தற்காப்புக்குத்தான் அணுகுண்டும் ஆராய்ந்து பார்த்திருக்கிறோம்.

**கிளி:** இதுதான் முடிவா?

**வாஜ்:** முடிந்த முடிவு! (பாடுகிறார்)

அமெரிக்கா என்னடா
ஜப்பான் என்னடா
ஆதிக்கம் தேடும் உலகத்திலே!
ஆணை இடுவதில் அர்த்தம் என்னடா
சரி சமமான நாட்டினிலே!
போட டேய்....

## பயோடேட்டா

| | |
|---|---|
| பெயர் | : தமிழ்க் கட்சிகள். |
| வயது | : துடிப்பான வயதல்ல. |
| தொழில் | : அரசியல். |
| உப தொழில் | : அரசுக்கு சேவகம். |
| நண்பர்கள் | : நிரந்தரமாக யாரும் இல்லை. |
| எதிரிகள் | : இன உணர்வு உள்ளவர்கள். |
| பிடித்த இடம் | : நாடாளுமன்ற நாற்காலிகள். |
| பிடிக்காத இடம் | : போராட்ட அரங்கம். |
| நம்புவது | : அறிக்கைகளை. |
| நம்பாதது | : உறுப்பினர்களை. |
| வெறுப்பது | : பத்திரிகைகளின் விமர்சனங்கள். |
| பொழுதுபோக்கு | : முகஸ்துதிக்காரர்களுடன் கலந்துரையாடல். |
| வளர்ப்பது | : மக்களிடம் நம்பிக்கையீனத்தை. |
| இலட்சியம் | : மேலும்மேலும் சொந்த வசதிகள். |
| ஒரே சாதனை | : சில நாற்காலிகள். |

காதிலைபூ கந்தசாமி


படிப்பகம்

www.padippakam.com
Regd. as a News Paper at the G.P.O.(QD/21/NEWS/98)



அருள் ஜுவலர்ஸ்
பெண்களின் அழகோ இரகசியம்! அதை எங்களது வண்ண நகைகள்மின்னிப்பேசுகின்றன.
கிளை:
105, காலி வீதி,வெள்ளவத்தை,கொழு–06 580230
3 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு
436331

# தகரும் தளைகள்



→ இந்தியாவில் வெளியான 'காமசூத்திரா' உலகெங்கும் திரையிடப்பட்டு பரபரப்பாக பேசப்பட்டுள்ளது. நம் நாட்டிலும் கொழும்பில் திரையிடப்பட்டு வசூல் குவிந்தது.


மீரா நாயர் என்ற பெண் இயக்குநரின் துணிச்சல் வியப்பளிக்கிறது. காதல், காமம் இரண்டையும் பிரிக்க முடியாது. காமம் என்பதும் ஒரு கலை. நுட்பமான கலை. அதனைத்தான் காமசூத்திராவில் சொல்லியிருக்கிறார்கள்.

கட்டுப்பெட்டித்தனம், போலியான மரபுகள் என்ற தளைகளை அறுத்துக் கொண்டு இந்தியப் பெண் இயக்குநரும் இந்திய நடிகைகளும் இப்படத்தை தந்துள்ளனர். செக்ஸ் பற்றி பேசினாலே காதைப் பொத்திக் கொள்வது பாசாங்குத்தனம். ஆரோக்கியமான 'செக்ஸ்' அறிவு அவசியம் அதனைத்தான் கூறியிருக்கிறோம் என்கிறார் மீரா நாயர்.

ஆனாலும் இந்தியாவில் இப்படத்தின் பல காட்சிகளை தணிக்கை கத்தரி சாப்பிட்டுவிட்டது.


ஸ்ரீ கல்யாணி ஜுவல்ஸ்
SRI KALYANY JEWELLS
புன்னகை சிந்தும் பெண்ணுக்கு மின்னிடும் பொன்னகை பேரழகு
5 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு
323657

# பாம்பாபரணம்



↑ விதம் விதமான ரகங்களில் நகைகள் செய்வது இன்று நேற்றல்ல தொன்று தொட்டே இருந்து வரும் பழக்கம்தான்.

கி.மு. 3500ம் ஆண்டளவில்தான் தங்கத்தை உருக்கி ஆபரணங்கள் செய்யும் முறை உருவானது. படத்தில் இருப்பது சீனர்கள் சிகை அலங்காரத்திற்கு பயன்படுத்திய ஆபரணம். பாம்பு போன்ற வடிவத்தில் இருக்கிறது. சிவனின் தலையில் மட்டுமல்ல, சீனர்களின் தலையிலும் அந்தக் காலத்தில் பாம்பு இருந்திருக்கிறது. அதாவது ஆபரணமாக! தங்கள் கலைப் பொக்கிஷமாக இன்றுவரை இத்தகைய ஆபரணங்களை பாதுகாத்து வருகிறார்கள் சீனர்கள்.

ஆரணங்குகள் ஆடவர்களைப் பயமுறுத்துவதற்காக இத்தகைய ஆபரணங்களை அணிந்திருப்பார்களோ?!

# மாடத்திலே



↑ இந்திய மாநிலமான ராஜஸ்தானின் தலைப்பட்டணமாக இன்று விளங்குவது ஜெய்ப்பூர். இங்கு பண்டைய மன்னர்களால் அமைக்கப்பட்ட கலை அம்சங்கள் அதிகம் கொண்ட மாளிகைகளும் அரண்மனைகளும் அந்தப்புரங்களும் கோட்டை கொத்தளங்களும் இன்றும் நல்ல நிலையில் காட்சி தருகின்றன.

படத்தில் காணப்படுவது 'ஹாவா மஹால்' எனப்படும் மாளிகையாகும்.

'ஹவா மஹால்' என்றால் காற்றின் மாளிகை என்று அர்த்தம். ஐந்து மாடிகளைக் கொண்ட இந்த மாளிகையில் மொத்தம் 593 சிறிய சன்னல்கள் உள்ளன. இந்த சன்னல்களினூடாக உள்ளே இருப்பவர்கள் வெளியுலகில் நடப்பவற்றையெல்லாம் காண முடியும். ஆனால் உள்ளே நின்று பார்ப்பவர்கள் எவரையும் வெளியிலிருந்து எவரும் பார்க்க முடியாதவாறு நுணுக்கமாக இந்த சன்னல்கள் அமைக்கப்பட்டுள்ளன. இத்தனை நுணுக்கமான சன்னல்கள் அமைக்கப்பட்டிருப்பதற்கு சுவாரசியமான காரணம் இருக்கிறது. மன்னரின் ஆசை நாயகிகள் வெளியுலகை இரசிப்பது இந்த சன்னல்கள் வழியாகத்தான். ஒன்று இரண்டு மூன்றல்ல நூற்றுக்கணக் நாயகிகள். அதுதான் அத்தனை கான ஆசை சன்னல்கள்.

# முடி சூடி



↑ இங்கிலாந்தின் 1600ம் ஆண்டுகளில் உயர்குடியினர் குறிப்பாக அரச வம்சத்தவர்கள் மத்தியில் பிரபல்யம் வாய்ந்து விளங்கிய வளர்ப்பு நாய் கிங் சார்ள்ஸ் ஸ்பானியல் என்பதாகும். இந்த இனம் 17ம் நூற்றாண்டுப் பகுதியில் சீனாவிலிருந்தோ ஜப்பானிலிருந்தோ கொண்டுவரப்பட்டிருக்கலாம் என்று கருதப்படுகிறது.

இவை பெரும்பாலும் வெள்ளையில் கறுப்பு மற்றும் பழுப்பு நிறப்பிரிவுகள் கொண்டவையாக இருக்கும். முடி மிக நீளமாகவும் மிருதுவாகவும் காணப்படும். கால்களில் வளர்ந்திருக்கும் முடி இறகு போன்ற அமைப்பைக் கொண்டதாக இருக்கும். கோட்சூட் போட்டிருப்பதுபோல தெரிகிறதல்லவா? பொதுவாக இந்நாய்களின் எடை 3.6 முதல் 6.3 கிலோ கிராமாகவிருக்கும் முகம் வட்டவடிவம் கொண்டதாக இருக்கும்.

# நம்பிக்கை




↑ வலது குறைந்தோருக்கான முச்சக்கரவண்டி மரதன் ஓட்டப்போட்டி அண்மையில் பொஸ்டன் நகரில் நடைபெற்றது. இப்போட்டியில் தொடர்ந்து ஏழுவருடங்கள் வெற்றி பெற்று வந்த ஜீன் டிரிஸ்கல் தனது கவனயீனத்தால் இம்முறை இரண்டாவது இடத்தையே கைப்பற்றினார்.

இம்முறை இடம்பெற்ற 102 வது பொஸ்டன் மரதன் ஓட்டப்போட்டி தனக்கு இம்முறை வெற்றி கிட்டும் என்று பெரிதாக நம்பிய ஜீன் டிரிஸ்கல் இறுதிக்கட்டத்தை நெருங்கியதும் உற்சாகமூட்டும் பார்வையாளர்களுக்கு இரு கைகளையும் உயர்த்தி அசைத்தார்.

அதே நொடிப்பொழுதில் அவுஸ்திரேலிய ஓட்டக்காரியான லொயின் செளவாஜ் முன்னே பாய்ந்து நாடாவைத் தாண்டினார். ஆனாலும் அதே கணத்தில் ஜீன் டிரிஸ்கல் முடிவு நாடாவைத் தொட்டாலும் இம்முறை முதலாவது இடம் செளவாஜிக்கே கிடைத்தது. இருவருடைய வேகம் 1 மணி 41 நிமிடம் 19 வினாடிகள்.

செளவாஜ் போட்டியில் முடிவு நாடாவைத் தொடுவதையும் ஜீன் டிரிஸ்கல் (பச்சை உடை) மேலே உயர்த்திய கைகளை இறக்கிய வண்ணம் பாய்ந்து வருவதையும் படம் காட்டுகிறது. நம்பிக்கையும் அளவு மீறினால் பயன்தராது.

# சிவன்



→ இந்தோனேஷியா பெரியதும் சிறியதுமான பலதீவுகளைக் கொண்ட நாடு. மத்தியிலுள்ள ஜாவா எனும் தீவுதான் இன்று நிர்வாகக் கேந்திரமாக விளங்குகிறது தலை நகர் ஜகார்த்தா.

ஜகார்த்தாவும் கிழக்கு ஜாவாப் பிரதேசமும்தான் ஆரம்பத்தில் இந்தியாவிலிருந்து சென்ற இந்து மன்னர்களின் ஆதிக்கத்துக்குள் வந்தன. கிறிஸ்துவுக்குப்பின் 4500ம் ஆண்டுக்கு முதல் ஜாவாவின் இந்து மன்னர்களின் தொடர் ஆட்சி இருந்து வந்துள்ளன. இதற்கு ஆதாரமாக சமஸ்கிருதக் கல்வெட்டுக்கள் இன்றும் காணப்படுகின்றன.

மத்திய ஜாவாவில் இந்து நாகரிகம் பரவியிருந்தமைக்கு இன்றும் பல சின்னங்கள் காணப்படுகின்றன. ஜொக்ஜக்கார்த்தாவின் சமீபமாக பிரம்பொன்னான் என்ற சிவன் கோவில் இன்றும் காட்சி தருகிறது.

சமகாலத்தில் பௌத்த மதமும் இங்கு பரவியமைக்கு போராப்புதூர் என்ற பௌத்த சின்னமும் சான்று பகர்கின்றன.

மத்திய ஜாவாவின் மக்கறம் என்ற ராஜதானியை அமைத்து சஞ்சயன் என்ற இந்து மன்னன் 700ம் ஆண்டுகளில் ஆட்சி புரிந்திருக்கிறான்.

கிழக்கு ஜாவாவிலிருந்து தூர்த்து போன ஓர் இந்துக் கோவிலின் முன்புறம் காணப்படும் காந்தி சிங் கோசரி என்ற காவல் தெய்வத்தின் சிலை இது. இந்தச் சிலையின் வயது 1400 ஆண்டுகள் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

# பிறந்த நாள் வாழ்த்து

பருத்தித்துறை மாதனையைச் சேர்ந்த சுந்தரலிங்கம்-மண்டல நாயகி தம்பதியினரின் கனிஷ்ட புதல்வி **நிவேதினி** தனது **22** வது பிறந்தநாளை **09.05.1998** அன்று இலண்டனில் உள்ள தனது இல்லத்தில் வெகு சிறப்பாகக் கொண்டாடினார்.

இவரை அன்பு அப்பா, அம்மா, அக்காமார், தம்பிமார் பெரியம்மா, அண்ணன், மாமா, மாமி, மச்சான் (இலண்டன்) மற்றும் இலங்கை, இலண்டன், பிரான்ஸ், ஜேர்மன் தோழர்கள், உற்றார், உறவினர்கள் அனைவரும் நல்லூர்க் கந்தனின் அருளும் நல்லாசியும் பெற்று பண்பின் பிறப்பிடமாய் செல்வச் செழிப்புடன் சகல கலைகளும் பெற்று, சுகஜீவியாய் பல்லாண்டு காலம் நீடூழி வாழ்க என அன்புடன் வாழ்த்துகிறார்கள்.

*தகவல்- மாமா, மாதனை, பருத்தித்துறை.*



செல்வி நிவேதினி